

# சகுந்தலா

- நாவல் -

வல்லிக்கண்ணன்

வெளியீடு
நாதன்ஸ்

ANAND.

# சகுந்தலா

( நாவல் )

வல்லிக்கண்ணன்

வெளியிட்டோர் : நாதன்ஸ்

24, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு - மவுண்ட் ரோடு

சென்னை - 2

முதல் பதிப்பு : ஏப்ரல், 1957.

விலை ரூபாய் இரண்டு

அச்சிட்டது :
நாதன்ஸ் பிரஸ், 24, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை - 2.

# அறிமுகம்

'வேடிக்கை மனிதர்கள்' நிறைந்த இந்த உலகத்தில் சுவாரஸ்யமான விஷயங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ரகம்ரகமான மனிதர்களும் ரசமான நிகழ்ச்சிகளும் குறுக்கிடக் கூடும். சாதாரண மனிதர்களின் சராசரி வாழ்விலே கூட விசேஷமான உணர்ச்சிக் குழப்பங்களும் அசாதாரணமான சம்பவங்களும் அபூர்வமாக நிகழ்ந்து விடுவதும் சாத்தியம் தான். சமுதாயத்தின் மத்தியில் வாழ்கிற ஒருவன் ஒதுங்கி வாழ ஆசைப்பட்டாலும் கூட சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும் அவனை ஆட்டி வைக்கின்றன. பிறரது சுகதுக்கங்களைப் பற்றிக் கவலைப்படாமல் தனது காரியங்களை மட்டுமே கவனித்துக் கொண்டு தன் இஷ்டம் போல் வாழ விரும்புகிறவன், முதலில் தனது இதயத்தைக் கல்லாக்கி, மனித உணர்ச்சிகளுக்குச் சமாதி கட்டி விட்டு, 'சுத்த சுயநலம்' என்பதைத் தான் வழிபடும் தேவதையாகக் கொண்டுவிட வேண்டும்.

ரகுராமன் என்பவன் வேடிக்கை உலகத்தின் விந்தைகளைச் சும்மா விளையாட்டாகப் பார்த்துப் பொழுது போக்கி வாழலாம் என்று எண்ணியிருந்தான். ஆனால் சாதாரண நிகழ்ச்சிகள் கூட அவனை அலைக்கழித்தன. என்ன செய்வதென்று தெரியாமல் திணறிய அவனுக்காகச் சம்பவங்கள் தாமாகவே இயங்கி வழி வகுத்துக் கொடுத்தன. அவ்விதம் நிகழ்வதற்கு ஏதுவாக இருந்தவர்களில் முக்கியமானவர் ஞானசம்பந்தர்.

அவர் ரசமான ஆசாமி. 'நாடகமே உலகம்' என்கிற வார்த்தைகளை மெய்ப்பிப்பதற்காகவே வாழ்கிற சில விசித்திரப்பிறவிகள் மனித இனத்தில் இல்லாமல் போகவில்லை. அத்தகைய ஒருவரின் பண்பாடும் செயல்களும் தான் தனியனாக வாழ ஆசைப்பட்ட ரகுராமனின் வாழ்க்கையை மாற்றி அமைக்க உதவின. அவர் தமது பண்பாட்டின்படி செயல்

புரிந்திராவிட்டால், அவன் உள்ளத்தையும் உணர்ச்சிகளையும் வெகுவாக பாதித்து விட்ட 'அடுத்த வீட்டுக்காரி' தலைகாட்டியிருக்கவே மாட்டாள்.

ரகுராமன் வசித்த வீட்டின் அடுத்த வீட்டுக்காரியாகப் புகுந்த சகுந்தலா சமூகத்தில் அவதியுற்று, கண்ணீர் வடித்து, சோக வாழ்வு வாழும்படி விதி பெற்றுவிட்ட எத்தனை எத்தனையோ பெண்களில் ஒருத்திதான். குலதர்மம், சம்பிரதாயம், குடும்பக்கட்டுப்பாடுகள், கல்யாணச்சட்டங்கள் முதலியன காலப்போக்கில் போலித் தன்மை பெற்று பெண்களில் பெரும்பலருக்குத் தீங்குகளே இழைத்து வந்துள்ளன. இன்னும் இந்த நிலைமை மாறிவிடவில்லை. பெண்கள் பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதிகம் பெற்றிருக்கிறார்கள். என்றாலும், அடக்கமுடியாத தவிப்பும் சந்தர்ப்பங்கள் சிருஷ்டித்து விடுகிற துணிச்சலும் சிலரை எப்படி எப்படியோ நடந்து கொள்ளும்படி தூண்டுகின்றன. சகுந்தலாவும் அவ்விதம் மாறிவிடுவதற்கு வாழ்வின் போக்கும் சமூக அமைப்பும் சந்தர்ப்பத் தூண்டுதல்களும் தான் காரணம்.

இவர்களுடைய வாழ்க்கை நாடகத்தின் சுவையை அதிகப்படுத்த உலகு என்கிற 'விளையாட்டுப் பெண்' உயிர்த்துடிப்போடு இயங்குகிறாள். கதை வளர்வதற்குத் துணை செய்கிறாள் விந்தைக் குணம் உடைய கிழவி ஒருத்தி.

வேடிக்கைப் பண்புகள் பெற்ற இவர்கள் எல்லோரும் நம்மிடையே காணமுடியாத அற்புதங்களும் அதிசயங்களும் அல்லர். வாழ்க்கையில் நிகழாத அதீதமான எதையும் நான் கற்பனை செய்து எழுதிவிடவுமில்லை.

'சகுந்தலா' எனும் இந்தச் சுவையான நாவல் ரசிகர்கள் அனைவருக்கும் திருப்தி அளிக்கும் என்றே நான் நம்புகிறேன். இதை நல்ல முறையில் புத்தகமாக்கியுள்ள 'நாதன்ஸ்' அதிபருக்கு என் நன்றி உரியது.

**வல்லிக்கண்ணன்**

# சகுந்தலா

## — 1 —

ரகுராமனுக்கு யோசித்து யோசித்து மூளையைக் குழப் பிக் கொள்வதற்கு எவ்வளவோ விஷயங்கள் இருந்தன. என்றாலும் சில தினங்களாக அவன் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தான். மற்றப் பிரச் னைகள் எல்லாம் தாமாகவே பதுங்கிவிட்டன.

அடுத்த வீட்டில் வந்து குடியேறியிருப்பது யாராக இருக்க முடியும் என்பதுதான் அவன் மனதில் உறுத்திக் கொண்டிருந்த முக்கியப் பிரச்னை. அங்கு ஒரு பெண் புதி தாக வந்திறங்கினாள் என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரி யும். ஆனால் அவள் மட்டும் தான் குடியிருக்கிறாளா?

சிலசமயம் அவனுக்கு அப்படித்தான் தோன்றும். 'முடி யாது, ஒரே ஒருத்தி மட்டும் அந்த வீட்டில் தனியாக இருக்க முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களிருக்க வேண்டும். பெண்கள் இருவரா, மூவரா? அல்லது அவள் மட்டும்தானா?' ரகுராமனால் உறுதியாகத் தீர்மானிக்க முடியவில்லை.

'எத்தனை பேர் வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும்! இவர்கள் ஏன் இந்த வீட்டைத் தேடிப்பிடித்து வரவேண்டும்? ஊரில் வேறு வீடுகள் இல்லாமலா போயின!" என்று சீறும் அவன் மனம்.

உடனேயே சிரிப்பு எழும். 'நான் இங்கு இருப்பதனால் பக்கத்து வீட்டிலே யாருமே குடியிருக்கப்படாது என்று நான் எப்படிச் சட்டம் செய்ய முடியும்! இவ்விதம் ஆசைப் படுகிறவர்கள் அத்துவானக் காட்டிலே போய் டேராப்போட வேண்டியதுதான்!' என்று நினைத்துக்கொள்வான் அவன்.

'அட, குடிவந்ததுதான் வந்தார்களே! எல்லோரையும் போல் வீட்டைத் திறந்து வைத்து, கலகலப்பாக வாழக் கூடாதோ? முன் வாசல் கதவு—கம்பிக் கதவல்ல; பெரிய கதவேதான்—சதா அடைத்தே கிடக்கிறது. யாராவது வெளியே தலைகாட்டுவார்களா என்று பார்த்தால், ஊம்

ஹூம்! அதனால்தான் அங்கு யார் வசிக்கிறார்கள் என்ற சந்தேகம் என்னை விட்டு விலகியபாடில்லை' என்று புகையும் அவன் மனம்.

அடுத்தவீட்டில் ஆட்கள் குடியிருந்தபோதிலும் அடைத்த கதவே காட்சியளித்துக் கொண்டிருந்தது ரகுராமனுக்கு அர்த்தமற்ற குழப்பத்திற்கும் ஆதாரமற்ற கனவுகளுக்கும் இடமளித்தது. 'ஒருவேளை அவர்கள் நாவல்களில் வருவது போல் கொலைகாரர்களாகவோ, புரட்சிக்காரர்களாகவோ, ஆபத்தான காரியம் செய்யத் திட்டமிடும் சதிகாரர் களாகவோ இருக்கலாமோ? அல்லது.... அல்லது....'

பெண்களை ஏமாற்றி அழைத்து வந்து அடைத்து வைத்துப் பணம் சேர்ப்பதற்கு அவர்களைக் கருவிகளாக்கத் துணிந்த யாராவது வந்திருக்கலாமல்லவா என்று எண்ணத் தோன்றியது அவனுக்கு. ஆனால் அந்த நினைப்பை ஆரம்பத்திலேயே ஒடுக்கிவிட்டான் அவன்.

'சே, அப்படி நினைப்பதே தப்பு. நிறையப் புத்தகங்கள் படித்துப் படித்து எனது மூளையே கெட்டுவிட்டது! வீணான கற்பனைகள் எதுக்கு? அடுத்த வீட்டில் இருப்பது யாராக இருந்தால் நமக்கென்ன!' என்று யோசனைக்கு இறுதி எல்லைகோலத் துடிப்பான். ஆனால் கொஞ்சநேரத்திலேயே நினைவு தலைதூக்கும்—

'ஆமா. அவளை அன்று காலையில் பார்த்ததுதான். அதற்குப் பிறகு அவள் வெளியே தலைகாட்டியதாகவே தெரியவில்லையே. நானும் இந்த ஜன்னலில்தானே உட்கார்ந்திருக்கிறேன். அப்படி நான் இருப்பதைத் தெரிந்து கொண்டுதான் அவள் அடிக்கடி வாசல்பக்கம் வராமலிருக்கிறாளோ என்னவோ! சேச்சே, இருக்காது. இந்த வீட்டில் யாரார் இருக்கிறார்கள் என்கிற விவரமே அங்கிருப்பவர்களுக்குத் தெரிய நியாயமில்லை. நான் இங்கே உட்கார்ந்துதான் புத்தகம் படிப்பது வழக்கம் என்பது அவளுக்குத் தெரியவே தெரியாது. அவள்தான் ஒருமுறைகூட இந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவே யில்லையே! அன்று காலையில்கூட வண்டியிலிருந்து இறங்கியதும் விருவிரென்று வீட்டிற்குள் போய் விட்டாள். அந்தப் பக்கம் இந்தப் பக்கம் தலையைத் திருப்பவேயில்லை. நான்தான் கவனித்தேனே!'

அன்று—அடுத்த வீட்டுக்குப் புதிதாக யாரோ வருகிறார்கள் என்று தெரிந்ததும் அவன் ஜன்னலருகில் நின்று வாச

லேயே கவனித்துக் கொண்டிருந்தான். பொதுவாக அவனுடைய பொழுதுபோக்கே அதுதான். ரகுராமனின் வேலை கூட அதுவே! அவனுக்கு விசேஷ உத்தியோகம் எதுவுமே கிடையாது. சுகமாக வாழ்வதற்குப் போதிய பணமிருந்தது.

'எவ்வளவு பணமிருந்தால் தானென்ன! உட்கார்ந்திருந்து சாப்பிட்டால் அது எத்தனை நாளைக்கு வரும்? கைப் பணம் காலியான பிறகு என்ன செய்யப்போகிறாய்? அதைப் பற்றி யோசித்தாயா?' என்று அவன் நலத்தில் அக்கறையுள்ளவர்கள் சொல்வது உண்டு.

'அதைப் பற்றி இன்றே கவலைப்பட வேண்டுமா என்ன? அப்பொழுது பார்த்துக் கொள்ளலாமே!' என்று ஒதுக்கி விடும் குணம்தான் அவனிடமிருந்தது. வாழ்க்கையில் கவலையே இருக்கக்கூடாது; ஜாலியாக வாழவேண்டும் என்பதுதான் அவனுடைய லட்சியம். தினந்தோறும் எவ்வளவு நேரம் ஊர்சுற்ற முடியும்; சினிமா பார்ப்பது, வம்பளப்பது போன்ற காரியங்களைச் செய்ய இயலும்? பாக்கி உள்ள நேரத்தை ஓட்டியடைக்கப் புத்தகங்கள் படிப்பது நல்லவழி என்று பட்டது அவனுக்கு.

பணக்கார வீட்டுப் பிள்ளைகள் ஐம்பத்துக்குப் புத்தகங்களை வாங்கி அடுக்குவார்கள். 'அலமாரிக்கு அழகு; கைக்கு பூஷணம்' என்று சில புத்தக வியாபாரிகள் விளம்பரம் செய்கிறார்களே, அது செல்வர்களின் வீட்டுக்குப் பொருந்தும். சூழ்நிலை அலங்காரமாகவும், கைக்குப் பூஷணமாகவும் பயன்படும் பாக்கியம் ரகுராமன் வாங்கும் புத்தகங்களுக்கும் கிடைக்கும். படிப்பதாக பாவலாப் பண்ணி பராக்குப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் பெரும்பாலும் அவன் அனுஷ்டிக்கும் முறை. அதற்கு ஏற்ற இடமாக இருந்தது ஜன்னலோரம்.

அவன் தங்கியிருந்த வீட்டை அடுத்து ஒருவீடு இருந்தது. அது ரொம்ப காலம் காலியாகவே கிடந்தது. யாராவது வாடகைக்குக் கேட்டாலும் 'சொந்தக்காரர்கள் வந்து வசிக்கப் போகிறார்கள். இந்த வீடு வாடகைக்குக் கிடைக்காது' என்று சொல்லிவந்தார்கள். அங்கு தங்குவதற்கு எந்தச் சொந்தக்காரரும் வரவுமில்லை.

இரண்டு வீடுகள் சேர்ந்த தனிப்பெரும் கட்டிடத்தில் வலதுபுறத்து வீடு ரகுராமனின் தந்தைக்குச் சொந்தம் இடதுபக்கத்துவீடு, அவருடைய சகோதரரின் உடமையாக

யிருந்தது. அவர் கடன் உபத்திரவங்கள் அதிகரித்ததனுல் அந்த விட்டை வேறு யாருக்கோ விற்றுவிட்டார். இந்த விவரம்தான் ரகுராமனுக்குத் தெரியுமே தவிர வாங்கியது யார், எந்த ஊர்க்காரர், இப்பொழுது எங்கே யிருக்கிருர் என்கிற விஷயங்கள் தெரியாது. அறிந்து கொள்ளவேண்டும் என்ற சிரத்தையுமில்லை அவனுக்கு.

ரகுராமனுக்கு எதில்தான் சிரத்தை அதிகம் என்று கண்டுபிடிப்பது கஷ்டம்தான். யாரிடமும் அவன் தாராளமாகப் பழகுவதில்லை. அவ்விதம் பழகினுலும் அவனுகத் தூண்டிக்கேட்டு மற்றவர்களைப் பற்றிய சேதிகளை விசாரித்து அறியவேண்டும் என்ற ஆசை அவனுக்கு அதிகமில்லை. அவர்களாக வலிய அவன் காதில் போடுபவையோடு சரி.

வெகு காலமாக அடைத்துக் கிடந்த வீடு பழுதுபார்க்கப் படுவதைக் கண்டதும் அவனுக்கே என்ன விஷயம் என்று விசாரிக்கவேண்டும் என்ற ஆவல் பிறந்தது. வீட்டில் குடியிருக்க ஆள் வருகிறது என்று அறிய முடிந்ததே தவிர, வருகிறவர்கள்தான் விட்டை விலைக்கு வாங்கியவர்களா; அல்லது அவர்களுக்குவேண்டியவர்களா என்று புரிந்து கொள்ள இயலவில்லை.

பக்கத்து வீட்டில் யாருமே இல்லாமலிருந்தது அவனுக்கு செளகரியமாக யிருந்தது. இரண்டு வீடுகளுக்கும் பொதுவான தோட்டம் ஒன்று பின்னுலிருந்தது. அதில் பல தென்னைமரங்கள், இரண்டு வேப்பமரங்கள், கல்யாண முருங்கை மரம் ஒன்று, ஆகியவை நின்றன. தோட்டத்தின் நடுவில் கிணறு இருந்தது. அதன் ஓரத்திலே துலாக்கல் அழுத்தமாக ஊன்றப்பட்டிருந்த போதிலும், ஏற்றம் இறைப்பதற்கு அது பயன்பட்டு எவ்வளவோ காலம் ஆகிவிட்டது என்பது பார்த்ததுமே தெரியும்.

எங்கும் கடுமையான வெயில்விழும் நேரத்திலேகூட அந்தத் தோட்டத்தில் வெயிலின் கொடுமை தென்படாது. குளு குளுவென்றிருக்கும் நிழலில் தொட்டில் போல் குழி விழுந்த பிரம்பு நாற்காலியில் ஓய்ந்து ஒடுங்கியிருக்கும் பொழுது கிடைக்கும் சுகம் வேறு எதிலும் கிட்டாது என்பது ரகுராமனின் அனுபவம். அவ்விதம் அமைதியாக அமர்ந்து வானத்தையும் மரக்கிளைகளையும் பார்த்துக்கொண்டே கனவு காணும் இன்ப அனுபவத்திற்கு முடிவு கட்டிவிட வேண்டியதுதான் அடுத்த வீட்டுக்கு நிரந்தரமாகத் தங்கி யிருப்பவர்கள் வந்துவிட்டால்!

இதுவும் போக, வேறு பல தொல்லைகளும் நேரிடும். எப்பொழுதும் கூச்சலும் நொணநொணப்பும் ஆட்சி புரியும். அடிக்கடி நேரடித் தாக்குதலுக்கும், மனதுக்குப் பிடிக்காதவர்களின் 'போரடிப்பு'களுக்கும் ஆளாகவேண்டிய அவசியம் ஏற்படும் என்ற அச்சம் நிறைந்துவிட்டது அவன் மனதில். அடுத்த வீட்டுக்காரர்கள் என்றாலே அருவருக்கத்தகுந்த ஜந்துக்கள், வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய பதார்த்தங்கள் என்று நம்பினான் அவன்.

இருந்தாலும், வருகிறவர்கள் எப்படியிருப்பார்கள் என்று பார்த்துவைக்கலாமே என்ற அவா இல்லாமற் போகவில்லை. அதிகாலையில் வாசலில் சத்தம் கேட்டதுமே அவன் தன் வீட்டு ஜன்னலருகில் வந்து எட்டிப்பார்த்தான்.

வண்டியிலிருந்து சாமான்களை இறக்கி உள்ளே எடுத்துச்சென்று கொண்டிருந்தார்கள். ஜட்கா ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து முதலில் அவள்தான் கீழே குதித்தாள். ஆடையைச் சரிப்படுத்திக்கொண்டு திரும்பி அவள் வண்டியினுள்ளிருந்து எதையோ மெதுவாக எடுப்பதைக் கவனித்த ரகுராமன், 'கூஜா, கீஜா ஏதாவதிருக்கும், என்று நினைத்தான். அது தவறு என்று தெரிந்தது கையில் ஒரு பூனைக்குட்டியை அன்பாக ஏந்திய வண்ணம் அவள் நடந்து வந்ததைப் பார்த்ததும்.

பளிச்சிடும் ஆகாய நீலவர்ணப் பட்டாடையும் கறுப்பு ரவிக்கையுமணிந்திருந்தாள் அவள். அவளது சிவப்பு உடலுக்குஅவை அமைவாக, அழகாய், அழகை எடுத்துக்காட்டும் சிறப்புகளாய்த் திகழ்ந்தன. ஸ்நானம் செய்துவிட்டு அவசரம் அவசரமாகத் தலைமுடியைக் கோதி, சமயத்துக்கேற்றாற் போல் ஒரு பின்னல் போட்டிருந்தது போல் காட்சியளித்தது. அவள் அசைவினால் ஆடித் துவண்ட சடை. இரண்டு இலைகளுடன் கூடிய முழுதலர்ந்த ரோஜா மலர் ஒன்றைச் சொருகியிருந்தாள் கூந்தலிலே. உள்ளத்தின் மகிழ்வு இதழ்களிலே சிரிக்க, அந்தக் குறுநகை கருவிழிகளிலே பிரதிபலிக்க, தலைநிமிர்ந்து நடந்து முன்னேறி வீட்டினுள் மறைந்தாள் அவள்.

அவளது சிரிப்பை, சிரிப்பின் தன்மையை அதிகரித்துக் காட்டிய சிரிக்கும் கண்களை, அவற்றால் தனி மலர்ச்சி பெற்ற முகத்தை ரகுராமன் ஒரு கணம்தான் பார்த்தான். எழிலின் கொலுபீடமான அத் தோற்றத்தை அவன் மறக்க முடியாது தான்.

சாமான்களைச் சரிபார்க்க உடனேயே அவள் வெளியில் வந்தாலும் வரலாம் என அவன் எதிர்பார்த்தான். அவள் வரவேயில்லை.

'அவள் அழகி மட்டுமல்ல. அழகின் நிறைவை நன் குணர்ந்து பெருமிதம் கொண்டவள். அழகுச் சிறப்புகளை உரிய முறையிலே திகழவைக்கும் நயங்களை அறிந்தவள். கர்வம் மிகுந்தவள் போல் தோன்றுகிறது' என்று நினைத்தான் அவன்.

அந்த அழகுச்சுடர் மீண்டும் ஓர்முறை அங்கு உதயமாகாதா என்ற எண்ணம் எழுந்தது அவனுக்கு. ஆனால் ஆசை தணியச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அன்றுமாத்திரமல்ல. அடுத்த வீட்டில் அவள் வாசம் செய்ய வந்து சில வாரங்கள் ஆகிவிட்ட பிறகும் கூடத்தான்!

அடுத்த வீட்டின் முன் வாசல் எப்பொழுதும் மூடிய நெடுங்கதவாகத்தான் விளங்கியது. பின்புறமோ திறவாத கதவம்தான். அதனாலேயே ரகுராமன், இந்த உலகத்திலே யோசித்து மண்டையை உடைத்துக்கொள்ள ஆயிரமாயிரம் பிரச்னைகள் இருந்தும், அவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டு அடுத்த வீட்டுக்காரியைப் பற்றிய சிந்தனையிலே தத்தளிக்க நேர்ந்தது.

தனக்கு எப்படிப் பொழுதுபோகிறது எதிர்காலம் எவ் விதமிருக்கும் என்பதைப் பற்றிக் கொஞ்சம்கூடச் சிந்திக்க விரும்பாத ரகுராமன், எங்கிருந்து வந்தாள், யார் அவள் என்பனபோன்ற தகவல்களை அறியமுடியாத நிலையிலிருந்தும், அடுத்த வீட்டில் புதிதாகக் குடியேறி அவன் பார்வையில் அடிக்கடி தென்படாது வாழ்ந்த அழகிமீது அனுதாபம் கொண்டுவிட்டான். அவசியமற்ற அனுதாபம்தான். ஆனால் அவன் மனசு கேட்கவில்லையே!

'பாவம், நாள் பூராவும் இந்த வீட்டுக்குள்ளேயே கிடக்க வேண்டுமென்றால்! ஜெயில் மாதிரித்தான். இவள் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் தலைகாட்டுவதுகூட இல்லையே!' என்று நெஞ்சோடு கிளத்திக்கொள்வான் அவன்.

ஆனால் இந்த யூகம் தவறாக இருக்கலாமோ என்ற ஐயம் பிறந்தது அவனுக்கு. காரணம் இல்லாமலில்லை. தினந்தோறும் காலையில் அவன் வெளியே வரும்பொழுது, அடுத்த வீட்டு வாசலில் கோலம் போட்டிருக்கும். யார் போட்டிருப்

பார்கள்? அவளாகவே இருக்குமோ? அதை ஆராய விரும்பியும் அவன் குணம் அவனுக்குத் துணைபுரிய வில்லை. அதிகாலையில் போர்வையை இழுத்து நன்றாக மூடிக்கொண்டு தூங்குவதுதான் சுகமாக யிருந்தது.

சிரமத்தைப் பாராட்டாமல் ஒருநாள் சீக்கிரமே எழுந்து வந்து பார்த்தான். அடுத்த வீட்டில் கோலம் போடுகிறவளோ அவனை விடச் சீக்கிரமாக எழுந்து வேலைகளை முடித்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள். படியேறிச் செல்லும் பாவை ஒருத்தியை அவன் காணமுடிந்தது. அந்தப் பெண்தான் முதல்நாள் வந்தவளா என்பதை அவனால் தீர்மானிக்க முடியவில்லை.

சில வேளைகளில் பின்பக்கம் கிணற்றில் தண்ணீர் இறைத்த சுவடிருக்கும். ஆனால் யார் வந்து எப்பொழுது இறைத்துப் போனார்கள் என்பது புரியாது.

அவன் வெளியே சுற்றிவிட்டு வீடு திரும்பும்போது அடுத்தவீட்டு மாடியில் சுவர் ஓரத்தில் ஒரு பெண் நிற்பதைக் காண்பான். அது அந்த அழகிதானா என்று கவனிப்பதற்குள் அவள் சடக்கெனப் பதுங்கிவிடுவாள் சுவரின் பின்னே.

சிலநாட்களில் காலையில் வெளியே போகும்போது அடுத்தவீட்டுக்கதவு சிறிது திறந்திருப்பதாகத் தோன்றும். இடைவெளியின் பின்னே வர்ணச்சேலை யாடுவது தெரியும். கூர்ந்து கவனிப்பதற்குள் கதவு சிக்கெனச் சாத்தப்பட்டு விடும்.

ஒரு சமயம் அவன் பார்வையில் படும் பெண் உயரமானவள்போல் தோன்றுவாள்; வேறொரு வேளையில் கொஞ்சம் பருமனான காரிகையைக் கண்டதாக எண்ணிக்கொண்டு போவான். வயதானவள் மறைந்து நின்று எட்டிப்பார்ப்பதாகத் தோன்றும். அழகியின் சாயலை அவன் கண்டுவிட்டதாகக் கருதுவதும் உண்டு.

இதனாலெல்லாம் அவன் குழப்பம் வளர்ந்தது, அங்கு எத்தனை பெண்கள் வசிக்கிறார்களோ என்று. இரவு நேரங்களில் அவனது குழம்பிய உள்ளம் பயங்கரக் கனவுகளுக்கு வித்திட்டு விடுவதும் சகஜமே. அடுத்த வீட்டில் யாரோ 'தம்பீ! ஏ தம்பீ!' என்று அடித்தொண்டையிலிருந்து குரலெழுப்பி அலறுவது கேட்கும். சிலசமயம் 'ஐயோ, நான்

செத்தேன். அம்மா, அப்பா, என்று வேதனையினுல் ஓலமிடும் அபலையின் அழுகுரல் அவன் காதுகளில் விழும்.

'பக்கத்து விட்டில் என்ன, கொலை கிலை நடக்கிறதா?' என்று பதறி எழுவான் ரகுராமன். இருட்டோடு இருட்டாக, உடல் நடுங்கத் தனது படுக்கையில் உட்கார்ந்திருப்பான். அவனுல் என்னத்தைச் சாதித்துவிடமுடியும்? வேண்டுமானுல் இந்தப்பக்கத்திலிருந்து அவனும் 'கூவேகூ' என்று கூச்சலிடலாம், தெருவிலுள்ளவர்கள் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றுதான் நினைப்பார்கள். அதனுல் அவன் அத்தகைய அசட்டுத்தனக் காரியம் எதையும் செய்து வைக்கவில்லை.

ரகுராமனுக்கு ரொம்பக் கஷ்டமாகத்தானிருந்தது. அடுத்தவிட்டில் அமைதி யில்லாமல் போய் தனக்குக் கிடைத்துள்ள சுகவாசம் சிதைந்துவிடும் என்று முன்பு அஞ்சினுன். ஆனுல் இப்பொழுதோ அங்கு பகலில் நிலவிய ஆழ்ந்த அமைதிதான் அவனுக்கு வேதனை தந்தது. நாலுவீடுகளைப் போல ஆரவாரமும் கலகலப்புமாக இருந்தால் கவலையே யில்லையே! இதில் ஏதோ மர்மம் இருப்பது போலல்லவா தோன்றுகிறது' என்று நினைத்தான் அவன்.

அடுத்தவிட்டு மர்மத்தை ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள்ள என்ன செய்யலாம் என்பதே பெரிய விசாரமாகி விட்டது ரகுராமனுக்கு. சந்தர்ப்பம் அவனை வெகுகாலம் ஏங்கிக் கிடக்கும்படி விட்டுவிட வில்லை.

## — 2 —

'அடுத்த விட்டுக்கு யார் வந்தால் என்ன; எவர் போனுல் நமக்கென்ன! நாம் நமது உரிமைகளை ஸ்தாபிக்க வேண்டியதுதான். இத்தனை நாள் வரை விட்டு வைத்திருந்ததே தப்பிதம்தான்' என்று நினைத்தான் ரகுராமன்.

பக்கத்து விட்டிற்குப் புதிதாகக் குடித்தனம் வந்ததும் ரகுராமன் தானுகவே தனது பழக்கங்களை மாற்றிக் கொண்டான். முன்பெல்லாம் அவன் பின்புறத்துத் தோட்டத்தில் மரத்தின் குளிர் நிழலில் அதிக நேரம் தங்கியிருப்பது வழக்கம். மற்றவர்களுக்கு அதனுல் தொல்லை ஏற்படக் கூடாதே என்ற எண்ணத்துடன் அவனுகவே அதைக்

குறைத்துக் கொண்டான். எப்பொழுதாவது தோட்டத்திற்குப் போய் கொஞ்ச நேரம் நின்று கவனித்து விட்டுத் திரும்பி விடுவான்.

சாயங்கால வேளைகளிலும் நிலவு காலத்திலும் முன் வாசலில் ஈஸிசேரையோ, கட்டிலையோ போட்டு சுகமாகச் சாய்ந்து காலக்கொலை செய்வதை வழக்கமாக வளர்த்திருந்தான் அவன். அடுத்த வீட்டில் குடியேறியிருக்கும் பெண்—அல்லது, பெண்கள் தானே!—தன்னைப் பற்றித் தவருக எண்ணிவிட இடமேற்படலாம் என்ற அர்த்தமற்ற அநாவசியக் கவலை பிறந்தது அவனுக்கு. அதனுல் அந்த வழக்கத்தையும் அவன் கைவிட்டிருந்தான்.

நாளாக ஆக 'நாம் இப்படித் தயங்கி நடந்து கொள்ள வேண்டிய தேவையேயில்லை. அடுத்த வீட்டில் ஆள் இருப்பதும் ஒன்றுதான், இல்லாத நிலையும் ஒன்றேதான். அவ்விதம்தான் தோன்றுகிறது. நமது போக்கினுல் மற்றவர்களுக்கு எத்தகைய இடைஞ்சலும் ஏற்பட்டுவிடும் என்று நான் நினைக்கவில்லை' என அவன் அந்தராத்மா உபதேசித்தது.

அவன் அந்த முடிவுக்கு வந்த அதே தினத்தில் அடுத்த விட்டுக்காரியும் அவ்விதமான ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தாள் என்பது பிறகு தான் புரிந்தது. அவனது செயலுக்கும் மீறி நடந்துவிட்ட நிகழ்ச்சி அவனுக்கு வருத்தமே அளித்தது. 'நாம் ஏன் நமது முதல் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து அதை அனுஷ்டித்தோம்' என்ற மனக்கஷ்டம் ஏற்பட்டு விட்டது அவனுக்கு.

நடந்தது இது தான்—

மத்தியானம் இரண்டு மணி யிருக்கும். வெயில் கடுமையாக யிருந்தது. சூழ்நிலை எங்கும் ஒரே அமைதி. எல்லோரும் எல்லாமும் உஷ்ணத்தினுல் கிரங்கி ஒடுங்கிக் கிடந்ததாகவே தோன்றியது. 'பெயருக்குக் கூட ஒரு இலையாவது ஆடி அசங்க வில்லையே, ஒரே புழுக்கமாக யிருக்கிறது' என்று பலரையும் முனங்க வைத்த நேரம்.

ரகுராமனுக்கு அறையினுள் அடைத்துக் கிடப்பது கஷ்டமாக யிருந்தது. தோட்டத்தில் வேப்ப மரத்தடியில் போய் தங்கி யிருந்தால் சுகமாக யிருக்கும் என்று நினைத்தான். பிரம்பு நாற்காலியையும் ஒரு புத்தகத்தையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். வீட்டின் பின்புறத்தில்

எதிர்பாராதது எதுவும் நடக்கக் கூடும் என்ற நினைப்பிற்கே இடமில்லாம லிருந்ததனால், அவன் தடதடவென்று சென்று தடாலென நாற்காலியைத் தரையிலே போட்டுவிட்டு நிமிர்ந்தான். திகைப்புற்றான். பயந்து மிரண்டவள் போல் நின்ற அடுத்த விட்டுக்காரி அவன் பார்வையில் பட்டாள்.

அவள் பயந்து விட்டது உண்மைதான். அவ்வேளையில் அந்தப் பக்கம் அவன் தலைகாட்ட மாட்டான் என்று அவள் நிச்சயமாக நம்பியிருந்தாள். சில தினங்களாக அவள் கவனித்ததில், தோட்டத்தில் யாருமே நடமாடுவதில்லை; அதைப் பாழடைய விட்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டாள். கிணறும் விசாலமான இடமும் இருக்கும் பொழுது அவற்றை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று எண்ணினாள். தோட்டத்தைப் பயன்படுத்திக் காய்கறிப் பயிர் வளர்க்கலாம்; அதற்கு முன்னதாக ஒன்றிரண்டு பூச் செடிகளை நட்டு வைக்கலாம் என்று தீர்மானித்தாள்.

அவள் தன் தீர்மானத்தைச் செயலாக்க அன்றுதான் நல்ல நாள் பார்த்திருந்தாள் போலிருக்கிறது! அல்லது அன்றைக்குத்தான் செடிகள் கிடைத்தனவோ என்னவோ? வெயிலையும் பொருட் படுத்தாமல் அவள் செடி நடும் பணியில் முனைந்திருந்தாள். அவளுக்குத் துணையாக ஒரு பெண்ணும் நின்றது. அதற்குப் பன்னிரண்டு பதின் மூன்று வயதிருக்கலாம்.

'வேலைக்காரப் பெண்ணாகத்தானிருக்கவேண்டும்' என்று ரகுராமன் நினைத்தான். முதலில் அவன் அந்தப் பெண்ணைச் சரியாகக் கவனிக்கவேயில்லை. வாளியையும், மண்ணில் குத்திக் கிளறிச் செடி நடுவதற்குரிய கருவியாக உபயோகிக்கக் கொண்டு வந்திருந்த அகப்பையையும் எடுத்துக் கொண்டு விட்டிற்குத் திரும்பிய போதுதான் நன்றாகக் கவனித்தான். அதுவரை அவன் பார்வை அவள் மீதே பதிந்திருந்தது.

கதவு திறக்கப்பட்ட ஓசையைக் கேட்டுத் திரும்பியவள் பக்கத்து விட்டில் வசிப்பவன் நாற்காலியுடன் வந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அவன் வேண்டுமென்றேதான் வந்திருப்பானோ, 'தடாலென்று' தரையிலே போட்டிருப்பானோ எனும் சிறு சந்தேகம் அவள் உள்ளத்தில் மின் வெட்டியது. ஆனால் அவன் திகைப்படைந்து நின்று விட்டதைக் கண்டதும் 'அப்படி யிராது. இது தற்செயலாக நடந்த சம்பவம் தான்' என்று விளங்கியது அவளுக்கு.

அவள் அவனை மீண்டும் ஒரு முறை கவனித்தாள். வேலைக்காரப் பெண்ணிடம் என்னவோ சொல்லிவிட்டு, பயந்து ஒடுகிறவள் மாதிரி விடுவிடென்று வேகமாக நடந்து வீட்டினுள் மறைந்தாள். சாமான்களைத் தூக்கிக்கொண்டு அந்தப் பெண் பின் தொடர்ந்ததைக் கவனித்ததும்தான் அவள் அவற்றை எடுத்து வந்து விடும்படி சொல்லியிருக்கிறாள் என்று யூகிக்க முடிந்தது அவனால்.

'நாம் என்ன செய்வது? திரும்பி விடுவதா; இங்கேயே நிற்பதா?' என்று தலை தூக்கிய பிரச்னைக்கு அவன் ஒரு விடை கண்டு பிடிப்பதற்குள் அவளாகவே ஒரு முடிவு ஏற்படுத்தி விட்டதற்காக ரகுராமன் மகிழ்ந்து போகவில்லை. அவனுக்கு ஆத்திரமும் எரிச்சலும் தான் பொங்கி வந்தன.

'என்னைக் கண்டு இவள் ஏன் இப்படி பயப்பட வேண்டும்? ஏதோ வெறி மிருகத்தைப் பார்த்தது போல் விழுந்தடித்து ஓடுகிறாளே! சே, சுத்த மோசமாக அல்லவா இருக்கிறது! நான் என்ன பேயா, பிசாசா?' என்று அவன் உள்ளம் புழுங்கியது. அந்த எரிச்சலினால் சீற்றச் சிரிப்பு சிந்தியது மனம். 'ஹூம்! அம்மாளு செடி நட நேரம் பார்த்தா பாரு! இந்த வெயிலிலேயே செடியெல்லாம் வாடி வதங்கிப் போகும் என்று தெரியாதோ!' என்றுதான்.

நட்டுத் தண்ணீர் ஊற்றியிருந்த சில செடிகள் போகப் பல கீழேயே துவண்டு கிடந்ததைக் கண்டதும் 'பாவம், இவைகளையும் நடுறதுக்குள்ளே நான் வந்து விட்டேனே. அதனாலே தான் அப்படி அப்படியே எல்லாவற்றையும் போட்டு விட்டுப் போயிருக்கிறாள்' என்று நினைத்தான் அவன்.

'அவளை யார் இப்படி ஓடச் சொன்னது? அவள் பாட்டுக்கு வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தால் நானே வீட்டினுள் போயிருப்பேனே!' என்றும் எண்ணினான். அவனுக்கு இருந்த மன அமைதி போயே போய்விட்டது.

'அவள் என்னைப் பற்றித் தவறான அபிப்பிராயம் தான் கொண்டிருப்பாள். தெரிந்து கொண்டே.....'

அந்த எண்ணத்தையே அமுக்கி விட்டு எழுந்தது வேறொரு நினைப்பு. 'அதெப்படி நினைப்பாள்? இத்தனை நாட்களில் என்றாவது இந்தப் பக்கம் இந்நேரத்திற்கு அவள் வந்தது உண்டா? அவள் தான் வெளியே தலைகாட்டுவதேயில்லையே! இன்று தானே......அடாடா, இன்று வரை

ஒடுங்கிக் கிடந்து விட்டு நானும் இன்று தானே இங்கு வர வேண்டும்' என்று வருந்தினான் அவன்

அடுத்த வீட்டுக் கதவு அடைபட்டு விட்டது.

தான் அப்பொழுதே வீட்டினுள் திரும்பி விட்டால், ஒரு வேளை அவள் வந்து பாக்கிச் செடிகளையும் நட்டு வைக்கச் சௌகரியமாக யிருக்கும் என்று நினைத்தான் ரகுராமன். ஆகவே நாற்காலியையும் புத்தகத்தையும் தூக்கிக்கொண்டு திரும்பினான். மெத்தப் படித்த அவனுக்கு முகமது பின் துக்ளக் கதைதான் அந்தச் சமயத்தில் எண்ணப் பரப்பிலே நீந்தியது. 'என் மனதையே என்னால் சரியாக நிர்ண யிக்க முடியவில்லை. எனது எண்ணங்களைத் திட்டமான போக்கிலே திருப்பி, நல்ல முறையிலே செயல் புரிய முடிய வில்லை! எனது காரியமெல்லாம் அசட்டுத் தனமாக—முட்டாள் தனமாகத்தான் தோன்றும் மற்றவர்களுக்கு' என்று முனங்கினான் அவன்.

பின்கதவைப் பலமான ஓசையுடன் சாத்தி, 'படார்' என்று தாழ்ப்பாளைத் தள்ளினான். அவ்விதம் வீடே அதிரும் படியாக அவன் கதவை அடைத்ததன் காரணமே, தான் உள்ளே திரும்பிப் போய் விட்டதை அடுத்த வீட்டுக்காரி உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.

'என்ன சகுந்தலா, செடி பூராவையும் நட்டுத் தண்ணி ஊத்தியாச்சா?' என்று பக்கத்து வீட்டின் ஆழத்தி லிருந்து எழுந்த குரல் சுவரையும் தாண்டி ஒலித்து அவன் காதில் விழுந்தது.

'ஓ! அவள் பெயர் சகுந்தலாவா! அழகிக்கு ஏற்ற அழகான பெயர்தான்' என்று ரகுராமனின் மனம் பாராட்டுரை வழங்கியது. அவள் என்ன பதில் சொன்னாள் என்பது தெரிய வழியில்லாமல் போயிற்று. அவள் ரொம்ப மெதுவாகத்தான் பேசுவாள் போலிருக்கு என்று நினைத்தான் அவன்.

ரகுராமனின் உள்ளத்திலே சிற்றலை தெறித்த உணர்வுகளெல்லாம் தேய்ந்தும் ஒடுங்கியும் மாறியும், ரசனை உணர்ச்சிக்கு இடமளித்து விட்டன. அவன் நினைவுப் பரப்பிலே சற்று முன்பு கண்ட அவளது தோற்றங்கள்—அவள் பார்த்த பார்வையும், காட்டிய பாவங்களும், நடந்த தினுசும்—நிழலாடின. உடலுடன் ஒட்டிக் கிடக்கும்படி, வெளிர் நீல நிறப் பூந்துகில் அணிந்திருந்தாள் அவள். அவள் உட

லுக்கு அது எடுப்பாகத்தானிருந்தது. அவள் பார்வையும், விதவிதப் பார்வைகளை மிதக்க விடும் அழகிய விழிகளும், முகமும், நடையும் வசீகர சக்தி நிறைந்துதான் திகழ்ந்தன.

'அவற்றுக்காக வெல்லாம் அவளைப் பாராட்டலாம். ஆனால் அவள் என்னைக் கண்டு பயந்து ஓடிப்போனது தான் எனக்குப் பிடிக்கவில்லை. கதவை அடைத்துக் கொண்டு வீட்டினுள் முடங்கிக் கிடப்பதும் பிடிக்கவில்லை தான். இவள் ஏன் இப்படி வசிக்கவேண்டும்?' என்று கேட்டான் ரகுராமன். உரிய பதிலை யார் அவனுக்குச் சொல்லப் போகிறார்கள்!

'இத்தனை நாட்களுக்குப் பிறகாவது ஒரு விஷயம் தெளிவாயிற்றே! அந்த வீட்டிலே மூன்று பெண்கள் இருக்கிறார்கள். அவள், அவள் பெயர் சகுந்தலாவாமே! அந்த வேலைக்காரப் பெண். உள்ளேயிருந்து கத்தினளே ஒருத்தி—அவள் எல்லோருக்கும் பெரியவள் போலும்!' என்ற திருப்தி பிறந்தது அவனுக்கு. எனினும் அவர்களைப் பற்றி இன்னும் எவ்வளவோ அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறதே எனும் ஏக்கமும் வளர்ந்தது.

சாயங்காலம், ரகுராமன் மறுபடியும் தோட்டத்திற்குப் போய் கவனித்தான். அடுத்த வீட்டின் பக்கத்தில் அந்தச் செடிகள் தரையிலேயே கிடந்தன, பசியால் மெலிந்து தளர்ந்து சாகக் கிடக்கும் சின்னஞ்சிறு ஜீவன்களைப் போல. அவன் பார்வை கதவின் பக்கம் பாய்ந்தது. எப்பொழுதும் போல் அடைத்த கதவு தான் காட்சி தந்தது.

அவன் நினைத்தான்—'இப்பவே செத்தது போலாகி விட்டன அந்தச் செடிகள். இனிமேல் அவள் எப்ப வந்து நடுவாளோ! நட்டாலும் பயனில்லாமல் போகலாம். இளஞ் செடிகளை வீணாகச் சாக விடுவானேன்? நானே நட்டு விட்டாலென்ன?'

அவனுக்கு எவ்வித ஆட்சேபணையு மில்லை. ஆகையினால் சிரத்தை எடுத்து பாக்கிச் செடிகளையும் நட்டு, கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து ஊற்றினான் அந்தப் பரோபகாரி. அக் காரியத்தை முடித்துக் கையலம்பிவிட்டு, கைகளைத் துண்டிலே துடைத்தபடி நின்ற ரகுராமனின் கண்கள் அடுத்த வீட்டுக் கதவுப் பக்கம் புரண்டு, அதை அடுத்த ஜன்னலின் புறமாக ஓடின.

அந்த ஜன்னலின் கீழிரண்டு கதவுகள் மூடப் பெற்றிருந்தன. திறந்து கிடந்த மேல் பகுதியின் ஒரு ஓரத்திலே

பதுங்கி யிருந்த முகம் அவன் கண்களில் தென்படுவதற்கு முன்னதாகவே பின் வாங்கிவிட முயன்றும் முடியாமல் போனதை உணர்ந்தான் அவன். 'அது அவள் தான். அந்தக் குறுகுறு விழிகள் வேறு யாருக்கும் இருக்க முடியாது. அவளே தான்' என்று மகிழ்ந்தது அவன் மனம். 'சகுந்தலா சந்தோஷப்படுவாள். நான் பயம் எழுப்பும் பண்பினன் அல்ல என்பது அவளுக்குப் புரியாமலா போகும்!' என்ற நினைப்பும் உண்டாயிற்று அவனுக்கு.

ஆனால் அவன் நினைத்தது எவ்வளவு தப்பு என்பது மறு நாள் தான் அவனுக்கு விளங்கியது. காலையிலே அவன் தோட்டத்தின் பக்கம் வந்தபோது அவன் கண்களை உறுத்தின பிடுங்கி எறியப்பட்ட செடிகள் சில. அவை அவன் வீட்டுப்பக்கம் தான் விசிறி எறியப் பட்டிருந்தன. தான் பரிவுடன் நட்டு வைத்த செடிகளாகத்தா னிருக்க வேண்டும் அவை என்ற உண்மை அவன் உள்ளத்தில் உதயமானதும், வேதனைச் சுமை கவிந்தது அங்கே.

'எவ்வளவு ராங்கி அவளுக்கு! அவள் மகா கர்வக்காரி என்பதுதான் முதல் நாள் அவளைப் பார்த்த போதே புரிந்ததே. செடிகளை யார் நட்டால் என்ன? பாழாகும் இளஞ் செடிகளை நட்டது தப்பிதமாக்கும்? பிடுங்கி எறிந்து விட்டாளே பாதகத்தி! அவள் மோறையும் மூஞ்சியும்!' என்று கனன்று கொதித்தது அவன் உள்ளம். அதே 'மோறையையும் மூஞ்சியையும்' தான் வியந்து போற்றி நினைவினால் வரைந்து அழித்து மீண்டும் எழிலுறத் தீட்டிக் கண்டும் எண்ணியும் மகிழ்ந்து கொண்டிருந்தான் என்பதை அவனே உணர்ச்சி வெறியில் மறந்து விட்டான்!

அவனுக்கு வந்த ஆத்திரத்தில் அப்படியே போய் அவள் நட்டிருந்த செடிகளையும்—காலைக் குளுமையில் சிறிது தலை நிமிர்ந்து நின்ற பச்சிளஞ் செடிகளை—வேரோடு பிடுங்கி விசி எறியலாமா என்றிருந்தது. அப்புறம் அது வீண் பழிகளுக்கு இடமளிக்கும், பெரிய குற்றமாகப்படும் என்று எண்ணி அவன் செயல் புரியவில்லை.

'இவளுக்குப் போய் சகுந்தலை என்று பெயர் வைத்திருக்கிறார்களே! நேற்று இவள் செடிகளை நட்டபோது பொருத்தமான பெயர் தான் என்று நினைத்தேன். இவள் செடிகளைக் கொல்லும் எமனாக அல்லவா இருக்கிறாள்!' என்று முணமுணத்தான் ரகுராமன்.

அவ் வேளையில் காலில் ஏதோ ஒருவித உணர்வு உண்டாகவும் அவன் திடுக்கிட்டுத் துள்ளினான். 'மியாவ்' என்று கத்திக்கொண்டு நின்றது பூனை. அடுத்த வீட்டுக்காரி வண்டியிலிருந்து இறங்கும்போது அள்ளி அணைத்து அருமையாகத் தூக்கி வந்தாளே அதே பூனைக்குட்டி தான். அதன் விசேஷ நிறமும் அடர்ந்த வாலும் அதைக் காட்டிக் கொடுத்தன.

'சீ, நீ தானா! நான் என்னவோ ஏதோ என்று பயந்து போனேன்' என்றான் ரகு. பூனை 'மியூவ்' என்று தீனக் குரல் எழுப்பி அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தது.

'இத்தனை நாள் நீயும் கோஷாவாக இருந்தியாக்கும்? இப்பதான் இங்கே யெல்லாம் சுற்றணும்னு நினைப்பு வந்ததாக்கும்! போ சவமே!' என்று எரிந்து விழுந்தான் அவன்.

பூனைக்கு இரவிலே சாப்பாடு கிடைக்க வில்லையோ; அல்லது ரகுராமனிடம் அதற்குத் திடீர் அபிமானம் ஏற்பட்டு விட்டதோ என்னவோ! அது அவன் காலருகிலேயே சென்றது 'மியாவ்' என்று கத்திய வண்ணம். 'போ, போய் விடு' என்று கூச்சலிட்டான் அவன்.

அடுத்த வீட்டு ஜன்னலுக்குப் பின்னிருந்து 'குகுங்...... குகூங்!' என்று சிரிப்பு வெடித்துச் சிதறியது. அவன் நிமிர்ந்து நோக்கும்பொழுது வெற்றிடத்தையே கண்டான். அவள் தன்னைக் கேலி செய்கிறாள் என்ற நினைப்பு அவனுக்கு ஆங்காரமளித்தது. அந்த ஆவேசத்தை அவன் பூனைக்குட்டியிடம் காட்டினான்.

அவன் கால் பக்கம் வந்து நின்று முகம் நிமிர்த்தி 'மியூவ்' என்ற பரிதாபமாகக் கத்திய பூனையை 'இது ஒண்ணு தான் குறைச்சல்!' என்று கூறியபடி காலால் தூக்கி எறிந்தான். அது அலறியபடி அடுத்த வீட்டு வாசலில் போய் விழுந்தது.

மறுகணமே அவன் எதிர்பாராதது நடந்தது. 'உயிர்களிடத்திலே கொஞ்சம்னாலும் இரக்கமே கிடையாது போலிருக்கு!' என்று முனங்கியபடி, கதவைத் திறந்து வேகமாக வந்து பூனையைக் கையிலெடுத்துக் கொண்டு திரும்பினாள் சகுந்தலா. அப்பொழுது அவள் அவன் பக்கம் வீசிய பார்வையில் நெருப்பின் தகதகப்பு சுடரிட்டது.

ரகுராமன் இதற்கெல்லாம் பயந்துவிட முடியுமா! 'யேயம் மோவ்! பேரு சகுந்தலையாம். அவதாரத்திலே கண்ணகி மாதிரியில்லா தோணுது!' என்று கெக்கலி கொட்

டியது அவன் மனம், 'சுட்டு எரிச்சிருவா போலிருக்குதே! ஒரே பார்வை—ஆள் அவுட்! அவ்வளவு கோபம்! ஒஹெறா ஹோ!' என்று கனைத்தது அவன் உள்ளம்.

'அம்மா ஜீவகாருண்ய உபதேசம் புரிய வந்துட்டா! நட்ட செடிகளைப் புடுங்கி யெறிந்த கட்டரசி!' என்று முணு முணுத்த ரகுராமன் தன் கோபத்தைக் கதவிடம் காட்டினன் ஓங்கி அறைந்து கதவைச் சாத்திய விதமே அடுத்த வீட்டுக் காரிக்குத் தனது மனோ நிலையை நன்ருகக் காட்டியிருக்கும் என்று நம்பினன் அவன்.

என்ருலும் ரகுராமன் உள்ளத்தில் வருத்தம் இல்லாம லில்லை. பக்கத்து வீட்டுக்குப் புதிதாகக் குடிபுகுந்தவர் களிடம் சுமுகமாக நடந்து கொள்ளவேண்டும்; உறவாடி மகிழாவிட்டாலும் வீண் சண்டையிட்டு அமைதியைக் கெடுத் துக் கொள்ளக் கூடாது என்று நினைத்தவன் அவன். அதற் காகவே பல தினங்களாகத் தனது நலன்கள் பலவற்றை—சௌகரிய வசதிகளை—விட்டுக்கொடுத்துத் தன் தாராளத் தன்மையை நிரூபிக்க முயன்றவன். எவ்வளவு முயற்சி களெடுத்தும் என்ன பிரயோசனம்? எல்லாம் ஒரே நாளில் மண்ணைக் கவ்வி விட்டன. அதற்காக அவன் வருந்தினன்.

'அனைத்திற்கும் அந்த அலங்காரி தான் காரணம். நான் நட்ட செடிகளை அவள் ஏன் பிடுங்கிப் போடவேண்டும்?' என்று குற்றம் சாட்டியது ரகுராமனின் மனம்.

## — 3 —

ரகுராமன் இனி அடுத்த வீட்டுப் பிரச்னைகளைப் பற்றிக் கவலைப் படுவதில்லை என்று நினைத்துக் கொண்டான். ஆனல் சந்தர்ப்பம் மறுபடியும் அவனுக்கு விரோதமாக வேலை செய்தது.

அன்று—அவன் நட்ட செடிகளை சகுந்தலா பிடுங்கி எறிந்ததனல் அவன் கோபமடைந்து அவள் வீட்டுப் பூனைக் குட்டியை உதைத்த தினத்தன்று—சாயங்காலம் ரகுராமன் வெளியே போவதற்காகக் கிளம்பிய போதுதான் அது நடந் தது. அவன் கதவைப் பூட்டிவிட்டு முன்வாசலில் கால் வைத்ததும், பக்கத்து வீட்டிலிருந்து ஒரு பெரியவர் வந்தார். வாசல் படியிலே நின்றபடியே அவனைக் கவனித்தார்.

ரகுராமன் அவரை ஒருமுறை பார்த்துவிட்டு நகர்ந்தான். ஆனால் 'ஸார், கொஞ்சம் நில்லுங்க!' என்ற குரல் அவனுக்குத் தடை போட்டது. அடுத்த வீட்டுப் பெரியவர் ஒருபடி கீழிறங்கி நின்றார். 'இந்த வீட்டிலே நீங்க மட்டும் தான் தனியாக இருக்கிறேளா? வேறெ யாருமில்லையா?' என்று விசாரித்தார் அவர்.

'ஆமா. வேறே யாருமில்லே' என்ற ரகுராமன் அவரை ஆராயும் நோக்கெறிந்தான். அவருக்கு நாற்பது வயதுக்கு அதிகமாயிருக்கும் என்று தோன்றியது. ஆள் கனமாகத் தானிருந்தார். படித்து நாகரிகம் பெற்றவராகத் தானிருக்க வேண்டும்; எங்காவது; வேலை பார்க்கிறாரோ என்னவோ; வெளியூர் உத்தியோகமாக யிருக்கலாம்; இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இன்று தானே இவரைப் பார்க்க முடிகிறது என்று எண்ணினான் அவன்.

'உங்களிடம் சாவகாசமாய் பேசவேணும்' என்றார் அவர்.

'ஏன், என்ன விஷயம்?' என்று கேட்ட ரகுராமனின் உள்ளத்தில் சிறு அரிப்பு பிறந்தது. தன்னைப் பற்றி அவள் இவரிடம் ஏதாவது சொல்லி யிருக்கலாமோ என்ற சந்தேகம் தான் காரணம்.

'விஷயம் ஒண்ணும் பிரமாத மில்லே' என்று இழுத்தார் பெரியவர்.

'இப்பவே சொல்லி விடுங்களேன்!' அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிய வேண்டும் என்ற ஆசை தூண்டிய பேச்சு இது.

ஆனால் அவரோ சாவதானமாகச் சொன்னார்: 'அவசரம் எதுவுமில்லை. இப்போ நீங்கள் எங்கேயோ வெளியே போகிறீர்கள். வழி மறித்துப் பேசவேண்டிய அளவு முக்கிய விஷயமில்லையே!'

'சரி, அப்ப நான் பிறகு வந்து பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு நடந்தான் அவன். 'எனக்கு முக்கிய அலுவல் ஒன்றும் கிடையாது. நீங்கள் சும்மா பேசுங்கள்!' என்று சொல்லி விடலாம் என்ற துடிப்பு இருந்தது அவனுக்கு. ஆனால் எடுத்த எடுப்பிலேயே தன்னைப்பற்றி அவர் அலட்சியமாக மதிப்பிடுவதற்கு இடமுண்டாகும்

என்ற எண்ணமும் எழுந்தது. அதனால் பேசாமல் நடந்தார்.

எனினும் அவன் மனம் அவரைப் பற்றிய எண்ணத்தை ஒதுக்கிவிட வில்லை. என்றுமில்லாத அதிசயமாக அவர் அங்கு திடீரென்று தலை காட்டியது எப்படி; அவர் அங்கேயே யிருப்பவர் தானா; அல்லது அடிக்கடி வந்து போகிறவரா? அவள் அவர் மனைவியாக யிருப்பாளோ? இப்படி எவ்வளவோ சந்தேகங்கள். இந்தக் குழப்பமெல்லாம் அவனுக்கே எரிச்சலாக யிருந்தது.

'அடுத்த விட்டுக்கு வந்திருப்பவர்களைப் பற்றிக் கவலைப் பட்டுக் காலக் கொலை செய்வதனாலே காலணா லாபம் கூடக் கிடையாது. வேறு எதையாவது எண்ணி மகிழலாம். அல்லது இனிய கனவு கண்டாலாவது உள்ளத்திற்கு உற்சாகம் ஏற்படும்' என்று நினைத்தான் ரகுராமன். நினைத்து என்ன பிரயோசனம்! மனம் ஒடுங்கிக் கிடந்தால் தானே! அது அடுத்த விட்டுக்காரிக்கு வயது என்ன இருக்கும், அவள் கல்யாணமானவள் தானா என்பன போன்ற அநாவசியப் பிரச்னைகளைப் பிடித்துக்கொண்டு கூத்தாடும்.

'தனியாக இருப்பதனால் தான் இந்தத் தொல்லைகள் எல்லாம். தனிமையில் சாரம் உண்டு. அதே தனிமை சனியனாக மாறிப் படாதபாடு படுத்தி விடுவதும் சகஜமே!' என்று அவன் அந்தராத்மா குரல் கொடுத்தது. 'கொஞ்ச காலம் எங்காவது சுற்றி யலைந்து விட்டு வரலாம். ஊர் சுற்றி விட்டு வந்து ரொம்ப நாளாச்சு' என்றும் எண்ணம் எழுந்தது.

ரகுராமன் அடுத்த வீட்டுப் பெரியவரைச் சந்திக்கச் சென்ற போது இரவு ஏழு மணி யிருக்கும். அவர் இருப்பாரோ இல்லையோ என்று நினைத்தவாறு எட்டிப் பார்த்தவன் அவர் நாற்காலியிலமர்ந்து புத்தகம் படிப்பதைக் கண்டதும் அதிசயித்தான். 'பரவாயில்லையே. இவர்கூடப் படிக்கிறாரே!' என்று பாராட்டியது அவர் மனம். 'ஸார்! ஸாரோ!' என்றான்.

'யாரது, உள்ளே வாங்க!' என அனுமதித்தவர், ரகுராமன் வந்தவுடன் 'நீங்களா!' என்று வரவேற்று உபசரித்தார். மேஜை முன் கிடந்த பெஞ்சில் அமர்ந்த ரகுராமன் மௌனமாக யிருந்தான். புத்தகங்களும் காகிதங்களும் குவிந்து கிடந்தன மேஜை மீது. அவர் படித்துப்

படித்துக் குறிப்புகள் எடுத்து வைத்துக் கொள்கிறார் என்று புரிந்தது. மேலோட்டமாகப் பார்த்ததில் அவர் பெயர் ஞானசம்பந்தம் என்று ஊகிக்க முடிந்தது அவனால். புத்தகங்களின் மேலும் காகிதங்களிலும், கைபட்ட இடங்களிலெல்லாம் அப்படிக் கையெழுத்திட்டிருந்தார் அவர்.

தன்னை வரச் சொன்னதையே அவர் மறந்திருப்பாரோ; அல்லது படிப்பிலே ஆழ்ந்து கிடப்பதனால் அங்கு தானிருப்பதையே மறந்து விட்டாரோ என்ற எண்ணம் உண்டாயிற்று அவனுக்கு. அங்கு காத்திருப்பது பொறுமையைச் சோதிப்பதாகத் தோன்றியது. அவன் கண்கள் அங்குமிங்கும் திரிந்தன. அவர் பட்டாசாலையி லிருந்தார். அடுத்த அறைகளுக்குச் செல்லும் வழியின் கதவு அடைத்தே கிடந்தது. ஜன்னல்களும் அழகிய பூந்திரைகளேற்றுத் திகழ்ந்தன.

'இந்த வீட்டிலே நான் நினைத்தது மாதிரி மர்மம் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வேளை இருந்தாலும் இருக்கலாம். சில நிமிஷ நேரத்திலேயே அதை எப்படி நிர்ணயித்து விட முடியும்?' என்று தனக்கே உபதேசித்துக் கொண்டான் ரகுராமன்.

'என்ன, என்ன விஷயம்?' என்று கேட்டார் அவர் கையிலிருந்த புத்தகத்தை மூடிக் கீழே வைத்து விட்டு.

'நீங்கள் தானே வரச் சொன்னீர்கள். விசேஷமாக என்னவோ பேசவேண்டுமென்று.' குற்றம் சாட்டுவது போல் தொனித்தது அவன் பதில்.

ஞானசம்பந்தம் கனைப்பது போல் சிரித்தார். 'ஆமா. பக்கத்திலே பக்கத்திலே குடியிருக்கிறோம். நாம் ஒருத்தரை ஒருத்தர் இதுவரை பார்த்துப் பேசினது கூட யில்லை!' என்றார்.

'சந்தர்ப்பம் வரலே. அதுதான்' என்று 'ஞஞ்ஞமிஞ்ஞத் தனம்' பயின்றான் அவன்.

'சந்தர்ப்பமென்ன சந்தர்ப்பம்! நான் சொல்றேன், வர வர மனிதர்கள் பழகும் தன்மையையே இழந்து விட்டார்கள். மனுஷ சுபாவமே மாறி வருகிறது. தான், தனது, தன்னைச் சேர்ந்தவர், தனது வீடுஇதை மாதிரி இன்ட்ரஸ்ட் வளருகிறதே தவிர பிறத்தியாரைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற துடிப்பு இல்லை. அந்தக்

காலத்து மனுஷங்களைப் பாருங்க. நீ யாரு, எந்த ஊரு, எங்கே போறே, என்ன வேலை, வயசென்ன, சம்பாத்தியம் எவ்வளவு, கல்யாணம் ஆகிவிட்டதா, பிள்ளைகள் எத்தனை— இப்படி ஒவ்வொருவரைப் பற்றிய சகல விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று துடிப்பார்கள். தூண்டித் தொளைத்துக் கேள்வி மேல் கேள்வி போட்டு, பிராணனை வாங்கிவிடுவார்கள்.'

ஸ்ரீமான் ஞானசம்பந்தம் பெரிய மனுஷத்தனம் செய்யப் பின் வாங்காதவர் என்று நிச்சயமாகப் பட்டது ரகுராம னுக்கு. தேவை யிருக்கிறதோ இல்லையோ, சம்பந்தம் உண்டோ இல்லையோ, சதா எதையாவது பொரிந்து தள்ள வேண்டியது தங்கள் தொழில் எனக்கொண்டு விடுகிறவர் கள் அவர்கள். வயதினுல் தாங்கள் பெரியவர்களாகி விட்ட ஒரே காரணத்தைக் கொண்டு கூட, போதனைகள் உதிர்ப் பதும் போரடிப்பதும் தங்கள் உரிமை என்று நம்பி வாழ் கிறார்கள் பலர். அவர்களிடம் தனி நபரோ பல அன்பர் களோ அகப்பட்டு விட்டால் போதும்! 'பேசாத நாளெல் லாம் பிறவா நாளே!' என்ற கொள்கையை உடையவர்கள் தம் இஷ்டம் போல் அபிப்பிராயங்களை உதறி அலசிப் பிழிந்து தள்ளத் தயங்குவதே யில்லை.

அந்த ரகத்தைச் சேர்ந்தவர் ஞானசம்பந்தம். 'அது தான் நான் சொல்லுகிறேன். மனிதனை மனிதன் சந்தேகிக் கிறான். அடுத்தவனேடு தாராளமாகப் பழகுவதில்லை. முன்னலே ஒரு ஊரில் இருப்பவருக்கு அந்த ஊரில் உள்ள எல்லா வீட்டுக்காரர்களின் குல முறை சரித்திரம் நிகழ்கால விவரம் அனைத்தும் தெரியும். தெரிந்து கொள்ளும் பண்பு இருந்தது. பரஸ்பரம் பழகும் ஆசை யிருந்தது. இப்ப என்ன? ஒரே தெருவிலே உள்ளவர்கள்—தெருவைச் சொல் வானேன்? பக்கத்துப் பக்கத்து வீடுகளையே எடுத்துக் கொள்ளுங்களேன்! அடுத்த வீட்டிலே இருப்பது யார் என்று கூடத் தெரியாது. ஒரே வீட்டிலே ஒன்பது குடித்தன மிருக்கலாம். இருந்தாலும் பரஸ்பரம் பழகிக் கொள்ளா மலே காலம் கழிப்பது சகஜமாகி விட்டது.'

தானும் ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக 'ஆமாமா, அப்படித்தானிருக்கு வாழ்க்கை' என்று சொல்லி வைத்தான்.

'வாழ்க்கையின் மேல் பழி போடுவதில் பயனில்லை. வாழ்க்கை என்பதே மனிதர்களாக அமைத்துக் கொள்வது

தானே? மனிதர்களையா வாழ்க்கை அமைக்கிறது?. ஹஹஹ, நான் என்ன சொல்கிறேனென்றால், சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பது தப்பு. இதுவரை நாம் பழகிக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படவில்லை. நாமாகவே விலகி விலகிப் போய்க் கொண்டிருந்தோம். அது சரி. உங்கள் பெயரென்ன? நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் சொல்லுங்கள்!' என்று கூப்பாடு போட்டார் அவர். தான் ஒரே ஒரு நபரிடம் பேசுவதாக எண்ணவில்லை; மக்கள் நிறைந்த பெரிய கூட்டத்திலே பிரசங்கம் பண்ணுவதாக அவர் நம்பி விட்டார் போலும்!

ரகுராமன் தன்னைப் பற்றிச் சொல்லி வந்த போதே அவர் குறுக்கிட்டார்: 'சந்தர்ப்பம் சதி செய்து விடுகிறது என்பதே அர்த்தமற்ற பேச்சு. உனக்கு மனமில்லை; நீ செய்யலே—அதைச் சொல்லேன். சந்தர்ப்பமா உன் முன்னாலே வந்து நின்று சாமியாடுகிறது? ஹஹஹ, சந்தர்ப்ப சகாயமென்றால், ஆளு மாதிரி வந்து உம்ம கையைப் பிடிச்சிழுத்து வா ராஜா இப்படி யென்று, கூட்டிக்கொண்டு போகுதாக்கும்? எல்லாம் அர்த்தமற்ற பேச்சு, அதுதான் நான் சொல்வது. சரி சரி, நீங்க சொல்வதைச் சொல்லுங்க, மிஸ்டர் ரகுராமன்.

இந்த ஞானசம்பந்தம் முதல் ரகத் தொணதொணப்பர் என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது. அவரிடமிருந்து நைஸாக நழுவி விட விரும்பினான் ரகுராமன்- நீங்கள் சொல்வது நிரம்பச் சரி! என்னிடம் ஏதோ முக்கிய விஷயம் பேச வேண்டும் என்றீர்களே?' என்று ஞாபகப்படுத்தினான்.

'நல்ல வேளை, நினைவுபடுத்தினீர்கள். இல்லையென்றால் நான் மறந்தே போயிருப்பேன். விஷயம் இதுதான். பின் பக்கத்திலே தோட்டம் கிடக்கிறதே, அது பொதுவாகத் தானே யிருக்கு?' என்று தொடங்கினார் அவர்.

இப்பொழுதுதான் அவர் முக்கியப் பிரச்னையைத் தொடுகிறார் என உணர்ந்த ரகுராமனின் உள்ளம் இயல்பான சந்தேகம் தலை தூக்கியதனால் விழிப்புற 'ஆமா' என்று இழுத்தாற் போல் பதில் சொன்னான்.

'இரண்டு வீட்டுத் தோட்டமும் தனித் தனியாகப் பத்திரமா யிருப்பது நல்லதில்லையா?' என்று கேட்ட சம்பந்

தம் அவன் முகத்தையே பார்த்தார். 'உம். சொல்லுங்க!' என்று தலையசைத்தான் அவன்.

'அதனாலே நடுவிலே ஒரு வேலி போடுவது நல்லது என்று தோன்றுகிறது. பகலிலே, எந்த நேரத்திலும் இந்தப் பக்கத்திலே எங்க வீட்டில் உள்ளவங்க பழகுவதற்கும் சௌகரியமாக யிருக்கும். பனை ஓலையைக் கொண்டோ, தென்னோலைத் தட்டிகளை வைத்தோ உயரமாக மறைவா யிருக்கும்படி வேலி அடைக்கலாம்னு யோசனை. நீங்க என்ன சொல்றீங்க?'

'உங்கள் யோசனை! அதை உங்கள் இஷ்டம் போல நீங்கள் செய்வதற்கு என்னுடைய அபிப்பிராயம் எதற்கு?' என்றான் ரகுராமன். 'அம்மாளு சொல்லிக் கொடுத்த அழகான யோசனை போலிருக்கு' என்று முனங்கியது அவன் மனம்.

'செய்வதைப் பற்றித் தடை ஒன்று மில்லை, மிஸ்டர் ரகுராமன்! அது பொது இடம். நமது பொது நன்மையை உத்தேசித்துச் செய்யப் போகிற காரியம். அதுக்கு உங்கள் சம்மதமும் இருந்தால் நல்லது தானே!'

உண்மையில் அவர் தனது சம்மதத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை; வேறு முக்கிய விஷயத்திற்காக அடிப் போடுகிறார் என்பது அவனுக்கா தெரியாது! ஆகவே 'பேஷாச் செய்யுங்கள்! என்னிடம் கேட்பானேன்?' என்றான்.

'பொது இடம், பொது வேலி என்பதனாலே செலவிலே பாதியை நீங்கள் ஏற்றுக் கொள்ளணும். அதுக்காகத் தான்!'

இதையே எதிர்பார்த்த ரகுராமன் அழுத்தமாக அறிவித்தான் 'அதுதான் முடியாது' என்று.

'முடியாதா? ஏன்?' என்று உறுமினார் அவர்.

'உங்கள் நன்மையை உத்தேசித்து......'

'எனது நன்மையா? இது பொது விஷயம் என்று சொல்கிறேன். நீங்கள் வந்து......'

'பொது விஷயமுமாச்சு. பொரிச்ச குழம்புமாச்சு! போங்கய்யா! மகாப் பொது நன்மை—எனக்குத் தெரியாதாக்கும்! உங்கள் சொந்தச் சௌகரியங்களை—உங்கள்

வீட்டிலிருப்பவர்களின் நலன்களை—உத்தேசித்து நீங்களே திட்டமிட்டுச் செய்கிற காரியம். இதுக்கு நான் ஏன் உதவ வேண்டும்?' என்று அமைதியுடன் ஆணித்தரமாய்ச் சொன்னான் அவன்.

'இதனாலே உங்களுக்கும் சௌகரியம் என்பதை நீங்க மறந்து விடப் படாது.'

'சும்மா கிடந்தாலும் எனக்கு ரொம்பச் சௌகரியம் தான்! சுவரே கட்டி விட்டாலும் ஒன்று தான். எதைப் பற்றியும் எனக்கு அக்கறை கிடையாது. இத்தனை நாள் இல்லாத வசதிக் குறைச்சலோ, அதிக நன்மையோ வேலி கட்டுவதனாலே மட்டும் என்ன வந்து விடப் போகிறது?'

'ரகுராமன், நீங்கள் பேசுவது நல்லாயில்லை!' என்றார் ஞானசம்பந்தம்.

'நீங்கள் இதுவரை பேசியதற்கும் திடீரென்று சொந்த விவகாரத்திலே பல்டி யடிப்பதற்கும் பொருத்தமும் நல்ல பண்பும் இருந்தால் சரிதான்' என்ற ரகுராமனின் குரலில் கிண்டல் மிளிர்ந்தது.

'வார்த்தைகளை நிறுத்துப் பேசணும் நண்பரே. சொல்லுக்கு சக்தி அதிகம்' என்று சொன்னார் பெரியவர்.

'சந்தோஷம். ஆனால் நீங்கள் அதை மதிப்பதில்லை போலிருக்கு. சும்மா அளந்து கொட்டுவது தான் உங்களுக்குப் பிடிக்குமென்று தெரியுது. அது எப்படியும் போகட்டும். வேலி விஷயத்திலே கண்டிப்பென்றால் கண்டிப்புதான். எனக்கு வேலி போட்டுத்தான் ஆகணும் என்ற அவசியமே கிடையாது. இத்தனை நாள் கிடந்தது போலவே திறந்த வெளியாய் கிடந்துவிட்டுப் போகட்டுமே! கூடாது, வேலி கட்டித்தான் தீரணு மென்றால் நீங்கள் உங்கள் சொந்தப் பொறுப்பிலேயே கட்டிக் கொள்ளுங்கள். நான் காலணாக் காசு தரமுடியாது' என்று கூறிவிட்டு வேமாகக வெளியே நடந்தான் அவன்.

'மிஸ்டர், மிஸ்டர்!' என்று கூப்பிட்டார் சம்பந்தம். ரகுராமன் திரும்பிப் பார்க்கவே யில்லை. 'உம், என்ன இவன் இப்படி யிருக்கிறான்!' என்று நினைத்தார் அவர்.

'அவள் யோசனைதான் இது. இதுக்காக நான் ஏன் வீண் செலவு செய்யணும்?' என்று புழுங்கினான் ரகுராமன்.

அவன் அன்று முழுவதும் தோட்டத்தின் பக்கம் செல்லவே யில்லை. மறுநாள் சாயங்காலம் பின் கதவைத் திறந்து அங்கே எட்டிப் பார்த்ததும் புதிய வேலியைக் காண முடிந்தது. பனை ஓலைகளை நெருக்கமாக வைத்துக் கட்டிய நல்ல மறைப்பாக நின்றது அது.

'அட, ரொம்ப வேகமாகத் தான் காரியங்கள் நடந் திருக்கு!' என்று பேசியது அவன் மனம். இதுவரை இல்லாமல் திடீரென்று நடுவில் அப்படி ஒரு தடுப்பு கிளம் பியது தோட்டத்தின் அழகையே கெடுத்து விட்டதாகத் தோன்றியது அவனுக்கு. ஒழுங்குமுறை யில்லாமல் அனைத் தும் இஷ்டம் போல் குலைந்து கிடந்த இயற்கை நிலையிலே தான் தனி அழகு நிறைந்திருந்ததாக நம்பினன் அவன். அந்த அழகை, அதன் விளைவாக அவன் அனுபவித்த அமைதியைக் குலைக்க வந்த அலங்காரி மீது அவனுக்கு அர்த்தமற்ற பகை யுணர்ச்சி உண்டாயிற்று.

'அவள் அழகாக இருக்கிருள். அவள் பெயரும் அழகு தான். ஆனல் இதயத்திலே அழகுணர்வு அற்றவள் அவள்' என்று தீர்ப்புக் கூறியது அவன் உள்ளம்.

தோட்டத்தை பார்த்து நின்ற அவன் கண்கள் கிணற்றைக் கவனித்தன. கிணறு நடுவிலே யிருந்ததனல், அதை விட்டு விட்டுத்தான் வேலி அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் வளர்ந் திருந்தது. அவன் சிரித்தான். 'அந்த கோஷா அம்மா கிணற்றையும் இரண்டாகத் தடுத்து திரை போடவேண்டும் என்று விரும்பவில்லை போலிருக்கு!' என்ற எண்ணம் தலை காட்டியது தான் காரணம்.

'சரி எப்படியும் போகு! எனக்கும் நல்லதாப் போச்சு. இனிமேல் இந்தப் பக்கம் வருவதற்குத் தயங்கித் தயங்கித் நிற்க வேண்டியதில்லை. இஷ்டம் போல வரலாம், போக லாம். எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் உட்கார்ந்திருக்க லாம்' என்று மனதைத் தேற்றிக் கொள்ள முயன்முன் அவன். இனி என்ன செய்யலாம் என்று யோசித்து நின்றவனின் கவனத்தைக் கவர்ந்தது முன்புறத்தில் எழுந்த ஒலி. யாரோ கதவைத் தட்டுவது போல் தெரிந்தது. விடாது வந்த ஓசை அவனுக்கு எரிச்சலைத் தந்தது. 'சனியன் பிடித்தவனுக! யாரு இந்த வேளையிலே வந்து இப்படித் தொல்லை தருவது'? என்று எண்ணிக் கொண்டே முன் வாசலுக்குப் போனுன் அவன்.

— 4 —

ரகுராமன் முன் வாசல் கதவைத் திறந்ததும் அவனுக்கே ஆச்சர்யமாகப் போய்விட்டது. அங்கே அடுத்த வீட்டு வேலைக்காரப் பெண் நின்றாள்.

'இது இங்கே ஏன் வந்தது? ஒரு வேளை தூக்கமயக்கம் ஏதாவது ஏற்பட்டு, தவறிப்போய் இந்த வீட்டிற்கு வந்து விட்டதோ என்னவோ!' என்று கூட நினைத்தான் அவன். அந்தப் பெண் பேசாமல் முழித்துக் கொண்டு நிற்கவே "என்ன வேணும்? நீ தானே கதவைத் தட்டினே?' என்று கேட்டான்.

'வாளி கிணற்றிலே விழுந்துட்டுது. அதை எடுக்கிற இது உங்க கிட்டே இருந்தால், கேட்டு வாங்கிக்கிட்டு வரும் படி அம்மா அனுப்பினாங்க' என்ற பதிலும் அவன் எதிர்பாராததுதான்.

'அந்த அம்மாளு தான் இங்கே ஆளனுப்பினளா? என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்புப் பிறந்தது அவனுக்கு. அதனால் வேலைக்காரப் பெண் முதலில் சொன்னதைப் புரிந்து கொள்ளாதவன் போலக் கேட்டான், 'யார் அனுப்பினு?' என்று.

'அடுத்த வீட்டு அம்மா.'

'ஐயா வீட்டிலே இல்லையா ?'

'இல்லே.'

'எங்கே, வெளியூர் எங்காவது போயிருக்காரா ?'

வேலைக்காரப் பெண் அநாவசியமான கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லத் தான் தயாராக யில்லை என்பதை அறிவிக்க விரும்புவது போல் அவசரப்பட்டாள்: 'அதெல்லாம் எனக்குத் தெரியாது. வாளி யெடுக்கிற இது உங்க கிட்டே இருக்குதா இல்லையா ?'

ரகுராமனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. 'இதுவும் இல்லே. ஒரு எழவுமில்லை போ !' என்று எரிந்து விழவேண்டும் என்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவனுடைய நல்லதனம் அந்த வெறி நினைவை அமுக்கி விட்டது; எனினும் பொங்கிய வெறியின் சாயை படியாமல் போகவில்லை அவனது பேச்சிலே.

'இது யின்ன ? என்னதுன்னு தெளிவாகச் சொல்லாமல், இது யிருக்குதா, இது யிருக்குதா என்று கேட்டால் எதைக் கொடுப்பதாம் ?'

அந்தப் பெண்ணுக்குச் சிரிப்பு வந்தது. வெட்கமும் சூழ்ந்து கொள்ள, தலைகுனிந்தபடி மெதுவாக முனங்கினுள்: 'அது தான், கயித்திலே கட்டிக் கிணற்றிலே இறக்கி வாளியைப் பிடிச்சிழுக்கிறது. முள்ளு முள்ளாக இருக்குமே!'

'பாதாளக் கரண்டியா ?' என்று கேட்டான் அவன், அப்பொழுது தான் புரிந்து கொண்டவனைப் போல.

'ஆமாமா' என்று தலையசைத்தாள் அவள்.

வீட்டினுள் போய் பாதாளக் கரண்டியை எடுத்து வந்து கொடுக்கும் போது 'உன் பெயரென்ன புள்ளே ?' என்று கேட்டான்.

'உலகு' என்ருள் அவள்.

'உலகா ?' என்றது அவன் வாய். 'உலகு, உலகம் உலகம்மா !' என்று அடுக்கிக் கொண்டிருந்தது அவன் மனம். 'சரி, வாளியை யாரு கிணற்றிலே போட்டது, நீ தாஞ ?' என்று விசாரித்தான்.

'நானில்லே. அம்மா தண்ணி இறைக்கும் போது கயிறு கை நழுவி உள்ளேயே விழுந்துட்டுது' என்று சொல்லி விட்டு நகர்ந்தாள் அவள்.

'இந்த இதையும் உள்ளே போட்டு விடாமல் இருக்கணும். இதுவும் கிணற்றிலே விழுந்து விட்டால், அப்புறம் ஆள் இறங்கித் தான் எடுக்கணும்' என்ருன் ரகுராமன். சொன்ன பிறகு 'சே, இதையேன் சொன்னேம்!' என்றிருந்தது.

சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே போய் விட்டாள் உலகு. இருப்பினும் அவன் மனதில் சிறு அரிப்பு இருக்கத் தான் செய்தது. 'இதைப்போய் இந்தப் புள்ளே அவளிடம் சொன்ஞல், அவள் என்னைப் பற்றி மேலும் மோசமாகத் தான் மதிப்பிடுவாள்' என்று தான்.

'சொன்னதோ சொல்லியாச்சு. இனி வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்!' என்று ஒதுக்கி விட்டான். ஆஞல் அவன் உள்ளம் ஒடுங்கிவிட வில்லை.

அடுத்த வீட்டு ஐயா திடீரென்று வந்தார். வந்ததுபோல் போய்விட்டாராமே; எங்கே போயிருப்பார்? அட, அவர்

எப்படியும் தொலையட்டும்! அடுத்த வீட்டு சகுந்தலா அம்மையார் தான் ஆண்வாடை விரும்பாத அல்லி ராணி மாதிரி நடந்து கொள்பவளாயிற்றே; இப்போ மட்டும் இங்கே ஆளனுப்புவானேன்? — இந்த எண்ணத்தைத் தொடர்ந்தது சிரிப்பு.

'பின்புறம் போய் ஜன்னலருகில் நின்று வேடிக்கை பார்க்கலாமா?' என்று நினைத்தான் அவன். செச்சே, அது கூடாது. அவள் பார்த்தால், என்ன நினைக்க மாட்டாள்?' என்று கண்டனக் குரல் கொடுத்தது ஒரு மனம்.

'நினைக்கிறதை நினைத்து விட்டுப் போகிறாள்! அவள் மறைந்து நின்று பார்க்கவில்லையா!' என்று ஆசை தூண்டியது. அவன் ஆசையைக் கெடுக்க விரும்பவில்லை. முன்பக்கத்துக் கதவைத் தாளிட்டு விட்டு பின் கட்டுக்குச் சென்று ஜன்னலோரத்தில் நின்று கவனித்தான்.

புதிதாகப் போட்டிருந்த வேலி அவன் பார்வைக்கு ஒரு தடையாகத் தானிருந்தது. அடுத்த வீட்டுக்காரியின் முழு உருவத்தையும் நன்றாகக் கவனிக்க விடாமல் தடுத்தது அது, அடிக்கடி அழகிய கைகள் தெரியும். உடலின் ஒரு பகுதி தெரியும். சில சமயம் அவள் அங்கு மிங்கும் நகர்ந்து, பாதாளக் கரண்டி கட்டிய கயிறை அசைத்து ஆட்டிச் சிரமப் படும் பொழுது, அவள் முழுத் தோற்றமும் பளிச்சிடும். சிவந்த அவள் முகம் உழைப்பினால் அதிகம் சிவந்து தோன்றும். சிற்சில கோணங்களிலே அவள் ரொம்பக் கவர்ச்சிகரமாகத் திகழ்கிறாள் என்று நினைத்தான் ரகுராமன்.

'பாவம், ரொம்பக் கஷ்டப் படுகிறாள். இதென்ன செடி நடுவதைப் போலவா! அல்லது, நட்ட செடியைப் பிடுங்கி எறிகிற மாதிரியா! இதிலே இவளுக்கு அனுபவ மில்லை என்பது தான் நன்றாகத் தெரிகிறதே!' என்று கனைத்தது அவன் மனம்.

'பரிதாபமாகத் தானிருக்கிறது. நான் போய் வாளியை எடுத்துக் கொடுக்கலாம். ஆனால், அவள் அதை விரும்ப மாட்டாள்!' என்ற எண்ணமும் எழுந்தது.

அடுத்த வீட்டுச் சகுந்தலை அலுத்துப் போனாள். தலை நிமிர்ந்து பெருமூச்செறிந்தாள். அவள் முகத்தில் வேர்வைத் துளிகள் படிந்திருந்தன. அவளது முகம் திரும்புவதைக் கவனித்த ரகுராமன் சடக்கென்று அறையினுள் உள்வாங்கிப் பதுங்கிக் கொண்டான்.

'சே, கையெல்லாம் ஒய்ந்து போச்சம்மா. இதை எடுக்க என்னுலே முடியாது. வேறே ஆளு யாராவது வரட்டும்' என்று சகுந்தலை சொன்னது அவன் காதில் விழுந்தது.

'நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளப் போங்கள்!' என்று அவளை அனுப்பிவிட்டு, வாளியை மேலே இழுத்துக் கொடுத்து உதவி புரியலாம் என்று நினைத்தான் அவன். ஆனால் தனது பரோபகார உணர்வு வீண் வம்புகளுக்கு இடம் தரும் என்று சும்மா யிருந்து விட்டான்.

'இந்தா உலகு, இதை அங்கே கொண்டு போய் கொடுத்து விடு' என்ருள் சகுந்தலை. பாதாளக் கரண்டியையும் கயிறையும் வேலைக்காரப் பெண்ணிடம் நீட்டினுள்.

'இதைக் கொடுத்தனுப்பி விட்டால், அப்புறம் வாளியை எடுக்க வேண்டாமா?' என்ற குரல் எழுந்தது. பெரியம்மா பேசுகிருள் என்று தெளிவாயிற்று அவனுக்கு.

'வேண்டிய சமயத்துக்கு கேட்டு வாங்கிக் கொண்டால் போச்சு!' என்ருள் சகுந்தலை.

'எப்ப எந்த ஆள் வந்து வாளியை எடுக்கிறது? அது வரை தண்ணிக்கு என்ன செய்வதாம்? இந்த நேரத்திலே நீ வாளியைக் கிணத்திலே போட்டுட்டு நிக்கியே!' என்று குறை கூறினுள் பெரியவள்.

'கை நழுவி வாளி உள்ளே விழுந்ததுக்கு நான் என்ன செய்வேன்? நானு வேணும்னு கிணத்திலே அதை வீசி எறிந்தேன்?' என்று பதிலளித்தாள் சகுந்தலை.

ஞானசம்பந்தம் அங்கே இருந்திருப்பின் 'உன் அஜாக்கிரதை காரணம். அல்லது சீவனத்த 'உன் கை தான் காரணம். வாளி தானுகவா நான் குதித்து விளையாடப் போறேன் என்று துள்ளி ஓடிவிட்டது? நமக்கெல்லாம் வார்த்தைகளை உபயோகிக்கவே தெரியவில்லை' என்று என்னவாவது சொல்லுவார் என்று நினைத்தான் சுவர் மறைவில் நின்ற ரகுராமன். அவரைப் பற்றிய எண்ணம் வரவும் மௌனமாகச் சிரித்து நின்ருன் அவன்.

'தண்ணி வேணுமே. எல்லாரும் குளிக்கணும். பாத்திரங்கள் கழுவணும். வாளியை எடுக்க எந்த ஆளைத் தேடிப் பிடிக்கிறது? தெருவிலே நின்று யாராவது போருங்களா. பின்னு பார்க்கிறதா?' என்று முனங்கிக் கொண்டிருந்தாள் பெரியம்மா.

சகுந்தலை பரபரப்பாகச் சொன்னாள்: 'ஏட்டி உலகு, நீ அதைக் கொண்டு போய் கொடுக்க வேண்டாம், அடுத்த வீட்டிலே அவர் இருந்தால், வாளியை எடுத்துக் கொடுக்க முடியுமான்னு கேளு, போ. வேறே முக்கிய வேலை ஏதாவது செய்துக்கிட்டிருந்தால், அதைப் போட்டு விட்டு வரவேண்டாம்னும் சொல்லு!'

இதை அவள் உரக்கவே தான் கூறினாள். பக்கத்திலேயே அடுத்த வீட்டின் பின் கட்டில், சுவரின் பின்னால், ரகுராமன் நிற்பான்; தனது சொல்லையும் செயலையும் கவனிக்கும் அதி முக்கிய அலுவலில் தான் அவன் ஈடுபட்டிருப்பான் என்ற சந்தேகம் அவளுக்கு எழ நியாயமில்லை தான். அதனால் தான் அவள் அவ்வளவு தாராளமாகச் சத்த மிட்டுச் சொன்னாள்.

அருமையான காப்பியும் அதையடுத்து இனிய ஐஸ்க்ரீமும் நிறையவே சாப்பிட்டது போலிருந்தது அவனுக்கு. அப்பொழுது பிறந்த உணர்ச்சித் துள்ளலினால், உற்சாகத் துடிப்பினால், உந்தப் பெற்று அப்படியே கதவைத் திறந்து கொண்டு 'நானாச்சு!' என்று பாய்ந்து விடலாமா என்றிருந்தது. அறிவு தடை விதித்தது. அவ்விதம் செய்தால், தான் இதுவரை அனுஷ்டித்த ஜாக்கிரதை முயற்சிகளுக் கெல்லாம் அர்த்தமே கிடையாது, பயனுமில்லை. சின்னத்தனம் படைத்தவன் என மற்றவர்கள் எண்ண இடமேற்பட்டுவிடும் என்று அறிவு எச்சரித்தது. ஆகவே அவன் பூனை போல நகர்ந்து விட்டான் முன் பகுதிக்கு.

வேலைக்காரப் பெண் மறுபடியும் கதவைத் தட்டியதும் திறந்தான், 'என்ன, வாளியை எடுத்தாச்சா?' என்று கேட்ட வண்ணம்.

'இல்லை' என்று தலையசைத்தாள் அவள்.

'அப்போ, பாதாளக் கரண்டியையும் வாளிக்குத் துணையாக, பாதாளத்துக்கே அனுப்பியாச்சாக்கும்?

'இல்லையே!'

'இன்னும் அனுப்பலையா! ரொம்ப சந்தோஷம்!'

அவன் வேடிக்கையாகப் பேசுவதில் சமர்த்தன் போலிருக்கு என்ற அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது அவளுக்கு. அது வளர்ந்து கொண்டே போயிற்று.

'பின்னே என்ன விஷயம்?'

அவள் சொன்னாள். 'சரி. நீ போ. நான் இந்தப் பக்க மாக வருகிறேன்' என்று சொல்லிக் கதவடைத்தான் அவன்.

ரகுராமன் கிணற்றுப் பக்கம் போன போது, அவன் கண்கள் இயல்பாக எதிர்ப்புறம் நீந்தின, அங்கு அந்த அழகி நிற்க மாட்டாளா என்ற ஆவலுடன். ஆனால் ஏமாற் றம்தான் கிடைத்த பலன். 'இப்பொழுது அவளுக்கு ரொம் பச் சௌகரியம். ஜன்னலின் பின் பதுங்கி நிற்க வேண்டிய தில்லை. தட்டியின் மறைவில் தாராளமாக நிற்கலாம்' என்று மனம் வருத்தப்பட்டது.

அவளைப் பார்க்க முடியவில்லையே என்பதற்காக அவன் பரோபகாரப் பணியைக் கைவிட்டுத் திரும்பிவிட வில்லை. கிணற்றடியில் கிடந்த வாளியை எடுப்பது அவனுக்குத் தொல்லை தரும் காரியமாகவுமில்லை. அடித் தரையில் அது எங்கே கிடக்கிறது என்பதை நிதானித்துக் கொண்டு, லாகவ மாய் கொக்கியை மாட்டி மேலே இழுத்து விட்டான். அப் படிச் செய்ய ஐந்தாறு நிமிஷங்கள் தான் பிடித்திருக்கும்.

வாளியை தூக்கி அடுத்த வீட்டின் பக்க முள்ள துவளத் தின் மீது வைத்து விட்டு 'வாளி ஜாக்ரதை; மறுபடியும் உள்ளே விழுந்து விடப் போகிறது!' என்றான்.

'அதெப்படித் தானாக விழும்?' என்று எதிரொலி கிடைத் தது. சகுந்தலை தான் பேசுகிறாளோ என மயங்கியவனுக் குத் தெளிவேற்பட்டதும், அவள் பேசியிருக்கப் படாதா என்ற வருத்தமே மிகுந்தது. பெரியம்மா தான் பேசினாள். 'வாளிக்குக் காலும் கையும் முளைச்சிருமா, நீஞ்சலடிப்பதற் காகத் தண்ணியைத் தேடிப் போய்விட!' என்றாள் அவள்.

'அதுக்கில்லே!' என்று இழுத்தான் ரகு.

'உலகு, அந்த வாளியை எடுடீ!' என்று சகுந்தலை உத் தர விட்டாள். அந்தப் பெண் அவசரமாக அதை எடுத்தாள். பெரியம்மா அவனை சும்மா பார்த்து விட்டு வீட்டினுள் போய் விட்டாள். கை வளைகளின் கலகலப்பு உணர்த்தியது சகுந் தலை அங்குதான் நிற்கிறாள் என்பதை.

'வாளி தானாக விழாதாம். பின்னே கை வேணுமின்னே தூக்கிப் போடுமாக்கும்' என்று முனங்கி நின்றாள் அவள். அவன் காதுகளில் அந்தப் பேச்சு படாமற் போகாது என்று

தெரிந்து கொண்டே தான் பேசினாள் அவள். அவனும் உணர்ந்து கொள்ளட்டுமே என்பதற்காகத் தான் பேசினாள்.

பாதாளக் கரண்டியையும் கயிற்றையும் கையில் பிடித்து நின்ற ரகுராமன் துணிச்சலாக ஒரு காரியத்தைச் செய்து விட்டான். தேவை யில்லாத போது தானாகவே துணிந்து ஒலி பரப்பினான்: 'போட்டாலும் போடும். நான் நட்ட செடியைப் பிடுங்கி யெறிந்த கை தானே! நான் எடுத்த வாளியைத் தூக்கி எறியாது என்று எப்படிச் சொல்ல முடியும்?'

'குகுங்' என்ற மணிப்புறாச் சிரிப்புத்தான் தெறித்து விழுந்தது அந்தப் பக்கத்திலிருந்து. அவள் பதில் சொல்வாள். சொல்ல வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கவுமில்லையே!

ரகுராமன் வீட்டினுள் சென்றான். அவன் உள்ளம் இனிய சிறகு பெற்று மோகன நிலவொளியிலே நீந்திக் களிப் பெய்துவது போல் குதூகலித்தது. அடுத்த வீட்டுக்காரியைப்பற்றிக் கசந்து புகைந்து கொண்டிருந்த அது திடீரென்று அவளைப் பற்றிப் புகழ் பாடத் தயாராகி விட்டது. இன்னும் அவளை நேருக்கு நேர் சந்திக்க முடியவில்லை. அவளது பூரண உருவை, அவள் அழகை நன்கு கண்டு களிக்கச் சந்தர்ப்பம் வாய்க்கவே இல்லை.

அதை யெல்லாம் பற்றி அவ்வேளையில் அவன் கவலைப் படவில்லை. அவளுக்கு உதவி செய்து, அவள் முன்பு செய்த தவறைச் சுட்டிக் காட்டியாயிற்று என்பதில் அவனுக்கு மிகுந்த திருப்தி. அவன் குதூகலம் கரை கொள்ளாமல் பொங்கிப் பிரவகித்திருக்கும், அவள் மட்டும் குறும்புக் குரலிலே பதில் சொல்லி யிருந்தால்

அவள் ஏதாவது சொல்லியிருக்கலாம். 'போட்டு விட்டால் தான் என்ன! சிரமமில்லாமலே எடுக்கும் திறமையுள்ள பரோபகாரி தான் பக்கத்திலேயே இருக்கிறாரே' என்று சொல்லலாமே. அவள் சொல்லக் கூடியவள்தான். ஏனோ சொல்லவில்லை!—இது வருத்தமளித்தது அவனுக்கு.

'படித்த பெண்ணாக யிருந்தால் நான் செய்த உதவிக்காக தேங்ஸ் என்றோ, வந்தனம் என்றோ, அல்லது நன்றி என்றாவது சொல்லியிருப்பாள். இவள் படித்தவளில்லை!' என்று நினைத்தான் அவன்.

'இது புதிதாகத் தெரிய வேண்டிய விஷயமா என்ன! வந்த புதிதிலேயே தெரிந்து விட்டதே. வீட்டுக்குள்ளேயே அடைத்துக் கிடப்பதும், பக்கத்து வீட்டுக்காரனைக் கண்டால் கூட ஓடிப்போய் பதுங்கிக் கொள்வதும், வெட்ட வெளியாய் கிடந்த தோட்டத்தை அடைத்துத் தட்டிக் கட்டச் செய்வதும்—ஐய்யய்யய்ய, கல்சரே கிடையாது! பண்பாடு இல்லாதவள். படித்து மனோ பக்குவம் பெறாதவள். பிரைமரிப் படிப்பை வெற்றிகரமாக முடித்திருக்கலாம்!'

இன்னும் அதிகமாகவே எண்ணியிருப்பான் அவன். ஆனால் ஆதாரமில்லாமலே சும்மா இவ்விதம் மதிப்பிடுவது தனது பண்பாட்டிற்கு விரோதமானது என்று கருதினான் ரகுராமன். 'என்னயிருந்தாலும், இவளைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லையே என்பது வருத்தமாகத் தானிருக்கிறது. அதுக்கு என்ன செய்யலாம்? ஏதாவது ஒரு வழி பண்ணியாகணும்' என்று உறுதி கொண்டான் அவன்.

## — 5 —

அன்று அந்த ஊரிலே தெப்பத் திருவிழா. சிவன் கோயில் தெப்பக்குளம் ஊருக்கு வடக்கே ஒதுங்கியிருந்தது. சாதாரண காலங்களில் கவனிப்பற்ற பாழிடம் போல் கிடந்த அந்த இடம் அன்று பூரணச் சோபையுடன் திகழ்ந்தது.

குளத்தைச் சுற்றிலும் கும்பல். வெள்ளையும் சிவப்புக் காவி நிறமும் பட்டை பட்டையாகப் பூசப்பட்டிருந்த சுவர்கள் மீதும் கூட்டம். குளத்தின் நடுவிலிருந்த மண்டபமும், நீரில் மிதந்த தெப்பமும் ஒளிமயமாய் தகதகத்தன. பளிச்சிடும் விளக்குகளுடன் போட்டியிடத் துணிந்தவர்கள் போல் பகட்டு ஆடைகளினாலும் ஒளி தெறிக்கும் ஆபரணங்களாலும் மினுக்கித் திரிந்த பெண்களுக்குக் குறைவில்லை.

தெப்பம் பார்க்க வந்த கும்பலிலே ரகுராமனும் கலந்து கொள்ள நேர்ந்தது. இதிலெல்லாம் அவனுக்கு ஈடுபாடு அதிகம் கிடையாது என்றாலும் ரசிக சிகாமணியான அவனது நண்பன் ஒருவன் வற்புறுத்தி அவனையும் அந்தப் பக்கமாக இழுத்து வந்திருந்தான். ரகு எவ்வளவோ ஆட்சேபித்துப் பார்த்தான். பலிக்கவில்லை.

'எனக்கு பக்தி உணர்ச்சியேயில்லை. வீணுக அங்கு போவானேன்?' என்ருன். நண்பனே ஓங்கியடித்தான்; 'தெப்ப உற்சவம் போன்ற திருவிழாக்கள் பக்தி பண்ணுவதற்காக நடத்தப்படவில்லை. அதை நடத்துகிறவர்களுக்கோ விழா பார்க்க வருகிறவர்களுக்கோ பக்தி அதிகம் என்று எண்ணிஞல் ஏமாறவேண்டியதுதான். இப்படி விழா கொண்டாடுவதில் எத்தனையோ நோக்கங்கள் இருக்கலாம். அவற்றைப் பற்றி நாம் கவலைப்படுவானேன்? நாம் சும்மா வேடிக்கை பார்க்கப் போவோம்'!

'வேடிக்கை என்ன வேடிக்கை!' என்று இழுத்தான் ரகு.

'சரி. வேடிக்கை என்று சொல்ல வேண்டாம். உமது பாஷையிலேயே பேசுவோமே! வாரும், உலகத்தைப் பார்த்து வரலாம். உலகத்தைப் பற்றிய உண்மைகளை உணர்வதற்காக சும்மா சுற்றி விட்டு வரலாம்' என்ருன் நண்பன்.

ஆகவே, வேறு வழியில்லாமல் ரகுராமன் நண்பனுடன் கிளம்பினன். திருவிழாக் கூட்டத்தில் கொஞ்ச நேரம் சுற்றி வந்ததுமே அவனுக்கு அலுப்பு தட்டியது. இங்கு நிற்பதை விட, வீட்டில் தனியாக உட்கார்ந்திருப்பதிலேயே அதிக இனிமை இருக்கும் என நம்பிய அவன் நண்பனிடம் சொல்லி விட்டு நகர்ந்தான்.

அவன் தனியாகத் திரும்பிய போது, தெப்பக் குளத்தின் ஒரு புறத்தைக் கடந்து மறு பக்கத்துச் சுவர் ஓரமாக நடக்க முன் வந்தபோதுதான், அவன் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. ஏதோ நினைவாக, எங்கோ கவனமாக அசைந்தபடி ஒரு மூலையைத் திரும்பிய ரகுராமன் சடக்கென நிற்க வேண்டியதாயிற்று. மிக அருகிலே கலகல என்னும் சிரிப்பொலி எழுந்ததால்; நாசியைத் தாக்கும் இனிய மணம் திடீரென்று முன்ஞல் பரவியதால். அவன் நின்று கவனித்தான். திடுக்கிட்டான்.

நல்ல வேளை. இன்னும் கொஞ்சம் கவனக் குறைவாகயிருந்திருந்தால் எதிரே வந்த அலங்காரியின் மேல் மோத வேண்டிய விபத்து ஏற்பட்டிருக்கும். அதன் விளைவாக எவ்வளவோ ஏச்சும் பேச்சும் வாங்கிக் கட்ட நேரிட்டிருக்கும்.

ரகுராமன் திகைப்புற்றதற்கு அது மட்டுமே காரணமல்ல. எதிரே வந்து திடீர் விபத்தைச் சிருஷ்டிக்கும் வாய்ப்புக்கு இடமளிப்பது போல் காட்டிப் பின் அதைப் பிடித்து

அப்பால் தள்ளி எச்சரிக்கை பெற்று விட்ட அழகியை அவன் நேருக்கு நேர் கண்டதுதான் அவனது திகைப்பிற்கு முக்கிய காரணம். அவ்வேளையில், அந்த இடத்திலே, அடுத்த வீட்டுச் சகுந்தலையைக் காண முடியும் என எண்ணியவனல்ல அவன்.

அவளைப் பற்றி அவன் எண்ணத் துணிந்திருந்தால் கூட, அதன் போக்கு வேறு ரகமாகத்தானிருக்கும். 'ஐயோ பாவம், ஊரே இங்கு கூடியிருக்கும் போது, அலங்காரமும் ஆடம்பரமும், பணமும் பகட்டும், ஏழ்மையும் எழிலும், அழகும் கோரமும்—மக்கள் தொகுப்பின் சகலவித உருவங் களும் பண்புகளும்—இங்கு முட்டி மோதி நீந்தி நெளிந்து மினுக்கி பிரகாசிக்க முயலும் போது, அவள் மட்டும் வீட்டினுள் கிடந்து புழுங்குவாள். அவள் வாழ்க்கையை அனுபவிக்கவில்லை—அனுபவிக்கும் உரிமை அவளுக்கில்லை— என்றே தோன்றுகிறது!' இப்படி நினைக்கலாம். அவன் எண்ண வேகம் எவ்வளவு வலிமை பெற்றிருந்தாலும், சகுந்தலை கவலையற்ற ஒளிக்கொடியாக தெப்பத் திருவிழாக் கூட்டத்திலே சுற்றி வருவாள் என்று நினைக்கும் சக்தி அதற்கு இல்லைதான்.

அவள் மேனுமினுக்கித்தனம் பயின்று பொது இடங் களிலே தாராளமாகத் திரிவாள்—திரிய வீட்டிலுள்ளவர் களிடம் அனுமதி பெற முடியும்—என்று நம்பவே முடியாது அவனல். அவளுக்கும் அத்தகைய குணமிருக்கும் என்றும் அவன் எண்ணவில்லை. சாதாரண நாட்களிலே கூட வீட்டிற் குள் அடைத்துக் கொண்டு ஒளிந்து ஒடுங்கி வாழும் பண்பு பெற்றவள்தானே அவள்! இதுதான் சகுந்தலையைப் பற்றிய அவனது மதிப்பீடு.

ஆனல் அவன் நம்பிக்கைகளை யெல்லாம் தகர்த்துத் தூளாக்கி விட்டது உண்மை. அவள் அங்கே வந்திருந்தாள். மிகப் பகட்டாகச் சிங்காரித்துக் கொண்டு தளுக்குக்காரி யாகக் காட்சியளித்தாள். சூழ்நிலையை மறந்து விடும்படி, தன்னை மறந்த களி வெறியிலே மிதந்து கொண்டிருந்தாள் அவள். அவனே அவளோ இன்னும் ஒரு அடி முன்னேறி யிருந்தால், விபரீதம்தான்.

அதனலேயே அவன் அதிகம் திகைத்து விட்டான். அவன் கண்கள் அவள் முகத்திலே பதிந்து நின்றன ஒரு கணம். பின் தாழ்ந்தன. அவளது ஆடம்பர அலங்காரத்தை வியந்தன தொடர்ந்து. நெளிநெளிக் கூந்தலிலிருந்து நிலந் தடவிக் கிடந்த பட்டாடை நுனி வரை அளவிட்டுப் புரண்டன.

அவன் முழு உருவையும், முழு உருவின் பூரணச் சிறப்பையும் படம் பிடித்துப் பதிய வைத்துக் கொள்ளத் துடித்தன. ஆகவே எதிர் நின்றவளுக்கு விலகி வழி விடவேண்டும் என்ற உணர்ச்சி பிறப்பதற்குப் பல நிமிஷங்கள் பிடித்தன. தன் தவறை அறிந்ததும் 'ஒஹோ, மன்னிக்கணும்' என்று குழறியபடி அவன் தெப்பக் குளத்துச் சுவரோடு சுவராக ஒதுங்க முயன்முன். அப்பொழுதுதான், அவள் அருகிலே ஒரு வாலிபன் நின்றதை அவன் கவனித்தான். ஆகவே மீண்டும் திகைப்பே தலைதூக்கியது அவன் உள்ளத்திலே.

சகுந்தலையின் உளநிலையும் குழப்பமுற்றுச் சங்கடப் பட்டது. கட்டுக் காவலிலிருந்து விடுதலை பெற்று ஒளியிலே துள்ளித் தாவி முன்னேறும் சிட்டுக் குருவி எதிரே பொங்கிப் பிரவகிக்கும் பேரொளிப் பரப்பிலே நீந்தி மகிழ்வதற்காக உற்சாக வெறியோடு பாயும்போது, அதன் பார்வைக்குப் புலனுகாமற் போன சாளரக் கண்ணாடி தடைச் சுவராக எதிர் நின்று மோதவும் அது திணறித் திண்டாடுகிறது. அதைப் போலவே ஒரு கணம் அவளும் திக்குமுக்காடிப் போனாள்.

வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடந்த சகுந்தலை வெளியே வந்ததும், இஷ்டம் போல் திரியும் சந்தர்ப்பம் பெற்றதும், அனைத்தையும் மறந்து விட்டாள். தன்னை மறந்த இன்பத் துடிப்புடன் கவலையற்றுக் களிப்புடன் பேசிச் சிரித்து வந்தாள். அந்நேரத்தில் போலிக் கட்டுப்பாடுகள், பொய்மைத் தடுப்புகள், சம்பிரதாயம் வகுத்த பழக்க வழக்கச் சுமைகள் முதலியவற்றைப் பற்றிய பிரக்ஞைகூட அவளுக் கில்லை. நிகழ் காலத்தின் இனிமையிலே உயிர்த் துடிப்புடன் வாழ முயன்ற அவள் முன், காலத்தின் கொடிய நிழல் போல நின்றான் ரகுராமன். அவள் திடுக்கிட்டாள். வெட்கினாள். அஞ்சினாள். கலவரம் காட்டினாள். மௌனமானாள். அவன் விழிகளைக் கலந்த அவளது கயற்கண்கள் தரையிலே படிந்தன மறுகணம். காலைச் சூரிய காந்தி போல் நிமிர்ந்து மிளிர்ந்த முகம் அவன் பார்வையை ஏற்றதும் அந்தி வரக் கண்ட அதே புஷ்பம் போல் துவண்டு தாழ்ந்தது.

'தேக்கம்' என்பதே தெரியாக் கண்ணின் கருமணிகள் விழிக் கோணத்திலே ஒதுங்கி அவனை எடை போட முயன்றன ஒரு கணம். அதே நினைவுடன் அவள் முகம் நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். உடனே தான் தனது தவறை உணர்ந்தவள் போல் சட்டென விலகினாள். நடந்தாள். திடீரென்று அவள் ஜீவசக்தி குன்றி ஒடுங்கி விட்டது

போல் தோன்றியது அவளையே கவனித்து நின்ற ரகு ராமனுக்கு.

ஆர்த்துப் பொங்கி ஆரவார ஒலியலைகளை அள்ளி வீசிய மணியிலே திடீரென விரிசல் கண்டு விட்டால் நாதவெள்ளம் தேய்ந்து நயம் கெட்டுப் போவது போல, அவள் பண்பிலும் ரசிக உள்ளத்தை உறுத்தும் அளவில் திடீர் மாறுதல் பிறந்து 'ஆளையே கெடுத்து விட்டது' என்று தோன்றியது. குதித் தாடிக் கோஷித்துப் பொங்கி வரும் ஏறலை கரையிலே மோதிச் சோர்ந்து தேய்ந்து படிந்து பெரு நீர்ப் பரப்பிலே கலந்து விட விரைவது போல, உற்சாக மிகுதியுடன் வந்த அவளும் ஜன வெள்ளத்திலே கலந்து மறைந்து விட நகர்ந்தாள்.

ரகுராமன் வருந்தினான். அர்த்தமற்ற, காரணமற்ற தெளிவற்ற வேதனை பிறந்து குடைந்தது அவன் உள்ளத் திலே. 'கிடையாது கிடைத்த அவளது இன்பத்தை திடீரென்று கெடுத்து விட்டேன் நான்' என்று வருந்தி னான். 'நான் என்ன செய்தேன்? அவள் இப்படி வருவாள் என்று எனக்குத் தெரியுமா? நானு அவளை என் எதிரிலே வந்து விழச் சொன்னேன்! என்ன யிருந்தாலும் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாக நடந்து கொள்ள வேண்டாமா? துணிந் தால், எல்லாவற்றுக்கும் துணிய வேண்டியது தான். இவ் வளவு கும்பலிடையிலும் அச்சமும் நாணமும் இல்லாமல் அலையத் துணிந்தவளுக்கு என்னைக் கண்டால் மட்டும் இத் தனை குழப்பமும் வருவானேன்?' என்று உறுமியது அவன் உள்ளுறை பண்பு ஒன்று.

'சகுந்தலை அழகாகத் தானிருக்கிறாள். ரொம்ப அழகாக இருக்கிறாள். அவள் ஒவ்வொரு அசைவும், அவள் பயிலும் ஒவ்வொரு நிலையும் அவள் அழகுக்கு வசீகரம் அளிக்கின்றன. முழு மகிழ்ச்சி காட்டும் முகத்தைப் போலவே தயக்கமும் வெட்கமும் குழப்பமும் படிந்த முகமும் சொக்கவைக்கிறது' என்று நினைத்தான் அவன். ஆடம்பர வேலைப்பாடுகள் இல் லாத சாதாரண ஆடைகளும் அவளுக்கு அதிக அழகு தரு கின்றன. பளபள ஜரிகை வேலைகள் மின்னும் விலை உயர்ந்த பட்டாடையும் அவள் அழகை எடுத்துக்காட்டுகிறது என்று வியந்தது அவன் உள்ளம்.

சுவரில் சாய்ந்தபடி நின்ற ரகுராமன் அவள் நடந்து செல்லும் அழகையே கவனித்தான். முதலில் அலுப்புத் தந்த திருவிழாக் கூட்டத்திலே இப்போது தனிச்சுவை பிறந்திருந்

தது! அவள் எங்கு செல்கிறாள், என்ன செய்கிறாள் என்று கவனிக்கலாமா எனும் ஆசைகூட ஏற்பட்டது அவனுக்கு. உடனேயே கண்டனமும் பிறந்தது. 'சே, அது நன்றாக யிராது. அப்புறம் அவள் என்னைப் பற்றி என்ன எண்ணு வாள்!' என்று நினைத்து, தன் வழியே திரும்பினான் அவன்.

மறுபடியும் நடக்கத் தொடங்கியதும் அவன் அவள் பக்கம் திரும்பிப் பார்த்தான். அதே சமயம் அவளும் திரும்பி அவன் பக்கம் கவனித்ததைக் கண்டான். பிறகு நின்று பாராமலே வேகமாக நடந்தான் அவன். கண்ணோட்டத்திற்குத் தடை விதித்து விட்டது போல் அவன் மனப் போக்கிற்கு முற்றுப் புள்ளி போட்டுவிட முடியவில்லை. அப்பொழுதும், அதற்குப் பிறகும் கூட அவன் மனநிழல் அவள் நினைவைச் சுற்றிப் படர்ந்து கொண்டிருந்தது.

அடுத்த வீட்டுக்காரியை நேருக்கு நேர் கண்டு அவள் முழு எழிலையும் ரசிக்க வேண்டும் என்ற ஆசை நிறைவேறி விட்டது. அவள் அழகு நிலாதான். அதைப் பற்றிச் சந்தேகம் கிடையாது. சரி, அவள் யார்? இன்று இவ்விதம் பட்டுப் பூச்சி போல் திரிபவள் பெரும்பாலும் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பானேன்? அவள் அப்படித் தான் வாழ வேண்டும் என்று யாராவது கட்டாயப் படுத்தி வைத்திருக்கலாம். அந்த அதிகாரம் பெற்றவர் யார்? அவள் வீட்டில் ஒரு நாள் சந்திக்க முடிந்ததே, அந்தப் பெரியவர் தானோ? அவர் யார்? அவள் கணவனா; அல்லது, வேறு ஏதாவது உறவும் உரிமையும் கொண்டாடுகிறவரா? அந்தப் பெரியம்மா யார்? இப்பொழுது சகுந்தலை கூடச் செல்கிற இளைஞன் யார் — எத்தனையோ கேள்விகள்! முடிவில்லாமல், முடிவு தெரியாமல், நீளும் எத்தனையோ புதிர்கள்!

'இந்த வாலிபன் ஒருவேளை அவளது ஆசைக்கு உரியவனாக..' என்று இழுத்தது மனம். 'சேச்சே, அப்படியெல்லாமிராது. எதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமலே, அவளைப்பற்றி அநாவசியமாய் பேசக்கூடாது. அவன் அவள் மகனாக இருக்கலாம்' என்று எதிரொலி பிறந்தது.

'மகனா! அவனா! அவளுக்கா!'

'ஏன்? அவளுக்கு வயசு அதிக மிருக்காது என்று நினைக்கிறாயா?

'மிஞ்சிப்போனால் அவளுக்கு இருபத்தாறு இருபத்தேழு வயதுதானிருக்கும். அவனுக்கு பதினெட்டு வயதிருக்கலாம்.'

'ஆமாம். அவன் அவள் தம்பியாக இருக்கலாம்.'

'அல்லது, அவர் தம்பியாக இருந்தாலோ? சில சமயம் அர்த்த ராத்திரியில் அடித் தொண்டையிலிருந் தெழும் தம்பீ, தம்பீ என்ற குரல் ஒலிக்குமே. அந்தப் பெரியவர் தான் அப்படிக் கத்தியிருக்க வேண்டும்.'

ரகுராமனுக்குத் தெளிவு ஏற்படவழியே யில்லை, அடுத்த வீட்டில் குடியேறியுள்ளவர்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள இன்னும் வகை தெரியலியே என்ற ஏக்கம் தான் வளர்ந்தது. அந்தக் குழப்பம் தணியா விட்டாலும் அவன் தூங்காமல் போகவில்லை.

அன்றிரவு சகுந்தலை எப்பொழுது வீடு திரும்புகிறாள் என்று கவனிக்க வேண்டும் என எண்ணி யிருந்த ரகுராமன் அவனை யறியாமலே தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். திடீரென்று அவனுக்கு விழிப்பு ஏற்பட்டது. தூக்கத்தில் கிடந்த அவனை அதிர்ச்சியுற்று எழும்படி தூண்டியது புற உலக நிகழ்ச்சி.

முதலில் அவனுக்கு எதுவுமே புரியவில்லை, தீய கனவு கண்டு அலறியடித்து எழுந்தவனின் உடல் நடுநடுங்கிக் கொண்டிருப்பது போல் விதிர்விதிர்த்தது அவனது தேகம். என்ன, ஏது என்று எதையுமே அறிந்து கொள்ள இயல வில்லை அவனால். கொஞ்சம் கொஞ்சமாக உள்ளமும் உணர் வும் பூரண விழிப்பு பெற்றதும், கனவிலே ஏற்பட்டது போன்ற மயக்கத்தைத் தந்து தன்னை எழுப்பி விட்டது பக் கத்து வீட்டில் நிகழும் நிகழ்ச்சி தான் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

'அம்மா, ஐயோ, இன்னமே இல்லே!' என்று அலறும் குரல் மேலோங்கியது 'மாப்பு மாப்பு. இந்த ஒரு தடவை மன்னிச்சிடுங்க. இன்னமே இப்படி நடக்க மாட்டேன்' என்ற தீனக் குரல் சுவருக்கு மப்பால் ஒலித்தது, ரகுராம னின் இதயத்தை அறுத்தது. அவள் தான் ஓலமிட்டாள், அடுத்த வீட்டுக்காரி தான். ஏன், ஏன் என்று பரிதாப மாகப் புலம்பியது இந்தப் பக்கத்திலிருந்த ரகுவின் உள்ளம்.

'மாப்பு ஆவது! மஞ்சப்பூ ஆவது! என்னடி குற அழுகை அழுறே! செய்றதைச் செஞ்சு போட்டு, அப்புறம் மாப்பு மன்னிப்புன்னு அழுது கெஞ்சுறதுனலே செய்தது செய்யாத

தாகிவிடுமா? இப்ப உன்னை அடிக்கிறேன். அடித்த பிறகு நான் உன்னை அடிக்கலே; அல்லது, அடிச்சதை மறந்துவிடு ன்னு அதிலே ஏதாவது அர்த்தமுண்டா? நீ அடிபட்டது பட்டது தானே! எதிலேயுமே அப்படித்தான். ஆமா' என்ற முரட்டுக் குரல் அழுத்தமாக வந்து பாய்ந்தது காதிலே.

இப்படிப் போதிப்பவர் யார் என்று புரிந்து கொள்ள ரகுராமன் சிரமம் எடுக்க வேண்டிய அவசியமே யில்லை. அவர் தான். அந்த வீட்டுப் பெரியவர் ஞானசம்பந்தம் தான். அவர் ஏன் அவளை அடிக்க வேண்டும்?

'வாயை மூடு. கத்தாதே கழுதை! அழுது அட்டூழியம் பண்ணினியோ, உன் கழுத்தை நெரிச்சுக் கொன்னு போடு வேன். ஆமா!' என்று கர்ஜித்தார் அவர்.

அவள் மெதுவாக ஏதோ சொல்லியிருக்க வேண்டும். அவரது கோபம் அதிகரிக்கும்படி அவள் என்ன சொன்னாள் என்று தெரியவில்லை. அவர் ஆங்காரத்தோடு உதைத்தார். வாயில் வந்தபடி ஏசிக்கொண்டே அறை அறையென்று அறைந்தார். அவள் விம்மி விம்மி அழுதது ரகுராமனுக்கு அளவற்ற வேதனை உண்டாக்கியது.

'ஐயோ பாவம். இப்படியா காட்டு மாட்டுத் தனமாக நடந்து கொள்வது? அவன் தாலி கட்டிய புருஷனாகத் தானிருக்கட்டுமே. அதற்காக ஒரு பெண்ணை இப்படியா உதைப் பது? இது மிருகத்தனம். மிராண்டித்தனம். தனிமையில் இவ்விதம் நடந்து கொள்வது. அப்புறம் சபை மெய்க்கப் பேசுவது! தான் தான் ரொம்ப ரொக்கம், மத்தவங்களெல் லாம் செல்லாக் காசுகள் என்ற தெம்பிலே பேசுறது. மிரு கத்திலும் கேடு கெட்ட மிருகம் இவன்' என்று மனதார ஏசிக் கொண்டிருந்தான் ரகு.

சுவருக்கு அந்தப் பக்கத்திலே அவர் லெக்சரடித்துக் கொண்டிருந்தார்: 'உனக்கு என்ன திருவிழா வாழுது? நான் வீட்டிலே இல்லாத நாள் பார்த்து வெளியே போறதுன்னு சொன்னால், உனக்கு எவ்வளவு திமிருன்னு கேட்கிறேன். சரி, போனது தான் போனியே! போனோம், சாமி கும்பிட் டோம், வந்தோம்னு திரும்பினியா? பதினொரு மணி வரைக் கும் உனக்கு அங்கே என்ன வேலே? நீ பக்தியோடு சாமி கும்பிடப் போயிருந்தால் தானே? அங்கே யாரு வாரு, எவன் எப்படி யிருக்கிறான்னு பார்த்து மகிழப் போயிருப்பே. இல்லேன்னு இப்படி சீவிச் சிங்காரிச்சு நீட்டி மினுக்கி நெளிச்

சுக் குலுக்கிக்கிட்டுப் போவையா? நீ பச்சைத் தேவடியாடீ. வாயைத் திறக்காதே; கொன்னுருவேன். ஆமா. சொன்னுல் சொன்னதைச் செய்தே தீர்ப்பேன். திருவிழா பார்க்கப் போனுளாம் திருவிழா. அங்கே எத்தனை ஷோக் மைனர்களைப் பார்த்தே? முனங்குறியா, நீ தொலைஞ்சே!'

அவர் எதையோ தூக்கி அவள் மீது விசி எறிந்தார் என்று ரகுராமனுல் யூகிக்க முடிந்தது. தொம்மென்ற ஓசையைத் தொடர்ந்து 'அம்மா, நான் செத்தேன்' என்ற நெஞ்சைப் பிளக்கும் ஓலம் கேட்டது. அப்புறம் அமைதி. ஒரே அமைதி. சுடுகாட்டு அமைதி!...

உண்மையில் அத்தகைய அமைதி அடுத்த வீட்டிலே நிலவி விடவில்லை, அடித்த களைப்பினுல் 'சே, இந்த எருமை மாட்டை உதைச்ச உதையினுலே என் கையெல்லாம் புண்ணுய் போச்சு' என்று புலம்பியபடி படுத்த ஞானசம்பந்தம் சீக்கிரமே தூங்கிப் போய் விட்டார்,

'அவளுக்கு மூச்சே போயிட்டுதோ என்னமோ' என்று ரகுராமன் நினைத்தான். அப்படி எதுவும் நடந்து விடவில்லை. சகுந்தலை தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள்.

## — 6 —

கடியாரம் பன்னிரண்டு மணி அடித்தது. சிறிது நேரத்திலேயே ரகுராமன் மறுபடியும் தூங்கிப் ; போனுன் நல்ல தூக்கம் தான்.

அந்தத் தூக்கத்தி லிருந்தும் அவன் கலவரமுற்று எழுந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அடுத்த வீட்டிலே எழுந்த கோரக் கூச்சல் தான் காரணம். 'தம்பீ! ஐயோ தம்பீ!' என்ற அலறல் இரவின் தனிமையிலே காலத்தின் அளவை மணிக் கணக்கில் கூட புரிந்து கொள்ள இயலாத இருளின் ஆழ் நேரத்தில் — பயங்கரமாய், உள்ளத்தைக் குளிர வைப்பதாய், உடலை நடுங்கச் செய்வதாக எழுந்து ஒலித்தது, 'தம்பி!' என்று மீண்டும் பிறந்தது. பின் அமைதி.

ரகுராமனுக்கு அச்சமும் குழப்பமும் ஏற்பட்டன. தன்னை அடித்ததற்குப் பழிவாங்குவதற்காக அடுத்த வீட்டுக்

காரி அவரது கழுத்தை அமுக்கிக் கொலே செய்திருப்பாளோ என்று எண்ணினுன் அவன். அவனுல் எதையுமே தீர் மானிக்க இயல வில்லே 'சே, அடுத்த வீட்டிலே இந்தச் சனியன்கள் குடிபுகுந்த நாள் முதலாக என் அமைதியே நாச மாகிவிட்டது. பெரிய தொல்லேயாகப் போச்சு, எழவு சே'! என்று குமைந்தான் அவன்.

விடிவதற்கு இன்னும் ரொம்ப நேரம் கிடப்பதாகத் தான் தோன்றியது. எங்கும் அமைதி தான் கவிந்து கிடந்தது. விடிவின் தூதர்கள் போல் தனிக் குரல் கொடுக்கும் ஒன்றிரு காக்கைகள் கூட இன்னும் எழுந்திருக்க வில்லே. குளிர் லேசாகத் தலே காட்டியது. அடுத்த வீட்டிலும் ஆழ்ந்த அமைதியே நிலவியது.

அந்த அமைதி தான் ரகுராமனே எண்ணுதன வெல்லாம் எண்ணிக் குழம்பும்படி செய்தது. 'அவள் கொலே செய்யத் துணிவாளா என்ன? அவளேப் பார்த்தால் அப்படித் தோன்ற வில்லேயே!' என்று நினேத்தான்.

'அவள் என்ன செய்வாள் அல்லது செய்ய மாட்டாள் என்று சொல்வதற்கில்லே. பச்சைச் செடிகளே — நட்டுத் தண்ணீர் ஊற்றி வைத்ததை — பிடுங்கி எறிந்தவள் தானே! வீட்டிற்குள்ளே பதுங்கிக் கிடப்பவள் போலிருந்து திரு விழாக் கூட்டத்திலே பகட்டித் திரிந்தவள் தானே! பழி வாங்குவதற்காக அவள் —'

ஆதார மில்லாமலே இஷ்டம் போல் அவள் மீது பழி சுமத்துவது பாவம்; அவர் ஏன் கத்திஞரோ என்ற எண்ண மும் எழாமலில்லே. தன்னுணர்வை மறக்கடித்துத் தூக்கம் கவ்விக் கொள்ளும் வரை எண்ணக் குழப்பத்திலேயே மிதந் தான் அவன்.

இரவில் அடிக்கடி தூக்கம் கெட்டதனுல், விடிந்த பிறகும் கூட வெகு நேரம் வரை தூங்கி விட்டான் அவன். விழித் தெழுந்ததும் பரபரப்புடன் காரியங்களேச் செய்வதில் ஈடு பட்டிருந்தால் இரவு நிகழ்ச்சிகளேப் பற்றி நினேவு அசைப் போட அவனுக்கு ஒய்வு கிட்டாமலே போயிற்று. பக்கத்து விட்டில் எவ்விதமான ஆரவாரமும் ஏற்படாமலிருந்ததனுல், அங்கு விபரீதமாக எதுவும் நிகழ்ந்துவிட வில்லே என்று நிச் சயமாய் தெரிந்தது.

'சரிதான். வழக்கமான குடும்பக் கலகம்!' என்று ஒதுக்கி விடவும் மனம் வரவில்லை அவனுக்கு. எவ்வாறு விவரமறிவது என்ற ஏக்கத்தைத் தீர்த்து வைக்க வந்த நபர் போல் வந்தாள் வீடு கூட்டும் கிழவி.

சாதாரணமாக ரகுராமனே தன் வீட்டைப் பெருக்கிச் சுத்தமாக வைத்துக் கொள்வான். வாரத்தில் ஒருநாள் நன்ருக மெழுகி, வாசல் தெளிப்பதற்காக அந்தக் கிழவியை ஏற்பாடு செய்திருந்தான். அவள் புலம்பியதாலும், 'உங்க அப்பா அம்மா காலத்திலேயிருந்து நான் இங்கே வருஷக் கணக்காக வேலை செய்து வாறேன். நீ வேண்டாம்கிறியே! நீயே செய்து போடலாம். முடியாது என்கலே. ஆனல் நீ காசு மிச்சம் புடிக்கவா இப்படிச்செய்யப் போறே?எனக்குக் கொடுக்கிற அல்பக் காசை மிச்சம் பிடிக்கிறதனலே உனக்கு என்ன ஆகப்போகுது? நீ கொடுக்கிற அந்த ஒரு ரூபாகூட எனக்கு எவ்வளவோ உதவியாக இருக்குமே' என்று அழாத குறையாகக் கெஞ்சியதாலும் அவள் இஷ்டம் போலவே தினம் வந்து பெருக்கி விட்டுப் போகும்படி விட்டு விட்டான்.

அவளுக்கு மாதச் சம்பளம் மூன்று ரூபாய். ஆனல் அவள் மாதம் பூராவும் ஒழுங்காக வருவதில்லை. இரண்டு நாள், மூன்று நாட்களுக்கு ஒருமுறை தான் வந்து போவாள். நேற்று ஏன் வரவில்லை என்று கேட்டால், 'நான் தான் வந்து எட்டிப் பார்த்தேனே; நீ இல்லை. வீடு பூட்டிக் கிடந்துதே' என்பாள். அல்லது 'நீ ரொம்ப நேரம் தூங்கி விட்டே போலிருக்கு' என்று சொல்வாள், ஏதோ ஒரு காரணம்! வரும் நேரத்துக்கும் கணக்குக் கிடையாது. அதிகாலையில் வருவாள்; பத்துமணி பதினெரு மணிக்குக் கூட வருவாள். சில நாள் சாயங்காலம் நாலு மணிக்கு வந்து பெருக்கி விட்டுப் போவாள்.

'அவள் வேலைக்காகக்கூலியில்லை இது. சும்மா தர்மம் மாதிரித் தான்' என்று முடிவு செய்திருந்ததால், அவன் அவளைக் கண்டித்துக்கேட்பதுமில்லை, 'வந்து வேலை செய்கிற வரைக்கும் சரிதான்; செய்யாவிட்டாலும் சரிதான்' என்ற தாராள மனேபாவம் அவனுக்கிருந்தது. அவன் எதிலுமே அப்படித்தான். வாழ்விலே பிடிப்பில்லாமல், பற்றுதல் இல்லாமல், 'ஏதோ பொழுது கழிந்தால் சரி' என்ற தோரணையில் நாளோட்டி வந்தான்.

அவன் போக்கு சில சமயம் அந்த வேலைக்காரக் கிழவிக்குக் கூடப் பிடிக்காது. அப்பொழுதெல்லாம் அவளாகவே

அவனுக்குப் புத்தி சொல்லக் கிளம்பிவிடுவாள். குனிந்து பெருக்கிக் கொண்டிருப்பவள் பாதியிலேயே அதை விட்டு விட்டு வாரியலைக் கையில் பிடித்தபடி வேகமாக நிமிர்ந்து, 'ஏன் ராசா, உனக்கே இது நல்லா யிருக்குதா?' என்று கேட்கும் போது வேறு யாராவது பார்த்தால் தவறுதலா கவே கருதுவர். ஆனால் ரகுராமனுக்கு அவள் பண்பாடு நன்கு தெரியும். அதனால் பேசாமல் சிரித்தபடி நிற்பான். அல்லது 'என்ன பாட்டி, என்ன விஷயம்?' என்று கேட்டு வைப்பான்.

'ஏதாவது வேலை பார்க்காமல் வீண் பொழுது போக்கிக் கொண்டிருந்தால் என்ன பிரயோசனம்? உத்தியோகம் பார்க்க வேண்டிய காலத்திலே ஊரை ஊரைச் சுத்தி வாறதி னாலே புண்ணியமில்லை' என்பாள். அல்லது' காலாகாலத் திலே ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளாமே, என்ன ராசா நீ! எத்தனை நாளைக்குத் தான் ஹோட்டல் சாப்பாட் டைச் சாப்பிட்டுக் கொண்டு இப்படியிருக்கப் போகிறே?' என்று அனுதாபம் அறிவிப்பாள்.

'நான் வேலை செய்யாமலா இருக்கிறேன், பாட்டி?' என்று சிரிப்பான் அவன்.

'என்ன வேலையைச் செய்கிறே?'

'படிக்கிறது, எழுதுகிறது......'

'உண்கிறது, ஊர் சுத்துகிறது, உறங்குவது — இதெல் லாமா!' என்று அவளும் கூடச் சேர்ந்து அடுக்கிவிட்டுக் 'கெக்கெக்' கென்று சிரிப்பாள், அவ்வேளையில் அவள் தோற் றமே அவனுக்குச் சிரிப்பாணிப் பொருளாக விளங்கும்.

'எத்தனை நாளைக்கு ஓட்டல் சோற்றைத் தின்று காலம் கடத்தப் போகிறே?' என்றதும் அவன் சொல்வான்; 'நம்ம கொம்பங்குளம் மூக்கபிள்ளை சாப்பாடு தயாரிக்கும் கலையை மறந்து போகிற வரைதான். அவர் கடைச் சாப்பாடும், அவர் வைக்கிற கறிவகைகளும், அடாடா! பாட்டி, நான் நிச்சயமாகச் சொல்கிறேன் — கொம்பங்குளத்துப் பிள்ளை தாயாரிக்கிற சாம்பார், ரசம் மோர்க்குழம்பு, கூட்டுக்கறி, அவியல் வகைகளை மாதிரி இந்தக் காலத்துப் பெண்களுக் குச் சமைக்கவே தெரியாது. நாகரிக யுவதிகளுக்கு ரசம் கூட நன்றாக வைக்கத் தெரியாது. இந்தக் கழுதைகளிலே ஒன்றைக் கட்டிக் கொண்டு கஷ்டப்படுவதைக் காட்டிலு

நம்ம கொம்பங்குளத்துப் பிள்ளைவாளின் நளபாகத்தைச் சுவைத்துச் சாப்பிட்டு விட்டு, புத்தகங்களைப் படித்துக் கொண்டு பொழுது போகாத வேளைகளிலே ஊர் சுற்றி வாழ்வதே ரொம்ப நல்லது.'

இந்த ரகப் பேச்செல்லாம் பாட்டிக்குப் பிடிக்கவா செய்யும்! ஆனால் அவளுக்குப் பிடித்திருக்கவேணும் என்பதற்காக அவன் பேசுவதில்லையே!

'ஊம், நீ என்னதான் சொல்லு. வீட்டுச் சமையலின் ருசி தனிதான். குடியும் குடித்தனமுமாய் வாழ்வதை விட்டுப்போட்டு, நீ இந்தப் பெரிய வீட்டைப் பாழடைந்த சத்திரம் மாதிரிப் போட்டிருக்கியே. உன் போக்கு எனக்குப் பிடிக்கலே' என்று 'கறரா'கப் பேசிவிட்டு தன் வேலையில் ஈடு படுவாள் கிழவி.

அன்றைக்கு அவள் வரும் பொழுதே 'இப்படியும் உண்டுமா அநியாயம்!' என்று சொல்லி விரலை மூக்கின் மேல் வைத்துக் கொண்டே காட்சியளித்தாள். 'என்ன, என்ன விஷயம்?' என்று கேட்பது போல் நோக்கினான் ரகுராமன்.

'பாவம், ஒரு பெண்ணைப் போட்டு இப்படியா அடிப்பது? கண்ணு மூக்குத் தெரியாமே! பேயறைகிற மாதிரி' என்று ரகசியம் பேசுவது போல் மெதுவான குரலில் பேசினாள் கிழவி.

'யாரு யாரை அடிச்சது?'

'உனக்குத் தெரியாதா விஷயம்? பக்கத்து வீட்டிலே ஒரு பொண்ணு இருக்குதே'

'வேலைக்காரப் பெண்ணா?'

'நீ ஒண்ணு! அந்த வீட்டுப் பெரியம்மாளின் மருமக. சகுந்தலையின்னு...'

'ஓஹ், அவளைத்தான் பொண்ணு என்று சொல்லறியா! அவள் அம்மா அல்லது அம்மையாராச்சே என்ற எண்ணம் எனக்கு. அதுதான் உன் பேச்சு எனக்குச் சட்டென்று பிடிபடலே! சரி. அவளை யாரு அடிச்சா? அந்த மாமியாரம்மாளா?'

'என்ன நீ இப்படியிருக்கிறே! அந்தப் பெரியம்மா அவளை ஏன் அடிக்கணும்?'

அது எனக்கு என்ன தெரியும்!'

'அவள் புருஷன் தான் அடிச்சிருக்காரு.'

'யாரு, பெரியம்மா புருஷனா! அதாவது நீ பொண்ணுங் கிறியே அந்த அம்மாவோட மாமனாரு. அப்படித்தானே?'

அவள் அவனுக்காக இரக்கப்படுகிறவள் போல் பார்த் தாள். 'உம், போயும் போயும் உன்கிட்ட வந்து ஒரு மனுஷி பேச்சுக் கொடுக்க வந்தேனே. என் புத்தியை வாரியலாலே தான் அடிச்சுக்கிடணும்' என்று முனங்கிவிட்டு, வேகமாகப் போய் மூலையிலிருந்த விளக்குமாறை எடுத்தாள்.

'பாட்டி பாட்டி, அப்படி ஒண்ணும் செய்து போடாதே!' என்று கத்தினான் அவன். அவள் திகைப்புடன் திரும்பி, என் னது என்றாள்.

'கையிலே இருக்கிறதைக் கொண்டு உன் தலையிலே அடித் துக் கொள்ளாதே. பெரிய மனுஷங்களே சொல்கிறபடி செய்வதில்லையே. நீ ஏன் வீணாக அப்படியெல்லாம் செய் யப் போகிறே!' என்று அவன் கூறவும் கிழவி சிரித்தாள்.

'நீ விளையாட்டுப்பிள்ளை தான். உனக்கு எவ்வளவு வய சானால் தானென்ன?' என்று சொல்லி விட்டு, பெருக்குவ தில் முனைந்தாள் அவள்.

அடுத்த வீட்டுக்காரர்களைப் பற்றி அறிந்து கொள்ள அநாவசிய ஆர்வமோ அவசரமோ காட்டப் படாது என்ற நோக்கத்துடனேயே அவன் பேச்சை ஒரு மாதிரியாக விட் டுப் பிடிக்க முயன்றான். ஆனால் பிடித்து இழுப்பதற்குள் பேச்சு தடம் மாறிப் பிய்த்துக்கொண்டு போய்விட்டது! அதைப் பழைய பாதைக்குத் திருப்புவதற்கு என்ன செய்ய லாம் என்பது அவனுக்குப் பெரும் யோசனையாகி விட்டது.

கிழவியே அருள் புரிந்தாள். தொழிலை நிறுத்திவிட்டு அவள் கேட்டாள் 'ராசா உனக்கு வயசு என்ன யிருக்கும்?' என்று.

'ஏன் பாட்டி, திடீர்னு இந்தக் கவலை உனக்கு?' என்று விசாரித்தான் அவன்.

'இல்லே, அன்னைக்கு ஒருநாள் சகுந்தலை கேட்டாள், அடுத்த வீட்டிலே இருக்காரே அவருக்கு வயசு என்ன யிருக் கும்னு!'

வாண்டுப் பயல் எவனே மிக அருகிலே அவுட்டு வாணத்தை வீசி பலத்த வெடி ஓசையைக் கிளப்பி விட்டது போலிருந்தது அவனுக்கு. அப்படித் திடுக்கிட்டு விட்டான் அவன். 'யாரு, யாரு கேட்டா?' என்ற கேள்வியில் பதட்டமே மிகுந்திருந்தது.

அவன் உணர்ச்சி பேதங்களை உணர முடியாத கிழவி சாவதானமாகச் சொன்னுள்; 'அடுத்த வீட்டுச் சகுந்தலை தான் கேட்டாள், என்ன, முப்பது முப்பத்தைந்து இருக்கும் அப்படீன்னேன்.'

'தப்பு. தப்போ தப்பு' என்ருன் அவன்.

'என்னது?'

'ரெண்டுமே தான் எனக்கு வயசு முப்பது மில்லை. முப்பத்தஞ்சு மில்லை. சரியாக முப்பத்திரண்டரை!'

அவள் சிரித்தாள். 'உன்னை மாதிரிப் பேசத் தெரியுமா எனக்கு. நான் கிழவி தானே!'

'அது போகுது பாட்டி. அவள் ஏன் என் வயசை விசாரித்தாள்?'

'பொதுவாகக் கேட்டாள். அடுத்த வீட்டிலே இருக்கிற வங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளணும்கிற எண்ணத்திலே தான் கேட்டிருப்பா. எல்லோரும் உன்னை மாதிரியே இருக்க முடியுமா? ஊரிலே உலகத்திலே உள்ளவங்க யாரு எப்படி யிருந்தா என்ன, எப்படிப் போனலென்ன என்று கவலையில்லாமல் உன் காரிய முண்டு, நீ உண்டு என்று...'

'உலகத்திலே எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்க முடியுமா, பாட்டி! அப்படி யிருந்தால் தான் அது உலகம் ஆகுமா?'

'அதென்னமோ! அடுத்த வீட்டிலே இருக்கிறவங்களைப் பற்றியாவது நல்லாத் தெரிஞ்சு வச்சிருக்கணும்.'

'சரி' தெரிந்து கொள்ளுகிறேன். நீ தான் சொல்லி விடேன்!'

'பக்கத்து வீட்டிலே இருக்கிருரே அவர் ரொம்ப நல்லவர் மாதிரித் தோணுது பாட்டி, அப்படீன்னு சொன்னு அவ.'

'நல்லவர் மாதிரிங்கிறது தப்பு, ரொம்ப நல்லவரே தான்னு சொல்லணும். நீ எங்கே சொல்லி யிருக்கப் போறே!'

'நான் தான் சொன்னேனே, எனக்கு உன்னை மாதிரிப் பேசத் தெரியாது. அவ கேட்டதும், ஆமா, நல்ல பிள்ளை யாண்டான் தான். ஆனல் வேலை பார்க்க மாட்டேன், கல்யாணம் பண்ணப் போறதில்லை யின்னெல்லாம் சொல்லிக் கிட்டிருக்கிருன்......'

'இதை யெல்லாம் சொல்லிப் போட்டியா! சரியாப் போச்சு போ!'

'பின்னே உன்னைப் பத்தி வேறே என்னத்தைச் சொல்றது?'

'உம். அப்புறம் அவள் ஒண்ணுமே சொல்லலியாக்கும்?'

'சொல்லாமே இருப்பாளா. ஏனப்படி இருக்கிருர்ன்னு கேட்டாள். முன்னே இருந்தவங்க தேடி வச்ச சொத்து அழியணும் பாரு, அதுக்குத் தான்னு சொன்னேன். இல்லே பாட்டி, அவர் நோக்கம் என்னவோ; அது பிறத்தியாருக்கு எப்படித் தெரியும்னு சொன்னுள்.'

'பரவால்லியே! ஊங், அப்புறம்?'

'உன் பேரு, ஊரு, படிப்பு, சொத்து சுகம் எல்லாத்தையும் பற்றிக் கேட்டாள்.'

'எல்லாவற்றையும் நீ சொல்லி விட்டியாக்கும்! இதெல்லாம் என்ன விசாரணை அவளுக்கு? என் பேரிலே ரொம்ப அக்கறை கொண்டிருக்கிறவ மாதிரித்தான்' என்று முணமுணத்தான் அவன். பிறகு 'சரி, அவளை அடிச்சது யாரு?' என்று கேட்டான்.

'வேறே யாரு அடிப்பா? தாலி கட்டின புருஷன் தான் என்று சொல்லிவிட்டு துடைப்பத்திற்கு வேலை கொடுத்தாள் கிழவி.

'புருஷனு? அவள் புருஷன் தானு அவரு!' என்று முனங்கினவன் 'ஆமா, அவர் ஏன் அவளைப் பேயறை அறைந்தாராம்?' என்று கேட்டான்.

'அது ஒரு கதை. எல்லாம் கதை கதையாகத் தானிருக்கும்மா இந்த காலத்திலே' என்ருள் கிழவி.

ரகுராமனின் மனம் மறுபடியும் தீவிரமாக வேலை செய்தது. 'ஆகவே இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று நான் எண்ணியது சரிதான்' என்று நினைத்தான் அவன். 'என்ன விஷயம் பாட்டி? அதையும் தான் சொல்லி விடேன்' என்று கேட்டான்.

கையிலெடுத்த வேலையைச் செய்து முடிப்பதை விட வாய் பார்த்து வம்பளப்பதிலேயே சிரத்தை மிகக் கொண்ட கிழவி துடைப்பத்தைக் கீழே போட்டு விட்டு அவன் அருகில் வந்தாள். பரமரகசியம் எதையோ ரொம்பவும் ஜாக்கிரதை யாக வெளியிட விரும்புகிறவள் போல் மிக மெதுவாகப் பேசினுள் :

'பாவம், சகுந்தலை ரொம்பக் கஷ்டப்படுகிரு. அவள் குணத்திற்கும் அழகுக்கும் இந்த மாதிரிப் புருஷன் வந்து வாய்த் திருக்க வேண்டாம். ஆனல் இதெல்லாம் அவரவர் மனசு போலவா முடியுது! பிறக்கிற போதே இன்னைருக்கு இன்னைரு யின்னு முடிபோட்டு வச்சிருப்பாரும். இதைப் பத்தி ஒரு கதை கூட உண்டுமே, உனக்குத் தெரியுமா?'

ரகுராமனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. 'அடுத்த வீட்டுக் காரியின் கதையைச் சொல்லாமல் அநாவசியமாக இதென்ன பேச்சு!' என்று முனங்கியது அவன் மனம். அதை வெளிப்படையாக அறிவிக்காமல் 'என்ன எழவு கதையோ! அதெல்லாம் யாருக்குத் தெரியும்!' என்று சிடு சிடுத்தான்.

தனது ஞானத்தைக் காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது என மகிழ்வுற்ற கிழவி அவன் குரல் மாறுதலையோ முகபாவங்களையோ கவனிக்கவில்லை, அதனுல் நீட்டி இழுத்துப் பேசினுள்: 'ஒரு ராசா வீட்டிலே ஒரு சமை யல்காரன் இருந்தான். ஒரு நாள் அவன் தண்ணீர் எடுத்து வர குளத்திற்குப் போனன். போனவன் திரும்பிவாறதுக்கு ரொம்ப நேரம் ஆயிட்டுது. அவன் வந்ததும் ராசா மக ஏன் இவ்வளவு நேரமின்னு கேட்டாள். அவன் அதிசயமாய்ச் சொன்னன். அங்கே குளக்கரை மண்டபத்திலே ஒரு முனி வர் வந்திருந்தாரு; அவர் ரெண்டு ரெண்டு ஓலையைச் சேர்த்து முடி போட்டுக்கிட்டிருந்தாரு. கண்ணை மூடிக் கொண்டே கையிலகப்பட்ட ஓலைகளை எடுத்து முடிச்சுப் போட்டாரு. இது ஏன் அப்படின்னு கேட்டேன். யாருக்கு யாரு புருஷன் பெண் சாதியா வருவாங்க என்று முடி

போடுகிறேன்னு சொன்னரு. அது வேடிக்கையாக யிருந்ததுனலே நின்னு பார்த்தேன். நேரம் போனதே தெரியலே என்ருன். யாரு? அந்தச் சமையல்காரன்.'

ரகுராமனின் உள்ளம் புகைந்தது. 'நீயும் உன் மோறக் கட்டையும் கதையும். போதும் போதும். பெருக்கித் தள்ளி விட்டுப் போய்ச் சேரு' என்று சீறி விழலாமென்ற துடிப்பு அவனுக்கிருந்தது. அப்படி எரிந்து விழுந்தால், அப்புறம் சகுந்தலையைப் பற்றி எதுவுமே அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும்; பக்கத்து வீட்டு மர்மம் என்ன என்பதே புரியாமலிருந்து விடும்; ஆத்திரத்திலைலே காரியத்தைக் கெடுத்து விடக்கூடாது என்றெண்ணிப் பொறுமையாக உட்கார்ந்திருந்தான்.

கிழவி கதையைத் தொடர்ந்தாள்: 'உடனே அந்த ராசா மக கேட்டாள்,—அது சரி, உனக்கு யாரு பொண்ணு; அதைக் கேட்டையா, கேட்கலேயான்னு. சமையல்காரனுக்கு சந்தோஷம் தாங்கலே. அதைக் கேளாமெ வருவேனு? கேட்டேன். உனக்கும் இந்த தேசத்து ராசா மகளுக்கும் தான் கல்யாணம் நடக்கும்னு சொன்னரு. உனக்கும் எனக்கும் தான் முடிப்போட்டு வச்சிருக்காரு அப்படின்னு சொன்னேன். அவளுக்குக் கோபம் பொங்கி வந்தது. பக்கத்திலே கிடந்த வெங்கலாகப்பையை எடுத்து ஒரு போடு போட்டா அவன் மண்டையிலே. ரத்தம் களகளன்னு வடிஞ்சுது. அவன் துண்டை எடுத்து தலையிலே அமுக்கிக்கிட்டு நின்ருன். இனிமேல் இங்கே இருக்காதே, ஓடிப் போன்னு விரட்டிட்டா அவ, யாரு? அந்த ராசா மக.......'

'ரொம்ப சந்தோஷம். உன் கதை முடிஞ்சிதா?' என்று கிண்டலாகக் கேட்டான் ரகுராமன். அவன் கேலிக்குறிப்பை உணர முடியாத கிழவி தொடர்ந்தாள்.

'முடிஞ்சுதாவா? இன்னமேத்தானே கதையே இருக்கு. அதுக்கப்புறம் என்ன ஆச்சுதுன்னு, அந்தச் சமையல்காரன் காடா செடியான்னு திரிஞ்சு, மலையா மடுவான்னு அலைஞ்சு ரொம்பவும் கஷ்டப்பட்டு ஒரு இடத்துக்கு வந்து சேர்ந்தான். அது வேருெரு தேசம். அன்னைக்குத் தான் அங்கே முடி சூட்டதுக்கு ரா்சாவைத் தேடி வரப் பட்டத்து யானையை அனுப்பினுங்க. அது என்ன செஞ்சதுங்கிறே? நெடுகச் சுற்றி யலைந்து வந்து, ஒரு மரத்தடியிலே படுத்திருந்த சமையல்காரன் தலையிலே கும்ப தீர்த்தத்தைக் கொட்டி,

மாலையை அவன் கழுத்திலே போட்டுது. அவன் ராசா ஆகிவிட்டான்.'

'சரிதான். அப்புறம் அவன் பழைய ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொண்டான். அவ்வளவு தானே?' என்று சட்டுப்புட்டெனக் கதையை முடிக்க முயன்றான் அவன்.

'அட, நீ ஏன் இப்படி அவசரப்படுறே? கதையைக் கேளேன். அவனுக்கும் அந்த ராசா மகளுக்கும் கல்யாணம் நடந்து முடிந்தது. ஒரு நாள் அந்த ராசா மகளைத் தன் தலைக்கு எண்ணெய் தேய்க்கச் சொன்னான் இந்தப் புது ராசா. அவள் தேய்க்கும் பொழுது பெரிய வடு ஒன்று மண்டையிலே இருப்பதைப் பார்த்தாள். இதென்னது, எந்த ஊருச் சண்டையிலே ஏற்பட்டதுன்னு கேட்டா. இது எந்த ஊர் யுத்தத்திலும் ஏற்பட்ட தில்லடீ பொண்ணே! நீ வெங்கலாப்பையினாலே ஓங்கி அடிச்சியே அதனாலே வந்த காயம் தாண்டி, அப்படின்னு சொன்னான். சொன்னானா!'

'சரி, சொல்லி விட்டானல்லவா! ரொம்ப சந்தோஷம்' என்று பொறுமை யிழந்து கத்தினான் அவன்.

'அப்ப தான் அந்த ராசா மகளுக்குப் புரிஞ்சுது. அவன் பழைய சமையல்காரன்தான்; விதியின்னு ஒண்ணு இருக்கு என்கிறது சரிதான்னு தோணிச்சு. அதுதான் யாரு யாருக்கு எப்படி நடக்கணும்னு எழுதியிருக்குதோ அப்படித்தான் நடக்கும்' என்றாள்.

இவள் தான் சொல்ல ஆரம்பித்ததையே மறந்து போனாலும் போயிருப்பாள் என்று எண்ணிய ரகுராமன் ஞாபகப் படுத்த விரும்பினான். 'அதனாலே சகுந்தலைக்கும் ஞானசம்பந்தம் அவர்களுக்கும் முன்னாலேயே முடி போட்டு வைத்திருந்தது. இல்லையா, அதுதானே விஷயம்?' என்றான்.

'ஆமா, அவரு இருக்கிறாரே அவரு ரொம்ப சந்தேகம் பிடிச்ச அண்ணாவி, யாரையுமே நம்ப மாட்டாராம். அவருக்கு எதை யெடுத்தாலும் சந்தேகம். யாரு மேலும் சந்தேகம். தாலி கட்டின பெண்டாட்டி கிட்டேக் கூடச் சந் தேகம் தான். இந்தச் சகுந்தலை இவருக்கு ரெண்டாந்தாரம். முதல்லே ஒருத்தி யிருந்தாளாம். இவர் கண்ணிலே விரல் விட்டு ஆட்டி விட்டாளாம். இவரு சந்தேகப்படறதையும்

கட்டுப்பாடு பண்ணி வைக்கிறதையும் சகிக்க முடியாமே அவள் விட்டை விட்டே ஓடிப்போயிட்டாளாம். சொந்தக்காரன் ஒருத்தன் கூடத்தான். அவள் எங்கே போனு' என்ன ஆனுள் என்கிறதே இதுவரை தெரியலியாம்.'

'பேஷ், ரொம்ப ரசமான செய்தியாக இருக்குதே!' என்ருன் ரகுராமன். 'அந்தப் பாபம் இந்தப் பெண் தலையிலே வந்து விடிந்த தாக்கும்?'

'ஆமா. வாசல் பக்கம் எட்டிப்பார்க்கப்படாது; சும்மா சும்மா பின் தோட்டத்திலே நிற்கப்படாது. தெருவுக்கு வரக் கூடாது; திருவிழாவுக்குப் போகக் கூடாது. பவுடர் பூசக் கூடாது; அதிகமாக அலங்காரம் செய்யக் கூடாது. இப்படி எடுத்ததெற்கெல்லாம் கண்டிச்சுக்கிட்டேயிருந்தா, ஒரு பெண் மனசு என்ன பாடு படும்? அவள் என்ன கிழவியா? எல்லாம் அனுபவிச்சு அலுத்துப் போனவளா? சின்னஞ்சிறு வயசு. நாலு பேரைப்போல தானும் இருக்கணும்கிற ஆசை இல்லாமலா போகும்? அதை வெளியே சொல்ல முடியாமல் நெஞ்சு துடிக்கும். அந்த ஆசையினலே அவள் நேற்று தெப்பத் திருவிழா பார்க்கப் போயிருக்கிரு. அதிலே என்ன தப்பு? பெரியம்மாதானே போயிட்டுவான்னு சொன்னு. அப்படிப் போனதுக்காக அவளைப் பிசாசு அறையிற மாதிரி அறைஞ்சிருக்கு அந்த ஆளு. இந்த அநியாயம் எங்காவது உண்டா?' என்று மூக்கின் மீது விரல் வைத்தாள் கிழவி.

அடுத்த வீட்டுக்காரியிடம் ரகுராமனுக்குள்ள அனுதாபம் அதிகரித்தது. அவனுக்கு ஒரு சந்தேகமும் எழுந்தது. 'அந்த விட்டிலே யாரோ ஒரு பையன் இருக்கிற மாதிரித் தோணுதே. நேற்றுச் சாயங்காலம் தற்செயலாய் கண்ணிலே பட்டான். அவன் யாரு தெரியுமா, பாட்டி?' என்று விசாரித்தான்.

''யாரு? சிவப்பா, ஒல்லியா, கொஞ்சம் கூன் விழுந்த மாதிரிக் குனிஞ்சு நடந்து போவானே, பதினேழு பதினெட்டு வயசிருக்கும். இல்லையா?' என்று கேட்டாள் அவள்.

'ஆமாம். அவன் தான். அவன் யாரு?'

'அவர் மகன் தான். சகுந்தலையிருக்கிருளே அவளுக்கு மூத்த படியா மகன்.'

'யாரு? வீட்டை விட்டுப் போய்விட்டான்னு சொன்னியே அவளா ?'

'ஆமா. இந்தப் பையனுக்கு ஒன்றரை வயசு இருக்குமாம் அவள் போனபோது. குழந்தை கிட்டே அவளுக்குப் பிரியமே கிடையாதாம். பெரிய ராணி மாதிரியாம் அவ. அவளுக்குக் கல்யாணமான மூன்ருவது வருஷத்திலேயே ஓடிப் போய் விட்டாளாம். அப்படிப்பட்ட ராங்கிக்காரி இந்த மனுசனேடு மூணு வருஷம் குடித்தனம் நடத்தினதே பெரிசுதான் !'

'அப்போ, இந்த சகுந்தலைக்குக் கல்யாணமாகி ரொம்ப வருஷமாகுதுன்னு சொல்லு. இவள் ரொம்பப் பொறுமைசாலி போலிருக்கு !' என்று கூறிப் பெருமூச் செறிந்தான் அவன்.

'ரொம்ப வருஷமொண்ணுமாகி விடலே. இவளுக்குக் கல்யாணமாகி மூன்று வருஷம் தான் ஆகுதாம். இப்ப அவளுக்கு இருபத்திஞலு வயசாகுதுன்னு சொன்ஞள்.......'

'இருபத்திஞலுதான் ஆகுதா ? இருபத்தாறு, இருபத்தேழு வயசு. யிருக்கும்னு நினைத்தேனே ! எனக்கு வயசை மதிப்பிடத் தெரியவில்லை தான்' என்று நெஞ்சொடு கிளத்திக் கொண்டான் ரகுராமன்.

'அவளுக்குக் கல்யாணமாகும் போது இருபத்தோரு வயசு. அவள் தனக்குக் கல்யாணமே ஆகாது போலிருக்குன்னு ரொம்பக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாளாம். கஷ்டப்பட்ட குடும்பத்திலே வந்தவ. அஞ்சாறு பொண்ணுகளாம். இவள் தான் கடைசியாம். இவள் அப்பா ரொம்பக் கஷ்டப்பட்டு மனமுடைஞ்சு போஞராம். கடைசியிலே தான் இந்த மாப்பிள்ளை வந்து சேர்ந்ததாம். ஏதோ கல்யாணம்னு ஆஞல் சரிதான்னு நினைச்சிருந்த சகுந்தலை கண்ணைக் கசக்கலே. முனங்கலே.'

'சரி பாட்டி, அவருக்கு என்ன வேலையாம் ?'

'என்னவோ வேலை பார்த்தாராம். இப்ப ஒரு வேலையுமில்லை. அடிக்கடி வெளியூர் போய்விட்டு வாருரு. அவருக்கு நிலம் சொத்து எல்லாம் இருக்கிற கிராமத்திற்குப் போய் தங்கி விட்டு வருவார் போலிருக்கு. முதல் தாரத்துக்காரி போய்விட்ட பிறகு ரெண்டு மூணு வருஷம் பைத்தியம் பிடித்த மாதிரி இருந்தாராம். எப்ப பார்த்தாலும் புத்தகம் படிக்

கிறதும் எழுதுவதுமா யிருந்தாராம். பிறகு பிரசங்கம் பண்ணப் போறாராம். அப்படிப் போன போதுதான் ஒரு சமயம் ஒரு ஊரிலே ஒரு பொம்பிளையைக் கண்டு ஆசைப் பட்டு அவள் பின்னாலேயே திரிஞ்சாராம். அப்புறம் எப்படியோ இரண்டு பேரும் பிரிந்து விட்டார்கள். பிறகு ரெண்டு மூன்று வருஷங்கள் போனதும் அவருக்குத் திடீரென்று கல்யாணம் செய்து கொள்ளவேணும் என்கிற ஆசை ஏற்பட்டது போலிருக்கு. சொத்து சுகமெல்லாம் இருந்தால் பெண்தானா கிடைக்காது? அப்புறமென்ன, சகுந்தலை வாழ்க்கைப் பட்டாள். அவள் என்ன சுகத்தைக் கண்டாள்?' என்று சொல்லி நெடுமூச்செறிந்தாள் கிழவி.

'அவள் மட்டும் தானா கஷ்டப்படுகிறா, பாட்டி? எவ்வளவோ பேருக்குத் தான் கல்யாண வாழ்க்கை தொல்லை நிறைந்ததாக யிருக்கு!' என்று பெரியதனம் பண்ண முயன்றான் அவன்.

'ஆமா, நான் இல்லையின்னு சொல்லலே. ஆனால் இந்த மனுசன் மாதிரி வேறே யாராவது இருப்பாங்களா என்கிறது சந்தேகம் தான். சுத்த மோசமான ஆளு. யாரைத்தான் சந்தேகிக்கிறது என்பதே கிடையாது. அவள் தான் இரண்டாம் தாரத்துக்காரி, இளவயசுக்காரியின்னு உனக்கு சந்தேகம். அதுக்காக நீ பெத்த மகனையுமா சந்தேகிக்கணும்? நீயும் ஒரு பெரிய மனுஷன் மாதிரி அலையிறியே, சீ!' என்று குற்றவாளியையே எதிரில் நிறுத்திப் பேசுவது போல் உணர்ச்சிப் பெருக்குடன் கூறினாள் அவள்.

ரகுராமனின் உள்ளம் விஷயத்தைக் கிரகித்துக் கொண்டது, வறண்டு கிடந்த நிலம் மழை நீரை ஆகர்ஷித்து ஐக்கியப் படுத்திக் கொள்வது போல. 'ஓ, விஷயம் இதுவா!' என்று எண்ணி நிமிர்ந்து உட்கார்ந்தான். 'நேற்று அவளையும் அந்த வாலிபனையும் ஒன்றாகப் பார்த்ததும் எனக்குக்கூட சந்தேகம் எழத்தான் செய்தது. ஆனால் அந்தப் பையன் யார் என்று தெரியாது எனக்கு. அவரே சந்தேகிப்பதென்றால் — இளைய மனைவியிடமும் மூத்த தாரத்தின் மகனிடமும் குடும்பத் தலைவனுக்கே நம்பிக்கை இல்லாமலிருக்குமானால் — மோசமான மனோபாவம்தான். தன்னிடமே நம்பிக்கை அற்றுப்போன ஒருவனின் பயப் பிராந்தியினால், வாழ வேண்டிய ஒரு பெண்ணின் பசிய வாழ்க்கையே கருகிப் போகிறது!' சே, என்ன குடும்ப வாழ்வு வேண்டிக் கிடக்கிறது!' என்று புழுங்கியது அவன் உள்ளம்.

கிழவி சொல்லிக் கொண்டிருந்தாள் : 'அவருக்கு' முன்பு மகளிடம் ரொம்பப் பிரியமும் அன்புமிருந்ததாம். அவளை விட்டுப் பிரியவே மாட்டாராம். அப்புறம் வேறொருத்தியின் சிநேகம் கிடைத்தவுடன் அவர் வீடு வாசல் எல்லாவற்றை யுமே மறந்துவிட்டார். பிறகு சகுந்தலையைக் கல்யாணம் செய்து வீட்டுக்கு அழைத்து வந்த போது அந்த பையனுக் குப் பதினாலு பதினஞ்சு வயசிருக்கலாம். அவனை டவுணில் ஆஸ்டலிலே சேர்த்துவிட்டார். எப்பவாவது தான் அவன் இங்கே வருவான். லீவு நாட்களிலே தான். அப்பல்லாம் அவர் வெடு வெடுன்னுதான் நிற்பாராம். பாவம் இந்தப் பையன் என்ன செய்கிறான்; எதுக்காக அவனை இந்தப் பாடு படுத்தணும் என்று சகுந்தலை மனசைப் புண்ணாக்கிக் கொள் வாள். அவன் சாதுக் குழந்தை. அவனும் அவளும் நேற்று தெப்பத் திருவிழா பார்க்கப் போனதுக்குத்தான் அவளுக் குப் பூசைக் காப்பு கிடைச்சுது.'

சொல்லி முடித்ததும் கிழவி மிகப் பரபரப்புடன் 'வேலை கிடக்குது. நான் இங்கேயே நின்னு பஞ்சு வெட்டிக்கிட்டிருக் கேனே. உம்' என்று அலுத்துக் கொண்டாள். பிறகு அவள் போய்ச்சேர வெகு நேரம் பிடிக்கவில்லை

## — 7 —

ஒரு மாதிரியாக விஷயங்கள் எல்லாம் புரிந்து வருவ தாகத் தோன்றியது ரகுராமனுக்கு. 'முன்னரே கொஞ்சம் சிரத்தை எடுத்திருந்தால் அதிகம் அறிந்திருக்கலாம்; இந்தக் கிழவி சில தினங்களாகப் பக்கத்து வீட்டிலும் வேலை பார்த்து வருகிறாள் என்பதை அன்றொரு நாள் கவனித்தேன். அவளிடம் கேட்க வேண்டுமென்று கூட நினைத்தேனே. ஆனால் அது அப்படியே போய்விட்டது!' என்று எண்ணிக் கொண்டான்.

கிழவி சொன்ன விவரங்களைக் கேட்ட பிறகு அவனுக்கு அடுத்த வீட்டுச் சகுந்தலையிடமிருந்த அனுதாபம் அதிகரித் தது. 'இப்படித்தான், பாவம், நல்லவர்கள் ரொம்பக் கஷ்டப்படவேண்டியிருக்கிறது.. நமது நாட்டிலே பெண்கள் பாடு மிகமிகக் கஷ்டம்தான். கல்யாண வாழ்விலே அவர்கள் என்ன சுகத்தைக் கண்டுவிடுகிறார்கள்? இதன் கோளாறு கல்யாணம் செய்து வைக்கிற முறையில்தானிருக்கிறது. ஆயிரம் காலத்துப் பயிர்; பார்த்துக் கேட்டு யோசித்துத்

தான் செய்யணும் என்று பேசுவதிலே குறைச்சல் இல்லை. நடைமுறையில் கிணற்றிலே பிடித்துத் தள்ளுவது மாதிரித் தான்! அப்புறம் மனதைத் தேற்றிக் கொள்வதற்காகக் கதையும் வசனங்களும் தயாராக வைத்துக்கொள்கிறார்கள். அன்றெழுதினவன் அழித்து எழுதமாட்டானும்! முதலிலேயே இன்னாருக்கு இன்னாரென்று முடி போட்டிருப்பானும். முட்டாள்தனமான கட்டுக்கதைதான்!'

அவன் உள்ளம் சிரித்தது. 'அதைப் பற்றியெல்லாம் உனது அபிப்பிராயத்தை யாரும் கேட்கவில்லை. வீணைப் புகைந்து புழுங்கிக் கொண்டிருந்தால் உடம்புக்கு ஆகாது தம்பீ! சும்மா போயி ஸ்ட்ராங்காக ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டு வா!' என்று உபதேசித்தது.

ரகுராமன் தானாகவே சிரித்துக் கொண்டு எழுந்தான். கதவைப் பூட்டி விட்டு வெளியே காலடி வைத்ததும் அடுத்த வீட்டு வாசலில் நின்ற ஸ்ரீமான் ஞானசம்பந்தம் அவன் பார்வையில் பட்டார். அவரிடம் பேச்சுக் கொடுக்கலாமா, வேண்டாமா, அல்லது நேரே வெளியே போய் விடலாமா என்று தயங்கினான் ரகு.

அவன் எவ்வித முடிவுக்கும் வர வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவரே முந்திக்கொண்டார். 'என்ன தம்பியா புள்ளேய், என்ன! ஹெஹெ, சௌக்கியமெல்லாம் எப்படி?' என்று கனைத்தார்.

வாசலில் நின்று அவரைக் கவனித்தபடி 'ஹிஹி, சௌக்கியத்துக்கென்ன குறைவு!' என்றான் அவன்.

'அப்ப நீரு அதிகமாச் சந்தோஷமல்லவா படணும் அழுதாப்லே பதில் சொல்வானேன்? சரி, அதெப்படியும் போகுது. இப்போ இந்த வேளையிலே எங்கே கிளம்பி!' னீங்க?' என்று விசாரித்தார் 'பெரியதனப்'பிரியர்!

'உமக்கு ஏன் வீண் கவலை?' என்று முனங்கியது அவன் மனம். ஆனால் அவன் வாய் உச்சரித்தது 'சும்மா காப்பி சாப்பிட்டு விட்டு வரலாம்னு போறேன்' என்று.

'ரொம்ப சந்தோஷம். ஆனால் சும்மா காப்பி சாப்பிட முடியாதே. காசைக் கொடுத்தால்தானே காபி கிடைக்கும். இல்லையா, ஹஹஹ!'

ரகுராமனும் சிரித்தான். 'உங்களிடம் பேசுகிறேன் என்ற நினைவில்லை. இருந்தால் வார்த்தைகளை அளந்தோ எடை போட்டோ பேசியிருப்பேன்' என்றான்.

'பிரயோசனமில்லை. வார்த்தைகளை அளக்க உமது வாய் என்ன மரக்காலா? சொற்களை எடை போட உமது நாக்கு என்ன துலாக்கோலா? நிதானமாக யோசித்துப் பேச உம்மால் முடியாது என்கிறதை உடனேயே காட்டி விட்டீரே. வாழ்க்கையே அதுவாகப் போயிட்டுது. என்ன? உயர்வு நவிற்சி, யோசியாமல் பேசுவது, அர்த்தமில்லாமல் வார்த்தைகளை உதிர்ப்பது, சிந்திக்காமலே உளறுவது....'

'நீரோ சுத்த இதுவாகப் போய்விட்டீர் — அதுதான் போரடிப்பு ஆக!' என்று ரகுராமன் மனம் முணுமுணுத்தது. 'அப்போ நான் போயிட்டு வாறேன், ஸார்' என்று அவன் நகர முயன்றான்.

'எங்கேய்யா போகப் போகிறீர்! வெறும் காப்பி சாப்பிடுவதற்காக ரெண்டு, ரெண்டரை பர்லாங் போகப் போறேன் என்கிறீரே!'

'பின்னே என்ன செய்வது?'

'சக்தியை மிச்சப்படுத்தணும் பிரதர். உழைப்புச் சக்தியைப் பயனுள்ள காரியங்களிலே செலவிடணும். பாழடிக்கப் படாது. தெரியலே?'

'நீர் மட்டும் பேச்சிலே உமது சக்தியை நாசமாக்கலாம் போலிருக்கு. அதுமட்டுமா! மற்றவங்க காலத்தையும் கொலை செய்கிறீரே அன்பரே!' என்று உபதேசம் புரியத் துடித்தது அவன் உள்ளம். ஆனால் அப்பாவி ரகுராமனுக்குத் துணிச்சல் கிடையாது.

ஸ்ரீமான் மீண்டும் கனைத்தார்: 'ஹஹ, யோசனைதானா! பலத்த சிந்தனையோ! பரவால்லியே!'

'நான் வாறேன், ஸார்' என்று அசைந்தான் அவன்.

'வாங்க. உள்ளே வாங்க. வாறேன்னு சொல்லிக் கொண்டு போவது நல்லாயில்லை. இதிலெல்லாம் என்ன சம்பிரதாயம் வாழுது? நீ போறியா? போறேன்னு உள்ளதைச் சொல்லு. எதுக்காக வாறேன், போயிட்டு வாறேன்னு சொல்லணும்? வீணான பொய்யான பழக்கம்' என்று அழுத்தமாக அறிவித்தார் அவர். கூடவே சொன்னார்:

'வாங்க மிஸ்டர் ராஜாராமன்...'

'என் பெயர் ராஜாராமல்ல. ரகுராமன்' என்று நினைவு படுத்த வேண்டியது அவசியமாயிற்று.

'ஓ' பரவால்லே. உள்ளே வாருமையா. இப்போ உமக்குக் காசு செலவில்லாமலே காப்பி கிடைக்கும்படி செய்கிறேன். சும்மா வாருங்க' என்று உபசரித்தார். ரகுராமன் காலைத் தேய்த்துத் தேய்த்துத் தயங்குவதைக் கண்டதும் 'வாய்யா சும்மா. பிகுப் பண்ணுதே. எனக்கு அது பிடிக்காது. உனக்குக் காபி சப்ளை பண்ணலாம்னு தோணுது. கூப்பிடுறேன், உனக்கும் இஷ்டம்தான். உடனே உள்ளே வரவேண்டியதுதானே. ஏன் வேஷம் போடணும்? அதுதான் நான் சொல்றது. பொய்மை, போலித்தனம், பாசாங்கு, வேஷம், வீண் வெளிச்சம் எதுவுமே கூடாது. கட் அன் ரைட்! வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டு, அவ்வளவுதான். உம். வாங்க உள்ளே!' என்று அழைத்து விட்டு முன் சென்றார் ஞானசம்பந்தம்.

ரகுராமனும் போனான், 'இந்த ஆசாமியின் போக்கே ஒரு தினுசாகத் தானிருக்கு' என்று நினைத்த அவன் அபிப்பிராயத்தை அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் உறுதிப்படுத்தின.

'மிஸ்டர் ரகுநாதன்' என்று ஆரம்பித்தார் அவர். 'என் பெயர் அப்படியல்ல!' என நினைவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது மறுபடியும்.

'பார்த்தீர்களா, என்னை அறியாமலே தவறு ஏற்பட்டு விடுகிறது. அது போகுது. நான் முதலிலேயே உங்களிடம் சொல்லிவிட விரும்புகிறேன். நான் யாருடனுவது பேசிப் பழகத் தொடங்கும் போதெல்லாம் இதைச் சொல்லத் தவறுவது கிடையாது. பழகுகிற புதுசிலே நீங்க, வாங்க என்கிற மாதிரித்தான் பேசுவது வழக்கம். அப்புறம் நீர், நீ என்று கூடத் தாராளமாகப் பேச்சு வந்துவிடும். இதை நான் வேண்டுமென்றே கையாள்வதில்லை. என் சுபாவமே அதுவாகப் போச்சு. அதனாலே நான் உம்மை எப்படி அழைக்கிறேன் என்பதைப் பற்றிக் கவலைப் படக்கூடாது. அட, நம்மை இவன் மரியாதையில்லாமல் நீர், நீ என்றெல்லாம் சொல்கிறானே என்று வருத்தப்படக் கூடாது. மரியாதை என்பது இதய பூர்வமாக உள்ளத்து உணர்ச்சியோடு ஒன்றியிருக்க வேண்டிய விஷயம். சும்மா வெளிப் பேச்சுக்கு நீங்க, ஸ்ரீ ரகுராமன் அவர்கள் என்றெல்லாம் சொல்றது; மனசுக்குள்ளே கிடக்கான் சின்னப் பயல் என்கிற மாதிரி நினைப்பது —இதுதான் மரியாதை என்றால் அதிலே அர்த்தமே கிடையாது. சரி; உட்கார்ந்திருங்க; உள்ளே போய் காப்பிக்குச் சொல்லி விட்டு வாறேன்' என்று போனார்.

'உம், இது ஒரு விதமான பைத்தியம் அல்லது மேதை என்ற நினைப்போ என்னவோ!' என்று எண்ணினன் ரகுராமன். அவன் பார்வை மேஜை மீது சென்றது. அவர் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிருர் என்று புரிந்தது. 'பெரிய புத்தகமாக எழுதுகிருர் போலிருக்கு' என்று எண்ணி அவன் எழுந்து கவனித்தான். சில தாள்களைப் புரட்டிப் பார்க்க முயன்ருன். அதற்குள் உள்ளேயிருந்து அவர் வரும் ஓசை கேட்டதும் நல்ல பிள்ளை மாதிரி அமர்ந்து சுவரில் மாட்டியிருந்த படங்களை ரசிப்பவன் போல் 'பாவலாப்' பண்ணினன்.

படங்களைக் கவனித்ததும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. பெண்ணுலகில் நாகரிகம் புகுந்து வளரத் தொடங்கிய ஆரம்பத்திலே எங்கும் நிலவிய சிருஷ்டிரகத்தைச் சேர்ந்தவை அவை. படித்த பெண்களின் நாகரிக வளர்ச்சியின் அளவுப் படிகள் என்று சொல்லலாம் அத்தகைய முயற்சிகளை. துவாரங்கள் நிறைந்த அட்டையிலே கலர் நூல்களினல் விதவித உருவங்களைப் பின்னிப் படம் போடுவது நாகரிகம் முற்றிப் போகாத காலத்தில் உயர்ந்த நாகரிகச் சின்னமாகக் கருதப்பட்டது. எலிமெண்டரி ஸ்கூலே எட்டிப் பார்த்தவர்களும், ஹைஸ்கூலில் காலடி வைத்து விட்டுப் பின் வீட்டிலே ஒடுங்கி வாசல்படி தாண்டாதவர்களாகி விட்டவர்களும் பொழுது போக்கிற்காகவும் தெண்டச் செலவாகவும் அட்டையிலே படம் பின்னத் துணிந்தார்கள். அதனல் காலம் கரியானதுடன் காசுக்கும் கேடு பிடித்தது. மிருகங்கள், பறவைகள், கட்டிடத் தோற்றங்கள், கடவுள்கள் என்றெல்லாம் பெண்கள் தயாரித்த அவலட்சண அட்டைப் படங்களுக்குக் கண்ணுடியும் சட்டமும் போட்டுத் தொங்க விட வேண்டிய கடமை கணவன், தந்தை, கார்டியன்களுக்கெல்லாம் ஏற்பட்டது.

பெண்கள் அட்டையிலே நூலினல் படம் பின்னிய பெருமையை விளம்பரப்படுத்தத் தேதி, தங்கள் பெயர், படத்தில் காணப்படும் பதார்த்தத்தின் பெயர் முதலியவற்றைக் கூட எழுதி வைப்பது உண்டு. அத்தகைய படங்கள் அந்த வீட்டில் அதிகம் தொங்கின. யார் பின்னியதோ என்ற சந்தேகத்திற்கு இடமளிக்காமல் சகுந்தலா, சகுந்தலாம்பாள் என்றும் விதம்விதமாக எழுத்துக்களும் மின்னின. சில படங்களில் பெயரின் முதல் எழுத்துக்கள் மட்டும் காணப்பட்டன.

'படத்தில் எழுதியிருப்பதைக் கொண்டுதான் இது குதிரை, இது ரோஜா, இது மயில் என்றெல்லாம் தீர்மானிக்க வேண்டும். இல்லையெனில் கண்டு பிடிக்கவே முடியாது தான்' என்று நினைத்தான் அவன். 'பேபி' படம் ஒன்றைப் பார்த்ததும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அதில் 'சகுந்தலாம்பா அம்மாள்' என்று எழுதியிருந்தது அவனது சிரிப்பை அதிகப்படுத்தியது.

'சகுந்தலா என்பது அழகாக இருக்கிறது. சகுந்தலாம்பாள் நன்றாகயில்லை. அதைவிட மோசமாக இருக்கிறதே இது. சகுந்தலாம்பா அம்மாளாம்! அவளுக்குச் சிறிதேனும் அழகு உணர்ச்சி, ரசனை எதுவுமே கிடையாது என்று நான் நினைத்தது சரிதான்' என்று நினைத்தான் அவன்.

'ஊஹூம். அவளாக எழுதியிருக்கமாட்டாள். படம் பின்னத் தொடங்கிய ஆரம்பத்தில், யாராவது பெரிய மனிதர் எழுதிக் கொடுத்தது தான் இந்த லெட்சணத்திலேயிருக்கும். அம்மாள் போய், அம்பாளும் போய், சகுந்தலா என்று வெறும் பெயர் மாத்திரம் இருப்பது அவள் நாகரிக வளர்ச்சியைக் காட்டுகிறது என்று கொள்ள வேண்டும். பெண்ணுலக நாகரிகப் பரிணாமத்தின் அடுத்த படியான எம்பிராய்டரி வேலையிலும் அவள் தேர்ந்திருக்கிறாள் என்பதற்கு ஜன்னல்களிலும் வாசல் ஓரத்திலும் தொங்கும் திரைகளே சாட்சி' என்று எண்ணியது மனம். இந்த ரக எண்ணச் சுழிப்பினால் அவன் சிரிப்பு ஒடுங்கவில்லை.

'என்னய்யா சிரிப்பு! தானாகவே சிரிக்கும்படி அப்படி என்ன ஹாஸ்யத்தைக் கண்டு விட்டீர்?' என்று கனைத்துக் கொண்டே வந்தார் ஞானசம்பந்தம்.

'இல்லே, ஒண்ணுமில்லே' என்றான் அவன்.

'ஒன்றுமில்லேன்னா சிரிப்பு எப்படி வந்தது? அது தான் பொரும்பாலரிடமுள்ள தவறு. மனசிலே நினைக்கிறதைச் சரியாகச் சொல்லத் தெரிவதில்லை. சொல்லத் துணிவு இருப்பது மில்லை. இது மாதிரி விஷயங்களைப் பற்றியெல்லாம் தான் நான் எனது புதிய புத்தகத்திலே எழுதிக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்லி அவர் மேஜை முன் அமர்ந்தார்.

'ஓகோ, நீங்க புஸ்தகம் கூட எழுதுகிறேளா, எனக்குத் தெரியாதே! இதற்கு முன்னாலே எத்தனை புத்தகங்கள் எழுதியிருக்கிறீர்கள்?' என்று ஆவலாக விசாரித்தான் ரகு.

'எவ்வளவோ ஆராய்ச்சி பண்ணி எவ்வளவோ எழுதியிருக்கிறேன். இப்போ "வாழத் தெரியவில்லை" என்று எழுதி வருகிறேன். இது பெரிய விஷயம்.'

ரகுராமன் எவ்வித அபிப்பிராயமும் சொல்லவில்லை. சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க நேர்ந்தது. 'நீ குடத்திலே வைத்த விளக்கு. என்ன படிச்சு என்ன எழுதித் தான் என்ன பிரயோசனம்? ஒன்றுவது அச்சிலே வந்திருக்குதா? எழுதினால் மட்டும் புஸ்தகமாகி விடுமா? அது அச்சாகிப் புத்தக வடிவமாகி விற்பனைக்கு வந்தால் தானே பயனுண்டு?' என்று அழுத்தமாக அபிப்பிராயம் அறிவித்தது யார் என நோக்கினான்.

அங்கு பெரியம்மா நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது தான் அவள் வெளியே யிருந்து வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

'நான்சென்ஸ்!' என்று முனங்கினார் ஞானசம்பந்தம். 'சரி சரி, நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ. என் எழுத்து, படிப்பு ஆராய்ச்சி விஷயத்திலே உன் யோசனையை யாரும் கேட்கலே; நீ அநாவசியமாகத் தலையிட வேண்டாம்னு உனக்கு எத்தனை தடவைதான் சொல்வது?' என்றார். அவள் மௌனமாக உள்ளே போய்விட்டாள்.

'அவள்தான் என்னுடைய தாயார். நம்ம விஷயமெல்லாம் அவளுக்குப் புரியவா போகுது? வயசு காலத்திலே மனத் திருப்தியோடு பேசாமல் கிடக்காமல் இப்படித்தான் ஒன்றில்லாவிட்டால் ஒண்ணு சொல்லிக் கொண்டிருப்பாள். சுத்த தொண தொணப்பு' என்று சமாதானம் கூறும் பாவனையில் பேசினார்.

'உமது பண்பாடும் அதே தானய்யா!' என்று உற்சாகமாகக் கூவ வேணும் என்ற எழுச்சி பிறந்தது அவனுக்கு. ஆனால் அப்படிச் சொல்லிவிட முடியுமா! ஆகவே அசட்டுச் சிரிப்பு சிரித்து வைத்தான்.

'மிஸ்டர் ரகுராஜன்...'

'ரகுராமன், ஸார்!' என்று அமைதியாக அறிவித்தான் அவன்.

'ஹஹ, பார்த்தீகளா! மறதி. ஊம், வந்து நான் என்ன சொல்ல வந்தேன்?'

'நீர் என்ன சொல்ல நினைத்தீர் என்பது எனக்கென்ன தெரியும்! இப்படித்தான் எல்லோரும். என்ன பேசு கிறோம் என்பதைப் பற்றிய யோசனையே யில்லாமல் வார்த் தைகளைக் கொட்டி விடுகிறது' என்று அவர் பாஷையி லேயே அவருக்குத் திருப்பிக் கொடுக்கலாம் என்று தோன் றியது. என்னும் ரகுராமன் பேசவில்லை.

'ஓ யெஸ். நீங்க அன்னைக்கு ரொம்பக் கோபமாகப் போய்விட்டீர்களே! அதற்கப்புறம் உங்களைச் சந்தித்துப் பேசணும்னு நினைத்தேன், பார்க்கவே முடியலே!'

'நீங்க வெளியூர் போய்விட்டீர்கள் போலிருக்கு'

'ஆமா, அடிக்கடி போக வேண்டியிருக்கும். கொஞ்சம் முக்கிய அலுவல்கள் முடிய வேண்டியிருக்கு. அதனாலேதான் அலைச்சல்.'

'சரிதான்' என்று தலையசைத்தான் அவன்.

'நேற்றோ முந்தா நாளோ—நேற்றைக்குத்தான். ஆமாம். நேற்றேதான்—உங்களைப் பற்றி யாரோ பிரமாதமாகச் சொன்னாங்க'

'என்னைப் பற்றியா! என்ன ஆச்சர்யம்!' என்றான் ரகு.

'உங்கள் நண்பர் போலிருக்கு. லைபிரரியில் பார்த்தேன். வீடு, வசதி இதையெல்லாம் பற்றிப் பேச்சு வந்தபோது, உங்களைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்தது. அப்பதான் சொன் னாங். ரொம்ப நல்லவர், படித்தவர், அப்படி இப்படியின்னு. எனக்கு வருத்தமாக யிருந்தது. நாம் பழகாமல் இருக் கிறோமே, முதல் தடவை சந்தித்தது கூட அபிப்பிராய பேதத் திலே முடிந்ததேன்னு வருத்தப்பட்டேன். அதை மறந்து விடுங்க. பின்னாலே தட்டி கட்டி வேலி போட்டிருப்பதனாலே உங்களுக்கு இடைஞ்சல் ஒன்றுமில்லையே?'

'ஒன்றுமில்லைதான்!'

'சௌகரியமும் ஒன்றுமில்லை என்று நினைக்கிறீர்கள். இல்லையா? ஹஹ, நீர் அப்படித்தானய்யா நினைப்பீர். அப் படித்தான் நினைக்க முடியும்' என்று கத்தினார் அவர்.

அவ்வேளையில் வேலைக்காரப் பெண் உலகு இரண்டு டம் ளர்களில் காப்பி கொண்டு வந்தாள். ஒன்று கண்ணாடி டம் ளர்; மற்றொன்று வெள்ளி டம்ளர். கண்ணாடி டம்ளரை ஞான

சம்பந்தத்தின் முன்னால் வைத்துவிட்டு, ரகுராமன் அருகிலே வந்து வெள்ளி டம்ளரை அவன் கையிலே கொடுப்பதற்காக நீட்டினாள் உலகு. அவள் விழிகளும், உதடுகளும் உள்ளத்தின் மலர்ச்சியைப் பிரதிபலித்தன. அவன் கை நீட்டாமலிருக்கவே அவள் 'இந்தாங்க காப்பி' என்று குரல் கொடுத்தாள்.

'மேஜை மேலே வையேன்' என்று உறுமினார் பெரியவர். அதற்குள் ரகு கையிலேயே வாங்கிக்கொண்டான். அவள் சிரித்துக்கொண்டே நகர்ந்தாள். அங்கிருந்தே போய் விடவில்லை. ஞானசம்பந்தம் இருந்த நாற்காலிக்குப் பின்புறமுள்ள வாசல் ஓரத்தில் திரையருகே நின்றாள்.

'ஹோய், புள்ளே முழிக்கிற முழி சரியாயில்லே டோய்!' என்று கெக்கலித்தது அவன் மனம்.

அவன் டம்ளரில் உதடுகளைப் பதிக்காமல், தூக்கி ஊற்ற முயன்றான்.

'சும்மா வாய் வைத்துச் சாப்பிடுங்க. கிளாஸிலே அப்படித் தாராளமாகச் சாப்பிடலாம். அது நாகரிகம். வெள்ளிப் பாத்திரங்களிலும் அவ்விதமே சாப்பிடலாமாம். வெள்ளிக்கு எச்சில் தீட்டு எதுவும் கிடையாதாம்! என்ன பழக்க வழக்கங்களோ. சௌகரியங்களை உத்தேசித்து வைத்துக் கொள்கிற அனுஷ்டானங்கள்தான். வேறே என்ன! அது போகுது, மிஸ்டர் ராஜாராமன்!'

'ரகுராமன்' என்று எரிச்சல் கலந்த தொனியில் நினைவு படுத்தினான் அவன்.

'சே, இது பெரிய தொல்லையாக அல்லவா போச்சு. இனிமேல் வெறும் ராமன் என்றே கூப்பிடுகிறேனய்யா. மிஸ்டர் ராமன், உங்களிடம் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசணும். இப்ப உங்களுக்குச் சாவகாசம்தானே? வேறே அவசர காரியம் எதுவுமில்லையே?' என்று கேட்டார் அவர்.

ஸ்ரீமான் ஞானசம்பந்தம் ஏதோ முக்கியமான விஷயம் சொல்லப் போகிறார் என்று ஆவலுடன் எதிர்பார்த்தான் ரகுராமன். ஒருவேளை, முன்பு தட்டிவைத்து வேலிகட்ட வேணும் என்பதைப் பிரமாதப் படுத்தினாரே, அதுமாதிரி அவருக்கு நன்மையாகும் விஷயம் எதையாவது தான் பிரஸ்தாபிப்பார் என்ற சந்தேகமும் அவன் உள்ளத்தில் தலை தூக்கியது. 'ஊம். சொல்லுங்க, என்ன விஷயம்?' என்று கேட்டான்.

'நான் எழுதி வைத்தது நிறையவே யிருக்கு. அதையெல்லாம் புத்தகமாக்க வேணும். அது எப்பதான் முடியுமோ தெரியலே. கண்டவன் கழியவன், சரியாக எழுதத் தெரியாதவன் எழுத்தெல்லாம் புத்தகங்களாக வந்திருது. ஆராய்ச்சி பண்ணி கஷ்டப்பட்டு, பலருக்கும் பயன்படக் கூடிய விஷயங்களை எழுதி வைத்திருக்கிறேன். புஸ்தகமாப் போடுறத்துக்கு ஆள் கிடைக்க மாட்டேன்குது. உம், பார்த்தீரா உலகம் இப்படி யிருக்கு!' என்று அலுத்துக் கொண்டார் அவர்.

நீண்ட பெருமூச்சு விட்டபடி தொடர்ந்தார் அவர். 'அம்மா சொன்னதும் சரிதான். என்ன எழுதி என்ன செய்ய! குடத்திலே வைத்த விளக்கு தான்! குன்றின் மேலிட்ட தீபமாக வழியே பிறக்காதா? அதற்குச் சந்தர்ப்பம் கிட்டாமலே போய் விடுமோ? இந்த ஏக்கம் எனக்கு என்றுமே உண்டு. என்ன செய்றது? நம்ம சமுதாய அமைப்பு, சூழ்நிலே, மனிதர்களின் மனோபாவமெல்லாம் அப்படியிருக்கு. நான் எழுதினதைப் படித்து ரசிக்கக் கூட யாருமில்லையே. நானேதான் திரும்பத் திரும்பப் படித்து ஆகா என்ன அற்புதமாக எழுதியிருக்கிறேன் என்று என்னை நானே பாராட்டிக் கொள்கிறேன். எழுத்தாளனுக்கு நேரடியான புகழ் தேவை பாரும். அதனுல்தான்! ஹஹ, என்ன நான் சொல்றது!' என்று கனைத்தார்.

பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த ரகுராமன் 'ஐயோ பாவம்!' இவருக்காகக் கொஞ்சம் தியாகம் செய்யலாம்' என்று எண்ணினுன். 'வருத்தப் படாதீங்க ஸார், நான் செய்கிற ஒரே தொழில் படிப்பதுதான். எந்தக் குப்பையாக யிருந்தாலும் சரி, அமைதியோடு படித்து விடுவேன்' என்ருன்.

'அப்போ என்னுடைய எழுத்துக்களெல்லாம் குப்பையாகத்தானிருக்கும் என்று முடிவு கட்டி விட்டீராக்கும்?' என்று சடாரென அவர் கேட்கவும் அவன் திகைப்புற்ருன். ஆகவே மழுப்பும் குரலில் பூசிமெழுக முயன்ருன்.

'அப்படிச் சொல்வேனு ஸார்! பொதுவாக என் வழக்கத்தைச் சொன்னேன். நீங்க வந்து ஹி ஹி...;

ஒய், நீர் மன்னிப்பு கின்னிப்பு ஒன்றும் கேட்க வேண்டியதில்லை. முதலிலேயே உமக்கு நான் தண்டனை கொடுப்பதாக நிச்சயித்து விட்டேன்.'

'தண்டனையா?'

'ஆமா. நான் எழுதியிருப்பதை யெல்லாம் நீர் படித்துப் பார்க்கவேண்டும். அவைகளைப் பற்றிய உமது அபிப்பிராயங்களை உள்ளது உள்ளபடி சொல்ல வேண்டும். தெரியலே. இது தண்டனை யில்லாமல் வேறென்ன?'

'தண்டனையே தான்!'

'படிக்காமலே ரொம்ப நல்லா யிருக்குது ஸார் என்று பாராட்டி விடலாம் என்பது முடியாது. அவசியம் படிக்க வேண்டும். உங்களுக்கு முக்கியமான ஒரு பொறுப்பையும் சுமத்துகிறேன். எல்லாவற்றையும் படித்ததும் நன்றாக யிருப்பதை யாராவது ஒரு பப்ளிஷருக்கு நீங்களே சிபாரிசு செய்து அனுப்பவேண்டும்.

'ஐயோ, இது ரொம்பப் பெரிய தண்டனையாச்சே!'

'இது தண்டனையில்லே. உதவி, பரோபகாரம்!'

'எனக்கு எந்தப் பிரசுரகர்த்தரையும் தெரியாதே ஸார்!' என்று சொன்னான் ரகு. ஆனால் அவன் பரிதாபக் குரல் அவர் இதயத்தைத் தொடவில்லை.

'தெரியாவிட்டால் என்ன மிஸ்டர்! படித்துப் பார்த்து, பாராட்டுரையுடன் யாருக்காவது அனுப்பிவிடும். ஸ்டாம்புச் செலவுக்கு நான் காசு தாறேன். படித்து முடிகிறவரை சகிப்புத் தன்மைக்காக நீர் எத்தனைகப்காப்பிசாப்பிடுவீரோ, அத்தனை கப்புகளுக்குரிய காசையும் நானே தந்து விடுகிறேன். அப்புறமென்ன?'

'காசைப்பற்றி ஒன்றுமில்லே!'

ஸ்ரீமான் அவனை மேலே பேசவிடவில்லை. 'எதைப் பற்றியுமே நீர் பேச வேண்டியதில்லே!' என்று சொல்லி மேஜை டிராயரைத் திறந்து மூன்று பெரிய நோட்டுப் புத்தகங்களை எடுத்து அவன் முன் வைத்தார். இப்படி இன்னும் நாலைந்து இருக்கு. எல்லாவற்றையும் ஒரேடியாகச் சுமக்க வைத்தால் நீர் பயந்து போவீர். அதனாலே இப்போ இந்த மூன்றையும் எடுத்துக்கொண்டு போங்கள். போதும்' என்றார்.

'கிளாஸை எடுத்துட்டுப் போகட்டுமா?' என்று சொல்லிக் கொண்டே முன்வந்தாள் உலகு. வேலைக்காரப் பெண் அதுவரை அங்கேயே தான் நின்றிருக்கிறாள் என்பதை இரு

வருமே கவனிக்க வில்லை. அப்பொழுதுதான் அந்த உண்மை அவர்களுக்கு உறைத்தது.

'இத்தனை நேரமும் இங்கேயா நின்னே? தம்ளரை யெல்லாம் அப்பவே எடுத்துக்கிட்டுத் தொலையிறதுக் கென்ன?' என்று உறுமினார் ஞானசம்பந்தம்.

'இவருக்கு இதுதான் வழக்கம்: இவர் அதட்டல்களைக் கவனிக்க வேண்டிய அவசியமே கிடையாது!' என்று உணர்த்தும் அலட்சிய பாவத்துடன் அந்தப் பெண், முகத்திலே புன்னகை தவழ, பாத்திரங்களை எடுத்துக் கொண்டு நடந்தாள். அவள் போவதையே கவனித்த ரகுவின் மனதில் பரவால்லே, 'பெண்ணும் நன்றாகத் தானிருக்கிறது' என்ற நினைப்பு எழுந்தது.

வாசல் நடை அருகில் போனதும் அவள் திரும்பி அவன் பக்கம் ஒய்யாரப் பார்வை ஒன்றை விசிவிட்டு உள்ளே மறைந்தாள்.

ரகுராமன் அங்கு வெகு நேரம் தங்கியிருக்கவில்லை. ஞானசம்பந்தம் கொடுத்த எழுத்துப் பிரதிகளைத் தூக்கிக் கொண்டு கிளம்பினான். 'இது ஒரு தொல்லை. இவர் குணம் தெரிந்து விட்டது. தனக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டியிருந்தால்தான் ரொம்பக் குழைந்து பேசி உபசரிப்பார் என்பது மறுபடியும் நிச்சயமாகி விட்டது' என்று நினைத்தான் அவன்.

'அடாடா, அடிக்கடி நடு ராத்திரியிலே தம்பீ, தம்பீ என்று அலறுவது யார் என்று கேட்க நினைவில்லாமல் போயிற்றே' என்று வருத்தப்பட்டது மனம். உடனேயே அவன் மனதில் படர்ந்தது அடிபட்ட சகுந்தலையின் நிழல். "பாவம், அவள் மூலையில் ஒடுங்கி விழுந்து கிடப்பாள். கண்ணீர் பெருக்கிக் கொண்டு படுத்திருப்பாள்' என்று எண்ணினான்.

'வேலைக்காரப் பெண் இந்தப் பக்கம் நின்று பார்த்துக் கொண்டிருப்பதைப் போல, வீட்டுக்கார அம்மா சுவருக்குப் பின்னால் எங்காவது ஜன்னல் திரை மறைவில் நின்று யார் என்ன பேசுகிறார்கள் என்று கவனித்திருப்பதும் சாத்தியம் தான்' என்று கனைத்தது சைத்தான் மனம்.

## — 8 —

அன்று சாயங்காலம் அடுத்த வீட்டின் முன்னுல் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அந்தச் சப்தம் கேட்டதும் வெளியே எட்டிப் பார்த்தான் ரகுராமன்.

ஒருவரும் வந்திறங்கவில்லை; யாரோ ஊருக்குப் போகிருர்கள் என்று புரிந்தது. 'ஒரு வேளை சகுந்தலை தான் போகப் போகிருளோ என்னவோ! ராத்திரி நடந்த சண்டையின் விளைவாக அவளை அவர் ஊருக்கு அனுப்பிவிடுகிருர் போலிருக்கு' என்று எண்ணினுன் அவன். அந்த நினைப்புடன் அவசியமற்ற வருத்தமும் எழுந்தது.

அவ்விதம் அவள் பிறந்த வீட்டிற்கோ எங்கோ போகிருள் என்ருல், போவதற்கு முன்பு கடைசியாக ஒரு தட்வை அவள் முழு உருவத்தையும் கண்டு களிக்கலாமே என்ற ஆசை அடக்கமுடியாதபடி தலை தூக்கியது. அதனுல் அவன் ஜன்னலருகிலேயே காத்திருந்தான். ஆனுல் ஏமாந்தான்.

வண்டியில் வந்து ஏறியது அடுத்த வீட்டுக்காரி யல்ல. முந்திய தினம் மாலையில் அவளுடன் திருவிழாக் கூட்டத்தில் காணப்பட்ட இளைஞன் தான் பிரயாணத்திற்குத் தயாராக முன் வந்தான். ஞானசம்பந்தத்தின் மகன் என்று வேலைக்காரக் கிழவி குறிப்பிட்டாளே அந்த வாலிபன்.

'சரிதான். சந்தேகப் பிராணியான தந்தை இவனையே ஊருக்கு அனுப்பிவிட்டார் போலும்! லீவு நாட்களுக்காக இங்கு வந்தவனை சும்மா பல ஊர்களுக்கும் போய்விட்டு வா என்று அனுப்பி வைக்கிருர் போலிருக்கு. இங்கேயே அவனைத் தங்க விட்டிருப்பது ஆபத்து என்று எண்ணியிருப்பார். நல்ல மனுஷன் வந்து சேர்ந்தானய்யா!' என்று சிறிச் சிரித்தது ரகுவின் உள்ளம்.

வண்டி போய்விட்டது. அந்தப் பையன் போய்விட்டான். இனி எப்பொழுது திரும்பி வருவானே; அல்லது இங்கு வரவேண்டாம்; வந்துதான் என்ன செய்யப் போகிறே என்று போதித்து அனுப்பினுலும் அனுப்பியிருப்பார். இப்படியும் மகனுக்கு உதவியாற்றும் தந்தைகளும் இருக்கிருர்களே — ரகுராமனின் மனம் வீணை எண்ணங்களில் உழன்று கொண்டிருந்தது.

'நேற்று அலங்காரியாகப் பார்த்ததற்குப் பிறகு சகுந்தலையைப் பார்க்கவே யில்லையே. அந்த வீட்டில் போய்

கொஞ்ச நேரம் இருந்தேனே. அப்பொழுது அவள் எட்டிப் பார்க்கவே யில்லை. அவளை கோஷாத்தனம் பயிலும்படி இந்த மனுஷன் ஏன் தான் கட்டாயப் படுத்துகிறாரோ; ஒரு நாள் சுதந்திரமாகச் சுற்றிவர முயன்றது கிளி. கூட்டுக்குத் திரும்பியதும் கஷ்டம்தான் காத்திருந்தது. இனி கட்டுக் காவல் எல்லாம் அதிகமாகும்! அவளை வீட்டை விட்டு விரட்டாமல், பையனை அனுப்பிவைத்தாரே. அதற்காக அவரைப் பாராட்ட வேண்டியதுதான்!'

பலவித அலைகள் புரளும் எண்ணச் சுழலில் சிக்கியிருந்த ரகுராமனுக்கு 'மைண்டு சரியில்லை' என்ற நிலைமை ஏற்பட்டதில் வியப்பில்லை தான்!

சரியாக இல்லாமல் போன மனம் நள்ளிரவில் அதிகமாகக் குழம்பிக் கலங்க நேர்ந்தது, அடுத்த வீட்டிலிருந்து திடீரென்று கிளம்பிய 'தம்பீ! தம்பீ!' என்ற அலறல் காரணமாக விழிக்க நேர்ந்ததனால். ஆழ்ந்த தூக்கம் கெட்டு விட்டதனால் திடுக்கிட்டுக் குழம்பிய அவன் உள்ளம் நல்ல விழிப்பு நிலை பெற்று விஷயத்தைப் புரிந்துகொள்வதற்குக் கொஞ்சநேரம் பிடித்தது. 'தம்பீ!' என்ற கனத்த குரல் இரண்டு மூன்று தடவைகள் ஒலித்து விட்டன அதற்குள்.

'வழக்கமான ஓலம்தான். ஆனால் இன்று ஸ்ரீமான் ஞானசம்பந்தம் வழக்கத்திற்கு அதிகமான ஈடுபாட்டோடு அலறுகிறார்' என்று விமர்சனம் செய்தது ரகுவின் மனம். அதனால் அவனுக்குச் சிரிப்பு கூட வந்தது.

'இவர் ஏன் தான் இப்படிக் கத்துகிறாரோ! விழிப்பு நிலையில் வேதனையால் அலறுகிறாரோ; அல்லது தூக்கத்தில் தான் இவ்விதம் பிதற்றி மற்றவர்களின் தூக்கத்தைக் கெடுக்கிறாரோ தெரியவில்லை. அடுத்த தடவை அவரைச் சந்திக்கும் பொழுது இதைப் பற்றிக் கேட்டுவிட வேண்டியது தான். நாளைக்கே பார்த்துக் கேட்டுத் தெளிவு பண்ணிக் கொள்வது நல்லது' என்று முடிவுக்கு வந்தான் அவன்.

## — 9 —

ரகுராமன் முடிவு செய்தபடி மறு நாளே ஞானசம்பந்தம் அவர்களைச் சந்தித்துத் தனது குழப்பத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் போயிற்று. காரணம் அவனுக்கு ஏற்பட்ட சந்தர்ப்பக் கோளாறு எதுவுமல்ல. அடுத்த வீட்டுப்

பெரியவர் அன்று அதிகாலையிலேயே வெளியூர் போய்விட்டார் என்று அவன் தெரிந்துகொள்ள முடிந்தது தான் காரணம்.

அந்தச் செய்தியை அவன் அறிந்து கொண்ட விதமே சுவாரஸ்யமானது தான்.

அன்று காலை எட்டு எட்டரை மணி யிருக்கும். முன் வாசல் கதவு திறந்துதான் கிடந்தது. ரகுராமன் ஈஸிச் சேரில் சாய்ந்தபடி ஞானசம்பந்தரின் எழுத்துக்களை மேலோட்டமாக வாசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு வந்து சேர்ந்தாள் பக்கத்து வீட்டு உலகு. எதிர் பாராத வருகை அது.

அவன் வியப்புற்று அவளைக் கவனித்தான். அலை அலையாக மடிப்புகள் நிறைந்து, அடிப்பகுதி பூமியிலே புரளும்படி பெரிதாகத் தொங்கிய பாவாடை அணிந்திருந்தாள் அவள். கறும் பட்டுப் பாவாடை. செக்கச் சிவந்த பார்டர் அடிப்பகுதியில் பளிச்சிட்டுத் திகழ்ந்தது. மேலே உடலுடன் ஒட்டிக்கிடந்த சட்டையை மூடி அலட்சியமாகத் தொங்கப் போட்டிருந்த சந்தனக்கலர்த் தாவணி — பூ வேலைகள் எதுவு மற்றுப் 'பிளெயினுக' விளங்கிய மென்வர்ண மேலாக்கு — பருவ மெருகு பெற்று வந்த அந்தப் பெண்ணின் உடல் வளத்தையும் வனப்பையும் அதிகப்படுத்திக் காட்டும் சாதனமாக விளங்கியது. கூந்தல் படிய வாரிவிடப்படாமல் சிலிர்த்து நின்றது, அழுக்கலை யொளியாகத் தோன்றியது. துவளத் துவளப் பின்னியிருந்த சடையை முன்புறமாக இழுத்து, விரல்களால் நிமிண்டிக் கொண்டே, உதடுகளில் சிரிப்பு தவழ, கண்களில் தனியொளி மிளிர, அவள் வந்து நின்றது ரசனைக்குரிய காட்சி தான்.

'இந்தப் பெண் அழகாக யிருக்கிறது. வயசு பதின் மூன்று பதினுலு இருக்கலாம். உடல் வளமும் வளர்த்தியும் நன்ருக யிருப்பதனுல், பாவாடை தாவணி டிரஸ் அமைவாக, பிரமாதமாக இருக்கிறது. சிரித்த முகமும் சீதேவியுமாக என்கிருர்களே, அது இந்தப் புள்ளைக்குத்தான் பொருந்தும். இதைப் பார்த்தால் வேலைக்காரப் பெண்ணுகத் தோன்றவில்லை. சகுந்தலையின் தங்கச்சி என்ருே, உறவுப் பெண் என்ருே தான் நினைக்க வேண்டி யிருக்கும்' என்று எண்ணினுன் அவன்.

அதனால் 'என்ன விஷயம், எங்கே வந்தே?' என்று கூட விசாரிக்காது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண்ணின் முகம் வெட்கத்தினாலும் மகிழ்வின் மிகுதியினாலும் சிவந்தது. தலைகுனிந்து நின்றாள்.

'என்னம்மா உலகம்மா, என்னம்மா வேணும்?' என்று கேட்டான் அவன். அப்படிக் கேட்ட தினுசும் சொற்களும் அவள் நாணத்தை அதிகப்படுத்தின.

சட்டென்று சமாளித்துக் கொண்டு, குலுங்கச் சிரித்தாள் அவள். குறும்புத்தனச் சிரிப்பு. 'உங்க கிட்ட உறை இருக்குதா?' என்றாள்.

'என்ன உறை? தலாணி உறையா?'

'ஊஹூம்' என்று அவள் ஒய்யாரமாய் தலை யசைத்தாள். 'தபால் உறை!'

'தபால் உறையா!'

'ஊம். காயிதத்தை அடைச்சு அனுப்புகிற உறை. ரெண்டணாத் தபால் பில்லை ஒட்டிய காகித உறை' என்றாள். அளவுக்கு அதிகமான தலையசைப்பு, கண்ணோட்டம், உடல் நெளிப்புகளுடன்.

'நீ மெத்தப் படிச்ச அம்மா போலிருக்கு! உறையா மில்லே உறை! கவர்கூடுன்னு கேட்டிருக்கப்படாது!' என்று கிண்டல் பண்ணினான் அவன்.

'இருக்குதா? இருந்தால் அம்மா வாங்கிட்டு வரச் சொன்னாங்க' என்று சொல்லிச் சிரித்தாள்.

'அம்மா தான் உறைன்னு கேட்கச் சொன்னாங்களா?'

'ஊஹூம். தபால் கவர் இருந்தால் கேட்டு வாங்கிட்டு வான்னாங்க!'

'ஓகோ. நீ உன் அகராதித்தனத்தைக் காட்ட விரும்பினையாக்கும்! பேஷ்! அது சரி. அந்த வீட்டு ஐயா எழுந்திருச்சாச்சா?'

'எழுந்து, குளிச்சு முழுகி, தோசை காப்பி எல்லாம் சாப்பிட்டு, விடியதுக்கு முன்னாலேயே டூர் போயாச்சு. வெளியூர் பிரயாணம்.'

'பிரயாணம் போயிட்டாரா?' அப்படியானால் அவர் இங்கே இல்லையா?' என்று ஆச்சர்யமாகக் கேட்டான் அவன்.

'நான் சொன்னதுக்கு அது தானே அர்த்தம்! வெளியூர் பிரயாணம்னு சொன்னால் வீட்டுக்குள்ளேயே இருக்கிறார் என்று எங்காவது அர்த்தம் உண்டோ?'

'இந்தப் புள்ளெ விளையாட ஆரம்பிச்சிட்டுதே! ரொம்ப சகஜமாக, தாராளமாகத் தான் பேசுது' என்று அவன் மனம் முனங்கியது. உலகின் முகத்தையே கவனித்தான்.

'என்ன, கவர் இருக்குதா இல்லையா? இருந்தால் கொடுங்க. இல்லையென்றால், வெளியே போகும் போது வாங்கியாந்து தரும்படி சொல்லச் சொன்னாங்க. நான் சொல்லியாச்சு. இந்தாங்க ரெண்டணா' என்று விரல் களில் நாணயத்தைப் பற்றிக்கொண்டு கையை நீட்டினாள் அவள்.

அவன் எழுந்து உள்ளே போய், கவர் ஒன்றை எடுத்துக் கொண்டு திரும்பினான். காசை அவன் பக்கம் நீட்டியவாறே 'பரவாயில்லியே, நீங்க கூட ஒரு போஸ்ட் மாஸ்டர்தானா ஸார்? கார்டு கவரெல்லாம் உங்க கிட்டே நிறைய இருக்கா?' என்று கேட்டு விட்டுக் கலகலச் சிரிப்பு சிந்தினாள் அக்குமாரி.

அவள் போக்கை ஆதரிக்க விரும்பாத ரகுராமன் 'என்ன களைப்பு வாழுது? இந்தா, சீக்கிரம் போய்ச் சேரு!' என்று கவரைக் கொடுத்து வழியனுப்பினான். அவள் முகம் வாடி வதங்கியதைக் கண்டதும் 'ஐயோ, ஏனிப்படி எரிந்து விழுந்தேன்!' என்ற வருத்தம் பிறந்தது அவனுக்கு.

## — 10 —

ரகுராமனுக்கு வருத்தம் வருத்தம் தான். அடுத்த வீட்டுச் சகுந்தலையை அடிக்கடி பார்க்க முடியவில்லையே என்று. தோட்டத்தின் நடுவில் தட்டி கட்டாமலிருந்தால் அவளை இதற்குள் ஆயிரம் தடவை தரிசித்திருக்க முடியும். நேராக முன்வந்தோ மறைவாக நின்றோ, அடுத்த வீட்டுக் காரியின் அற்புதத் திருக்கோலங்களை, தனிமை என்ற நினைவிலே அவள் சித்தரிக்கக் கூடிய விதவித நிலைகளை, பாவனைகளைக் கண்டு களித்துக் கண்பெற்ற பாக்கியத்தை அனுபவித்திருக்கலாம்!

'அதற்கு வழி இல்லாமல் செய்து விட்டாள் சண்டாளி'! என்று நெடுமூச்சுடன் தீச் சொல்லும் எறிவது அவன் வழக்க மாகிவிட்டது. அவள் வாழ்க்கையில் படும் வேதனைகளை உணர்ந்து அவளுக்காக அவன் அனுதாபம் அறிவிக்கத் தயார் தான். ஆனால் இந்த விஷயத்தில் அவள் கண்டனத் துக்குரியவளே என்று தான் மனம் பேசும்.

திடீரென்று அவனுக்கொரு சந்தேகமும் எழுந்தது. 'ஒரு வேளை இப்படித் தோட்டத்தின் நடுவிலே மறைப்பாகத் தட்டி கட்ட வேண்டும் என்ற எண்ணம் ஞானசம்பந்தம் மூளையிலே உதயமாகி யிருக்கலாமல்லவா! பிறர் மீதும் தன் மனைவி பேரிலும் நம்பிக்கை கொள்ள முடியாத அந்த மனுஷனே பாதுகாப்பாக......' இந்த நினைப்பு பிறக்கவும் அவனுக்கு அடுத்த வீட்டு ஐயா மேல் அசாத்தியக் கோபம் உண்டா யிற்று.

'புத்தகம் எழுதுகிறாராம் புத்தகம்! அவரும் அவர் ஆராய்ச்சிகளும்! அவர் மோறை மாதிரித்தானிருக்கு! சமாதி கட்டும் வழக்கம் எந்த கலாசாரத்திலே முளைவிட்டது? எகிப்திய ஸிவிலிஸேஷனா? திராவிடக் கலாச்சாரமோ? அதா, இதா! இந்தப் பிரச்னையை முடிவு கட்டவில்லை யென்றால் மனிதன் உயிர் வாழ முடியாது பாரும்! இவரை யும் இவர் எழுத்துக்களையும் குழி தோண்டிப் புதைத்து மேலே சமாதி எழுப்பினால் எனக்கு சந்தோஷமாக யிருக் கும். ஆகவே அது புண்ணியமான காரியம்!' என்று நினைத் தான் அவன்.

அவனது வெறிப் பண்பு அவனுக்கே சிரிப்பு தந்தது. "அவர் பகுதியில் அவர் வீட்டுச் சௌகரியத்திற்காக அவர் என்ன எழவையும் செய்துவிட்டுப் போகிறார். அதனால் உனக்கு என்ன நஷ்டமாம்?" என்ற உள்ளொலி பிறவா மலில்லை, 'அவளைப் பார்க்க முடியவில்லையே. அதனால் தான்' என்று சிணுங்கியது உள்ளம்.

'ரகுராமா, நீ கெட்டுப்போனாய்! வீணாகக் கெட்டுப் போனாய்! ஆகவே நாசமாய்ப் போ!' என்று நாடக தோரணையிலே தனிமொழி பேசிச் சிரித்தான் அந்த ரசிக சிகாமணி.

ஸ்ரீமான் ஞானசம்பந்தம் வாசித்துப் பார்க்கும்படி கொடுத்தவற்றை ரகுராமன் பொறுமையோடு படித்துத் தீர்த்து விட்டான். 'சுரத்தில்லை, எல்லாம் குப்பை' என்ற

தீர்ப்பும் கூறிக்கொண்டான். அதை அவரிடம் சொல்ல வேண்டுமே, எப்படிச் சொல்வது என்ற தயக்கம் மிகுந்திருந்தது.

அவனுக்குப் பிரமாதமான ஐடியா ஒன்று தோன்றியது. அபிப்பிராயம் அறிவிப்பதைப் பற்றியல்ல. ஞானசம்பந்தம் கொடுத்த நோட்டுகளைக் கொடுப்பதற்காக அவரைத் தேடிப் போவது போல் அடுத்த வீட்டுக்குப் போவது; அவரைக் கூப்பிட்டால் அவள் வந்து பதில் சொல்வாளல்லவா! இந்த நினைப்பு பிறந்ததும் அவன் முகம் மலர்ந்தது.

'அது சரி. ஆனால் அவர் இல்லை என்கிறதைத்தான் அந்தப் புள்ளெயிடம் கேட்டுத் தெரிந்தாச்சே. அது போயி அம்மாளுகிட்டே முறையிடாமலா இருந்திருக்கும்! இல்லை, அவள் தான் தூண்டித் துருவிக் கேளாமல் இருப்பாளா! என்ன சொன்னாரு, என்ன கேட்டாரு, நீ என்ன சொன்னே என்று கேட்டுத் தெரிந்திருப்பாள். இப்ப நான் போனால் அவள் என்ன நினைக்க மாட்டாள்!'

'சே, அந்த உலகுயிடம் அவரைப் பற்றிக் கேட்டதே தப்பு!' என்று எண்ணினான் அவன். 'கேட்காமலிருந்தால் அவர் ஊரில் இல்லை என்பது தெரிந்திராது. அது தெரியாமலிருந்திருக்குமானால், இப்போ அடுத்த வீட்டிற்குப் போய்ப் பார்க்கலாமே என்ற ஆசையும் எழுந்திருக்க முடியாது தான்.' இந்த நினைவு அவனுக்குச் சிரிப்பு எழுப்பியது.

ரகுராமன் நீண்ட யோசனைக்குப் பிறகு 'சும்மா போய்ப் பார்க்கலாமே!' என்ற முடிவு செய்தான். அவ்விதமே கிளம்பிச் சென்று அடுத்த வீட்டுக் கதவருகில் நின்று 'ஸார், ஸார்!' என்று குரல் கொடுத்தான்.

உள்ளே இரண்டாவது வாசலின் திரைக்குப் பின்னிருந்து யாரது?' என்ற கேள்வி பிறந்தது. சகுந்தலையின் குரல் தான்.

'ஸார் இல்லையா?' என்று கேட்டான் அவன்.

'இல்லையே. என்ன வேணும்?'

'பார்க்கணும். எப்ப வருவாங்க?'

முன்வாசல் கதவு சற்றே திறந்தது. சகுந்தலை எட்டிப் பார்த்தாள். அங்கு நிற்பது யாரென உணர்ந்ததும் சட்டென்று கதவுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டாள்.

அந்த ஒரு கணத்தில் அவள் அழகை அவன் கொஞ்சம் தான் காணமுடிந்தது. தூயவெண்ணிறச் சேலையும், வாரி விடாமல் சிலிர்த்து நின்ற கூந்தலும், உற்சாகம் குன்றிய முகமும்தான் அவன் பார்வையில் பதிந்தன. அவள் பேச வில்லை. அவள் ஏதாவது கேட்பாள் என்று எதிர்பார்த்த ரகுராமன் சிறிது நேரத்திற்குப் பிறகு கேட்டான், 'ஸார் இல்லையா? எப்போ வருவாங்க?' என்று.

'அவொ ஊரிலே இல்லே. வெளியூர் போயிருக்கோ. எப்ப வருவாகளோ தெரியாது' என்றாள் அவள். மிக மெதுவாகப் பேசுகிறாளே என்று பட்டது அவனுக்கு.

திரும்பிப் போய்விடலாம் என்று நினைத்தான். ஒன்றும் சொல்லாமல் திரும்பிவிட்டால் அவள் ஏதாவது எண்ணக் கூடும் என்று மனம் உபதேசித்தது. ஆகவே அநாவசியமாக அளந்தான்: 'வந்து, அவர் எழுதின சில நோட்டுப் புத்தகங்களை என்னிடம் கொடுத்தார், படிச்சுப் பார்க்கும்படி சொல்லி. அதை யெல்லாம் திருப்பிக் கொடுக்கலாம்னு வந்தேன்.'

உள்ளே யிருந்து பதிலே வரவில்லை. அதனால் 'நான் படிச்சு முடிச்சாச்சு' என்று மேலும் தொடர ஆரம்பித்தான்.

'சரிதான். நீங்கள் படிக்காமலே திரும்பத் தருகிறீர்கள் என்று இங்கே யாரும் சொல்லலியே!' என்று கூறி விட்டு லேசாகச் சிரிப்பொலி பரப்பினாள் அவள்.

இப்பொழுது அவனுக்குத்தான் தயக்கமேற்பட்டது. மேலும் என்ன பேசுவதென்று புரியாமல் விழித்தான். 'அப்ப நான் வாறேன். அவர் வந்த பிறகு பார்க்கிறேன்' என்றான்.

'ஊம்' என்று குரலிழுத்து விட்டு, கதவில் இடைவெளி யில்லாதபடி சாத்தினாள் அவள். அவனுக்கு ஏமாற்றமாகத் தானிருந்தது. அவள் இப்படி நடந்து கொள்வாள் என அவன் எதிர்பார்க்க வில்லை. வேறு எவ்விதம் நடப்பாள் என்று கூட அவன் கனவு கண்டு மகிழ்ந்திருக்கவில்லை தான். ஆயினும் 'இதை நான் எதிர்பார்க்க வில்லை' என்றே அவன் உள்ளம் முனங்கியது.

அவன் தலை குனிந்தபடி திரும்பினான். யோசனையோடு நகர்ந்தவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான், எதிரே வந்த யார் மேலோ மோதிவிட்டதால். முன்னால் உலகு 'இஹிஹி' என்று இழித்துக் கொண்டு நின்றாள்.

'நீயா!' என்றான் அவன், எரிச்சலுடன்.

அவளோ குறும்புத்தனச் சிரிப்புடன் 'ஆமா' என்று நீட்டினாள்.

'பார்த்து வரப்படாது? உன் கண்ணு எங்கே போச்சு?' என்று சிடுசிடுத்தான் அவன்.

'உங்க கண்கள் எங்கே மேயப் போச்சோ, அங்கேயே தான்!' அவள் சிரிப்பு நிற்கவில்லை. அது அவன் எரிச்சலைத் தூண்டிவிட்டது.

'இஹிஹின்னு என்ன கனைப்பு வாழுது ?' என்றான்.

'சிரிப்பு வந்தால் சிரிக்கப்படாதாக்கும் ?'

'அர்த்தமில்லாமல் சிரித்தால்? அடிக்கடி கனைத்தால் உனக்குப் பைத்தியம்னு தான் நினைக்க வேண்டிவரும் !'

உலகுவின் முகமலர்ச்சி சட்டென்று மறைந்தது. அவனைத் தாண்டி சுவரின் பக்கம் ஓடிய அவள் விழிகள் சட்டென்று பூமியை நோக்கித் தாழ்ந்தன. அவள் வேகமாக நடந்து கதவைத் திறந்தாள். அவளது திடீர் மாறுதலைக் கண்ட ரகுராமன் அவசரமாகத் திரும்பினான். அங்கு ஜன்னலின் பின்னின்று சகுந்தலை பார்த்தைக் கவனித்ததும் தான் அவனுக்கு விஷயம் புரிந்தது.

அவன் திரும்பியதும் அவள் மறைந்துவிட்டாள். உலகை விழுங்கிக் கொண்ட வாசல் கதவு அடையுண்டது. அவன் நகர்ந்தான். அவன் காதுகளில் தெளிவாக வந்து தாக்கின: 'ஏட்டி, உனக்கு என்ன திமிர் ஜாஸ்தியாப் போச்சோ? கழுதை மாதிரிக் கனைச்சுக்கிட்டு, அது என்ன விளையாட்டு உனக்கு ? சரி, காயிதத்தைத் தபாலிலே போட்டையா ?'

சகுந்தலையின் அதட்டுதல்களை அதிகம் கேள்வியுற விரும்பாத ரகுராமன் வேகமாக நடந்தான் தனது வீட்டை நோக்கி. கையிலிருந்த புத்தகங்களை தடாலென்று மேஜை மீது போட்டான். விரக்தியோடு ஈஸிச்சேரில் சாய்ந்துவிட்டான்.

'நான் செய்தது தப்பு. அங்கு போயிருக்கப்படாது; போயிருக்கவே கூடாது' என்று வருத்தப் பட்டான் அவன்.

'போயாச்சு. பேசியாச்சு. அவள், அவள் போக்கின்படி நடந்துகொண்டாள். எனது முட்டாள்தனத்திற்காக வீண் வருத்தமடைவது சரியல்ல' என்றும் நினைத்தான்.

சகுந்தலையின் மனப்பண்மைப் புரிந்துகொள்ள இயலவில்லை. அது சுலபத்தில் முடியாது என்றே தோன்றியது. சில சமயம் 'புரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது? அவள் பெரிய புதிரா என்ன! சாதாரணமான பெண். எல்லாப் பெண்களையும் போல அவளும் ஒருத்தி. கல்யாணம் அவளுக்கு ஏமாற்ற மளித்திருக்கலாம். அது வேதனையை வளர்ப்பதாக, அவளது தன்மைகளை ஒடுக்குவதாக இருக்கலாம். அதற்காக அவள் சில சமயம் வருத்தப்படுவதும் இயல்பே. இயற்கைக் குணமான விளையாட்டுத் தனம் எப்பொழுதாவது தலை தூக்கிவிடுவதும் சாத்தியமே. இன்றைய சமூக நிலையில் அனுதாபம் கொள்வதானால் ஒரு சகுந்தலைக்காக மாத்திரம் வருத்தப்பட்டுப் பிரயோசனமில்லை. அனுதாபத்திற்கு ஆளாக வேண்டியவர்கள் எத்தனை எத்தனையோ பேர்!'

கசப்புற்ற அவன் மனம் அநாவசியமாக போதித்து மகிழ்ந்தது. 'உலகு இப்பொழுது விளையாட்டுப் பிள்ளை. என்றுமே அவளிடம் இந்தக் குணம் நீடித்து நிற்கும் என்று சொல்ல முடியாது. சூழ்நிலையும் சமூக அமைப்பும் வாழ்க்கை முறையும் அவளை அப்படி வாழ விடாது......'

'சட், இதென்ன நினைப்பு! உலகத்தையே தூக்கி நிறுத்தப் போகிறவனைப் போல் பிரமாதமான சிந்தனைகளில் இறங்கி விட்டேனே!' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டான். பயனில்லாமல் மூளைக்கு வேலை கொடுப்பதை விடச் சுகமாகத் தூங்கினால் நல்லது என்று நினைத்தான். 'கொஞ்ச நேரம் ஓய்வு' எனக் கண்களை மூடிக் கொண்டு கிடந்தான் அவன்.

ரகுராமன் கண் விழிக்கும்போது நேரம் வேகமாக ஓடி விட்டது என்பதை உணர்ந்தான். 'இரண்டு மணி நேரத்திற்கு அதிகமாகவே யிருக்கும் போல் தோணுதே!' என்று வருத்தமடைந்தான். தூக்கக் கிரக்கத்துடன் அவன் நாற்காலியில் சாய்ந்திருந்த போது, 'இன்னும் தூக்கம் போகலையா?' என்று கேட்டபடி வந்தாள் உலகு.

அவன் முன் வந்து நின்றாள். 'நான் அப்போ ஒரு தடவை வந்து பார்த்தேன். உங்களுக்கு நல்ல தூக்கம். அதனால் பேசாமல் போயிட்டேன். ஆமா, நீங்க கதவைத் தாழ்ப்பாள் போடாமலே தூங்கிட்டேளே? யாராவது உள்ளே புகுந்து எதையாவது எடுத்துக்கொண்டு போயிட்டால்? என்றாள்.

தன் தவறு அவனுக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. 'அடடா' என்று மனம் திடுக்கிட்டு வருந்தினாலும், ஒப்புக் காகச் சொல்லி வைத்தான் 'ப்சா, யாரு வந்து என்னத்தை எடுத்துப் போயிடப் போறாங்க! அப்படித் தூக்கிக்கொண்டு போகத்தான் என்ன இருக்கு இங்கே?' என்று.

'ஓகோ!' என்று கூவினாள் அவள். 'அப்படீன்னா நான் முதல் தடவை உள்ளே வந்த போதே பெரிய புஸ்தகமாகப் பார்த்து ஒண்ணை எடுத்திட்டுப் போயிருக்கணும். அப்போ தெரியும்!' அவள் இதழ்களில் மட்டும் சிரிப்பு மலர்வதில்லை, அழகுக் கண்களிலும் தனிரகச் சிரிப்பு ஒளிர்கிறது என்பதை எடுத்துச் சொன்னது அவன் ரசனை உள்ளம்.

'நீ முதல்லே ஒரு தடவை வந்தியா? ஏன்?' என்றான் அவன்.

'உங்ககிட்டே நிறையப் புஸ்தகங்கள் இருக்குதோ?'

'ஊஹூம். அப்படி ஒண்ணும் அதிகமில்லையே!'

'சும்மா சொல்லாதீங்க. மாடியிலே புத்தகங்களைத் தவிர வேறு எதுவும் இருப்பதாகத் தெரியலியே. எங்கே பார்த்தாலும் பீரோ பீரோவாகப் புஸ்தகம் தான்!'

'நீ மாடிக்குப் போனியா?' என்று பரபரப்புடன் விசாரித்தான் அவன்.

'உஹூங். இரண்டு வீட்டு மாடிக்கும் பின்னாலே பொதுவான வராண்டா இருக்குதே. அப்படி வந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தால் தான் தெரியுதே. நீங்கள் மச்சிலே புழங்குவதே யில்லை போலிருக்கு. உங்களை ஒருதடவை கூட அங்கே பார்க்க முடியலியே!'

உலகின் இந்த அறிவிப்பு அவன் எதிர்பாராத விஷயம் தான். ஆகவே திகைத்துப் போனான் ஒரு கணம். அந்தப் பெரிய வீட்டில் தன்னந் தனியனாகக் காலம் தள்ளும் அவனுக்கு மாடியை உபயோகிக்க வேண்டிய அவசியம் அதிகம் ஏற்படுவதில்லை. ஆகையினால் மாடி அறை அறுவடை காலத்திலே நெல் குவித்து வைக்கவும், நெல் இல்லாத போது இதர சாமான்களைப் போடவும்தான் அதிகம் பயன் பட்டது. கீழ்ப் பகுதிகள் வசதிகள் நிறைந்திருந்ததனால், படுப்பதற்காவது மாடியை உபயோகிக்கலாமே என்ற தேவை கூட ஏற்படவில்லை. மாடியிலும் மேஜை நாற்காலி

கள் கட்டில் புத்தக பீரோக்கள் எல்லாம் கிடந்தன. என்று வது ஒருநாள் அவற்றைத் தட்டித் துடைத்து சுத்தமாக வைத்திருப்பதற்காகத் தான் அவன் மச்சுக்குப் போவது வழக்கம்.

உலகு சொன்ன விஷயம் அவனுக்குப் பூரண விழிப்பு உணர்வு புகுத்தியது. 'பெண்களே இப்படித்தான். அடுத்த வீட்டிலே என்ன நடக்கு, என்ன இருக்கு, அங்கே உள்ள வங்க என்ன பேசிக்கிடுறாங்க, யாரார் வாறாங்க போறாங்க—இதே கவலைதான். தங்கள் சொந்தப் பிரச்னைகளை விட அடுத்த வீட்டுக்காரர்களைப் பற்றிக் கவலைப்படுவதிலேயே அதிகச் சிரத்தை செலுத்துகிறார்கள். அதிலேயே காலக் கொலை பண்ணுகிறார்கள்' என்று அவன் உள்ளம் புலம்பியது.

'இந்தப் புள்ளை பார்த்ததென்றால், சகுந்தலையும் கவனித்திருந்திருப்பாள். அவர்கள் மட்டும் பார்க்கலாம் போலிருக்கு. எனக்கு அந்த எண்ணமே வரலியே. நான் அப்படிப் பார்த்திருந்தால் என்ன ஆகியிருக்கும் தெரியுமா? தோட்டத்திலே வேலி கட்டிய மாதிரி மாடி வராந்தா நடுவில் புதிதாகச் சுவர் எழுப்ப ஏற்பாடு செய்திருப்பாள். இப்படியிருக்கு உலகம்' என்று நினைத்தான் அவன்.

உலகு சிரித்தாள். 'என்னம்மா சிரிக்கிறே?' என்றான் அவன்.

'உங்க முன்னாலே சிரிக்கவே படாது போலிருக்கு! கொஞ்சம் சிரித்தால் போதும்; ஏன் சிரித்தே, என்ன சிரிப்பு, எப்படிச் சிரிக்கலாம், கனைப்பு எதுக்கு—இப்படி எரிந்து விழுகிறது!' என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள் அவள்.

'சரிதாம்மா கண்ணு, ரொம்பச் சிரிக்காதே. பல்லு சுளுக்கிக்கிடப் போகுது. அதுவும் போக, உன் எசமானியம்மா காதிலே விழுந்தால் உன்னைக் கோபித்துக் கண்டித்து, தலையில் ரெண்டு குட்டு கொடுத்தாலும் கொடுப்பா. நல்ல பிள்ளையாகப் போய்ச் சேரம்மா!''

'நான் ஏன் வந்தேன்னு கேட்கலியே!'

'உனக்கு பொழுது போகணும். அதுக்காக எட்டிப் பார்த்திருப்பே.'

'உஹூம். அம்மா அனுப்பினுங்க.'

'யாரு அனுப்பினு? அம்மாவா?'

'உம்' என்று ஒய்யாரமாக தலையசைத்தாள் உலகு. அத்துடன் அவள் சிந்திய பார்வை அற்புதமாகயிருந்தது. அதை அவனுல் ரசிக்காமலிருக்க முடியவில்லை.

'யாரு, பெரியம்மாவா?'

'ஊஹூங், பெரியம்மாதான் இல்லையே. வடக்குத்தெருவிலே யார் விட்டுக்கோ போயிருக்காங்க. சின்னம்மா அனுப்பினுங்க. படிக்க ஏதாவது புஸ்தகம் வேணுமாம். வாங்கி வரச் சொன்னுங்க' என்ருள்.

இதையும் அவன் எதிர்பார்க்கவில்லைதான்!

## — 11 —

அடுத்த வீட்டில் குடி புகுந்த அம்மாளைப் பற்றிய ரகுராமனின் அபிப்பிராயம் தினத்திற்கொரு விதமாய் மாறிக்கொண்டிருந்தது. பிறகு அது வேளைக்கு ஒரு வகையாய் மாறவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது! சந்தர்ப்பங்கள் அவ்விதம் அவன் மனதை அலைக்கழித்தன.

சகுந்தலை அழகி, அற்புதமாக அலங்காரம் செய்து கொள்ளும் திறமை பெற்றவள் என்பதை உணர்ந்து மகிழ்ந்த ரகுராமன் அவள் அகம்பாவம் பிடித்தவள், ராங்கிக்காரி, கர்வி என்றெல்லாம் கண்டு பிடித்திருந்தான். அவள் அனுதாபத்திற்குரியவள், வாழ்வில் கஷ்டப்படுகிறவள் என அறிந்திருந்தவன் அவள் 'கல்ச்சர்' இல்லாதவள், நாகரிகம் தெரியாதவள், பழங்காலப் போக்குகளிலே மோகம் கொண்டவள் என்றும் மதித்திருந்தான். செடி நடுவதிலும், நட்ட செடிகளைப் பிடுங்கிப் போடுவதிலும், வசதி கிடைத்தால் திருவிழாக் கும்பலில் வேடிக்கை பார்த்துத் திரிவதிலும்தான் அவளுக்கு அதிக சிரத்தை உண்டு; புத்தகம் படிப்பதிலே 'இன்ட்ரஸ்ட்' இருக்க முடியாது என்றும் அவன் முடிவு செய்திருந்தான்.

ஆகவே அவள் புத்தகம் கேட்டாள் என்று உலகு சொல்லவும் அவனுக்கு திகைப்புத்தான் உண்டாயிற்று. 'புஸ்தகமா! அந்த அம்மா படிக்கக் கூடியதாக ஒரு புஸ்தகமும் என் கிட்டே இல்லையே' என்ருன்.

அவன் சிறிது நேரம் முழித்துக் கொண்டிருந்துவிட்டு, இந்தப் பதிலைச் சொன்னதும் உலகு சிரித்தாள். 'எங்க அம்மாவுக்குப் பிடிக்கிற புஸ்தகம் எது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று குறும்புக் குரலில் கேட்டாள்.

இதற்குள் அவள் அங்கு கிடந்த மேஜை மீது தன் உடம்பின் மேல் பாகத்தை ஒயிலாகச் சாய்த்து, மேஜை மீது ஊன்றிய கைகளில் முகத்தை பதித்து வசிய நிலை சித்தரித்து நின்றாள். அடிக்கடி அவள் குறுகுறு விழிகள் சுழன்று சுழன்று தனிக்காவியம் எழுதி மின்னின. மென் உதடுகளில் மின்னல் சிரிப்பு விளையாடி மிளிர்ந்தது.

'உங்க அம்மாவைச் சொல்லலே நான். அடுத்த வீட்டு எசமானியம்மாளைத்தான் குறிப்பிட்டேன்' என்றான் ரகு.

'அவங்களையேதான் நானும் சொல்கிறேன். அவுங்களுக்கு எந்தப் புத்தகம் பிடிக்கும், எது பிடிக்காது என்று ரொம்பத் தெரிந்துவிட்டது போல் சொல்கிறீர்களேன்னுதான் கேட்டேன்.'

'அதுதான் மோறை இருக்கிற லெட்சணத்தைப் பார்த்தாலே தெரியுதே!' என்று சொல்ல வாயெடுத்தவன் அப்படிச் சொல்லாமல் 'பார்த்தால் தெரியலியாக்கும்' என்று கூறி முடித்தான்.

'அப்படியா! அப்போ அந்த அம்மாவுக்கு என்ன புஸ்தகம் பிடிக்கும்னு நினைக்கிறீங்க?'

'தெரியாதா, இந்த மாதிரி அம்மாளுக எப்படிப்பட்ட புத்தகங்க படிப்பாங்கன்னு. பஞ்சபாண்டவர் வனவாசம், புலந்திரன், அல்லி அரசாணி, பவளக்கொடி மாலை இது மாதிரியான பெரிய எழுத்து விஷயங்கள்தான்!'

துள்ளித் தெறித்தோடும் ஓடை நீர்க் களகளப்பு போல் வெடித்தது உலகின் கலகலச் சிரிப்பொலி. தாங்க முடியாதபடி சிரித்தாள். சிரிப்பே வேதனையாகிவிடக் கூடிய அளவிற்குக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள் அவள். சகிக்க முடியாமற் போகவே அவன் கத்தினான் 'இந்தா, என்ன களைப்பு இது!' என்று.

பொங்கிப் பிரவகித்த சிரிப்பை அடக்கிவிட அவள் மிகவும் சிரமப்பட்டாள். சிரிப்பினால் சிவந்துவிட்ட அவள் முகம் அதை அடக்கும் முயற்சியினால் அதிகம் சிவந்தது. அவள்

முகத்தையே கவனித்திருந்த ரகுராமனுக்கு 'இந்தப் புள்ளையின் முகம் இப்போது ரொம்ப அழகாக இருக்கிறது. காலையில் பூத்துக் குலுங்கி நிற்கும் ரோஜாப் பூ போல' என்ற எண்ணம் ஏற்பட்டது. ஒளி நிறைந்த அவள் கண்கள் குறுகுவதையும் அகல்வதையும், கரு விழிகள் புரளுவதையும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பார்த்து ரசிக்கலாம் என்று நினைத்தான் ரகு.

'நீங்க பெரிய ஞானிதான் போலிருக்கு. அப்போ என்னைப் பார்த்ததுமே எனக்கு என்ன புஸ்தகம் பிடிக்கும்னு உங்களுக்குத் தெரிந்திருக்கணுமே. தெரிஞ்சுதா?' என்று கேட்டாள் அவள்.

'உம்' என அவன் தலையசைக்கவும் 'எங்கே சொல்லுங்க பார்க்கலாம்!' என்றாள் உலகு.

'உனக்குத்தானே! தம்பீ வா; இதையும் படி—ஸீரீஸிலே தங்கச்சி போ, வேலையைப் பார் என்கிற மாதிரி ஏதாவது புத்தகங்கள் இருந்தால் அவற்றை சிபாரிசு செய்யலாம்!'

அவள் பழிப்புக் காட்டுவதுபோல் வாயை வலித்து உதடுகளைச் சுளித்தாள்.

'ஐயோ பாவமே! திடீர்னு இப்படியா வரணும்? கொஞ்சநேரம் வரைக்கும்—போன நிமிட்டு வரை, புள்ளைக்கு நல்லாயிருந்துதே ஐயா. திடீர்னு இப்படியா இழுப்பு வரணும்!' என்று அவன் பரிகாசக் குரலில் பேசவும், உலகு சிரமப்பட்டு அடக்கிய சிரிப்பு மீண்டும் புரண்டடித்து வந்தது.

'ஏம்மா சின்னப்பொண்ணு, சீக்கிரம் போய்ச் சேரம்மா. நீ கனைக்கிறதெல்லாம் அடுத்த வீட்டிலே யிருக்கிறவங்களுக்கு செவிட்டிலே அறைந்த மாதிரி அருமையாகக் காதிலே விழும். நீ அங்கே போனவுடனே உனக்குச் சரியான மண்டகப்படி காத்திருக்கும். போம்மா, போய்ச் சேரு!' என்று வழி அனுப்பி வைத்தான் ரகு.

ஆனால் அவளோ ஒய்யாரமாக ஆடி அசைந்து 'உம். புஸ்தகத்தை எடுத்துக் கொடுத்தால் நானு போகமாட்டேன் என்கிறேன்!' என்று சிணுங்கினாள்.

'அது தான் சொன்னேனே; அந்த அம்மாளுக்கு வேண்டிய புஸ்தகம் எதுவும் இங்கே இல்லை.'

'இருக்கும். அந்த அம்மாதான் பெரிய புஸ்தகமெல்லாம் படிப்பாங்களே.'

'ஏதாவது ராமாயணம், மகாபாரதம், பெரிய புராணமாக இருக்கும்!'

'இல்லே யில்லே. நல்ல கதைப் புஸ்தகங்கள் தான்; சகுந்தலே யம்மா பத்தாவது வரை படிச்சிருக்காங்க, தெரியுமா?' என்று மிடுக்காகக் கேட்டாள் உலகு.

'ஓ அப்படியா!' என்றான் அவன். இந்தப் பெண் விளையாட்டுக்குச் சொல்கிறதா; அல்லது அதுதான் உண்மையா என்ற குழப்பம் படர்ந்தது அவன் உள்ளத்தில்.

'ஆமேய்!' என்று கத்திவிட்டுச் சிரித்தது அக் குறும்புக்காரக் குட்டி.

'சரிதான். நீ மூணுங் கிளாஸ் பாஸ் பண்ணினாய். இல்லையா?'

'நான் அப்படி யொண்ணுமில்லே!'

'அப்ப நீ பாலர் வகுப்போடு படிப்பையே விட்டுவிட்டாயாக்கும்!'

'நான் படிப்பைப் பற்றிச் சொல்லலியே. நான் வந்து பண்ணி, நாய் எதுவும் இல்லே என்றேன்.'

'உனக்கும் மூளை யிருக்கு உலகு!'

'மூளை உங்க வீட்டுத் தனிச் சொத்துன்னு யாரும் பட்டா எழுதிக் கொடுத்திருப்பதாகத் தெரியலியே' என்று கூறிச் சிரித்து, நேராக நிமிர்ந்து நின்றாள் அவள்.

'பரவாயில்லியே. நீ வாயாடி மட்டுமில்லே. புத்திசாலின்னு கூடத் தெரியுதே. பேஷ்!'

'நீங்க பாராட்டுப் பத்திரம் எதுவும் வழங்க வேண்டாம் ஸார். புஸ்தகம் கொடுப்பதா யிருந்தால் கொடுங்க. இல்லேன்னா நான் போறேன்' என்றாள் கண்டிப்புக் குரலில்.

'உலகு, நிசம் தானா? நிசமா அந்த அம்மா பத்தாவது படிச்சாங்களா?'

'ஏன், உங்களிடம் புஸ்தகம் இரவல் வாங்கணுமின்னா ஸர்டிபிகேட் புக்கைக் கொண்டு வந்து காட்டி உறுதி கூற

ணும் போலிருக்கே! லைபிரரிகளிலே கூட இப்படி ஒரு வழக்கம் இருக்கிறதாகத் தெரியலே.'

'சரிதான்' என்ருன் அவன்.

'என்ன சரிதான்? ஊங்?' என்று குரல் இழுத்து அவள் ஸ்டைலாக தலையைச் சாய்த்துக் கொண்டு கோணல் பார்வை பார்த்தது சொக்க வைப்பதாக யிருந்தது.

'உலகு, உன் கண்களுக்கு மை தடவக் கூடாது?'

'தேங்ஸ் ஸார்!'

'ரொம்பச் சரிதான்.'

'என்ன சரிதான்'? என்று மறுபடியும் கேட்டாள் அவள்.

'நீ அஞ்சாம் கிளாசுக்கு மேலேயே படிச்சிருப்பேன்னு நான் நினைத்தது சரிதான்:னேன்.'

'சுத்தத் தப்பு. நான் ஸெகன்ட் பாரம் பாஸ் பண்ணி யிருக்கேன். தேர்டு பாரம் படிக்கணும்னு எனக்காஞ ஆசை தான். ஆனல் அம்மா வேண்டாமின்னுட்டா.'

'ஓ அப்படியா!' என்று நீட்டினன் அவன்.

'ஏ ஆமே!' என்று 'ஒத்து ஊதிவிட்டு'க் கனைப்புச் சிரிப்பு சிதறினள் கன்னி.

'உலகு, நீ அந்த அம்மாவுக்கு என்ன உறவு வேணும்? என்று தன் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருந்த சந்தேகத்தை, அவளிடமே கேட்டுவிட்டான்.

'வேலைக்காரி யின்னு வச்சுக் கிடுங்களேன்' எனச் சொல்லிக் கள்ள நகை புரிந்தாள் அவள்.

'வச்சுக்கிடலாம். ஆனல் சில சமயம் பார்க்கும் போது தான் நம்ப முடியுது. மற்ற வேளைகளிலே—'

'நம்ப முடியலையாக்கும்?'

'உம். அதிலும் இப்ப கொஞ்ச நாட்களா, உன்னைப் பார்த்தால் வேலைக்காரப் பெண் என்று நம்பத் தூண்டும் 'சில நேரங்கள்' கூட வரவில்லை. திடீர்னு உனக்கே ஏதோ உற்சாகம் பிறந்து விட்ட மாதிரித் தோணுது. சீவிச் சிங்காரிச்சுக் குலுக்கிட்டுத் திரிய ஆரம்பிச்சிருக்கிறே. காரணமென்ன உலகு?'

அவளுக்கு வெட்கம் வந்து விட்டது. முகம் சிவக்கத் தலை குனிந்துகொண்டாள்.

'சரி. நீ சொல்லாவிட்டால் போயேன்!' என்ற ரகுராமன் மேஜை டிராயரைத் திறந்து அதனுள்ளிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான். 'நீ படிக்கிறதுக்குத் தனியாக ஒரு புஸ்தகம் வேண்டுமா?' என்றும் கேட்டான்.

அவள் தலையசைத்து மறுத்துவிட்டாள். அவள் யோசித்து முடிவு செய்தவளைப் போல் தீர்க்கமாகப் பேசினாள் பிறகு. அடுத்த வீட்டுப் பெரியம்மாவுக்கு, ஞானசம்பந்தரின் தாய்க்கு—எப்படியோ ஒரு உறவாகும் ஒரு அம்மாளின் மகள் உலகு. அந்த அம்மா பேரில் இரக்கம் கொண்ட இந்தப் பெரியம்மா உலகைத் தன் வீட்டிலேயே வளர்த்துவர இசைந்தாள். பிறகு இந்த வீட்டுப் பெண்ணாகை—வீட்டு வேலைகளைச் செய்து கொண்டும்—தங்கிவிட நேர்ந்தது. இந்த விவரத்தை வளர்த்தாமல் நீட்டாமல் சொன்னாள் உலகு.

'முதல்லே நீ அந்த வீட்டிலே வேலை செய்கிற பெண் என்றுதான் நான் நினைத்தேன். பிறகு அடிக்கடி உன்னைப் பார்க்க நேர்ந்துதா? அப்பல்லாம் நான் நினைத்தது தப்பு போலிருக்கு யின்னு தோணும். அதுதான் கேட்டேன்' என்றான் ரகு.

'ரொம்ப சந்தோஷம்' என்று கூவியபடி குதித்தோடிப் போனாள் அவள்.

'அட எஸ். எஸ். எல். ஸி. படிச்சிருக்காளாமா அவ!' என்று வியப்புக்குரல் எழுப்பியது ரகுராமனின் உள்ளம். 'ஆனால் அவளைப் பார்த்தால் அப்படித் தெரியலியே' என்றும் பேசியது.

'அதெப்படித் தெரிய முடியும்? படித்த பெண்கள் எல்லோருமா ஆடம்பர வெளிச்சமிட்டுக் கொண்டு திரிகிறார்கள்? சகுந்தலையிடம் அடக்க குணம் அதிகமிருக்கிறது' என்று அவன் மனம் அபிப்பிராயப்பட்டது. 'குடும்ப அலுவல்களினாலும் இருக்கலாம். கணவரின் பேய்க் குணத்திற்குப் பயந்தும் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அடங்கி ஒடுங்கி யிருக்கலாம். எப்படியோ அவள் தோற்றம், பண்பாடு, செயல்கள் இவைகளுக்கிடையே வித்தியாசம் ஏற்பட்டு விட்டது' என்று நினைத்தான் அவன்.

## — 12 —

அன்று மாலை

ரகுராமனுக்குச் சோர்வு அதிக மிருந்ததனால் அவன் வழக்கம்போல் வெளியே உலாவக் கிளம்ப மனமின்றி வீட்டிலேயே யிருந்தான். பின்புறத் தோட்டத்திலே ஈஸிச்சேரைக் கொண்டுவந்து போட்டு, படிப்பதாகப் பெயர் பண்ணுவதற்காக எடுத்து வந்த புத்தகத்தை மார்பிலே பரப்பியபடி, வானத்தைப் பார்த்த வண்ணம் சாய்ந்து கிடந்தான்.

தட்டிக்கு அந்தப் பக்கத்தில்—அடுத்த வீட்டின் பின்னால்—திடீரென்று சத்தம் கேட்டது. 'உலகு ஏட்டி உலகு! ஓடியா ஓடியா!'' என்று.

கூவிடும் குரல், கோதை சகுந்தலைக்குச் சொந்தம் என்பது ரகுராமனுக்குத் தெரியாதா என்ன! அவன் அவசரமாக எழுந்தான். எழுந்த வேகத்திலே, அவன் மார்பில் தூங்கிய புத்தகம் 'சடக்' கென்று கீழே விழுந்தது. நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து குரல் வந்த திக்கை நோக்கினான் அவன்.

அங்கு நின்று கத்திய சகுந்தலை முதலில் இந்தப் பக்கம் அவன் இருந்ததை கவனிக்கவேயில்லை. அவள் ஆர்வமாக நட்டிருந்த செடிகளில் ஏற்பட்டிருந்த ஏதோ புது மாறுதலைக் கண்டுவிட்ட உற்சாகத்திலேதான் அவள் அப்படிக் கூச்சலிட்டாள். அதற்காக அவன் அவ்விதமா தடபுடல் படுத்தி அவள் கவனத்தைக் கவர வேண்டும்!

அவன் கவனித்த போது, கிணற்றைச் சுற்றிலும் விடப்பட்டிருந்த மறைப்பிலாப் பகுதியின் வழியாகப் பார்வையிலே படக்கூடிய இடத்திலேதான் நின்றிருந்தாள் அவள். அவளும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க நேர்ந்தது. தன்னை அதிசயமாக நோக்கும் ரகுராமனின் பார்வையிலிருந்து தப்புவதற்காக, அவள் ஓடி மறைந்தாள்.

அவன் வருத்தப்படத் தொடங்கினான். இன்னும் கொஞ்ச நேரம் காட்சியளியாமல் மறைந்து விட்டாளே என்றும், 'நான் ஓசைப் படுத்தியதனால்தான் அவள் திடுக்கிட்டாள்; கவனித்தாள்; ஓடிப்போனாள். மறுபடியும் அவள் வேலைக்கு இடையூறாக நேர்ந்ததே' என்றும் தான்.

அந்தப் பக்கத்திலே 'என்னம்மா? என்ன?' என்று உலகு ஓடிவந்தது, கேட்டது. 'ஒண்ணுமில்லே. செடியைப் பார்க்கக் கூப்பிட்டேன்' என்றாள் சகுந்தலே.

'அதற்குள்ளே பார்த்து முடிச்சாச்சா?' என்று முன் தாவினாள் உலகு.

'ஏட்டி, அங்கே போகாதே. வீட்டுக்குள்ளே வா' என்ற உத்தரவு பிறந்தது. ஆனால் பறந்திடும் சிட்டுப் போல் முன் னேறி விட்ட உலகு எப்படி திரும்ப முடியும்! 'ஓடிவா' என்று உற்சாகமாக அழைத்துவிட்டு, உடனடியாக 'உள்ளே போ' என்று கட்டளையிட்டால் அதன் அர்த்தமென்ன என்று உலகு வின் உள்ளம் கேட்காமலிருக்க முடியுமா? இவ்விதம் திடீர்த் 'துக்ளக்தனம்' செய்த அம்மாளின் முகத்தைப் பார்ப்பதற் காக அவள் திரும்பினாள்.

அப்பொழுது புரண்ட அவள் விழிகளின் வீச்சிலே விழுந் தது ரகுராமனின் உருவம். காரணத்தைப் புரிந்து கொண்ட வள்போல் குறுநகை புரிந்தாள் குமாரி. செடிகளின் பக்கம் தாவாமலும் நின்ற இடத்திலேயே தங்கிவிட்டாள். அது சகுந்தலேக்குப் பிடிக்கவில்லை போலும்!

'ஏ மூதேவி, அங்கேயே நின்னு என்ன முழிச்சுக்கிட் டிருக்கே? இங்கே வா' என்று கத்தினாள். அது காதில் விழுந்ததும், ரகுராமனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. 'அந்தப் புள்ளெ நின்று பார்த்தால் இவளுக்கென்னவாம்!' என்று சிணுங்கியது அவன் உள்ளம்.

உலகு அவன் பக்கம் சொகுசுப் பார்வையை எறிந்து விட்டுத் துள்ளி மறைந்தாள். 'அமைதியாக இருக்கலாம் கொஞ்சநேரம் என்று இந்தப் பக்கம் வந்தால், அன்றைக்குத் தான் மன அமைதியைப் போக்கடிப்பதற்கென்றே வந்தவர் கள் போல் அந்தப் பக்கத்திலிருப்பவர்கள் காரியம் செய் கிறார்கள்' என்று வருந்தினான் அவன்.

ஆனால் ரகுராமன் ரொம்பவும் மகிழ்ந்து போகும்படி யான ஒரு காரியம் நடந்தது. சிறிது நேரம் சென்றிருந்தது. எழுந்து போய்விடலாமா, அங்கேயே இருப்பதா என்ற பிரச் னையை முடிவு கட்ட இயலாமல் அவன் தவித்தபோது, 'இந் தாங்க. இதை எடுத்துக் கொள்ளுங்க' என்று உலகுவின் குரல் தொனித்தது.

அவன் நிமிர்ந்து பார்த்தான். கிணற்றின் அருகே தட்டியை ஒட்டி உலகு நின்ருள். துவளத்தின்மீது தின்பண்டங்கள் நிறைந்த பிளேட் ஒன்றை வைத்திருந்தாள். 'அம்மா கொடுக்கச் சொன்ஞங்க' என்றும் அறிவித்தாள் அவள்.

ரகுராமனுல் நம்பவே முடியவில்லை. வியப்பில் ஆழ்ந்துவிட்டான் அவன். உட்பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு, உலகு சிரித்தபடி சொன்ஞள். 'இதுக்குக் கூட உங்களை விழுந்து விழுந்து உபசரிக்கணும் போலிருக்கு. வேணுமா, வேண்டாமா!'

அவன் பிகுப் பண்ணவில்லை. கிணற்றருகில் சென்று அதை எடுத்துக்கொண்டான்.

'பண்டங்கள்தான் உங்களுக்கு. பிளேட்டைத் திருப்பித் தரணும். மறந்துவிடாதிங்க!' என்றுகூறி நகைத்தாள் உலகு. ரகுராமன் 'வவ் வவ் வவ்வே' என்று வலிப்புக் காட்டவும் அவள் சிரிப்பு அதிகரித்தது.

'ஏட்டி, இங்கே வா' என்று கத்திஞள் சகுந்தலை. உலகும் மறைந்தாள். 'தடிமாடு, உனக்கு எவ்வளவு சொன்ஞலும் உறைக்க மாட்டேன்குதே. இப்படிக் கனைச்சு இளிச்சு விளையாடாதேன்னு எத்தனை தரம் சொல்றது?' என்று சகுந்தலை கண்டித்தது அடக்கமான குரலில் தானென்ருலும், அது அவன் காதை எட்டாமல் ஒடுங்கி விடவில்லை.

## — 13 —

பொதுவாக மனிதரின் மனம் எவ்வேளையில் எப்படியிருக்கும் என்று நிர்ணயிக்க முடியாதுதான். தப்பித் தவறி ஆண்களின் மனேபாவத்தை ஒருவாறு கணிப்பது சாத்தியமாஞல் கூட, பெண்களின் மனதைச் சரியாகப் புரிந்து கொள்ளவே முடியாது என்றுதான் தோன்றுகிறது! இப்படி எண்ணிஞன் ரகுராமன்.

'பாருமேன். அடுத்த வீட்டு சகுந்தலைதான் இருக்கிருளே. அவள் என்னைப் பற்றி என்ன எண்ணுகிருள்; என் மீது அனுதாபம் கொண்டிருக்கிருளா, அன்பு கொள்கிருளா; அல்லது வெறுப்பும் ஆத்திரமும் அடைகிருளா என்று எதையுமே தீர்மானிக்க முடியவில்லை. ஒவ்வொரு சமயத்திலும் அவள் வெவ்வேறு விதமாக நடந்து கொள்வதைக் கவனிக்

கும் போது அவளது உள்ளத்தின் நிலையைப் பற்றி, என்ன எண்ணுவது என்றே எனக்குப் புரியவில்லை' என்று நெஞ்சொடு கிளத்தினன் அந்த ரசிகசிகாமணி.

'நீ ஏனப்பா எதையாவது எண்ண வேண்டும்? அவளைப் பற்றித் தான். சகுந்தலை கல்யாணமானவள். அவள் கணவன் வயது அதிகமானவராக, விசித்திரப் பண்பினராக, அவளைக் கஷ்டப்படுத்துகிறவராக இருந்தால் உனக்கென்ன! அவள் வாழ்க்கை அவ்வளவு தான் என்று நீ ஒதுங்கிப்போய் உன் பாட்டைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தானே? அவள் அடுத்த வீட்டில் வந்து குடியேறாமலிருந்தால் அவளைப் பற்றி நீ ஏதாவது அறிந்து கொண்டிருக்க முடியுமா? இப்பவும் அதுமாதிரி நினைத்துக் கொள்ளேன்' என்று உபதேசித்தது அவன் அந்தராத்மா.

'அது எப்படி முடியும் பிரதர்! அவள் அடுத்த வீட்டுக்காரியாக இருப்பதால் தானே அவளைப் பற்றி எண்ண வேண்டியிருக்கிறது. பார்க்கவேணும் என்ற ஆசை எழுகிறது. பார்த்தால் அவள் ஏன் பேசுவதில்லை என்ற குறுகுறுப்பு பிறக்கிறது! சிங்காரப் பொண்ணு உலகு இருக்கிறதே, அது அநாவசியமாக ரொம்ப பிரீயாகப் பேசிச் சிரித்து விளையாடுகிறது. அதோடு பேசுகிற போதெல்லாம், சகுந்தலை இப்படிப் பேசிச் சிரித்தால் எவ்வளவு இன்பமாக யிருக்கும் என்ற ஆசை உண்டாகிறது; உண்டாகத் தான் செய்கிறது அப்பனே! அதை அடக்க முடியலியே!' என்று புலம்பியது மனக்குறளி.

ரகுராமன் முகத்திலே சிரிப்பு தோன்றி மறைந்தது. "எனது நினைவுகளை மற்றவர்கள் அறிந்தால் என்னைக் காலிப் பயல் என்று தான் சொல்லுவார்கள்' என்று சுயவிமர்சனம் செய்து கொண்டான் அவன்.

ரகுராமன் அன்று முதன் முதலாக முடித்த காரியம் மாடி அறையைச் சரிப்படுத்தி சுத்தமாக வைத்தது தான். சுவர்களில் அழகான படங்கள் சிலவற்றை மாட்டி வைத்தான். ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறவர்கள் —வேறு யார்! அடுத்த வீட்டு அழகி தான்!—அறை கிடக்கிற அலங்கோலத்தைக் கண்டு தன்னைப் பற்றி மோசமான அபிப்பிராயம் கொண்டுவிடக் கூடாதே என்ற நல்லெண்ணத்துடன் தான் அவன் அவ்விதம் செய்தான். அதாவது தனது செயலுக்கு அதுதான் காரணம் என்று தன் மனசைத் தானே ஏய்த்துக் கொள்ள விரும்பினன் அவன்.

பிறகு மாடிக் கதவைத் திறந்துகொண்டு வராந்தாவிற்குப் போய் அதை அடுத்த மொட்டை மாடியில் நின்று சூழ்நிலை ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற ஆசை பிறந்தது அவன் உள்ளத்தில். அடுத்த வீட்டில் உள்ளவர்கள் கீழ்ப்பகுதியில் தான் இருக்கிறார்கள் என்று நிச்சயமாகத் தெரிந்ததனால் அவன் தனது எண்ணத்தைச் செயலாக்கத் தயங்கவில்லை. சூழ்நிலை ஆராய்ச்சி என்கிற பெயரிலே அவன் முதன்மையாகக் கவனித்தது அடுத்த வீட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தால் கண்ணில் படக்கூடிய காட்சி என்ன என்பது தான்.

'சரிதான். நம்ம வீட்டு மாடி அறைக்கு அண்ணனாகத் தானிருக்கு! சாமான்களெல்லாம் கண்ட கண்டபடி சிதறி, போட்டது போட்டவாக்கிலே தான் கிடக்கு. அதனாலே இவள் அந்த அறையிருந்த லட்சணத்தைப் பார்த்து மோசமாக எண்ணியிருக்க மாட்டாள்' என்று சந்தோஷமடைந்தான் அவன்.

ரகுராமன் மற்ற இடங்களைக் கவனித்த போது, கட்டிடம் இருந்த நிலைமை அவனுக்கு வருத்தமே தந்தது. இரண்டு வீடுகளுக்கும் பொதுவாகக் கிடந்த மொட்டை மாடி விஸ்தாரமானது தான். ஆனால் பழைய காலத்துக் கட்டிடம். அடிக்கடி பழுது பார்க்கப் படாமல் கிடந்ததால் சில இடங்களில் சிதைந்திருந்தது. மாடி அறைகளை அடுத்து, திறந்த வெளிப்பகுதி—அதன் முடிவில் மரத் தூண்கள் தாங்கி நின்ற ஓட்டுப் பிராந்தியம், நீளமான கூடம். அதில் ஓடுகள் முக்கால்வாசி கீழே விழுந்துவிட்டன. மேலே தங்கி நின்றவை கூட திடீர் திடீரென்று அதிர்ச்சி யுற்றவை போல் ஒன்று ஒன்றாக சரிந்து விழுந்து உடைவதும் சகஜமாக இருந்தது.

அந்த இடத்தின் அருகிலே சென்று பார்த்த ரகுராமன் 'ரொம்ப ஆபத்தான இடம் தான். மேலே யிருந்து ஓடும் கட்டியும் நொறுங்கி விழுவதுடன், மாடித் தரையும் பெயர்ந்திருக்கு. கொஞ்சம் அஜாக்கிரதையாக நின்று அழுத்தமாக மிதித்தால் கீழேயே போய்விட நேரும்' என்று நினைத்தான்.

'இப்படியே விட்டு வைத்திருப்பது ஆபத்து. ரிப்பேர் பண்ணணும். அல்லது இடித்துத் தள்ளணும். இப்ப ரிப்பேர் பண்ண எங்கே பணமிருக்கு? இடித்துத் தள்ள வேண்டியதுதான்' என்ற எண்ணம் எழுந்தது அவனுக்கு. 'ஒரு பக்கத்திலே கை வைத்தால் அடுத்த பகுதிகளைப் பாதிக்

காமல் இருப்பதற்காகக் கொஞ்சம் வேலைகள் செய்ய வேண்டியது அவசியமாகும். அதற்கும் பணம் இழுக்கத்தானே செய்யும்! மெதுவாகத்தான் கவனிக்கணும். யாரும் தான் இந்தப் பக்கம் நடமாடுகிறதில்லையே. அப்புறம் யார் தலைக்கு ஆபத்து வந்து விடப்போகுது? கண் இல்லாதவங்களா குடியிருக்கிறாங்க இங்கே? முழிச்சு முழிச்சுப் பார்த்து நடக்கிறவங்க தானே இருக்கிறாங்க' என்ற நினைப்பு அவனுக்கே சிரிப்பு விளைத்தது.

தானாகவே சிரித்துக்கொண்டு திரும்பிய ரகுராமனின் கண்கள் அடுத்த வீட்டு மாடி ஜன்னல் பக்கம் ஓடின. அங்கே உள்ளே யாரோ வந்து எட்டிப் பார்த்துவிட்டு வேகமாகத் திரும்பிச் செல்வதை அறிய முடிந்தது. 'அம்மா சகுந்தலையாகத்தானிருக்கும். உலகு வந்திருந்தால் இப்படி ஓடியிராதே. உங்க மாளிகை இருக்கிற அழகைப் பார்த்ததும் உங்களுக்கே சிரிப்புத் தாங்கலியாக்கும் என்கிற மாதிரி வாய் கொடுத்து வம்பளக்கத் தொடங்கிவிடுமே!' என்று அவன் உள்ளம் பேசியது.

அன்று சாயங்காலம் ரகுராமன் வெளியே போய்விட்டுத் திரும்பிய போது அவன் எதிர்பாராத சனியன் இரு கரம் நீட்டி வரவேற்றது! 'உம்மைத்தானய்யா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். வந்ததுமே எட்டிப் பார்த்தேன். வீடு பூட்டிக் கிடந்தது. சரிதான், வரும்போது வழியிலேயே பிடித்து விடலாம்னு நினைத்தேன்' என்றார் அடுத்த வீட்டு ஞானசம்பந்தர்.

'அதனாலே வழி மறிச்சாஞ் சாமியாகி விட்டீர்களாக்கும்?' என்று கூறிச் சிரித்தான் அவன். அவரும் பலமாகக் கனைத்தார், சிரிப்பு என்ற பெயரிலே.

'அது சரி, மிஸ்டர் ராஜாராமன்!' என்று அவர் தொடங்கியதும், 'பழையபடி ஆரம்பித்து விட்டீர்களே ஸார்!' என்றான் அவன். திடீரென்று அவன் அப்படிச் சொன்னதும் அவருக்குப் புரியவில்லை. விழித்தார்.

'என் பெயர் ரகுராமன்....'

'ஓ அதுவா! ஆமாமா. உம்மை நான் ராமன் என்றே கூப்பிடப் போவதாகச் சொன்னேனல்லவா! எஸ், எஸ்! மறதி பிரதர் மறதி. அதைச் செருப்பாலடிக்கணும்....

'அதை அப்புறம் செய்யலாம், இப்ப நீங்கள் ஏன் எனக்காகக் காத்து நின்றீர்கள் என்பதைச் சொல்லுங்க' என்றான் ரகு.

'வேறு எதுக்கு! என் எழுத்துக்களைப் படித்தீரா, எப்படியிருக்கு; எங்கே அனுப்பலாம் என்று யோசித்தீரா என்றெல்லாம் கேட்கத்தான்!'

'அவைகளை அனுப்ப வேண்டிய அருமையான இடம் வெந்நி அடுப்புத்தான்' என்று சொல்லத் துடித்தது அவன் மனம். ஆனால் மற்றவர்களை வீணுகப் பகைத்துக் கொள்வானேன் என்ற நல்லெண்ணமுடைய ரகுராமன் அதைச் சொல்லவில்லை. 'படித்தேன், ஸார். நீங்கள் நிறையப் படிச்சு பிரமாதமான ஆராய்ச்சிகள் எல்லாம் செய்கிறீர்கள். சிறு விஷயங்களைப் பற்றிக்கூட மிக ஆழமாக ஆராய்ந்து...'

'மிஸ்டர் ராமன், உங்களுக்குத் தெரியுது என்னுடைய மதிப்பு. உலகத்துக்குத் தெரியலேயே. ஊம்!' என்று வருத்தப்பட்டார் அவர். அவனுக்கு அனுதாப உணர்ச்சி எழவே. 'என்ன செய்கிறது! இதை எந்தக் கம்பெனிக்கு அனுப்பி வைக்கிறது என்றே புரியலியே, ஸார். எனக்குத் தெரிந்த பப்ளிஷர் யாரும் கிடையாது. பெரிய மனிதர் யாரையாவது பிடித்து...' என்று இழுத்தான்.

அவர் சீறிச் சிரித்தார். 'பெரிய மனிதனும்! எவனய்யா பெரிய மனிதன்? குழையடிக்கிறவங்க பத்துப் பதினஞ்சு பேரு கூடிவிட்டால் எவனுமே சாமியாட ஆரம்பித்திடுறான். நீரும் நானும் பெரிய மனிதராக முடியாதா என்ன? நமக்கும் அஞ்சாறு லோட்டாக்கள் வேணும். அவ்வளவுதான்! அதுதான் நான் சொல்கிறேன், எனக்கு நீங்கள் பாஸ்வெல்லாகப் பணிபுரியுங்க. உங்களுக்கு நான் பாஸ்வெல்லாக மாறிவிடுகிறேன். சந்தர்ப்பம் கிட்டும் போதெல்லாம் என்னைப் பற்றி நீங்கள் நெடுகச் சொல்லுங்க. அதேமாதிரி நானும் உமக்கு உதவி புரிகிறேன்' என்றார்.

ரகுராமனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அதை அடக்கிக்கொண்டு 'அதற்கென்ன, செய்தால் போச்சு!' என்றான்.

'அப்ப நாளைக்கே அனுப்பிவிடுங்கள். ஸ்டாம்புச் செலவுக்கு நான் காசு தாறேன். வாங்க, வீட்டுக்குள்ளே வாங்க, என்று அழைத்தார்.

'பரவால்லே ஸார். அனுப்பிவிட்டு, என்ன செலவாகிறதோ அதை நாளைக்கே வாங்கிக்கொள்கிறேன்' என்றான். அவரும் தலையசைத்தார்.

ரகுராமன் ரொம்ப நாட்களாகவே கேட்க வேண்டுமென்று எண்ணியதைக் கேட்டான். 'உங்களிடம் ஒரு விஷயம் கேட்கணும்னு நினைப்பு' என்று ஆரம்பித்ததும் அவர் குறுக்கிட்டார்; 'நினைப்பு எழுந்தவுடனேயே கேட்டுவிடணும். அதுதான் நல்லது. கேட்காமல் மனசிலே வச்சுப் புழுங்கிக்கொண்டிருப்பது தவறு. மனக் கோளாறுகளுக்கு அதுதான் அடிப்படை. ஆகவே நினைப்பைச் செயலாக்காமல் அமுக்கி வைப்பதே வியாதிதான். தெரியுதா? சரி, விஷயத்தைச் சொல்லும்.'

'நீங்க இந்த வீட்டிற்குக் குடி வந்த நாளிலேயிருந்து அடிக்கடி தம்பீ தம்பீ என்ற அலறல் கிளம்பும். ராத்திரி தூங்கும்பொழுதுதான்- அப்படி உங்க வீட்டிலே கிளம்புகிற கதறல் என் தூக்கத்தைக் கெடுத்து விடும். யாருடா இப்படிப் பேய் மாதிரி அலறுகிறுங்க என்ற சந்தேகம் எனக்கு. பல தடவை கவனித்ததிலே, கத்துறது பிசாசு இல்லே, மனுஷாள்தான்னு நல்லாப் புரிஞ்சுது. மேலும் ஆராய்ச்சி பண்ணினதிலே யிருந்து ஒரு முடிவுக்கு வர நேர்ந்தது. நீங்க இங்கே தங்கியிருக்கிற நாட்களிலேதான் அந்தக் கூப்பாடு எழுது.'

'ஏனய்யா சுற்றி வளைத்து மூக்கைத் தொட முயல்கிறீர்? நேரடியாகத் தொட்டுவிடலாமே. இப்படி அர்த்த ராத்திரியிலே கூச்சலிடுவது நீர்தானு என்று என்னைக் கேட்க நினைத்தீர். அவ்வளவுதானே?' என்றார் ஞானசம்பந்தம்.

பிறகு அவராகவே கேட்டார்: 'அடுத்த வீட்டுக்குக் கூடக் கேட்கும்படி அவ்வளவு பலமாகவா கத்துறேன்?'

'அடுத்த வீடென்ன, எட்டு வீட்டுக்குக் கேட்கும், நீங்க தம்பீ, தம்பீன்னு கத்துறது. திடீர்னு முழிக்கிற குழந்தைகள் நிச்சயம் பயந்து அலறுமலிருக்க முடியாது. இதுவரை எத்தனை பேர் பயந்து போனுங்களோ! ஏன் அப்படிக் கத்துகிறீர்கள்? ஏதாவது வியாதியின் வேதனை தாங்காமலா? அல்லது அப்படிக் கத்துவதே ஒரு வியாதி போலிருக்கு!'

தனது பாஷையிலேயே அவன் தனக்குத் திருப்பித் தருவதைப் பற்றி அவர் கவலை கொள்ளவில்லை. அவரது கவலை வேறு திக்கிலே பாய்ந்தது. 'இவ்வளவு பலமாகவா கத்து

கிறேன்! சே, சுத்த மோசம்தான். தெருப் பூராவும் கேட்கும் படியாகவா—செச்சே!' என்று முனங்கினுர் அவர்.

'அன்றைக்குப் பாருங்க—அதுதான் இந்தத் தடவை நீங்கள் ஊருக்குப் போறதுக்கு முந்திய ராத்திரியிலே. எனக்கு நல்ல தூக்கம். திடீர்னு தம்பீ; தம்பீ என்கிற கூச்சல் என்னை எழுப்பிவிட்டது. நானே பயந்து போனேன். அவ்வளவு பயங்கரமாக யிருந்தது. உங்க கழுத்தை அமுக்கி யாரோ கொலை செய்ருங்க போலிருக்கு என்ற பயம் எனக்கு.'

ஞானசம்பந்தம் பெருத்த யோசனையில் ஆழ்ந்து விட்டார். 'சே, மோசம்தான். இவ்வளவு மோசமாக இருக்கும்னு எனக்கு இதுவரை தோன்றவே யில்லை. வீட்டிலே உள்ளவங்க சொன்னதுண்டு.அப்பல்லாம் சும்மா கேலியாகச் சொல்ருங்கன்னு நான் நெனச்சேன். நீங்க சொல்வதைக் கேட்கவும் எனக்கே வெட்கமாக யிருக்குது' என்ருர் அவர். நெஞ்சார வருந்திப் பேசுகிற பேச்சு அது என்பதை அவரது குரலும் முகபாவமும் காட்டின.

'தூக்கத்திலே தன்னை அறியாமலே பிதற்றுவதற்கு யார் என்ன செய்ய முடியும்? இதுக்கு வீணுக வருத்தப்படுவானேன்?'

அவர் பெருமூச்செறிந்தார். 'மிஸ்டர் ரகுராமன், மனிதன் எவ்வளவு பலவீனமானவன் என்பது ஒவ்வொரு மனிதனையும் கவனிக்கும்போது நன்ருகத் தெரிகிறது. ஒவ்வொரு மனிதனையும் கவனிப்பானேன்! எனது ஒவ்வொரு செயலையும், கவனித்தாலே போதும். நன்கு புரியும்.'

ரகுராமன் உள்ளம் முனங்கியது, 'இதுவும் மனித குணம்தான். தனது குறைபாட்டைப் பற்றி, கோளாறுகளைப் பற்றிப் பேச்சு வந்தால் மனிதவர்க்கத்தைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் பொதுப்படையாகப் பேசி மழுப்புவது சிலரது மேதாவித்தனம்!'

'உணர்ச்சிகள் மனிதனை அடிமைப் படுத்தி ஆட்டிவைக்கின்றன. விழிப்பு நிலையிலே மனிதன் உணர்ச்சிகளை அடக்கி, ஒடுக்கி வைத்து வெற்றி பெற்று விட்டதாக நம்புவது சாத்தியமாகலாம். ஆனுல் அவனது தூக்க வேளையில். அமுக்கப்பட்டுள்ள உணர்ச்சிகள் வெறி வேகத்தோடு மேலெழுந்து பேயாட்டம் போடுகின்றன. அதாவது அவனைப் பழிவாங்கிவிடுகின்றன.'

ஞானசம்பந்தம் இத்தகைய பிரசங்கத்தில் ஈடுபட்டதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள இயலாமல் வெறும் தலையாட்டி பொம்மையாக நின்றான் ரகு. எப்படிச் சுற்றி வளைத்துப் பேசினாலும், 'ஆகையினாலே' என்று முடிவுரை கூற ஒரு கட்டத்தை அடைந்துதானே தீரவேண்டும் என்ற தைரியம் அவனுக்கு.

'இவ்விதம் தன்னுடைய, பிறருடைய பலவீனங்களின் தன்மை புலப்படும் பொழுதுதான் புத்தரைப் போன்ற மகாஞானிகளின் மகத் நமக்குப் புரிகிறது. சாதாரண சமயத்திலே நாம் என்ன சொல்கிறோம்? இல்லை, என்னை மட்டுமே எடுத்துக் கொள்ளலாமே. நான் அடிக்கடி சொல்வது தான்—புத்தர் மனைவியையும் பிள்ளையையும் விட்டுவிட்டு ஓடிப்போனது எப்படி பற்றற்ற தன்மையை, உணர்ச்சிகளை அவர் வென்று விட்டதைக் காட்டுமாம்? தனது உணர்வுகளிடம் நம்பிக்கை இல்லாமல் பயந்துபோய் நடுராத்திரியிலே திருடன் மாதிரி ஓடினார்! குடும்பத்தில் வாழ்ந்து கொண்டே உணர்ச்சிகளை அடக்கி ஒடுக்கி வெற்றி பெறுவதுதான் சிறந்தது. இவ்விதம் பேசும் எனக்கு அந்த சக்தி இருப்பதாகவே நம்பிக்கை. ஆனால் எனக்குப் பெரும் தோல்வி என்பது நன்றாக விளங்கி விட்டது!'

'எனக்கு எதுவும் விளங்கவில்லை; ஆரம்பக் குழப்பமே இப்பொழுதும் நீடிக்கிறது என்பதும் நன்றாக விளங்குகிறது' என்றான் ரகுராமன்.

அவன் தலையைச் சாய்த்துக் கொண்டு, உதடுகளைப் பிதுக்கி கை விரல்களை விரித்துக்காட்டி அபிநயித்தபடியே அதைச் சொன்ன தோரணை பெரிய சிந்தனைகளில் சஞ்சரித்த பெரியவருக்குக் கூட சிரிப்பு உண்டாக்கி விட்டது. "நீர் ரொம்ப நல்ல ஆளுதானய்யா!' என்று கூறிக் கனைத்தார் அவர்.

சிரிப்பு அடங்கியதும் ஞானசம்பந்தம் சொன்னார்: "நான் என்ன சொல்கிறேன் என்றால், என்னைப் பற்றி நான் பிரமாதமாக எண்ணிக் கொண்டிருந்தது தப்பு என்பது நன்றாகப் புரிகிறது. உணர்ச்சிகளை வெளியே காட்டப்படாது; உணர்ச்சித் துடிப்புகளுக்கு முக்கியத்துவமே கொடுக்கக் கூடாது; யார் மீதும் அதிகப் பற்றுதல் வைப்பது தவறு என்பது என் அபிப்பிராயம். எனக்கு என் பையன் மீது பாசம் அதிகம் விழுந்துவிடக் கூடாது என்பதற்காகவே அவனை வெளியூரிலே தங்கிப் படிக்கும்படி விட்டிருக்கிறேன்.

அதனாலேயே லீவு நாட்களில் அவன் இங்கு வந்தால்கூட, சீக்கிரமாக அனுப்பி விடுவது வழக்கம். அவனைப்பற்றி நான் அதிகம் கவலைப்படுவதில்லை. ஆகவே பந்தபாசம் கடந்த நிலையிலே வாழ்வதாக நம்பிக்கை எனக்கு. ஆனால் என் உள்ளத்திலே அவன் நினைவே வாழ்கிறது என்றல்லவா ஆகிறது! அவனை எண்ணி ஏங்கும் உள்ளம் தம்பீ, தம்பீ என்று கதறத் தூண்டுகிறதென்றால் பார்த்துக் கொள்ளுமேன்!'

ரகுராமன் தலையை ஆட்டினான். ஆனால் அவர் கூற்றை அவன் அப்படியே அங்கீகரிக்கத் தயாராக யில்லை. 'இந்தப் பெரியார் அபிநவ புத்தர் ஆவதற்காகவா பையனை வீட்டை விட்டுத் துரத்தியிருக்கிறார்! நவீன சாரங்கதரா கதை வீட்டிலே நடந்துவிடக் கூடாதே என்ற பயம் அவருக்கு. சகுந்தலை திஷ்யரக்ஷைதயாக—அவ பேரு என்னப்பா? திஷ்ய ரக்ஷைதானா? அதுதான் 'உனைக் கண்டு மயங்காத' பாடும் படி மகனைத் தூண்டினாளே ஒரு சின்னம்மா, சினிமாவிலே கூடக் காட்டினாங்களே அவதான்! உம்; இந்த எழவு பேரெல் லாம் யாருக்கு ஞாபகமிருக்குது? சரி, அப்படி இவ மாறினால் மகன் குணாளனாக இருப்பான் என்பது என்ன நிச்சயம் என்ற சந்தேகம் உமக்கு. இளைய மனைவி மீது நம்பிக்கை யில்லை; வயது வந்த மகன்மீது நம்பிக்கை யில்லை; உம்மிடமே உமக்கு நம்பிக்கை யில்லை. அதனால்தான் இப்படியெல் லாம் நடந்து கொள்கிறீர். குற்றமுள்ள நெஞ்சின் குறு குறுப்புதான் கோரக் கூவலாக ஒலிக்கிறது என்று எனக் குத் தோன்றுகிறது' என்று அவன் உள்ளம் பேசியது. அதற்கு ஒலிவடிவு கொடுக்கும் துணிவு அவனுக்குக் கிடை யாதுதான்.

'ஐயா, நீர் பந்தபாசம் கடந்த பரம ஞானியாக வேண்டும் என்று நினைத்துத் தலைகீழாக நின்றாலும் அப்படி ஆக முடியாது உம்மாலே. நீர் கோபத்தை வெல்லவில்லை. சந்தேகத்தை வளர்க்கிறீர். வெறித்தனமாக அடிக்கிறீர். புகழ்பெற ஆசைப்படுகிறீர். நீராவது புத்தரின் பேரன் மாதிரியாகவாவது வருவதாவது! ஹெஹ்ஹே!' என அவர் மூஞ்சிக்கு நேரே கெக்கலி கொட்டவேண்டும் என்ற ஆசை ரகுராமனுக்கு ஏற்பட்டது. இருந்தாலும் 'ப்சா! போனால் போகிறார்!' என்று தாராளத்தனம் காட்டிப் பேசாமல் தலையாட்டினான். உள்ளத்தின் குரலை உள்ளபடி சொல்லத் தெம்பில்லாத பண்புக்குத் 'தாராளத்தன்மை' என்கிற அங்கி போர்த்து விட்டான் அவன். அவ்வளவுதான்!

'சே, இது கூடாதே!' என்று தம் தாடையை விரல்களால் தடவிக் கொண்டார் பெரியவர். அவர் ரகுவின் பண்பைப் பற்றி எதுவும் உணர்ந்து பேசிவிடவில்லை. தன் போக்கையே கண்டித்துக் கொண்டார்.

'தன் சக்தியை—விழிப்பு உணர்வை—மீறி நடைபெறுவதற்கு என்ன செய்ய முடியும்?' என்று கேட்டான் ரகு.

'உணர்ச்சிகளிலே தன்னை மீறியவை, தன்னால் கட்டுப்படுத்த முடியாதவை என்று உண்டா என்ன! எண்ணியது எண்ணியபடி எய்துமய்யா, மனத்திண்மை வேண்டும். எனக்கு அது ரொம்ப ஜாஸ்தி உண்டு.'

'அப்படி இருந்தால் ஞாபக மறதியைப் போக்கடித்திருக்கலாமே! கேவலம் ஒரு பெயரைக் கூட ஒரே மாதிரியாகச் சரியாகச் சொல்ல முடியவில்லை...' என்றான் ரகு.

'மிஸ்டர், அப்படி மோசமா நினைச்சுப் போடாதேயும். இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்துப் பாரும், தம்பீ, தம்பீ என்று என்னை அறியாமலே நான் அலறுகிறேனா, பாருமே. எல்லாம் வில் பவர்லே தான் இருக்கு பிரதர்!' என்று அழுத்தமாக அறிவித்தார் அவர்.

'அப்படியா! ரொம்ப சந்தோஷம்' என்றான் அவன். 'நேரமாச்சு. நான் வாறேன், ஸார்' என்று நகர்ந்தான். 'அது சரி. மேனுஸ்கிரிப்டை பப்ளிஷருக்கு அனுப்பிவைக்க மறந்து விடாதிங்க. தயவுசெய்து நாளைக்கே தபாலில் சேர்த்து விடுங்கள்' என்ற ஞானசம்பந்தரின் வேண்டுகோள் அவனைப் பின் தொடர்ந்தது, வழியனுப்ப வரும் துணை போல.

## — 14 —

மறுநாள் காலையில் ரகுராமன் வீட்டினுள் ஏதோ அலுவலில் ஈடுபட்டிருந்தபோது, எதிர்பாராது படையெடுத்தார் ஞானசம்பந்தம். 'மிஸ்டர்! மிஸ்டர் ராமன்!' என்று கத்தியபடி அவர் நுழையவும் அவன் பயந்துபோனான் என்னவோ ஏதோவென்று!

அவன் திடுக்கிட்டுத் திரும்பியதைக் கவனித்த பெரியவர் சிரித்தார். 'பயந்து விட்டீரோ, ஹ்ஹ!' என்றார்.

'இதிலே என்ன பயம்! திடீர்னு சத்தம் கேட்கவும் தூக்கி வாரிப் போட்டுவிட்டது' என்றான் ரகு.

'தப்பு. பார்த்தீரா, நீர்கூட இந்தத் தவறைத் திரும்பத் திரும்பச் செய்கிறீர்' என்று அவர் குற்றம் சாட்டவும், அவன் குழப்பமடைந்தான். அக் குழப்பத்தைத் தெளிவு படுத்துவதாக யில்லை அடுத்து அவர் கேட்ட கேள்வி.

'உம்ம நிறை என்ன ஐயா?' என்று கேட்டார் அவர். வியப்பினால் விரிந்த கண்கள் அவர் முகத்தில் விளையாட, மௌனமாக நின்றான் அவன். திடீரென்று இப்படிக் கேட்பானேன் என்ற திகைப்பு அவனுக்கு.

'அதுதான் மிஸ்டர் உம்ம எடை, உமது வெயிட். நீர் எவ்வளவு கனமிருக்கிறீர் என்பது! சரி போகுது. நீர் நூறு பவுண்டு கனமிருக்கலாம். நூறு பவுண்டு பாரத்தைத் தூக்கி வாரிப்போடக் கூடிய எதையும் இப்போ இங்கே காணோம். அதுவும்போக, குனிந்து நின்ற ஆள் நிமிர்ந்து திரும்பிப் பார்த்தீர். அவ்வளவுதானே தவிர, தூக்கி வாரிப் போடப் பட்ட ஆசாமியாக நீர் காட்சி தரவில்லை. மேலும், கேவலம் ஒலி எப்படி ஒரு மனிதனைத் தூக்கி வாரிப்போடும்? சுத்தக் கதைப்பு. வெறும் உயர்வு நவிற்சி. யோசியாமலே பேசும் குணம். இது நம்மளவங்க கிட்டே ரொம்ப அதிகமிருக்கு. இதைப்பற்றி உம்மிடமே நான் முன்னால் பேசியிருக்கிறேன். ஆனால் நீரோ மூளை என்று ஒன்று இருக்கிறதே, அதை உபயோகிக்கும் விஷயத்திலேகூடச் சோம்பேறித்தனம் வளர்க்கிறீர்; வார்த்தைகளை நிறுத்துப் பேசணும் நண்பரே!' என்ற பெரிய மனிதத்தனம் பண்ணினார் அவர்.

இம்முறை ரகுராமன் வாய்மூடி மௌனியாக நிற்கவில்லை. 'நீங்களும் அநாவசியமாகப் பேசி, மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள். நீங்கள் பேச்சைக் குறைப்பது நல்லது' என்றான்.

ஞானசம்பந்தம் பலமாகச் சிரித்தார். அவன் விமர்சனத்தைப் பற்றி எதுவும் கூறாமல். அவர் அறிவித்தார், 'இப்போது உங்களுக்குத் தொல்லை கொடுக்கத்தான் வந்திருக்கிறேன்' என்று,

'என்ன, படித்துப் பார்ப்பதற்கென்று இன்னும் நாலஞ்சு எழுத்துப் பிரதிகள்...'

'இல்லையில்லை. அந்த பயம் உமக்கு வேண்டாம். மிஸ்டர் ரகுராமன், இன்றைக்கு நீர் நமது அதிதி. மத்தியானச் சாப்பாட்டுக்கு ஹோட்டலுக்குப் போகவேண்டாம்!' என்றார் அவர். இவ்விதமான கட்டளை பிறக்கும் என அவன் எதிர்பார்க்கவே யில்லை.

அடுத்த வீட்டுக்காரர்களின் அறிமுகம் ஏற்பட்ட நாளிலிருந்து எதிர்பாராத நிகழ்ச்சிகள் குறுக்கிட்டு, அவனுக்குத் திகைப்பு உணர்ச்சியை அதிகம் கொடுத்து வந்தன. எனினும் அவை எல்லாவற்றையும் விட எதிர்பாராததும், மிகுந்த திகைப்பைத் தருவதும் இதுதான் என்று நினைத்தான் அவன். அவ்வுணர்ச்சியில் லயித்து விட்டதால் அவருக்கு எவ்விதப் பதிலும் சொல்லவில்லை என்ற பிரக்ஞையே அவனுக்கில்லை.

'என்னய்யா, எங்க வீட்டிலே சாப்பிடுவதற்கு உமக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லையே? பிறர் வீட்டில் சாப்பிடக் கூடாது என்ற கொள்கை எதுவும் உமக்குக் கிடையாதே?' என்று அவர் கேட்ட பிறகுதான் அவன் விழிப்புற்றான். "அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஹிஹி!, வீணுக என்னத்துக் கென்றுதான்...' என்று இழுத்தான்.

'எது வீண்? சாப்பிடுவது வீணு? உமக்குச் சோறு போடுவது வீணு? இன்றைக்கு எங்க வீட்டிலே ஒரு விசேஷம். நீர் பக்கத்து வீட்டில் இருக்கிறீரே! இன்னைக்கு ஒரு நாளாவது நல்ல சாப்பாடு சாப்பிடட்டுமே என்று கூப்பிட்டால் நீர் என்னவோ, ஹஹ!, என்று பேச்சிலே தொடங்கிக் கனைப்பிலே முடித்தார் ஞானசம்பந்தர். அப்புறம் அவன் எதற்காக ஆட்சேபிக்கப் போகிறான்!

'இதைச் சொல்லத்தான் வந்தேன். நீங்க வழக்கம் போல் மணியானதும் ஹோட்டலுக்குப் போய்விடக்கூடாதே என்று முன்னலேயே எச்சரிக்க வந்தேன். எல்லாம் ரெடியானதும் கூப்பிடுகிறேன். கொஞ்சம் நேரமானலும் கவலையோ, எரிச்சலோ, கோபமோ கொள்ளப்படாது. முன்னலேயே சொல்லிப் போட்டேன்' என்று கூறிவிட்டுச் சென்ருர் அவர்.

அவர் அப்படிச் சொல்லாமலிருந்தால் கூட, ரகுராமனுக்கு கவலை, எரிச்சல், கோபம், ஆத்திரம் போன்ற விரும்பத் தகாத உணர்வுகள் எதுவும் பொங்கிவரப் போவதில்லை. அவன் உள்ளத்தில் முழுக்க முழுக்க மகிழ்ச்சி பெருகி

நிறைந்துவிட்டது. முதலில் ஏற்பட்ட திகைப்பு ஒடுங்கு வதற்குள்ளாகவே பேருவகை தலைதூக்கியது. இப்படி ஒரு சந்தர்ப்பம் சீக்கிரமே வரும் என எண்ணியவனல்ல அவன். முன் தினம் அடுத்த வீட்டுச் சகுந்தலையின் தயவால் தின்பண்டம் கிடைத்ததும், இனி வரவிருக்கும் இன்சுவை விருந்துகளின் சிறு ஆரம்பவிழா அது என்று அவன் மனம் எண்ணியது. அதைத் தொடர்ந்து மறுநாளே அவள் வீட்டில் விருந்துண்ணும் பாக்கியம் கிட்டியுள்ளதில் திருப்தி ஏற்படுவது இயல்புதானே!

ஞானசம்பந்தர் மறுபடியும் தலை நீட்டிக் கூப்பிடுகிற வரை, ரகுராமன் அடுத்த வீட்டு விருந்தைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். 'முதன் முதலில் உணவுப் பொருளை உவந்தளித்த பெருமை அந்த அழகிக்கே சேர்கிறது; அதற்கப்புறம்தானே வீட்டய்யா சாப்பாடுபோட முன்வந்திருக்கிறார்: ஒருவேளை இதற்குக் கூட அவளே காரணமாக இருந்தாலும் இருக்கலாம், வீட்டிலே விசேஷம்; யாரையாவது சாப்பிடச் சொல்லலாமே; ஏன், பக்கத்து வீட்டிலிருப்பவரையே அழைக்கலாமே என்று அவளே நைஸாக ஞாபகப்படுத்தியிருக்கலாமல்லவா?' என்று நினைத்தான் அவன்.

'அழகி சகுந்தலையை நேருக்கு நேர், மிகச் சமீபத்தில் பார்க்கும் சந்தர்ப்பங்கள் நிறையக் கிடைக்கும். அவள்தானே பரிமாறுவாள்! அல்லது அந்த இளிச்சவாய்ப் புள்ளை பரிமாறுமோ என்ன எழவோ' என்ற நினைப்பு மிருந்தது அவன் மனமூலையிலே. மகிழ்வுடன் மனக் குழப்பமும் ஏற்படாமல் போகவில்லை. 'அங்கே போனதும் நம்மை மறந்து—இருக்கிற இடத்தை மறந்து—அசட்டுத்தனமாக நடந்துகொள்ளக் கூடாது. திருவிழாக் காலத்து மிட்டாய்க் கடையை முழிச்சு முழிச்சுப் பார்க்கிற பட்டிக்காட்டான் மாதிரி ஆகிவிடக் கூடாது' என்றுதான்!

வேளை எப்ப வரும் என்று காத்திருந்த ரகுராமனுக்கு 'வாங்க மிஸ்டர் ராமன்' என்ற அழைப்பு இனித்தது. வீட்டுக் கதவை இழுத்துப் பூட்டிவிட்டு அடுத்த வீட்டிற்குள் நுழைந்தான். அவனுக்குப் பரிச்சயமான பட்டாசாலையைத் தாண்டி அடுத்த கட்டுகளில் கால் வைக்கும்போது அவன் கண்கள் புரண்டன அங்கும் இங்கும். அழகியைக் காணும் ஆவலினால்தான்.

அவள் தென்படவே யில்லை. அழகி முன் வந்து தன் எழில் மணிக் கரத்தால் பரிமாறுவாள் என எண்ணிய ரகு

ஏமாறவே நேர்ந்தது, பதார்த்தங்கள் எல்லாம் பரிமாறப் பெற்று இலைகள் தயாராகக் காத்திருந்ததைக் கண்டதும். 'உம் உட்காருங்க' என்று உபசரித்தார் ஞானசம்பந்தர். அவன் இலை முன் அமர்ந்ததும் அவரும் பக்கத்தில் உட்கார்ந்தார்.

இலையில் சாதம் கூட முன்னதாகவே படைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் ரகுவுக்கு எரிச்சல் பிறந்தது. 'இதென்ன வழக்கம்! சாமிக்குப் படையல் போடுகிற மாதிரி எல்லாத்தையும் ஒரேடியாக இலையிலே கொட்டிக் குவித்து! சே, இந்த வீட்டில் தினசரி இதேதான் வழக்கமோ, அல்லது இன்றைக்கென்று விசேஷமான ஏற்பாடோ தெரியலே' என்று குறைபட்டுக் கொண்டது அவன் உள்ளம்.

கொதிக்கும் அவன் உள்ளத்திற்கு மகிழ்வுக் குளுமை பிரயோகிக்க வந்தவள் போல் காட்சியளித்தாள் சகுந்தலை. பட்டுடைச் சரசரப்பும், வளைக் கலகலப்பும், பெண்ணைச் சூழ்ந்து நிலவும் மென்மணமும் இலை முன் குனிந்திருந்தவனை நிமிர்ந்து பார்க்கத் தூண்டின. ஒரு முறை பார்த்ததும் மறுபடியும் ஏறெடுத்து நோக்கும் ஆசையை வளர்த்தன. புது மலர்கள் பூத்துக் குலுங்கக் காலைப் பொன் வெயிலில் தனிச் சோபையுடன் நிற்கும் பசுஞ் செடி போல் கண்ணுக்குக் குளுமையாய், மனதுக்கு ரம்மியமாகத் திகழ்ந்தாள் அவள்.

இள நீல வர்ண ஆடை அணிந்து நிலவுக் கன்னி போல் வந்த எழிலையை எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காதுதான்! ஆனால் அவள் அழகும் வாழ்வும் உழைப்பும் தனக்கே சொந்தம் என உரிமை பாராட்டும்-அவளையே தன் உடைமையாகக் கொண்டுவிட்ட—கணவன் அருகிருக்கும் போது கண்களைக் கட்டுப்பாடின்றித் துள்ளித் திரியும்படி விட இயலுமா! மனசை எப்படியும் ஓட விடலாம். அதன் துள்ளலும் துடிப்பும் அடுத்தவருக்குத் தெரியாதே!

சகுந்தலை குனிந்து நெய் பரிமாறினாள். மெல்லிய தங்க வளைகளும் கண்ணாடி வளைகளும் ஆடிக் கலகலக்கும் தந்த நிறக் கை ஒன்று கிண்ணத்தைப் பிடித்திருக்க, ஒரு கை கரண்டியினால் நெய் எடுத்து ஊற்றும்போது அவனது சைத்தான் மனதிற்கு 'அடுத்த வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே!' என்ற வசனம் நினைவு வந்தது. உடனே சிரிப்பு வராமலிருக்குமா?

அப்பொழுது அவன் விழிகள் அவள் முகத்தில் பதியத் தாவின. சிரிப்பு விளையாடும் அரங்கமாய் மிளிர்ந்த அவன் முகத்திலே, சிரிக்கும் அவள் கரும் கண்களின் பார்வை வந்து தங்கியது ஒரு கணம். மகிழ்வு மிகுந்தது அவள் முகத்தில்,

அந் நிலையில் அவர்களைக் கவனித்தால், சந்தேகப் பிராணியான ஞானசம்பந்தர் அநாவசியமான சந்தேகம் கொள்ள இடமேற்படத்தான் செய்யும். இந்த எண்ணம் அவ்விருவர் உள்ளத்திலும் ஏக காலத்தில் முளைவிட்டதோ என்னவோ! அவள் அவர் பக்கம் கள்ளப் பார்வை வீசினாள். அவனும் திரும்பிப் பார்த்தான். அவர் கவனம் பூரணமாகச் சாப்பாட்டிலேயே லயித்திருந்ததைக் கண்டதும் அவனுக்கு திருப்தி ஏற்பட்டது. அவளுக்குத் திடீரென்று எழுந்த கலவரமும் ஒடுங்கியது. அவள் விடுவிடென நடந்து அங்கிருந்து மறைந்தாள்.

சாம்பார் கொண்டு வருவாள் சகுந்தலை என எதிர் பார்த்தான் ரகு. ஆனால் உலகு தான் வந்தாள். அவள் விழிகளிலும் இதழ்களிலும் சிரிப்பு கூத்தாடத் துடித்தாலும் பீறிடும் உணர்ச்சியை அடக்கவே முயன்றாள் அவள் என்பது அவள் முகத்தைப் பார்த்ததுமே புரிந்தது அவனுக்கு. வீட்டுத் தலைவர் என்கிற அந்த மனிதர் இருப்பதனால் இளமைக் குறுகுறுப்பும் உணர்வுத் துடிப்பும் மிகுந்தவர்கள் தங்கள் சுயபண்பைப் பலவந்தமாக அடக்கி ஒடுக்க நேர்வதற்காக அவன் அனுதாபம் கொண்டான்.

'இவர் மட்டும் இங்கு இல்லை யென்றால், இந்த உலகு தான் என்ன குதி குதித்திருக்கும்! இஹிஹி யென்று எவ்வளவு கனைப்புக் கனைத்திருக்கும்! தனது பருவ மெருகைக் காட்டுவதற்காக எத்தனை போஸ்கள் சித்தரித்து விடும்!' இப்போது ரொம்ப சாதுக் குழந்தை மாதிரிக் கருமமே கண்ணம்மாளாகி விட்டது!' என்று நினைத்தான் அவன்.

இப்படி எண்ணுவதிலும் சாப்பிடுவதிலும் ஈடுபட்டிருந்த அவனைத் திடுக்கிடச் செய்தது ஞானசம்பந்தரின் செய்கை. இலைமுன் உட்கார்ந்திருந்தவர் வேகமாக எழுந்து 'அங்கணக்குழி'யை நோக்கி நடந்தார். இடது கையிலே தண்ணீர் நிறைந்த தம்ளர் இருந்தது. வாயில் ஊற்றிய நீரை விழுங்காமல் கன்னங்கள் 'ப..வ்' என உப்பும்படியாக வைத்துக்கொண்டு அவர் வேகமாகப் போனதில் அவருக்கு ஆங்காரம் ஏற்பட்டிருப்பது நன்கு தெரிந்தது. ஆனால் கோபத்தின் காரணம் தான் புரியவில்லை.

அவர் வாயிலிருந்து தண்ணீரைத் துப்பிய வேகத்தி லேயே அவருக்கு எழுந்துள்ள ஆத்திரத்தின் அளவு துலங்கி யது. அதை எடுத்துக்காட்டியது அவர் போட்ட கூச்சல். 'மூதேவி. மூதேவி! கொஞ்சம்னலும் மூளை கிடையாது. துப் புக் கெட்ட கழுதை' என்று கத்தினர் அவர்.

ஞானசம்பந்தம் திடீரென்று கூச்சலிட்டு அமர்க்களப் படுத்தியது அனைவரையும் திடுக்கிடச் செய்தது. யாருக்கும் எதுவும் புரியாத நிலையிலே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த் திருந்தார்கள். ரகுராமனின் பார்வை இயல்பாக சகுந்தலை யின் பக்கம் புரண்டது.

இலை போட்டிருந்த விசாலமான கட்டுக்கு அடுத்தாற் போல் ஓரமாக இருந்தது அடுப்பங்கரை. வெளிச்சம் அதிகம் இல்லாத சின்னஞ் சிறிய அறை, அதன் வாச லருகே சுவரை ஒட்டி மறைந்தும் மறையாமலும் நின்ருள் அவள். ஞானசம்பந்தம் கூப்பாடு போட்டதும், அவள் என்னவோ ஏதோவென்று பதறிப் போய் வெளியே வந் தாள். அப்பொழுது அர்த்தமற்ற பரபரப்பைச் சித்தரித்த அவள் முகபாவமும் தோற்றமும் கண்டுகளிக்க வேண்டிய காட்சியாகத் தோன்றின ரகுராமனுக்கு.

அவன் அவளைப் பார்த்தான். எதுவும் விளங்காமல் கலவரத்துடன் நின்ற உலகைக் கவனித்தான்- டம்ளர் தண் ணீரைக் கொட்டிவிட்டு நின்ற ஞானசம்பந்தரையும் பார்த் தான். 'நல்ல வேளை! டம்ளரையும் தண்ணீரையும் சகுந்தலை மூஞ்சியிலே விட்டெறியாமலிருந்தாரே! அந்த மட்டுக்கும் சேமம் தான்' என்று நினைத்தான் அவன்.

அவர் கத்துவதை நிறுத்தவில்லை. 'மூதேவி! கொஞ்சம் னலும் மூளை வேண்டாம்? குடிக்கிறதுக்குத் தண்ணி வைக்கி ரேமே, நல்ல தண்ணி வைக்கணும்னு தெரிய வேண்டாமா? கிணற்றுத் தண்ணியை வச்சிட்டாள். கடுத்துக் கிடக்கிற தண்ணி அது?'

அவர் சொன்ன பிறகு தான் தவறு இன்னதென்று புரிந்தது அவளுக்கு. அவள் அவசரம் அவசரமாக நல்ல தண்ணீரைச் செம்பில் எடுத்துவர அறையினுள் போனாள். அவர் இலைக்குத் திரும்பி வந்தார். உட்கார்ந்த பிறகும் ஏசிக்கொண்டு தானிருந்தார்.

'இதைவிட வேறென்னனய்யா வேலை இந்த எருமை மாடுகளுக்கு? குடிக்க வைக்கிற தண்ணியைக் கவனிச்சு

வைக்க வேணும்? முதல்லே நான் குடிச்க எடுத்ததுனுலே சரியாப் போச்சி, எனக்கு முந்தி நீங்க குடித்திருந்தால்? என்ன கடுப்புத் தண்ணியாக இருக்குதேன்னு சொல்லவா போறிங்க? இந்த வீட்டிலே எல்லாத்துக்கும் கிணற்றுத் தண்ணியைத் தான் உபயோகப் படுத்துருங்க போலிருக்குன்னு எண்ணிக்கிட்டு கம்முன்னு இருந்திருவிங்க, இல்லையா? இதை யெல்லாம் கவனிச்சுக் செய்ய வேண்டாமா? பொம்பிளைகளுக்கு இதென்ன மெத்தனம்? எட்டி உலகு, ஏன் அங்கே கதவைப் பிடிச்சுக்கிட்டு நிக்கறே? கதவு ஒண்ணும் விழுந்திராது. அந்தத் தம்ளர்த் தண்ணியையும் கொட்டிப் போட்டு அவருக்கும் நல்ல தண்ணி வை' என்று கட்டளை யிட்டார் அவர்.

பயந்து நின்ற உலகு அவசரமாக வந்து குனிந்து ரகுராமன் இலையருகே யிருந்த தண்ணீர் டம்ளரை எடுத்துக் கொண்டு நிமர்ந்தாள்.

'குனிந்து நிமருகிற லெட்சணத்தைப் பாருடா! அவரு மேலேயே மோதி விடுவே போலிருக்கே. கழுதை மாதிரி வளர்ந்தது தான் மிச்சம். இந்த வீட்டிலே எந்த எருமைக்கும் மூளையே யில்லை' என்று முணங்கினர் அவர்.

ரகுராமனுக்கு மனதிற்குக் கஷ்டமாக யிருந்தது. இந்தச் சின்ன விஷயத்திற்கு இந்த மனிதர் ஏன் இப்படிப் பிரமாதப் படுத்த வேண்டும்? தவறு யாருக்கும் ஏற்படுவது சகஜம், அதற்காக அவர்கள் மனம் நோகும்படி இவ்வளவு நேரமாகவா கத்தணும்? லேசாகச் சொல்லி யிருக்கலாமே' என்று வருத்தப்பட்டது அவன் உள்ளம்.

உலகு தம்ளரிலிந்த கிணற்று நீரைக் கொட்டிவிட்டு நல்ல தண்ணீர் எடுக்க முன் வந்தாள். அதற்குள் சகுந்தலையே செம்புடன் வெளியே வந்துவிட்டாள். தம்ளர்களை நிரப்பி உலகிடம் கொடுத்தாள் அவள். அவள் முகத்தைக் கவனித்த ரகுவிற்கு, அம் முகம் வாடி வதங்கிப் போனது போல் தோன்றியது.

'வருத்தப்படாமலிருக்க முடியுமா! இவர் ஏனிப்படி எரிந்து விழவேண்டும்; அதிலும் அந்நியர் ஒருவர் முன்பு என்று அவள் எண்ணத் தான் செய்வாள். யாருமே அப்படித் தான் நினைப்பார்கள்' என்று பேசியது அவன் மனம்

சகுந்தலை அவ்விதம் தான் எண்ணினுள். ஆனுல் மனப் புழுக்கத்தை வெளியே கொட்டிவிட அவளுக்கு உரிமை ஏது?

ஆகவே உள்ளத்தின் கொதிப்பால் முக மலர் வாடியது. அதையெல்லாம் கவனிக்கும் குணம்தான் ஞானசம்பந்தரிடம் இல்லையே!

உலகு ஏன் பயந்து நடுங்க வேண்டும் என்றுதான் விளங்கவில்லை அவனுக்கு. பெரியவரின் கோபத்தையும் கொதிப்பையும், சுபாவத்தையும் உணர்ந்து சிறு பெண்ணான அவள் அஞ்சி வாழ்கிறாள் போலும்! — இப்படி அவன் மனம் பிரச்னை எழுப்பி விடையும் கொடுத்தது.

ஆனால் உலகு பயந்ததன் காரணமே வேறு. அடுப்பங்கரையில் ஏதோ 'கைச்சோலி'யாக இருந்த சகுந்தலை 'உலகு, இலை போட்டு. தம்ளர்களில் குடிக்கத் தண்ணி எடுத்து வை' என்று சொன்னாள் ஆரம்பத்தில். அவ்விதமே செய்து முடித்து திருப்தியுடன் 'செய்தாச்சு!' என்று கூறினாள் உலகு. தான் செய்த காரியத்தில் தவறு இருக்கும் என்ற சந்தேகமே எழவில்லை அவளுக்கு. அது இவ்வளவு பெரிய கூப்பாட்டுக்கும் குழப்பத்திற்கும் இலக்காகக் கூடும் என்ற ஐயம் துளிகூட இல்லை.

விளைவுகளைக் கண்டதும், தவறு செய்தது தானே தான் என்கிற உண்மை எங்கே அம்பலமாகிவிடுமோ, அதனால் பெரியவரின் ஏச்சு முழுவதும் தன் தலைமீதே விழ நேரிடுமோ என்ற கலவரம் பிறந்து அதிகரித்தது அவளுக்கு. அதனால் அவள் அடிக்கடி சகுந்தலையின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

அந்தப் பார்வை தான் சகுந்தலையின் உள்ளத்திலே இரக்க உணர்ச்சியை அதிகப்படுத்தியதோ; அல்லது தவறை அடுத்தவள் மீது சுமத்திக் கடமையைத் தட்டிக் கழிக்க முயலும் குற்றத்திற்காகக் கணவனின் கூப்பாடும் ஆத்திரமும் அளவு கடந்து விடலாம் என்ற அச்சமோ — அவள் உலகைக் கண்டிக்கவில்லை,

பிறகு உலகு 'நான் கவனிக்காமல் செய்துவிட்டேன் அக்கா' என்று மன்னிப்புக் கேட்கும் தோரணையில் பேச வந்த போதுகூட சகுந்தலை கோபிக்கவில்லை. 'உம் யாரைச் சொல்லி என்ன செய்ய! யாரைக் கோபித்துத்தான் என்ன பிரயோசனம்? நானே கவனித்துச் செய்திருக்கனும். அதிலே தவறினால், வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியது தானே' என்று அலுத்துக்கொண்டாள்.

அதிகமாகப் பேச்சுகள் கொடுத்து ஏச்சுகள் வாங்கத் தயாராக இல்லாத உலகு மௌனமாகப் போய்விட்டாள்.

அன்றைய விருந்து ரகுராமனுக்குப் பூரண இனிமை தர வில்லை. யாருக்குமே பூரண திருப்தி தந்ததாகத் தெரிய வில்லை. எவ்வளவோ சிரத்தை எடுத்திருந்தும் எல்லாம் ஒரு சிறு விஷயத்தில் கெட்டுவிட்டதே என்ற வேதனை நிலைத்து விட்டது சகுந்தலையின் மனதில். 'தவறு நடந்துவிட்டது. சரிதான். அதற்காக இவர் இப்படியா நடந்து கொள்ள வேண்டும்? அதுவும் விருந்து சாப்பிட வந்தவர் எதிரில்!" என்று குமைந்தது அவள் உள்ளம்.

விருந்து சாப்பாட்டைப் பற்றிய குறை எதுவுமில்லை தான். எனினும் தான் விருந்து சாப்பிடப் போனதனால்தான், சகுந்தலை ஏச்சு வாங்க நேர்ந்தது என்ற அர்த்தமற்ற மனக் கஷ்டம் ஏற்பட்டது அவனுக்கு. அதனால் அவன் உணவுத் தயாரிப்புகளின் சிறப்பை நன்கு ருசித்து ரசிக்க இயலாமல் போயிற்று.

சாப்பிட்டு முடிந்ததும் 'என்ன கறிவகைகளெல்லாம் எப்படி?' என்று ஞானசம்பந்தம் கேட்டதும் 'அருமையாக இருந்தன' என்றான் அவன். அவர் கனைப்புச் சிரிப்பு சிதறினார்.

'நீங்க வேறென்னத்தைச் சொல்லப்போறீங்க? நல்லா யில்லேன்னு கண்டாச் சொல்லமுடியுமா உம்மாலே? நல்லா யில்லாமல் இருந்தால் கூட, ஆகா அருமையின்னு தான் சொல்லுவீர். அதுதான் வாழ்வின் வழக்கம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக்கூடாதுன்னு போதிக்கத் தவறுவதில்லை. ஆனால் மனசிலே நினைக்கிறதை வெளியே சொல்லப்படாது என்கிற பழக்கம் அழுத்தமாக வேரூன்றி வருது. உம்மைக் குறை கூறலேய்யா! மனித வாழ்க்கையே போலிச் சம்பிரதாயப் பகட்டுகளால் மூடி மறைக்கப்படுகிற அழுக்குக் குட்டையாகிவிட்டது' என்று உபதேசம் அருளி னார் அவர்.

'யோசிக்க வேண்டிய விஷயம் தான்' என்று தலையாட்டி விட்டு நகர்ந்தான் ரகு.

— 15 —

அற்புதங்கள் அடிக்கடி நிகழ்வதில்லை வாழ்க்கையிலே. தேக்க நிலை படிந்து ஒரே வறட்சி மயமாகத் தோன்றும் வாழ்வில் சில சமயம் திடீரென அதிசயங்கள் தலை தூக்கும். தொடர்ந்து வளரலாம் அவை. வளராமல், ஒரே ஒரு முறை சிரிப்புக் காட்டியதுடன் மறைந்தும் விடலாம்.

ரகுராமனின் சாரமற்ற வாழ்க்கையில் திடீரென்று விளையாடத் தொடங்கிய அற்புதங்கள் சட்டென எங்கோ போய் ஒளிந்து கொண்டன! விபத்துக்களோ விபரீதங்களோ எதிர்ப்படாமல் சாதாரணமாக நாட்கள் தேய்ந்து மடிந்தன. வழக்கம்போல் படிப்பது, படுத்துத் தூங்குவது, அங்குமிங்கும் திரிவது என்ற வகையில் காலக் கொலை செய்து வந்தான் அவன்.

அடுத்த வீட்டு ஞானசம்பந்தம் வெளியூர்ப் பிரயாணம் போகவில்லை. எனினும் அவராக அதிகம் பழகும் ஆர்வம் காட்டாத போது, தான் தினந்தோறும் அவரைத் தேடிப் போனால் அதைத் தொல்லையாகவே கருதிவிடுவார் என்று எண்ணினான் அவன். ஆகையினால் அவரை அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள அவன் துடிக்கவில்லை. தவிர்க்க முடியாதவாறு அவர் எதிர்ப்பட்டால் தான் ஏதாவது பேச்சுக் கொடுப்பது என்பதைத் தனது கொள்கையாக்கிக் கொண்டான் ரகு.

அடுத்த வீட்டில் பெண்களே இல்லையோ என்ற மயக்கம் எழுப்பும் வகையில் மாறிவிட்டது சூழ்நிலை என்று உணர்ந்தான் அவன். அதாவது, முதன் முதலாக சகுந்தலையையும் உலகையும் பார்ப்பதற்கு முந்தி நீடித்த நிலைமையே மறுபடியும் அடுத்த வீட்டைக் கவிந்து விட்டது என்று கருதினான். 'இதற்கெல்லாம் காரணம் என்ன இருக்க முடியும்! வீட்டுப் பெரியவர் சதா அங்கேயே தங்கியிருப்பதனால் மற்றவர்கள் தம் சுயப் பண்பை அடக்கி ஒடுக்கிக் கொண்டு அடங்கியிருக்கிறார்கள், அவ்வளவுதான்' என்று அவன் நம்பினான்.

இரவு வேளைகளில் 'தம்பீ, தம்பீ!' எனும் கூவல் எப்பொழுதாவது எழத்தான் செய்தது. சில சமயம் ஒன்றிரு தடவைகளுடன் அடங்கிவிடும். சில தடவைகளில் மிகப் பல தடவைகள் ஒலிக்கும். சில நாள் பெருங் கூச்சலாக எழுவது, சில தினங்களில் குறைந்த தொனியில் பரவும்.

'ஆகவே அவர் சொன்னபடி செய்யப் போராடுகிறார் என்பது தெரிகிறது. அவரை அறியாமலே கதறல் கிளம்புகிறபொழுது தான் கனத்த குரலாக ஒலிக்கிறது. தூக்கமும் விழிப்பும் குழம்பிக் கிடக்கும்போது உணர்வுகள் வெறித்தனம் பயில முயய்கையிலே, விழிப்பின் சக்தி கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கவும், கூவலின் தொனி எவ்வி விடாமல் அது கவனித்துக் கொள்கிறது போலும்' என்று முடிவு கட்டினன் ரகு.

ஒரு நாள் ரகுராமன் அடுத்த வீட்டு ஐயாவைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவன் 'கடன் எழுவே!' என்று எரிச்சலோடு பிரசுரகர்த்தர் ஒருவருக்கு அனுப்பி வைத்த ஞானசம்பந்தரின் எழுத்துப் பிரதி ஒன்று அவனைத் தேடித் திரும்பி வந்திருந்தது.

அதை அவன் பிரசுரகர்த்தருக்கு அனுப்பிய போது அபாரப் புகழ் பாடி ஒரு கடிதமும் எழுதி, பதிலுக்கும் எழுத்துப் பிரதியைத் திருப்பி அனுப்ப விரும்பினால் அதற்காகவும் சேர்த்துப் போதுமான ஸ்டாம்புகள் வைத்திருந்தான். கடிதத்தில் ஞானசம்பந்தரின் திறமை, ஆராய்ச்சி, எழுத்துகள் பற்றி எல்லையில்லாமல் அளந்திருந்தான். இந்த நூலைப் பிரசுரம் செய்தால் பிரசுராலயத்தின் மதிப்பே உயர்ந்து விடும்; உண்மைத் திறமைக்கும் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய கவனிப்பும் கௌரமும் அளித்த பெருமையும் உங்களைச் சேரும் என்றும் எழுதினன்.

அந்தக் கடிதம் ஞானசம்பந்தருக்கு ரொம்பவும் திருப்தி அளித்தது. ரகுராமனின் கடிதம் எழுதும் திறமையைப் போற்றிப் புகழ்ந்தார். அந்தக் கடிதத்திற்காகவே கம்பெனிக்காரன் நூலைப் புத்தகமாக்கி விடுவான் என்றார்.

ஆனல் பிரசுரகர்த்தருக்கு ரகுராமனின் கடிதம் திருப்தி அளிக்கவில்லையோ; பிரசுராலயத்தின் மதிப்பு ஒன்றும் உயரவேண்டியதில்லை, இருக்கிற மதிப்பே போதும், தனக்கும் எவ்விதமான பெருமையும் வந்து சேர வேண்டியதில்லை என்று எண்ணி விட்டாரோ — ரகுராமன் அனுப்பிய எழுத்துப் பிரதியை பிரித்துப் பார்க்கும் சிரமம் கூட எடுத்துக் கொள்ளவில்லை. அவன் அனுப்பிய விதமே, கட்டை உடைக்காமல் மேல் விலாசத்தை அடித்து விட்டு, 'அனுப்பியவருக்கே திருப்பி அனுப்பப்பட்டது' என்றெழுதித் தபாலில்சேர்த்து விட்டார் அந்தப் புண்ணிய மூர்த்தி!

தபால் கிடைத்ததும், அதன் உண்மை நிலைமையை உணர்ந்ததும், ரகுராமனுக்கு வருத்தமும் கோபமும் உண்டாயின. 'என்னதானிருக்கு என்று பிரித்துக்கூடப் பார்க்கவில்லையே' என்ற வருத்தம். 'இங்கிருந்து அனுப்பிய ஸ்டாம்பை அமுக்கி விட்டானே. காசு செலவில்லாமல் புக்போஸ்டைத் திருப்பிவிட்டான். ஒரு கார்டு கூட எழுதவில்லையே அயோக்கிய சிகாமணி என்ற கோபம்.

திரும்பி வந்த எழுத்துப் பிரதியை எடுத்துக்கொண்டு அடுத்த வீடு சேர்ந்தான் ரகு. அப்பொழுது ஞானசம்பந்தர் பட்டாசாலையில் மேஜைமுன் அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். ரகுவைக் கண்டதும் 'வாங்க என்ன விசேஷம்' என்று வரவேற்றார்.

விஷயத்தைக் கூறி எழுத்துப் பிரதியை அவரிடம் நீட்டினான் அவன். 'உம். எதிர்பார்த்ததுதானே! கடிதம் ஒன்றும் இல்லையாக்கும்?' என்று கேட்டார் அவர்.

ரகு தனது ஊகங்களையும் வயிற்றெரிச்சலையும் அறிவித்ததும் 'ஆமாம். அப்படித் தானிருக்கும். பிரித்துக் கூடப் பார்க்கலியே வெறும் பயல்! உமது கடிதம் எவ்வளவு அருமையாக இருந்தது; அதைப் பார்த்தும்கூட, தபாலைப் பிரிக்காமலே திருப்பி அனுப்பி யிருக்கிறானே. அதிலிருந்தே நன்றாகத் தெரியுதே அவன் அடிமுட்டாள், மகாமடையன் என்பது: இவனெல்லாம் புஸ்தகம் போட வந்திட்டான். அப்புறம் எப்படி தமிழ் நாடு உருப்படும்! நாடு உருப்படாமலிருப்பதிலே ஆச்சர்யமே கிடையாது' என்று தீர்ப்புக் கூறினார் பெரியவர்.

ரகுவுக்கு ஒரு சந்தேகம் வந்தது, 'நான் அப்படிக் கடிதம் எழுதினதனாலேதான் அவன் பிரித்துப் பார்க்காமலே திருப்பி விட்டானோ என்னவோ! இருக்குமிருக்கும்! அகம்பாவமாய்க் காயிதம் எழுதியிருக்கிறான் பாருடா முட்டாள் என்று நினைத்திருப்பான் அவன். பிஸினஸ் லெட்டர் எப்படி எழுதணும்; அவன் உச்சி குளிர்ந்து போகும்படியாகக் குளிப்பாட்டிக் கடிதம் எழுதுவது எப்படி என்று தெரியாமலே எழுதினேனே, அது தப்பு தான்' என்று பேசியது அவன் மனம். இந்த எண்ணத்தைப் பெரியவரிடம் சொல்லி அவர் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும் ஆசை அவனுக்கில்லை.

"இருங்க, தண்ணீர் குடித்துவிட்டு வாறேன்' என்று சொல்லி எழுந்து போனார் அவர். உள்ளே சென்றதும்

சகுந்தலை ஏதோ கேட்டதாகத் தெரிந்தது. அவர் 'அதுதான் திரும்பி வந்துட்டது' என்றதும் எழுத்துப் பிரதியைப் பற்றிய பேச்சு எனப் புரிந்தது.

அவள் களுக்குச் சிரிப்புச் சிந்திச் சொன்னது வெளியறையிலிருந்த ரகுராமன் காதில் தெளிவாகக் கேட்டது. அவள் சொன்னாள்: 'நான்தான் அன்னைக்கே சொன்னேனே! இது திரும்பித்தான் வரும், இதையெல்லாம் யாரு புஸ்தகமாப் போடப் போறாங்கயின்னு. நீங்க தானே...' அவள் சிரிப்பு பேச்சை அடக்கிவிட்டது.

'இவள் ஏனிப்படிக் கேலியாகப் பேச வேண்டும்? அவர் கோபத்தைக் கிளறிவிடவா? இல்லை, அவரை வெட்கமடைய வைப்பதற்கா? என் முன்னால் அவர் அவளைப் பழித்ததற்காக அவள் இப்போது பழி வாங்குகிறாளா? எண்ணம் எதுவாகயிருந்தாலும், அவள் போக்கு சரியானதல்ல. அவள் உள்ளத்தின் சிறுமைப் பண்பு இப்போது சிரித்துக் குதிக்கிறது. அது அவர் ஆத்திரத்தையே தூண்டும் என்று நினைத்தான் ரகுராமன்.

இப்பொழுது அவர் சீறுவார், எரிந்து விழுவார், செவிட்டில் அறைவார், மண்டையில் 'நங்'கென்று ஒரு குட்டாவது கொடுப்பார் என்று எதிர்பார்த்த ரகு ஏமாந்தான். ஞானசம்பந்தர் அப்படி எதுவும் செய்யாமல், அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு வெளியே வந்ததைக் காணவும் அவனுக்கு ஆச்சர்யமாகத் தானிருந்தது.

'அது தான், யார் எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்று கணக்கிட முடியாது என்பது சரிதான்' என்று நினைத்தான் ரகுராமன். அதற்குப் பிறகு அவன் அங்கு வெகுநேரம் இருக்கவில்லை. அவன் கிளம்பும் போது, அவன் தான் வருத்தப்படுகிறவன் மாதிரியும், தான் ஆறுதலளிப்பது போலவும் பேசினார் பெரியவர்: 'கவலைப் படாதிங்க, மிஸ்டர். ஒரு பயலும் நம்ம புஸ்தகத்தை வெளியிடவேண்டாம். போயிட்டுப் போறானுக. நானே அழகழகாக பப்ளிஷ் பண்ணிக் காட்டுகிறேனா இல்லையா பாரும். அப்ப என் புக்ஸுக்கு வரப்போகும் மதிப்பைக் கண்டு இந்தக் கஞ்சப் பயலுக பொறாமையினாலே புழுங்கிச் சாவானுக. நீர் பார்த்துக்கொண்டே இரும்!'

ரகுராமன் ஒன்றும் சொல்லவில்லை. சிரித்தபடியே நடந்தான் வெளியே.

## — 16 —

அடுத்த வீட்டுக்காரர்களை ஆராய்ந்ததன் மூலம் அனுபவ ஞானம் அதிகம் பெற்று விட்டதாக எண்ணினான் ரகுராமன். குடும்பம் என்றால் எல்லாம் சகஜம் தான்; கணவன் மனைவியை ஏசுவதும், காரணமில்லாமலே எரிந்து விழுவதும், அவள் அழுவதும், அழாத வேளைகளில் அவளைக் கேலி செய்து மகிழ்வு பெறுவதும், அத்தகைய சுகமான கிண்டல்களினால் அவன் திருப்தி யடைவதும், அந்த ரகமான பலவிதப் பண்புகளும் 'எல்லாம் சகஜம்' என்பதில் அடங்கும். விளக்கம் கேட்டிருந்தால் ரகுராமன் இப்படித் தான் சொல்லி யிருப்பான்.

வாழ்க்கையில் இவ்விதமான வேடிக்கைகளும்—ஆமாம்; அவற்றை வேறு எப்படிக் குறிப்பிடுவது?—தேவை தான் என்று தோன்றியது அவனுக்கு. தான் கல்யாணம் செய்து கொள்ளாமல் தனிமை வாழ்வு வாழ்வதனால் வாழ்வின் பல சுகங்களை, இனிமைகளை, வாழ்க்கையில் பற்றுதல் உண்டாக்கும் எண்ணிலாச் சிறப்புகளை இழந்து விட்டதாக எண்ணத் தொடங்கினான் அவன். அவற்றைப் பற்றி எண்ண எண்ண, தான் அனுபவித்து வருகிற நஷ்டம் மகத்தானது என்று அவன் உள்ளம் உணர்ந்தது. அதனால் இதய வேதனை எழுந்தது அவனுக்கு.

'கல்யாணம் செய்து கொள்ளாமலே காலத்தைக் கழித்து விடலாம்' என்று நம்பிய அவனுக்கு எதிராக அவன் மனமே சதி செய்வதில் உற்சாகம் கொண்டது. கல்யாண வாழ்க்கையிலே இனிமை இருக்கிறது என்று உருப்போட ஆரம்பித்த மனம் தறுதலைத்தனமான ஆசைகளைத் தூண்டிவிட்டது. 'எனது மனைவி இப்படி இருக்கலாம்; அவளைப் போல் சாயல். இவளைப் போல் மூக்கும் விழிகளும்; தெருவில் போனாளே ஒருத்தி அவள் மாதிரிச் சிரிக்கும் உதடுகள்' என்று அடுக்குவதிலே திருப்தி கண்டது.

தெருவில் போகிற வருகிற சிங்காரிகளையும் ஒய்யாரிகளையும் ஆராய்ந்து அவர்களது அழகு நயங்களைக் கண்டு களிக்கும் பண்பு பெற்றிருந்த ரகுவிற்கு எல்லா நயங்களும் இணைந்து வடிவான எழிலி வாழ்க்கைத் துணைவியாக வந்து சேர்ந்தால் அருமையாக இருக்கும் என்ற எண்ணம் வளர்ந்து வந்தது. அது முன்பு. இப்போதெல்லாம் அவன்

கண்களிலும் உள்ளத்திலும் சதா சகுந்தலேயே நடமாடியதால், அடுத்த வீட்டு அழகி மாதிரி யிருந்தாலும் போதும் தனக்கு வரும் காதலி என்று ஆசைக்கு ஓர் எல்லே கோலிக் கொண்டது அவன் மனம்.

ஆரம்பத்தில் அவளைப் பற்றித் தவருக மதிப்பிட்டதற்காக வருந்தினன் அவன். அடுத்த வீட்டில் நிலவுவதாகத் தோன்றிய மர்மமெல்லாம் உண்மையில் தன் மனமயக்கே என அறிந்ததும் சிரிப்பு தான் பொங்கி எழுந்தது அவனுக்கு. சகுந்தலேயிடம் அவனுக்கு அனுதாபம் வளர்ந்து வந்தது குறையவில்லே. எனினும் அவன் நினைத்துக் கொள்வான் 'சகுந்தலே நல்லவள் தான். ஆனலும் அவள் இப்படி நடந்து கொள்ள வேண்டியதில்லே. உலகு மாதிரி ரொம்ப தாராளமாகச் சிரித்துப் பேசி மகிழா விட்டாலும், இப்படி மூஞ்சியைத் தூக்கிக் கொண்டு கர்வக்காரியாக அலேயாமல் இருக்கலாமே!' என்று.

'அந்தப் புள்ளெ கூட இங்கே தலே காட்டக் காணுமே. அது சிரித்து விளேயாடுவது தமாஷாக இருக்குமே' என்ற சிறு ஏக்கம் அவன் உள்ளத்தில் நிற்காமலில்லே. 'அப்புறம் புஸ்தகம் வாங்கவும் வரலே. அதை இன்னுமா படிச்சு முடிக்காமலிருப்பாள்?' என்ற கேள்வி புரண்டது மன வெளியிலே.

'அந்தப் பெரியவர் வீட்டிலே இருப்பதனல் தான் இந்தத் தொல்லே யெல்லாம்!' என்ற எண்ணம் எழவும், ஒரு சில தினங்களுக் குள்ளாகவே தனது மனப் போக்கிலே ஏற்பட்டு விட்ட மாற்றத்தை உணர்ந்து திடுக்கிட்டான் அவன். ஆரம்பத்தில் அவர்கள் எதிர்ப்படுவதும், ஓடி ஒளிவதும் எதாவது கேட்பதும் தொல்லே தரும் விஷயங்களாகும், அடுத்த வீட்டுக்காரர்களால் நன்மை ஏற்படப் போவதில்லே என்று முனங்கிய மனம் தான் இப்போது அடுத்த வீட்டு சகுந்தலேயைக் காண முடியவில்லேயே, உலகின் சிரிப்பையும் கேலிப் பேச்சையும் கேட்பதற்கில்லேயே என்று வருந்தியது!

இவ்வித எண்ணச் சுழல்களில் ரகுராமன் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த போது தான் வந்து சேர்ந்தாள் வீடு பெருக்கும் கிழவி. வழக்கத்திற்கு விரோதமாக எதுவுமே பேசாமல் அவள் சுத்தம் செய்யும் தொழிலில் ஈடுபட்டு விட்டது அவனுக்கு ஆச்சர்யமளித்தது.

அவன் ஆச்சர்யம் அளவு கடந்து போய்விடக் கூடாது என்ற நல்லெண்ணத்தினால் தானே என்னவோ, அந்தக் கிழவி தானாகப் புலம்பும் தோரணையில் குரல் எழுப்பினாள்: 'உம், பொண்ணாய்ப் பொறந்தாலே சன்மம் பூராவும் கட்டம் தான். பிறந்த வீடும் சௌகரிய மில்லாமே யிருந்து, வாழ வந்த வீடும் சுகமில்லாமல் போனால் ஒரு பொண்ணு தான் என்ன செய்யும்? பாவம்!'

'என்ன பாட்டி விஷயம்?' என்றான் ரகு.

'விசயமென்ன விசயம். இந்த உலகத்திலே பொண்ணாய் பிறந்து புண்ணாக உலைகிறவங்களை எண்ணி வருத்தப் படுதேன். நான் வேறே என்ன செய்ய முடியும்!' என்று அலுப்புடன் பேசினாள் கிழவி.

'ஏன், உனக்கு என்ன கஷ்டம் வந்து விட்டது இப்ப?'

'எனக்குக் கயிட்டம் வந்தால் தானா வருத்தப்படணும்? எல்லாரும், நமக்கு வேண்டியவங்க, தெரிஞ்சவங்க, சுகமாக இருந்தால் தானே நாமும் சந்தோஷமாயிருக்க முடியும். பக்கத்து வீட்டிலே சகுந்தலை இருக்காளே, அந்தப் பொண்ணை நினைத்தால் எனக்குக் கூட ஒரு மூச்சு அழணும் போலிருக்கு.'

'அவளுக்கு என்ன வந்து விட்டது பாட்டி?'

'என்ன வரணும்! புருஷன்னு ஒருத்தன் வந்து வாய்ச் சிருக்கானே அந்த ஒரு தொல்லை போதாதா? அந்த மனுஷனுக்கு எங்காவது ஊருக்குத் தொலைஞ்சு போகணும்னு எண்ணம் வந்தால், அதுக்கு முன்னாடி வீட்டிலே ஒரு ஆட்டம் ஆடித் தீர்த்து விட்டுத்தான் போணும்னு விதி யிருக்கு போலிருக்கு. அதனாலே அந்த அப்பாவிப் பொண்ணு பாடு தான் சங்கடமாய் போகுது. ஏச்சும் பேச்சும், அடியும் வசவும், கையிலே கிடைக்கிறதை, தூக்கி விசிறி அடிக்கிறதும்—செச்சே, மனுசச் சன்மமில்லே அந்த ஆளு!'

ரகுராமனுக்கு நெஞ்சு திக்திக் கென்றது. 'ஐயோ திரும்பவும் அவளை அவர் அடித்தாரா!' என்று பதட்டத்துடன் கேட்டான்.

'அன்னைய மாதிரி பேயறை அறையலே. அடி விழுந்திருக்கும்; அவள் பேசாமல் அடுப்படிக்குள்ளே போய் உட்கார்ந்திட்டாளாம். பேச்சு தடிச்சுது: பேச்சிலே நியாய மில்லேன்னதும் பக்கத்திலே யிருந்த சருவச் செம்பைத்

தூக்கி மேலே விசினராம். தண்ணியிருந்த செம்பு இசை கேடா மூக்கிலே, பொருத்திலே பட்டா மனுஷி கதி என்ன கிறது? அதைப் பத்தி அவருக்கு என்ன கவலே?'

'நீயும் அப்போ அங்கே யிருந்தியா பாட்டி? என்ன நடந்தது, என்ன விஷயம்?' என்று கேட்டான் ரகு முழு விவரத்தையும் அறிந்து கொள்ளும் துடிப்புடன்.

'அந்த மனுசனே எருவிலே வைக்க, அவனுக்கு விசயமும் வேணுமா பெண்டாட்டியை அடிக்கிறதுக்கு! என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. காலையிலே வீடு கூட்டிவிட்டு, பத்துப் பாத்திரங்களைக் கழுவப் போனேனு, அப்ப சருவச் செம்பு பொழிஞ்சு போயி மூலையிலே கிடந்ததைப் பார்த்ததும் எனக்குப் பக்கூ யின்னுது. இதென்னடி யம்மா அனியாயம்னு சகுந்தலையைக் கேட்டேன். அப்பதான் அவ மூஞ்சியை சரியாக கவனிச்சேன். மூஞ்சியும் முழியும் சீறு சிறுன்னு காய்ச்சக்காரிக்கு வாற மாதிரி—கண்ணு அழுதழுது சிவந்து போயி, என்னத்தைச் சொல்ல. ராத்திரிப் பூரா அழுதுக்கிட்டுக் கிடந்தா போலிருக்கு. அப்புறம்தான் என்னதுன்னு விசாரிச்சேன்!' அவள் தன் குணத்தின் படி நீட்டி கீட்டிப் பேசினுள்.

'இந்தக் கிழவி என்ன எழவு, விஷயததைச் சட்டுபுட்டுன்னு சொல்லாமல் இழுத்து இழுத்து ஒப்பாரி வைக்கிரு!' என்று எரிச்சலாக யிருந்தது அவனுக்கு. இருப்பினும் பொறுமையை அனுஷ்டிப்பதைத் தவிர வேறு வழி கிடையாதே!

அவள் பேசிக் கொண்டே போனுள்: 'சகுந்தலே அவ ஊரிலே யிருக்கிற அத்தை ஒருத்திக்குக் காயிதம் எழுதிப் போட்டாளாம். அவருக்குத் தெரியாம எழுதியிருப்பா போலிருக்கு. அன்னைக்கு அடிச்சாரே அதுக்கு மறு நாள்..........'

'ஓ, சரிதான். உல்கு வந்து என்னிடம் கவர் வாங்கிக் கொண்டு போச்சுதே, அதுக்குத் தானு!' என்று ரகுவின் மனம் கொக்கரித்தது.

'இங்கே ரொம்பக் கயிட்டமா யிருக்கு. வீட்டை விட்டு வெளியே போக முடியலே. தேரு திருவிழா கோயில் குளமின்னு எதுக்குமே போக முடியலே. ஒரு மாசம் விட்டாத்தியாயிருக்கலாமே. நீ வந்து கூட்டிட்டுப் போன்னு எழுதி

யிருப்பா போலிருக்கு. இந்த அத்தையரசிக்குப் பிரியம் இல்லையின்னு பேசாமே இருந்து தொலைக்கப்படாதா! புருஷன் வீடுன்னு சொன்னு நாலும் இருக்கத்தான் செய்யும்; நல்லதும் பொல்லதும் வரும் போகும்; எல்லாத்தையும் அனுசரிச்சு விட்டோட வாழ்றது தான் கல்யாணமான பொண்ணுக்கு லெச்சணம்; அதை விட்டுப்போட்டு புருசன் கிட்டேக் கோபிச்சுக்கிட்டு வந்துட்டா அப்புறம் நாலு பேரு நாலு பேச இடமாகும்--இப்படி வரிஞ்சு தள்ளிவிட்டாள் அந்தப் பெரிய மனுசி! தனக்குத்தான் எழுதத் தெரிய மின்னு.'

அவள் பிரசங்கத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காக அவன் அவசரமாகக் குறுக்கிட்டான்: 'அந்தக் கடிதம் ஞான சம்பந்தர் கையில் கிடைத்து விட்டதாக்கும்?'

'ஆமா, வேறே வினை என்ன வேணும்? நீ ஏன் காயிதம் எழுதினே; உனக்கு என்ன கயிட்டம் இங்கே; என்னடீ எழுதினே தேவடியா கிவடியான்னு வாயிலே வந்தபடி பேசி ஏசி யிருக்காரு. அவ என்னமோ சொல்ல வாய் திறந் திருக்கா. பேசாதடி முண்டையின்னு சொல்லி தண்ணிச் சொம்பைத் தூக்கி வீசினாராம். அவ அறைக்குள்ளே போயிட்டாளாம். இன்னைக்குக் காலையிலே எழுந்திருச் சதுமே அவரைக் கொண்டுக்கிட்டுப் போயிட்டுது! போற துக்கு முன்னாலே இப்படி ஒரு கூத்து நடத்திட்டுப் போகாட்டா யென்னு? அதிலே உருட்டல் மிரட்டல் வேறே. வீட்டை விட்டு எங்காவது வெளியே காலடி எடுத்து வைத் தேன்னு தெரிஞ்சுதோ உன் காலை முறிச்சு அடுப்பிலே வைச்சிருவேன்னு சபதம் போட்டிருக்காராம் அந்த மன்னபிலி. உனக்குத்தான் என்னைத் தவிர வேறு நாதி கிடையாதே; பேசாமல் இங்கே முடங்கிக் கிடக்காமல் ஏன் அகம்பாவமாக் காரியம் செய்யக் கிளம்புறேயின்னு புத்தி மதி வேறே சொன்னாராம். இப்படிப்பட்டவங்க கலியாணமே செய்திருக்கப்படாது. அதுதான் எனக்குத் தெரியும்' என்று முடிவுரை கூறினாள் கிழவி.

'அது சரி, பாட்டி. அவர் அம்மா ஒண்ணுமே சொல்வ தில்லையோ? ஏனிப்படி அடிக்கிறே; பாவம், அந்தப் பெண்ணைப் பாடாய்ப் படுத்திறியேன்னு சொல்ல மாட் டாளா?' என்று கேட்டான் ரகு.

'அந்த அம்மா அன்னைக்குப் போனவ தான். திரும்பி வரவே யில்லை. வடக்குத் தெருவிலே யிருக்கிற மக வீட்டுக்

குப் போயிருக்கிறதாகச் சொன்னுங்க. அங்கே யிருந்து அவ காசி ராமேசுரம் கன்னியாகுமரின்னு போய் புண்ணியம் தேடப் போறேன்னு சொல்லிட்டுப் போயிட்டாளாம். இங்கேயிருந்து மகன் செய்கிற அநியாயங்களைப் பார்த்துப் பரிதவிக்கிறதை விடப் புண்ணியமாவது சம்பாதிக்கலாமே யின்னு நெனைப்பு போலிருக்கு. அவ இருந்தாலும் தான் என்ன செய்ய முடியும்? இப்படிச் செய்யாதே யின்னு சொல்லலாம். அவரு கேட்கக் கூடிய மனுசரு? அவளுக்கும் அவரிடம் பயம்தான். எதையாவது சொன்னுல் அவன் எங்கே தன்னையும் உதைச்சுக் கொன்னு போடுவானோ யின்னு தான். அவன் ஒரு மனிசரு!' என்று வெறுப்புடன் சொல்லி விட்டுத் தன் வேலையையும் முடித்துக்கொண்டு வெளியேறினுள் அவள்.

சகுந்தலையைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த ரகுராமனுக்கு அவளுக்காக வருத்தப்படுவதற்கு விஷயம் கிடைத்து விட்டது. 'உம். வாழ்க்கை இவ்வளவு மோசமாக அமைந்திருக்கிறதே அவளுக்கு!' என்று துயருற்றுன் ரகுராமன்.

அன்று முழுவதும் சகுந்தலையைப் பற்றி மனமாற ஜெபம் செய்து வந்ததற்கு மாலையில் நல்ல பலன் கிடைத்தது அவனுக்கு! சாயங்காலம் நாலு நாலரை மணியிருக்கும். ரகு பின்புறத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தான்.

அழகு அழகாகப் பூ பூக்கும் கல்வாழைச் செடிகள் அவனுக்குக் கிடைத்திருந்தன. அவற்றை தோட்டத்தில் நட்டு வைத்துத் தண்ணீர் ஊற்றிவிட்டு நின்றுன் அவன். கிணற்றிலே உருளைச் சத்தம் கேட்டதும் சகுந்தலை வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போனது ரகுவுக்குத் திருப்தி அளித்தது. அதைவிட மிக அதிகமான மகிழ்வு தந்தது அவள் திரும்பி வந்து காட்சி யளித்தது.

'ஏது இன்று இந்த அழகுத் தெய்வத்திற்கு இப்படி திருவுளம் இசைந்திருக்கிறது!' என்று எண்ணினுன் ரகு.

அவள் தட்டி ஓரத்தில் மறைந்தும் மறையாமலும் நின்று, கை நீட்டி கிணற்றுத் துவளத்தின் மீது என்னவோ வைப்பது அவன் பார்வையில் பட்டது. கண்களுக்கு உணவாய் நிற்கும் அவள் நாவுக்கும் ருசியாய் வயிறுக்கும் உணவாய் எதுவோ தருகிருள் போலும் என்று நம்பினுன் ஒரு

கணம். உடனேயே ஏமாந்தான் அவள் அங்கு வைத்தது முன்பு தான் கொடுத்தனுப்பிய புத்தகம் தான் என்பதை அறிந்ததும். எழுந்த ஏமாற்றத்தினுல், 'படித்து முடித்தாச்சா?' என்று பேச்சுக் கொடுக்கலாமே எனும் ஆசை கூடப் பிறவாமலே போயிற்று.

ஆனால் அவளாகவே சொன்னாள்; 'இதைப் படித்தாச்சு, நன்றாகயிருந்தது!'

அவள் பேசுவாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. தானாகத் துணிந்து பேச்சுக் கொடுத்த போதெல்லாம் ஓடிப் பதுங்கியவள் தானே அவள். ஒளிந்து நின்று குத்தலாக வார்த்தைகளை வீசினவள் தானே அவள். அவளாக எதிர் வந்து பேசுவாள் என அவன் எவ்விதம் எதிர்பார்த்திருக்க முடியும்? ஆயினும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல ஏற்பட்டதைப் போலவே, அந்த இனிய மாலை வேளையிலும் செயல்கள் நடைபெற்றன.

சகுந்தலை 'ரோசாப்பூச் சேலைக்காரி'யாக, காலைக் குளுமையில் அழகாய் திகழும் ரோஜா மலர் போல வந்து காட்சி தந்ததே அற்புதம்தான். அது போதாதென்று அற்புதத்திற்கு மேல் அற்புதங்களைச் சிருஷ்டித்து நின்றாள் அவள். அவள் பண்பை அப்பாவி ரகுராமனால் புரிந்து கொள்ள இயல வில்லைதான்! அதனால் அவள் பேச்சுக்கு என்ன பதில் சொல்வது என்றே அவனுக்கு விளங்கவில்லை. 'உம். சரிதான்' என்று குரலிழுத்தான்.

'வேறொரு புஸ்தகம் கொடுத்து அனுப்புகிறீர்களா?' என்று கேட்டாள் அவள். அக்குரலும் அவள் கேட்ட தினுசும் அவனை என்னென்னவோ செய்தன. அவள் எப்படி மாறினாள் என்று ஆராய விரும்புபவனைப் போல் அவள் முகத்தை நோக்கினான் ரகு. அவள் வசியம் நிறைந்த மோகனாங்கியாக நின்றாளே தவிர, மாறிப்போனவளாகத் தென்பட வில்லை.

'வில் பவர், எண்ணியே சாதிக்கலாம் என்று அடித்துக் கொண்டாரே ஞானசம்பந்தர், அந்தச் சக்தி எனக்குத்தான் சீக்கிரமாகக் கைகூடிவிட்டது என்று தோன்றுகிறது' என்று நினைத்தான் அவன். அந்த எண்ணம் எழவும் அவன் முகம் ஒளியேற்றது, அங்கு மலர்ந்த சிரிப்பின் உதவியினால்.

கொஞ்ச நேரம் கழித்து உலகை அனுப்பட்டுமா?' என்று குழைவாகக் கேட்டாள் அவள்.

'உம்'' என்றிழுத்த ரகு 'ஏன், நீங்கள் இங்கேயே நிற்பதானால் நான் உள்ளே போய் வேறு புத்தகம் எடுத்து வந்து தாரேன்' என்று முடித்தான்.

'வேண்டாம் வேண்டாம். அப்படி அவசரம் ஒண்ணு மில்லை. நான் பிறகு உலகை அங்கு வந்து வாங்கிவரும் படி அனுப்பி வைக்கிறேன்'.

சொல்ல வேண்டியதைச் சொல்லியாயிற்று, அவள் போய்விடுவாள் என்று எண்ணினான் அவன். ஆனால் அப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சகுந்தலை எண்ணவில்லை. முன்னால் வந்து நன்றாக எட்டிப்பார்த்து விட்டு 'செடிகள் நட்டீர்களாக்கும்?' என்றாள்.

'ஊம்' என்றான் ரகு. அவனது இயல்பான குறும்புத் தனம் தலைதூக்கவும் அவன் தொடர்ந்தான். 'இந்தத்தடவை நீங்கள் புடுங்கி எறியமுடியாது. உங்களுக்கே ஒரு தடை யாகவும் பாதுகாப்பாகவும் தட்டிவைத்து வேலி கட்டிக் கொண்டீர்களே!'

அவள் களுக்குச் சிரிப்பு சிந்தினாள். 'தட்டி இருக்கிறது உண்மை. ஆனால் குற்றத்தை என் தலையில் சுமத்துவது தப்பு' என்றாள்.

'நீங்கள் தானே தட்டி கட்டணும்னு விரும்பியது?'

'நான் ஏன் அப்படிச் சொல்லப் போகிறேன்! அவர் பிளான் தான் அது. அவராகவே யோசித்து முடிவு செய்து அவசரம் அவசரமாகக்கட்டி முடித்து விட்டார்' என்றாள்.

'நினைத்தேன்' என்று முனங்கினான் அவன்.

'என்னது?' என்று கேட்ட அவளது பார்வை புத்தகத் தின் மேல் பட்டது. 'புத்தகத்தை எடுத்து அந்தப் பக்கம் வைத்துக் கொள்ளுங்கள். காற்றடித்தோ, எப்படியோ, அது கிணற்றுள் விழுந்து விட்டால் அப்புறம் என்னைக் கேட்கக்கூடாது' என்றாள்.

'அந்த பயம் உங்களுக்கு வேண்டாம். புத்தகத்திற்கு இறக்கை முளைத்துக் கிணற்றினுள் பாய்ந்து விடாது. வாளி யைக் கிணற்றில் போட்டுப் பழகிய கை விளையாட்டாக இதையும் உள்ளே தள்ளினால் தான் உண்டு' என்று கூறி விஷமச் சிரிப்புச் சிரித்தான் அவன்.

வெட்கம் அவனைக் கவ்விக் கொண்டது. பதில் பேசாமல் சிரித்துக்கொண்டே தட்டிக்குப்பின் பதுங்கி விட்டாள் சகுந்தலை.

## — 17 —

ரகுராமனின் உள்ளத்தில் பொங்கிய இன்ப உணர்வுக்கு அளவே கிடையாது. அவள் பேசினாள்; தன்னிடம் பேசுவதேயில்லை, தானாகப் பேச்சுக் கொடுத்தாலும் எதிர் நின்று பதிலளிப்பதில்லையே என்ற ஏக்கத்தை வளர்த்த சகுந்தலை அவளாகவே முன் வந்து பேசினாள். அது சாதாரண விசேஷமா என்ன! 'அதி விசேஷ விசேஷம்' என்றல்லவா கருதவேண்டும். ஆகவே அவன் மகிழ்ச்சியுற்றதில் வியப்பில்லை தான்.

சகுந்தலை காலையில் அழுது கொண்டிருந்தாள் என்று வீடு கூட்டும் கிழவி சொன்னதைக் கேட்டதும், அவள் அன்று பூராவும் அழுதவண்ணம் மூலையில் ஒடுங்கிக் கிடப்பாள்; வீட்டில் வேறு யாரும் இல்லாததனால் சமையல் செய்ய வேண்டிய அவசியமில்லை; ஆகையினால் அவள் பட்டினியாய் கிடந்து குமுறிக் குமைவதும் சாத்தியமே என்றெல்லாம் எண்ணியிருந்தான் அவன். ஆனால் அவன் எண்ணியபடி நடக்கவில்லை. அதற்காக அவன் வருத்தப்படவுமில்லை!

தோட்ட வேலையை முடித்து விட்டு ரகுராமன் வீட்டினுள் சென்று, நல்ல புத்தகம் ஒன்றை எடுத்து வைத்து விட்டுக் காத்திருந்தான். 'ஏன் அவளே நின்று வாங்கியிருக்கக் கூடாது; எதற்காக உலகை அனுப்ப வேண்டும்?' என்ற எண்ணம் எழுந்தது அவனுக்கு.

சிறிது நேரத்திற்குப் பிறகு 'வந்துட்டேன்' என்று சொகுசாகக் கூறி வந்த உலகைக் கண்டதும் தான் காரணம் புரிந்தது. அவள் கையில் இலை போட்டு மூடிய சிறு பாத்திரம் ஒன்றிருந்தது. 'சரிதான், என்னவோ கொடுத்து அனுப்புவதற்காகத் தான் இந்தப் புள்ளையை அனுப்புகிறேன், இருங்கள் என்று சொல்லியிருக்கிறாள்' என்று விடை கூறிக்கொண்டது அவன் மனம்.

டான்ஸ் ஆடி வருகிறவள் மாதிரி நெளிந்து வளைத்துக் காண்டு நடந்து வந்த உலகு பாத்திரம் பிடித்த வலது

கையை முன்னே நீட்டியவாறு கேட்டாள் 'இதிலே என்ன இருக்குதாம்?' என்று.

'அது எனக்கு எப்படித் தெரியும்?' என்று இழுத்தான் அவன்.

'தெரியாதா! கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்களேன்'

'என்னதாயிருந்தால் தான் என்ன? நீதான் கொடுப்பதற்காகக் கொண்டு வந்திருக்கிருயே. பேசாமல் கொடுத்துவிடேன். நான் ஏன் வீணுக யோசிக்கவேணும்?' என்று சொல்லி அவள் முகத்தைப் பார்த்தான் அவன்.

அம் முகத்திலே ஏதோ புதுமை ஒளிர்வதாகத் தோன்றியது. அது என்ன என்று கவனிப்பதற்காக அவன் கூர்ந்து நோக்கினுன். உதடுகளில் குறுநகை தவழ குறும்புப் பார்வை மிதக்கும் கண்களை அவன் முகத்தில் பதித்து நின்ற உலகு இமைகளைப் படபடவென்று சிமிட்டினுள். அவனுக்கு அப்பொழுதுதான் விளங்கியது. அவள் தனது அழகான கண்களுக்கு எழிலாக மை தடவியிருந்தாள். 'ஓகோ, நான் அன்று சொன்ன யோசனைப்படியே செய்திருக்கிறதே! பேஷ்' என்று மகிழ்ந்தான் அவன்.

தன் முகத்தை, இமைக்கும் கண்களை நன்கு கவனித்தும் அவன் பேசாமலிருந்தது உலகுக்குப் பிடிக்கவில்லை. 'என் முகத்திலே உங்களுக்கு ஒண்ணும் தெரியலே?' என்று கேட்டாள்.

'தெரியாமலென்ன! கண்ணு மூக்கு நெற்றி, சாந்துப் பொட்டு, இனிப்பைக் காட்டலாமா வேண்டாமா என்று திணறும் உதடுகள்......'

'போங்க நீங்க!' என்று சொல்லி அவள் முன் வந்து மேஜை மீது பாத்திரத்தை வைத்து, வலது கையை நகர்த்தாமலே நின்று 'உம், சொல்லுங்க. சொன்னுல் தான்' என்ருள், மறுபடியும் கண்ணிமைகளைப் படபடக்க விட்டு!

'ஹோ, இவ பெரிய அதிசய சிந்தாமணியின் தங்கச்சி போலிருக்கு. இவள் கேட்கிற கேள்விக்கெல்லாம் பதில் சொன்னுல் தான் ஆச்சுதாம்! சொல்லத் தெரியலேன்னு என்னம்மா செய்வே, சிந்தாமணியே!' என்று கேலியாகச் சொல்லவும், அவள் கையை எடுத்தாள்.

அவளுக்கு என்ன யோசனை தோன்றியதோ, சடக்கெனக் கையினால் கிண்ணத்தைப் பற்றினாள். 'ஊம்ஹூம். சொன்னால் தான் கிடைக்கும். இல்லையின்னா கிடைக்காது' என்று கூறிச் சிரித்தாள்.

'கிடைக்காதோ!' என்றான் அவன். அவள் 'ஊகூங்' என்று தலையசைத்தது ஒய்யாரமாக யிருந்தது. அவள் எதிர்பாராது நின்றபோது அவன் அவளது கையைத் தன் கையினால் பற்றி இழுத்துத் தள்ளிவிட்டு, கிண்ணத்தை எடுத்துக்கொண்டான். அவள் முகம் சிவந்தது வெட்கத்தினால் ; ஆனந்தமும் கலந்திருந்தது அங்கு.

அவள் செல்லமாகச் சிணுங்கினாள், 'இப்படி நீங்க செய்தது நல்லாயில்லே' என்று.

'நீ விளையாடுவது நன்றாக யிருக்குதே, அது போதும்!'

அவள் உற்சாகமாகக் கூறினாள்: 'விளையாட்டைப் பற்றிச் சொன்னது சரி. வேறே நல்லது எதுவும் உங்க கண்ணிலே படலே?'

'இல்லியே!' என்றான் அவன். 'இல்லே? இல்லையா?' என்று கேட்டபடி அவள் மேஜை மீது தன் உடலின் மேல் பாகத்தைச் சாய்த்து, படம் எடுக்கும் பாம்பு போல் தலையை முன் நீட்டி ஆட்டினாள். நீண்ட சடை துவண்டு துள்ளி முன்னால் வந்து தொங்கிப் புரண்டது. 'ஒண்ணும் தெரியலே? தெரியலே!' என்று கேட்டுக்கொண்டே, சிமிட்டிய கண்களுடன் முகத்தை முன் நீட்டிய அவள் இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் முகத்தோடு முகம் மோதவிட்டு விடுவாளோ என்று தோன்றியது.

அவன் நாற்காலியில் பின்வாங்கிச் சாய்ந்துகொண்டே, "இந்தா உலகு, என்ன விளையாட்டு இது?' என்று சிடுசிடுத்தான். அவளோ சிரிசிரி என்று சிரித்தாள்.

'பின்னே என்னவாம்? தெரிந்து கொண்டே தெரியலே, தெரியலே யின்னு சொன்னால்!'

பதில் சொல்லாமலே இலையை எடுத்துவிட்டு, கிண்ணத்தில் என்ன இருக்கிறது என்று பார்த்தான் அவன். ஏதோ மஞ்சளாக இருந்தது. என்ன பதார்த்தம் என்றே புரியவில்லை. கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுப் பார்த்தான். அப்படியும் கண்டு பிடிக்க முடியவில்லை. 'இது என்னவாம்?' என்று கேட்டான்.

அவள் 'நான் மட்டும் சொல்லணுமாக்கும்! தெரியலே, தெரியலே யின்னவருக்கு இதுவும் தெரியாமலே இருக்கட்டுமே. அதனாலே ஒண்ணும் கெட்டுப் போகாது' என்று எரிந்து விழுந்தாள்.

அவள் நிஜமாகவே கோபிக்கிறாளா, பொய்க்கோபம் காட்டுகிறாளா என உணர்வதற்காக அவன் அவள் முகத்தை நோக்கினான். 'என் மூஞ்சியை ஏன் திரும்பத் திரும்பப் பார்க்கணுமாம்?' என்றாள் உலகு.

'என் முன்னாலே நிற்கிறதனால்தான் பார்க்க வேண்டியிருக்கு!'

'நீங்க ஒண்ணும் பார்க்க வேண்டாம். அதை எடுத்து வைத்துக்கொண்டு கிண்ணத்தைக் தாங்க. புத்தகம் கொடுப்பதானால் கொடுங்க. நான் போகணும். அக்கா சீக்கிரம் வரச் சொன்னாங்க!'

'அடேயம்மா, கோவந்தான்! நெசமாக் கோவந்தான் போலிருக்கு!' என்று ரகு சொன்னவிதம் அவளுக்குச் சிரிப்பு உண்டாக்கியது. உதடுகள் லேசாகச் சிரிப்பைக் காட்டிக் கொடுத்தபோதிலும் அவள் சிரமப்பட்டு அடக்கி அமுக்கிவிட்டாள்.

'உலகு, உன் கண்களுக்கு மை தடவியிருப்பது நன்றாகயிருக்கு. உன் கண்களே அழகு. அதற்கு அற்புதமாகயிருக்கிறது மை. அன்றைக்கே கேட்டேன், கண்ணுக்கு மை தடவக்கூடாதான்னு.' அவளைச் சமாதானப்படுத்தி சந்தோஷமடையச் செய்வதற்காக அவன் சொல்லிய வார்த்தைகள் சரியானபடி வேலைசெய்தன. அவள் முகத்தில் ஒளி பிறந்தது.

'நிசமாகவே நல்லாயிருக்குதா?' என்று ஆவலோடு விசாரித்தாள் அவள்.

'பின்னே நான் பொய்யா சொல்கிறேன்! ரொம்ப ஜோராக இருக்கு, உலகு.'

'நீங்க நல்லாயிருக்கும்னு சொன்னதனால் தான் மை தடவிக்கொண்டேன்' என்றாள் உற்சாகமாக.

'அதுதான் தெரியுதே! கொஞ்ச நாட்களாக உன் அலங்காரங்கள் மாறி வந்ததே, அதற்கெல்லாம் கிரீடம் வைத்ததுமாதிரி இருக்கு இது. ஏது உனக்கு இப்படி திடீர்

அலங்கார மோகம் ஏற்பட்டது, உலகு?' என்று கேட்டான் ரகு. 'தெரியாதா. பார்த்து ரசிக்க ஒருவன் இருக்கிருன் என்ற மகிழ்ச்சியினுல் தான்' என்று அவன் உள்ளம் முனங்கியது.

அவள் பதில் சொல்வதானுல், 'எல்லாம் உங்களுக்காகத் தான்!' என்று சொல்லி யிருக்கவேண்டும். ஆனுல் உலகு பேசவில்லை. அள்ளி விழுங்கும் ஆர்வப் பார்வையை ஆசையுடன் அவன் மீது விளையாட விட்டு நின்ருள் அவள். 'உம். அதைச் சாப்பிடுங்க' என்ருள்.

'அதை எடுத்து வைக்க ஏனம் பார்க்கிறேன். நீதான் அவசரப் படுகிருயே!' என்று கூறி அவன் அங்குமிங்கும் பார்த்தான்.

'அவசரம் ஒண்ணுமில்லே. மெதுவாச் சாப்பிடுங்க. சாப்பிட்டு விட்டுத் தருகிற வரை நான் நிற்கிறேன்' என்ருள் குமாரி, குலுக்குச் சிரிப்பை முற்றுப்புள்ளியாக நிறுத்தி!

'பொங்கிவந்த கோபம் புகழ்ச்சியைக் கேட்டவுடனே அணைஞ்சு போச்சாக்கும்! என்னம்மா நீ, திடீர்னு கோபப் படுகிறே! திடீர்னு கொஞ்சிப் பேசுகிறே!'

'இங்கே அம்மாவுமில்லே, பாட்டியுமில்லே. அம்மாவாம் பேசுறதைப் பாரு! கிண்ணத்தைச் சீக்கிரம் கொடுங்க.'

'நீ சொல்றதிலே எதைச் செய்வதென்றே தெரியலே. மெதுவாகச் சாப்பிடுவதா? மெதுவாகச் சாப்பிட்டால் கிண்ணத்தைச் சீக்கிரம் கொடுப்பது எப்படி?'.

'இந்த ஆராய்ச்சி பண்ணுமல், கேலி பேசாமல் சாப்பிட்டிருந்தால், இதற்குள் அதைத் திருப்பிக் கொடுத்திருக்கலாம்!' என்று குற்றம் சாட்டினுள் அவள்.

'பரவால்லியே. எப்படியும் பழியை என் மீதே சுமத்தி விடுகிருய், பேஷ்!' என்று சொன்ன ரகு கிண்ணத்திலிருந்ததை எடுத்து ருசிக்கத் தொடங்கினுன். அவன் சாப்பிடுவதையே கவனித்து நின்ருள் உலகு. 'இந்தா, உனக்கு வேணுமா?' என்று ஒரு விரலால் நீட்டினுன் ரகு.

'ஊஹும். எனக்கு வேண்டாம்' எனத் தலையசைத்த கன்னி கேட்டாள்: 'இப்ப தெரியுதா? அது என்னது?'

'இப்ப மட்டுமென்ன! எப்பவுமே தெரியாதுதான். பெரிய கவிதைப் பொருளாக இருக்குதே அது!' என்று சொன்னான் அவன். தனது ஹாஸ்யம் ரசிக்கப்படாமல் போய்விடுமோ என்ற சந்தேகத்தினால் விளக்கமும் கூறினான் 'புரிந்து கொள்ள முடியாத விஷயம்தான்' என்று.

'இதுக்குப் பேரு கேசரியாம். தயாரித்து முடித்ததும் அக்கா சொன்னாங்க.'

'சொன்னால்தான் புரியும். இப்ப எல்லாம் புரிந்துவிட்ட மாதிரித்தான் தோணுது' என்று அவன் சொல்லவும் அவள் சிரித்தாள். 'இப்ப என்னம்மா சிரிப்பு? இப்படிச் சிரிக்காதே, சிரிக்காதேன்னு அன்றைக்கே சொல்லலே?'

'சொன்னீங்க. அதுக்கென்ன?' என்று சவாலிடும் பெண்ணிடம் என்ன சொல்லி எப்படி உணர வைப்பது என்று பேசாமலிருந்து விட்டான் ரகு.

'இந்தாம்மா கிண்ணம். புஸ்தகத்தையும் வாங்கிக் கிட்டுப் போ. சீக்கிரம் போய்ச் சேரம்மா.'

'அம்மா—அம்மா—அம்மா! என்ன பேச்சு இது! இந்தா உலகுன்னு சொன்னா என்னவாம்?'

'இந்தச் சின்ன விஷயத்திற்கு உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருதோ தெரியலியே!'

'உங்களுக்கு ஒரு எழவுமே தெரியாதுதான். உம். கொடுங்க. நான் சீக்கிரம் போகணும். அக்கா கண்டிப்பாக் கோபிக்கத்தான் போறாங்க. ஏண்டா இவ்வளவு நேரம்? அப்பவே வர்றதுக்கென்ன? தாட் பூட் தஞ்சாவூர்னு குதிப் பாங்க!' என்று கூறி, அபாரச் சிரிப்பு சிந்தினாள் கன்னி.

'நீ மட்டும் இஷ்டம்போல் பேசலாம் போலிருக்கு. அம்மா என்கிறே, அக்கா என்கிறே......'

'சரி சரி' என்று எச்சலுடன் சொன்னாள் அவள். ரகு கொடுக்க வேண்டியவற்றைக் கொடுத்தான். அவற்றை வாங்கிக்கொண்டதும் அவள் பேசாமல் 'சரி, நான் போறேன். போயிட்டு வர்றேன்' என்று சொல்லியபடி அங்கே நின்றாள்.

'ஏ உலகு. போறதானால் போ. அநாவசியமாக நின்று கொண்டு போறேன், போறேன் என்காதே. உனக்குச்

செய்வதற்கு வேலை யில்லை. இங்கே யிருந்து போக இஷ்ட முமில்லை.

'அதில்லே. அந்த வீட்டு அம்மா சத்தம் போடுவாங்க. அடிக்கடி சத்தம் போடுவதும், புத்தி சொல்வதும்தான் வேலை. ஏ தடிமாடே, அங்கே எட்டிப் பார்க்காதே, இங்கே நிற்காதே, கத்திப் பேசாதே, கனைக்கிற மாதிரி இளிக்காதே— இதே தொல்லைதான். பக்கத்து வீட்டில் இருப்பவரோடு என்ன விளையாட்டு; என்ன சிரிப்பாணிப் பேச்சு என்று சதா கண்டிப்பு தான்!'

'உனக்கு நல்லதைத்தானே சொல்லுறாங்க!' அவனும் அதிக உபதேசம் புரியத் தொடங்கி விடுவான் என எண்ணியவள்போல், அவள் அங்கு நிற்க விரும்பாமல் வேகமாக வெளியே சென்றாள்.

'போய்ச் சேர்ந்ததப்பா. முதல்லே வேடிக்கையாக இடம் கொடுத்தது வினையாக முற்றிவிடும் போல் தோணுது. வயது வந்த பெண்ணு. கட்டுப்பாடு இல்லையென்றால் இப்படித்தான் திரியும்!' என்று நினைத்தான் ரகு. அந்தப் பெண்ணின் ஆட்டங்களை அசைவுகளை குதிப்புகளை எல்லாம் காண்பதில் தனக்கு ஒருவித மகிழ்ச்சி ஏற்படுகிறது! அவளுடன் கேலி பேசிக் களிப்பதில், அவள் பதில்களையும் சிரிப்பையும் கேட்பதில் உள்ளம் இனிமை பெறுகிறது என்பதை அவனால் மழுப்பி மறைத்துவிட முடியாது. ஒவ்வொரு முறையும் 'இனி இப்படிச் செய்யக்கூடாது. அந்தப் புள்ளெ கூடச் சிரித்துப் பேசி விளையாடக் கூடாது' என்று அவன் தனக்கே தடை விதித்துக் கொள்வது உண்டு. ஆனால் அது நடைமுறையில் அடிபட்டுப் போவதும் வழக்கம்தான்.

இந்தத் தடவையும் அதே போல் தனக்குத் தானே விதி செய்து கொண்டான் அவன். 'இவ்வளவு நேரம் பேசின பேச்சிலே ஏதாவது பொருள் உண்டா? பயனுள்ள விசேஷம் உண்டா? வெறும் பேச்சு. வீண் பேச்சு. காலக் கொலை தான்' என்று முனங்கியது அவன் உள்ளம்.

'ஆனால் இனித்திருந்தது. இனிமையாய் பொழுது போயிற்றல்லவா?' என்று குரல் கொடுத்தது மனக்குறளி.

'அடாடா. ஞானசம்பந்தரைப்பற்றிக் கேட்க ஞாபகம் இல்லாமல் போய்விட்டதே! அவர் எப்ப வருவார் என்று தெரியுமா, ஏன் போனார், என்ன நடந்தது என்று கேட்டிருக்கலாம்' என்ற எண்ணம் பிறந்தது. சமாதான நினைவும் கூடவே தலை தூக்கியது.

'கேட்டுத்தான் என்ன பிரயோசம்? அவர் நடவடிக்கைகள் அவர் வீட்டில் உள்ளவர்களுக்கே தெரியாது. இந்தத் தடவை மட்டும் எப்ப திரும்ப வருவார் என்பது தெரிந்து விடுமா என்ன! ஆனால் என்ன நடந்தது என்றாவது கேட்டிருக்கலாம். அல்லது சகுந்தலையின் போக்கிலே புதுமை பிறந்திருப்பதன் வயணமென்ன என்று அறிய முயன்றிருக்கலாம்' என்று எண்ணினான் அவன்.

அடுத்த வீட்டுச் சகுந்தலை திடீரென்று மாறிப்போனவள் போல் தான் தோன்றினாள். ரகுராமனுக்குத்தான் அப்படித் தோன்றியது. அவள் தோட்டத்தில் செடிகளின் அருகிலே நின்றாள். அவ்வேளைகளில் ரகு பின்பக்கம் வர நேர்ந்தால்,அவள் முன்போல் ஓடி மறைந்து கொள்வதில்லை. அமைதியாகத் திரும்பிப் பார்த்து விட்டு சாவதானமாக நடந்து செல்வாள். அவ்விதம் போவதற்குள் அவன் மீது எத்தனை தடவை எத்தனை ரகப் பார்வைகள் வீசியிருப்பாள் என்பதை அவனே கணக்கிட இயலாது. அவள் சிரித்தாளா; சிரிக்க முயன்றாளா; அல்லது சிரிப்பது போல் தோன்றியதா என்று அவன் மனம் குழப்பமுற்றுத் திணறும்.

இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு இந்தப் பழக்கம் கூட மாறிவிட்டது. அவனைக் கண்டவுடன் நகர்ந்து செல்வதையே விட்டு விட்டாள் சகுந்தலை. நின்ற இடத்திலேயே தனது அலுவல்களைக் கவனிப்பவள் போல் நின்று விடுவதை வழக்கமாக்கிக் கொண்டாள். படித்த புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கவும், வேறு புஸ்தகம் வாங்கிக் கொள்ளவும் சதா உலகு தயவை நம்பி யிருக்கவில்லை அவள். கிணற்றருகில் அவன் நிற்கும் போது, துவளத்தையே இத்தகையப் பரிவர்த்தனைகளுக்கு உரிய பீடமாகப் பயன் படுத்த அவள் தவறவில்லை.

'அவளது செயல்களில் தவறாகக் கருதுவதற்கோ, தகாத எண்ணம் கொள்வதற்கோ இடமளிப்பவை எதுவுமில்லை. ஆரம்ப காலத்தில் நீடித்த புதுமைக் குழப்பம், சந்தேக மனோபாவமெல்லாம் கால ஓட்டத்தினால் தேய்ந்து மங்கிவிட்டது; கொஞ்சம் கொஞ்சமாகக் கூச்சம் தெளிந்து சகஜபாவம் பெற்று வருகிறாள். அவ்வளவு தான்' என்று நினைத்தான் ரகுராமன்!

## — 18 —

விசேஷ நிகழ்ச்சி எதிர்ப்பட்டதும் அது அதிக விசேஷங்களுடன் வளரும் என்று ரகுராமன் எதிர்பார்ப்பது வழக்கம். ஏமாற்றங்கள் கிட்டுவதும் வழக்கம்தான்.

மாலையில் கிணற்றடியில் சகுந்தலை தானாகவே பேசியதும், அவள் தயாரித்திருந்த ரவாகேசரியை உலகு மூலம் அனுப்பி வைத்ததும் வாராது வந்த விசேஷங்கள் என மதித்த ரகு அவை மேன்மேலும் வளரும் என்றே எண்ணினான். கிணற்றருகிலும், மாடி வராந்தாவிலும் முன் வந்து நின்று பேசிச் சிரிக்கும் சகுந்தலையை மனதால் கண்டு மகிழ்ந்தான் அவன்.

ஆனால் வழக்கமான ஏமாற்றம்தான் காத்திருந்தது அவனுக்கு. அடுத்த வீட்டுக்காரி ஒரு சந்தர்ப்பத்தில் தாராளமாக முன் வந்து பேசிய குற்றத்திற்குத் தானே 'பிராயச்சித்தம்' செய்து கொள்வது போல் மறுநாள் முழுவதும் முன் பக்கத்திலோ தோட்டத்தின் பக்கமோ தலைகாட்டாமல் வீட்டினுள்ளேயே ஒடுங்கிக் கிடந்தாள். அது அவனுக்கு வருத்தம் அளித்தது.

மறுநாள் அவள் மாடிக்குப் போனபோது, வராந்தா ஜன்னல் பக்கம் நின்று உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சகுந்தலையின் முகம் தெரிந்தது. அவனைக் கண்டதும் அவள் வேகமாக விலகி மறைந்தாள். அவள் நின்றிருக்கலாமே, ஒன்றும் பேசாவிட்டாலும் மோகனப் புன்னகை அருள் புரிந்து மெதுவாக நகர்ந்திருக்கலாமே என்று எண்ணினான் ரகு.

'அடுத்த வீட்டுச் சகுந்தலையைப் புரிந்து கொள்ளச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுவிட்டன என்று எண்ணும் வேளையிலேயே, அவள் புரியாத புதிராக எட்டிப்போய் நிற்கிறாளே. அவளுக்கு நிலையான மனமே கிடையாது போலிருக்கு!' என நினைத்தான் ரகு.

நின்றவள் மறைந்து விட்டதனால் எழுந்த வருத்தம் காரணமாக அவனுக்குத் தான் அப்போது மாடிக்கு வந்தது ஏன் என்பதே மறந்து விட்டது. உடனேயே கீழே போய் விடலாமா என்று நினைத்தவன், 'மெதுவாகத்தான் போய்க் கொள்ளலாமே; வந்த சிரமம் தீரக் கொஞ்ச நேரம் இங்கு

சாய்ந்திருக்கலாமே' எனும் ஆசையோடு சோபாவில் விழுந்தான்.

சிந்தையை அடக்கிச் சும்மா கிடக்கும் சாதனை பயில முயன்ற ரகுராமன் திடுக்கிட நேர்ந்தது, உடல் மீது என்னவோ வந்து விழுந்ததனால். சும்மா கண்களை மூடிக் கிடந்தவன் விழித்துத் தலையைத் தூக்கிப் பார்த்தான். இரண்டு இலைகளோடு சேர்ந்த சிவப்புப் பூ ஒன்று அவன் மீது கிடந்தது. பூவா! ஏதோ பல்லி கில்லி விழுந்து விட்டதோ என்று பார்த்தேன்' என முனங்கியது அவன் மனம். அதற்குப் பிறகு தான் பூ அங்கு எப்படி வந்தது என்ற கேள்வி பிறந்தது அவன் உள்ளத்தில்.

அவன் வாராந்தா ஜன்னலை நோக்கித் திரும்பினான். ஒருவேளை சகுந்தலை தான் அப்படிச் செய்திருப்பாளோ என்ற விபரீத ஆசை அவனுக்கு. அவள் திரும்பியதும் 'குபுக் கெனப் பதுங்கி உட்கார்ந்து விட்டவளின் தலையுச்சி தான் தெரிந்தது. 'களுக்' கென்ற சிரிப்பும் கேட்டது.

'இந்த மூதேவியா ; உலகுதான் இந்தக் குரங்குதனம் செய்ததா ! சரிதான். அது இது மட்டும்தானா செய்யும். எமப்பய புள்ளெயாச்சே அது !' என்று எரிச்சலுடன் புலம்பியது அவன் மனம்.

'ஏ உலகு ! ஏ உலக்கை ! ஏ குந்தாணி ! ஏ எருமை மாடு!' என்று அர்ச்சனை புரிந்தான் ரகு. 'வவ் வவ் வவ்வே' என்று வாயினால் வலிப்புக் காட்டிக்கொண்டே எழுந்து நின்றாள் அவள் !

'பேஷ் ! செங்குரங்கு என்றால் இப்பத்தான் உனக்குப் பொருந்தும் !' என்று கூறிச் சிரித்தான் அவன்.

அவள் சிடுசிடுத்தாள் : 'மூஞ்சியைப் பாரு ! குரங்காம்! உங்க முகறைக்கு எங்க மோறை ஒண்ணும் கெட்டுப் போகலே. குந்தாணியாம், குத்துலக்கையாம் ! வவ்வவ்வே. உங்க கண்ணிலே கோளாறு இருக்கணும். டாக்டரிடம் காட்டுங்க சீக்கிரமா !'

அவள் கோபம் அவனுக்கு குதூகலம் தந்தது. அவளைக் கிண்டல் செய்து மேலும் முகம் சிவக்கச் செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. 'அம்மா உலகு! ஏளா யேம்மா உலகு!' என்று நீட்டினான்.

'நீங்க ஒண்ணும் கூப்பிட வேண்டாம்—அம்மா ஏளா யின்னு!' என்று சீறி விழுந்தாள் அவள்.

'யே புஸ்ஸுன்னு பாயுதே. நல்ல பாம்புதான். ஏ விரியன் பாம்புக்குட்டியே! சைத்தானே, தூரப்போ!' எனச் சொல்லிய ரகுவுக்குச் சிரிப்பு அள்ளிக்கொண்டு வந்தது! தாங்கமுடியாமல் சிரித்தான்.

'இஹிஹிஹீ! இளிக்கதைப் பாருங்க. தான் மட்டும் கனைக்கலாம். மற்றவங்க இலேசாகச் சிரித்தால் போதும். சிரிக்காதே, கனைக்காதே, கத்தாதே,! இப்ப இஹி ஹீ!' பல்லைப் பாரு!'

'அம்மான்னு கூப்பிடப்படாதாம். ஏளாவும் வேண்டா மாம். ஏட்டி உலகு. ஏ குட்டி உலகு-இப்படிக் கூப்பிட்டால் இனிக்குமா?' என்று கேட்டான் ரகு, அவள் முகத்தை கவனித்தபடியே.

உலகுவிற்கு அழுகை வந்து விட்டது. ஜன்னல் விளிம்பு மீது கைகளைப் பதித்து அதன் மேல் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள் அவள். கொஞ்ச நேரத்திற்கு முன்பே குளித் திருந்ததனால் நன்கு உலர்ந்திராத கூந்தலைப் படிய வாரிச் சீவிஇறுகப் பின்னிப் பூ சூடியிருக்கவில்லை. சும்மா கோதிக் கட்டிக் கொண்டை போட்டிருந்தாள்.

அங்கு மலர் சூடியிராதது ஒரு குறையாகப் பட்டது ரகுவுக்கு. அவன் கையில் இரண்டு இலைகளின் நடுவே ஜம் மென்று திகழ்ந்த மலர் இருந்தது. அப்புறமென்ன! 'மலர் எங்கிருந்தால் அதிக அழகு பெறுமோ அந்த இடத்தை அடைய வேண்டியதுதான்' என்று தீர்மானித்தான். மெதுவாக எழுந்து நடந்தான்.

உலகு முகத்தைக் கவிழ்த்தபடி நின்றாள். வெண்ணிற ஜாக்கெட்டின் மேல் இனிய பச்சை நிறத் தாவாணி பரந்து கிடக்க கருங்கூந்தல் கொண்டையாகத் திகழ விளங்கிய முதுகுத் தோற்றம் கவர்ச்சிகரமாக இருந்தது. அந்த அழகிய முதுகில் தட்டித் தடவிக் கொடுக்க வேணும் என்று அவன் கை துருதுருத்தது. ஆனால் அவன் அறிவு தடை விதித்தது.

அவ அறிவு அவள கூந்தலில் மலரைச் சூட்ட வேண்டும் என்ற ஆசையைக் கட்டுப்படுத்தவில்லைதான்!

அவள் தலையில், அவள் வீசி யெறிந்த மலரைச் செருகி விட்டு 'ஆகா, இப்பத்தான் நல்லா இருக்குது' என்ருன்.

அவன் குரலை மிக அருகில் கேட்டுப் பதறி நிமிர்ந்தாள் உலகு. அவள் கண்களில் நீர் தேங்கி நின்றது. கன்னங்களில் துளிகள் நின்றன. ஸ்பரிச சுகம் தரக்கூடிய மிருதுக் கன்னங்களைத் தடவி அவள் கண்ணீரைத் துடைக்க வேணும் என்ற துடிப்பை அவனால் அடக்க முடியவில்லை.

கண்ணுடிப் பரப்பில் படிந்த மழைத்துளிகள் போல் நின்ற நீர் முத்துக்களைத் தன் விரல்களினால் தட்டி விட்டு அவன் குழைவுக் குரலில் பேசினான் 'அழுதியாம்மா கண்ணு? ஐயோ பாவம்! அழாதே அழாதே, அழுகப் பழம் வாங்கித் தாறேன்' என்று.

குபுக்கென்று சிரித்தாள் குமரி. சந்திரனை மறைத்த மேகம் சட்டென விலகி விட்டது போலிருந்தது, முழுநகை மலர்ந்த அவள் முகத்தைக் காணும் போது. உலகின் சிறு பிள்ளைத்தனம் அவனையும் சிறுபிள்ளையாக மாற்றியது.

'அழுத புள்ளையும் சிரிசசதாம்; கழுதைப் பாலைக் குடிச்சுதாம்! யே வுஹஹோ!' என்று கத்தினான் அவன். அவள் பதிலுக்கு 'வவ்வவ்வே!' என்று கீழுதட்டை மடித்து முகத்தைச் சுளித்துப் பழிப்புக் காட்டினாள்.

'வலிச்ச மோறையும் சுழிச்சுப் போம்? இளிச்ச பல்லும் விழுந்து போம்!' என்று சொல்லி சிரித்தான் ரகு.

'போனால் போகட்டும்! போகணும்னு இந்த மகாப் பெரியவர் கிட்டேக் கேட்டு விட்டுத்தான் போகும் போலிருக்கு!' என்று சிணுங்கினாள் குமரி.

'உலகு உன் அழகான தலையிலே ஜோராகப் பூ வைத்திருக்கிறேனே! ஐயோ, அதை நீ பார்த்து மகிழக் கண்ணுடியில்லையே, என்ருன் ரகு.

அவள் உள்ளம் மலர்ந்தது. அதனால் கண்கள் தனியொளி பெற்றன; அவள் கை உயர்ந்து பின் சென்று தொட்டுப் பார்த்ததும் அவள் ஆர்வப் பார்வையை அவன் மீது செலுத்தினாள். அச்சுடர்க் கண்களில் அவ்வேளையில் ஊறிப் பொங்கிய உணர்வுப் பிரதிபலிப்புகளைப் பிரித்துப் பிரித்துப் பேசமுடியாதுதான்.

'உம். கொஞ்சம் கதவைத் திறவுங்களேன்' என்றாள் உலகு.

'ஏனும்?'

'திறங்கன்னு சொன்னு திறக்க வேண்டியது தானே!'

'நீ எசமானியம்மா! உத்திர விட்ட உடனே நான் திறந்திடனும். இல்லையா?' என்றான் கிண்டலாக. அவள் நகைத்தாள்.

'உங்களுக்கு ஒரு சாமான் கொண்டு வந்திருக்கேனே!' என்றாள், ஆசையைக் கிளறி விடும் தொனியில்.

'என்ன சாமான்?'

'கதவைத் திறந்தால், தானே தெரியும்!'

'சும்மா சொல்லுதே. நீதான் வெறும் கையோடு நிக்கிறியே.'

'ஊம்ஹூம். நான் கீழே பதுங்கி யிருந்தேனு இல்லையா, அப்போ தரையில் வச்சேன். அது அங்கேயே யிருக்கு.'

'பொய். பொய் சொல்றே!'

'நான் ஏன் பொய் சொல்லப் போறேன்' என்று கூறி ஒயிலாகத் தலையசைத்தாள் அவள். ரசிக்க வேண்டிய காட்சியாகத் தானிருந்தது அவனுக்கு.

'ஆகா, தெரியுமே! நீதான் அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரி யாச்சே!'

'ஓ! நீங்க பெரிய அரிச்சந்திரன் என்ற நம்பிக்கை போலிருக்குது உங்களுக்கு' என்று சொல்லிக் கலகலச் சிரிப்பைக் கொட்டினாள் உலகு. அவள் பேச்சு சாதுர்யம் மறுபடியும் அவனைப் பிரமிக்க வைத்தது.

அவன் கதவைத் திறந்தான். உலகு குனிந்து தரையிலிருந்து எதையோ எடுத்து, தாவணியால் மூடி மறைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். அவள் உயரமும் உயரத்துக்கேற்ற பருமனும், அவற்றுக்கு அமைவாக அவள் அணியும் பாவாடை தாவணியும், அழகு செய்து கொள்ளும் நயமும்

உலகைப் பார்க்கும் ஒவ்வொரு சமயத்திலும் ரகுராமனுக்கு ஆனந்தம், மனநிறைவு, ரசித்துப் பாராட்ட வேண்டும் எனும் துடிப்பு முதலியவைகளை உண்டாக்கின.

இப்பொழுதும் அப்படித்தான். தரையிலே புரண்டு அலை அலையாக அவளைச் சுற்றித் துவண்டு தொங்கிய ரோஸ் வண்ணப் பாவாடையும், இளம் பசுமை நிறத் தாவணியும் அவளுக்கு அமைவாக, அற்புதமாக, அணி செய்தன. மையுண்ட கண்களைச் சுழலவிட்டு, அவள் நடக்கையிலே அவன் மனமே சுழன்று புரண்டது!

'உலகு, இந்தப் பாவாடை தாவணி உனக்கு ரொம்ப நன்றாக இருக்கின்றன' என்றான்.

'ரொம்ப சந்தோஷம். நிரம்ப நன்றி. பாராட்டியதனால் சந்தோஷம். பூ வைத்ததற்காக நன்றி.'

சகுந்தலை ஏதோ கொடுத்து அனுப்பி யிருக்கிறாள் போலும் என மகிழ்ந்து போன ரகுராமனுக்கு அந்தப் பெண் வேடிக்கை பண்ணி நின்றது பிடிக்கவில்லை. 'என்ன சாமான் கொண்டு வந்தே?' என்று கேட்டான்.

'ஒண்ணுமில்லையே' என்று கூறிச் சிரித்தாள் குறும்புக்காரி.

'அக்கா ஒண்ணும் கொடுத்தனுப்பலே? தங்கச்சி சும்மா தான் வந்தியா இளிச்சுப் பேசுறதுக்கு!' என்றான் ரகு. சிறு எரிச்சல் கலந்திருந்தது அவன் குரலில்.

'உங்களை அரிச்சந்திரன் என்று சொன்னது தப்பு!' என்று விளையாகவே சொன்னாள் அவள்.

'பின்னே என்ன சொல்லணுமாம்?'

'துஷ்யந்தன்னு சொன்னால் பொருத்தமாக இருக்கும். சகுந்தலை தான் அடுத்த வீட்டுக்காரியாக வந்து வாய்த்திருக்கிறாளே!' என்று குரலைத் தாழ்த்திப் பேசினாள்.

மண்டையில் அடி விழுந்தது போலிருந்தது அவனுக்கு, 'ஏட்டி, என்ன கொழுப்பு உனக்கு?' என்று கத்தினான் மேலுக்கு. உண்மையில் அவன் உள்ளம் உணர்ச்சிகளால் குழம்பியது. 'இந்தப் புள்ளெ கூடப் புரிந்து கொள்ளக்

கூடிய வகையிலா நாம் நடந்து வந்திருக்கிறோம். அப்ப அவளுக்கும் விளங்காமலா போயிருக்கும். அதுதான் விலகி விலகிப் போகிருளோ என்னவோ !' என்று நினைத்தான். 'ஒரு வேளை இந்தப் பெண் விளையாட்டுக்காக பெயர்களை வைத்து வேடிக்கை பண்ண விரும்பி யிருக்கலா மல்லவா !' என்று தீனக்குரல் கொடுத்தது மனக்குறளி.

'இந்தத் துஷ்யந்த மகாராசா நினைப்பு சகுந்தலா தேவிக்கும் இல்லாமலா யிருக்கும்! இருக்கும் இருக்கும்! இவர்தான் என்னைக்கூடக் கவனிப்பதில்லையே !' என்று மென்குரலில் பேசினாள்.

'இப்ப உன்னை என்ன செய்றேன் பாரு' என்று கூவிக் கொண்டு அவள் அருகில் விரைந்தான் ரகு. அவளோ தாவணிக்குள் மறைத்து வைத்திருந்த புத்தகத்தை 'தொம்' மென்று சோபாவில் போட்டுவிட்டு, சிரித்துக் கத்தியபடி துள்ளிப் பாய்ந்தாள் வெளியே ஓடுவதற்காக.

வெளியே அடி எடுத்து வைத்து விட்டாள். ஆனால் வேகமாகத் தொடர்ந்த ரகுவின் கையில் அவள் தாவணி சிக்கிக் கொண்டது. அவன் அதைப் பிடித்து இழுத்தான். அவள் முகம் செக்கச் சிவந்தது. 'ஐயோ, விடுங்கள். விட்டுவிடுங்கள், அக்கா வந்திடப் போருள்' என்று வெட்க மிகுதியோடு கெஞ்சினாள் உலகு.

அவன் துணியை விடாமல் 'இனிமேல் அப்படியெல் லாம் பேசாதே. பேசாதே !' என்று கூறி மண்டையில் செல்லக் குட்டுகள் இரண்டு பதித்தான். வெட்கம் பயம், மகிழ்ச்சி எல்லாம் குழம்பிய முகத்தினளாய் அக் குமரிப் பெண் நின்ற கோலம் ரசனைக்கு விருந்தாகத் தானிருந்தது. ஆனால் தன் தவறுக்காக அவன் வெட்கிக் குன்றிப் போக வேண்டிய கட்டம் உடனேயே வந்தது.

உலகு பயந்தபடியே வந்து சேர்ந்தாள் சகுந்தலை. 'உங்கள் நாடகம் ரொம்ப நல்லா யிருக்கு. நானும் அப்பவே பிடித்துக் கவனித்துக் கொண்டுதான் நிற்கிறேன். உங்கள் விளையாட்டுச் சிரிப்பும், பேச்சும் என் காதிலே தெளிவாகத் தான் விழுந்தது !' என்று சுடும் குரலில் பேசினாள் அவள். பொதுவாக இரண்டு பேருக்கும் படும்படியாகத்தான் சொன்னாள்.

ரகு தாவணியைப் பற்றி யிருந்த கையை மீட்டுக் கொண்டான். உலகு குனிந்த தலை நிமிராதவளாக விலகி நின்றாள். சகுந்தலை இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். தைக்கும் அம்புகளாகத் தன் மீது பாய்ந்த நோக்குகள் எரிக்கும் கொள்ளிகளாக உலகு மேல் சாடியதை ரகு கவனித்தான். அவன் நெஞ்சு அவனை வதைத்தது.

'மூதேவி! கழுதை மாதிரி வளர்ந்தது தான் மிச்சம். மூளையே கிடையாது. கனைக்கிறதும், குதிக்கிறதும், ஆம்பிளையோடு விளையாடுறதும் கேலி செய்றதும்—உன் வயசுக்கு மீறின செயல்களாகிப் போச்சு. உன்னை எத்தனை தடவை கண்டிச்சுதான் என்ன செய்ய?' என்று கூப்பாடு போட்டாள் சகுந்தலை.

பிறகு அவன் மீது பாய்ந்தது பாணம். 'உங்களுக்கு இதுகூடவாத் தெரியலே? சமையப் போகிற பொம்பிளைப் புள்ளெ கூட உங்களுக்கு இது என்ன விளையாட்டு? அது தான் அடக்கம் ஒடுக்கம் இல்லாமல் புத்தி கெட்டுத் திரியுதுன்னு, நீங்ககூட இப்படியா நடக்கணும்? மற்றவங்க யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க? வீட்டிலே அவங்க இருக்கிறபோது இதுமாதிரி விளையாடினால் அவங்க தான் என்ன சொல்ல மாட்டாங்க?'

ரகுராமனுக்குப் பேச வாயில்லை. அவன் செய்தது தவறு என அவனே உணரும் பொழுது, குற்றச் சாட்டுக்கு எப்படிப் பதில் சொல்லி மழுப்ப இயலும்? அவனும் தலை கவிழ்ந்து நின்றான். 'சே, இப்படியா நடக்கணும்! அவள் என்னைப் பற்றி உயர்வான எண்ணங்கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கையாக இருந்ததெல்லாம் இன்றையச் சிறு விளையாட்டினால் அடியோடு போய்விட்டதே' என வருத்தப் பட்டான் அவன்.

அவன் இயல்பாக உலகைக் கவனித்தான். தான் லேசாகக் கேலி செய்ததற்கு அழுத பெண் இப்போது 'உம்' மென்று மூஞ்சியை வைத்துக்கொண்டு, குறுமுழி முழித்தபடி பேசாமல் நிற்கிறதே என்ற வியப்பு மேலிட்டது அவனுக்கு. 'நடிப்புத் திறமை உள்ள பெண் இது. அப்ப செய்ததெல் லாம் நடிப்பாகத்தானிருக்கும்' என்றும் நினைத்தான்.

ரகு உலகுவைப் பார்த்ததைக் கவனித்த சகுந்தலை சீறி விழுந்தாள்; 'ஏ எருமை மாடே, இன்னும் ஏன் இங்கேயே

நிற்கிறே? போ. வீட்டுக்குள்ளே போய்ச் சேரு!' சொல்லுடன் கையையும் பிரயோகித்து அவளைத் தள்ளிக்கொண்டு போனாள் சகுந்தலை.

மாடி அறைக்குள் நுழையும் முன் வெவ்வேறு எண்ணச் சுழலில் சிக்கிய மூவருக்கும் ஒரே ரக நினைப்புதான் எழுந்தது என்பதை முட்டி மோதிய மூன்று ஜோடிக் கண்களும் காட்டிக் கொடுத்து விட்டன: பரஸ்பரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளும் ஆசைதான்!

ஏக்கம் நிறைந்து நின்ற உலகுவின் கண்கள் ரகுவின் விழிகளைச் சந்தித்ததும் தரை நோக்கித் தாவின. சகுந்தலையின் விழிகளில் புரண்ட பாவத்தை அவனால் புரிந்துகொள்ள இயலவில்லை தான்.

அவன் பார்வையை ஏற்ற சகுந்தலை சடக்கெனத் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். 'போ போ. உன்னை என்ன செய்கிறேன்னு பாரு' என்று கறுவினாள் அவள். அவள் பேச்சு காதில் விழுந்ததும் விளையாட்டுப் பிள்ளை உலகுக்காக அனுதாபம் கொண்டான் ரகு. அவன் அனுதாபப்பட்டு என்ன பிரயோசனம்!

## — 19 —

தன்னுடன் விளையாடியதற்காக உலகுக்கு சகுந்தலை என்ன தண்டனை அளிக்கப் போகிறாளோ என்ற வருத்தம் ரகுராமனுக்கு இருந்தது. நடந்தது நடந்து விட்டது. அதன் விளைவாக நடக்கப் போவது நடந்து தானே தீரும் என்று மனதைத் தேற்றிக் கொள்ள முயன்றான் அவன். ஆனால் மனம் கேட்டால் தானே!

மீண்டும் உலகு தன் முன் வருவாளோ, மாட்டாளோ; சகுந்தலை அவளுக்குக் 'கடுங்காவல் தண்டனை' விதித்து சதா தன் கண் முன்னாலேயே வைத்துப் பாதுகாக்க விரும்பினாலும் விரும்பலாம். ஆனால் அந்த விளையாட்டுப் பிள்ளை எப்படியும் அவளை ஏமாற்றி விட்டு எப்போதாவது தலை காட்டாமலா போய் விடும் என்ற நினைவும் சுழியிட்டது அவன் உள்ளத்திலே.

'சகுந்தலை என்னைப் பற்றித் தவறாக எண்ணலாம். ஆனால் என் உள்ளத்தில் தவறான நினைவு எழவே இல்லை.

உலகு சிரித்து விளையாடியது மகிழ்வு தந்தது. அந்தப் பெண்ணைக் கேலி செய்து சிரிப்பதிலே தனியானதொரு உற்சாகம் எனக்கு ஏற்பட்டது உண்மை தான். ஆனால் விகல்ப நினைவுகளோ விபரீத ஆசைகளோ எனக்கு ஏற்பட்ட தில்லையே!' என்று தன்னைத் தானே ஆராய்ந்து கொள்ளும் பண்பிலே நினைத்தான் ரகு.

எனினும் அந்தப் பெண்ணின் மனோ நிலையும் இதே ரகத்ததாகத் தான் இருக்குமா என்ற கேள்வியும் தலை தூக்காமல் இல்லை. அதைப் பற்றி உறுதியாக எதுவும் சொல்ல முடியாது தான். 'பார்க்கப் போனால் உலகு வெறும் சின்னப் பிள்ளை. விளையாட்டுப் புத்தி ஜாஸ்தி. வயசு ஆக ஆகத் தானாகவே அடக்கமும் ஒடுக்கமும் பொறுப்பு உணர்ச்சியும் வந்து விட்டுப் போகிறது' என்று பேசியது மனம்.

'அதற்காக அந்தப் பெண்ணைக் கண்டிப்பது தப்பு, கண்டிக்கக் கூடாது என்கிறாயா!' என்று குறும்புத்தனமாக ஒரு கேள்வியை வீசியது மனதின் வேறொரு குரல்.

'நான் அப்படிச் சொல்லவில்லையே!' என மழுப்பியது மனக் குறளி.

'நீ என்ன தான் யோக்கிய சிகாமணியாக இருந்தாலும், அவளை அறியாப் பெண் என்றே மதித்தாலும், நீயும் அவளும் ஆடிய ஆட்டங்களைக் கவனிக்கிறவர்களுக்கு கண்டிப்பாகச் சந்தேகம் எழத்தான் செய்யும். சகுந்தலை கட்சியில் நியாயம் இருக்கிறது. நீ உலகுவிடம் நடந்து கொண்ட முறையே தவறு' என்று 'ஜட்ஜ்மெண்ட்' வாசித்தது நல் மனம்.

'சரி சரி. உப்புப் புளிக்குக் கூட உதவாத இந்த விஷயத்தை வைத்துக் கொண்டு குழம்புவானேன்' என்று ஒதுக்கியது மனக்குறளி.

சாயங்காலம் ரகுராமன் கிணற்றருகே நின்ற போது அடுத்த வீட்டுப் பக்கம் காலடிச் சரசரப்பும் கைவளை ஓசையும் எழுந்ததைக் கேட்டதும், அவன் ஆவலுடன் கவனித்தான் அழகி சகுந்தலை தான் வருகிறாளோ என்று. ஏமாற்றம் தான்! அங்கு குறும்புக்காரி உலகு வந்து நின்றாள்.

சிரத்தையுடன் அழகு செய்து கொள்ளவில்லை அவள். தலை மயிர் கூட அலட்சியமாக விடப்பட்டிருந்ததனால் தாறுமாறாகச் சிலிர்த்துப் பிரிந்து கிடந்தது. அவள் முகத்தில்

விஷமத்தனம் பூத்திருக்கவில்லை. அவனைக் கண்டதால் அவள் இதழ்களில் சிறு நகையும் கண்களில் ஒரு ஒளியும் பிறந்தாலும், அவள் தன் இயல்பை மறந்தவள் போல் தலை குனிந்து நின்றாள். அவனைப் பேசட்டுமே என்று எதிர் பார்த்து நின்றாளோ என்னவோ!

தேடி வந்து நிற்பவள் வாய் திறந்து ஏதாவது சொல்லுவாள் என்று காத்து நின்றான் ரகு. அவள் தன் சுழற் கண்களை அவன் மீது ஏவுவதும் வேறு பக்கம் திரும்புவதும் தரையில் பதிப்பதுமாக நேரம் போக்கினாளே தவிரச் சொல் எதுவும் சிந்தவில்லை.

ரகுராமன் உள்ளத்தில் சிறு உதைப்பு. திடீரென்று சகுந்தலை அங்கு வந்து விடலாம்; இப்போது கூட எங்காவது பூனை போல் பதுங்கியிருந்து கவனித்துக் கொண்டிருந்தாலும் இருக்கலாம் என்று தான். அதனால் உலகுவைச் சீக்கிரம் அனுப்பி விட விரும்பினான் அவன்.

'இதுவரை வந்த சனியன் போதாதா! மேலும் வீண் சனியை விலைக்கு வாங்க வேண்டுமா?' என்று நல்லதனம் பேசியது அவன் உள்ளம். ஆகவே அவனைப் பேசினான்: "என்ன உலகு, ஏன் ஒரு மாதிரி இருக்கிறே? அம்மா அடிச்சாங்களா?'

உலகு அவன் முகத்தையே நோக்கினாள். பிறகு பெரிய ரகசியத்தைச் சொல்வது போல, அங்குமிங்கும் திரும்பிக் கவனித்து விட்டு, எச்சரிக்கையாகப் பேசினாள்: 'அவளுக்குப் பொறாமை. ரொம்பப் பொறாமை. அதுதான். பொறாமை பிண்டம். அதனாலே தான் என்னை ஏசிக் கண்டிக்கிறாள்.'

அவள் பேச்சைப் புரிந்து கொள்ள இயலவில்லை அவனால். 'என்ன சொல்கிறே? அவளுக்கு ஏன் பொறாமை ஏற்படுது?' என்று கேட்டான்.

'நான் உங்க கூடச் சிரிச்சுப் பேசி விளையாடுறேனே. அதனால் தான். அதை அவளாலே சகித்துக் கொண்டிருக்க முடியலே; பொறாமை, அவளும் இளிச்சுப் பேசி மகிழ்றதை நானா வேண்டாமென்கிறேன்!'

'உலகு, ஏன் இப்படிப் பேசுறே! அம்மா வந்து விடப் போறாங்க. நீ போ!' என்றான் ரகு.

'அவளை மாடி அறையிலே கெடத்தி யிருக்கு. இப்ப எழுந்திருச்சு வரமாட்டா. நல்ல தூக்கம்'! உள்ளத்தின் வெறுப்பு முழுவதையும் சொல்லிலே பூசி வெளியிட்டாள் அவள்.

'அவள் ஏன் பொருமைப் படப்போகிரு. உலகு!' என்று தொடங்கி சமாதானமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்பினுன் அவன். ஆனல் அவள் அவனைப் பேச விடவில்லை.

அவள் முழிக்கிற முழியையும், மறைந்து நின்று பார்க்கிறதையும், விடுகிற பெரு மூச்சையும் கவனித்தாலே புரியலியா? அவளுக்கு உங்க மேலே ஆசை!'

உலகு இப்படிச் சொன்னதும் 'சுரீர்' என்றது ரகுவின் இதயத்தில். அது மகிழ்ச்சிப் பெருக்கினுலா; அல்லது ஏதேனும் வேதனையினுலா என்று தீர்மானிக்க விரும்பவில்லை அவன். அந்தச் செய்தி அவன் மனதுக்குப் பிடித்திருந்தது; இனித்தது. உள்ளத்தில் கிளுகிளுத்த மகிழ்வை முகத்திலே பரவ விடாது அமுக்கி விடத் தவித்தான் அவன்.

அவள் அவன் உள நிலையைக் கண்டு கொள்ளவில்லை. தன் பாட்டிற்குப் பொரிந்து தள்ளினுள்: 'உனக்கு ஆசையின்னு நீயும் முன்னலே வந்து பேசேன்! கண் அழகையும், பல் அழகையும் காட்டிக் காட்டிப் பேசுறதை நானு வேண்டாமின்னு தடுத்தேன்? உனக்கு ஆசையும் ஆசைதான், பயமும் கூடத்தான்னு நான் என்ன செய்ய முடியும்? உன் புருஷனுக்குத் தெரிஞ்சாக் கொன்னு போடுவாரேன்னு பயம். அவருக்கு எப்பவும் சந்தேகம் தான். அதுக்காக என்கிட்டே எரிஞ்சு விழுவானேன்? ஏன் அவரு கூட விளையாடுறே? ஏன் சிரிச்சுப் பேசுறே?—இதெல்லாம் என்ன கேள்வி. எனக்கு இஷ்டமாயிருக்கு. அப்படித் தான் செய்வேன். அப்புறம்? உனக்குப் போட்டியாக நான் இருக்கிறேனேன்னு நினைப்பு!'

சகுந்தலையை எதிர் நிறுத்திக் குறை கூறுவது போல் உலகு பேசிய பேச்சின் மூலம் ரகுராமனுக்கு உண்மையான நிலைமை விளங்கியது. 'சகுந்தலை சொன்னது சரிதான். இந்தப் பெண் வயசுக்கு மீறிய வளர்ச்சியும் மனப் பண்பும் பெற்று விட்டது. களங்கமில்லாத குணத்தோடு கறைபடிந்த தன்மையும் இதன் ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்திருக்கிறது' என்று தோன்றியது அவனுக்கு. அவள் போக்கை மேலும் ஆதரிக்க விரும்பவில்லை.

'சரி சரி, அவள் எப்படியும் போகு. நீ நல்லபெண்ணுக நடந்து கொள்ள வேண்டியது தானே முக்கியம். அவளைக் கரித்துக் கொட்டுவானேன்? பேசாமல் உள்ளே போ. போயி, ஏதாவது வேலை யிருந்தால் கவனி. இல்லையானுல் படுத்துத் தூங்கு போ!' என்று சொல்லி விட்டு வீட்டுக்குள் போய் விட்டான் ரகு.

அவன் திரும்பி நடந்த போதே அவள் புலம்பியது ரகுவின் காதில் தெளிவாக விழுந்தது. 'அவளைக் குறை கூறி விட்டால் உங்களுக்குப் பிடிக்காது. உங்களுக்கு அவள் மீது அந்த அதுதான். ல-வ்-வு! அதே தான். காதல்' என்று கத்தி விட்டு, சிரிப்பு என்ற பெயரில் கனைப்பை ஒலி பரப்பி விட்டு ஓடி மறைந்தாள் உலகு.

அவனுக்குக் கோபம் எழுந்தது. ஆனுல் உண்மையின் தன்மை கோபத்தைக் காட்டிலும் அதிகமான மகிழ்வுக் கிளர்ச்சியையே உண்டாக்கியது. 'ஆமா: அப்படித் தான். நீயும் குலுக்கி மினுக்கித் தான் பார்க்கிறே. ஆனுல் உன் பேரில் எனக்கு, நீ சொல்ற மாதிரி அந்த அது — அதே தான்!—உண்டாகவில்லையே பெண்ணே!' என்று கிண்டலாகக் கூறவேண்டும் என்ற துடிப்பு மிதந்தது மனவட்டத்திலே. அதை அவன் அடக்கி விட்டான்.

அந்த உண்மையை—தனக்கு அடுத்த வீட்டு சகுந்தலை மீது ஆசை ஏற்பட்டுள்ளது என்பதை யல்ல; அவளுக்குத் தன் மீது ஆசை இருக்கிறது எனும் உண்மையைத் தான்— எத்தனை தடவைகள் யார் சொன்னுலும் கேட்க அலுக்காது, எண்ண எண்ண மனம் சலிக்காது என்றே பட்டது அவனுக்கு.

சகுந்தலையின் மனப் போக்கை அறியும் முன்பே ரகுராமன் எப்பொழுதும் அவளைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தவன் தானே! அவள் செயல்கள் சிலவற்றைக் கொண்டு: அவள் தன்னை வெறுக்கவில்லை என்று உணர முடிந்ததும் பெரு மகிழ்வு எய்தியவன் தானே அவன்? அவள் தன் மீது, ஆசை கொண்டிருக்கிருள் என்று அறிந்ததும் அவன் குதூகலத்தை அளவிட முடியுமா என்ன!

அடுத்த வீட்டுச் சகுந்தலை கல்யாணமானவள் என்பது அவன் எண்ண ஓட்டங்களைத் தடுக்கும் தடைச் சுவராகக் கிடக்கவில்லை. அவள் அழகி; யுவதி; அவள் கணவன் வயசு

தானவன், சந்தேகி. கொடுமைப் படுத்துபவன், அவளுக்கு ஏற்ற துணைவனல்ல, அழகு ரசிகனல்ல. அவள் வாழ்விலே இன்பம் அனுபவிக்கவில்லை. அமைதியும் ஆனந்தமும் பெற அவளுக்கு வழியில்லை. அவள் சுதந்திரமாக வாழ விரும்புகிறவள். ஆனால் அவளுக்கு மகிழ்வு தரச் சக்தியற்ற கணவன் அவளுக்குச் சிறையாக விளங்குகிறான். அவள் அனுதாபத்திற்குரியவள். அன்பு செலுத்துவதற்குத் தகுந்தவள். இவ் விஷயங்கள் அவன் மனக் குரங்குக்குத் தனித் தெம்பு கொடுத்தன.

சம்பிரதாயத் தளைகளுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கும் பெண்ணான அவளுக்கு மனத் துணிவு இருந்தாலும் செயல் துணிவு இராது; சூழ்நிலையும் சுற்றியுள்ள மனிதர்களின் பண்பும் அவளுக்கு இருக்கக்கூடிய மனத்தெம்பைக் கூடச் சிதைத்து விடச் செய்யும். பழக்கம், சம்பிரதாயம், சமூக வழக்கம் முதலிய கட்டுப்பாடுகள் பொன் விலங்குகளாக அவளைப் பிணைத்திருக்கும் போது, அவள் துணியவில்லை, தன் முன் வந்து தாராளமாகப் பேசிப் பழகவில்லை என்றெல்லாம் குறை கூறுவதில் அர்த்தமே கிடையாது. மனத் தெம்பு கொஞ்சம் கொஞ்சமாக வெற்றி பெற்று வருவதை சில தினங்களாக அவள் நடந்து கொண்ட முறைகளிலிருந்து புரிய முடிந்தது. அது கூடவே பெண்ணின் பிறவிக் குணங்களான சந்தேகமும் பொறுமையும் வேலை செய்யத் தொடங்கியிருக்கின்றன — இப்படி நிலையை ஆராய்ந்து அவனுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் எல்லை கிறினான் அவன்.

அதை அடிப்படையாக்கி, இனி என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் திட்டமிட்டான் ரகு. முன் போல் உலகுவிடம் சிரித்துப்பேசி விளையாடக் கூடாது; சகுந்தலையைச் சந்திக்கும் போது அவள் மனத் துணிச்சலை வளர்க்கும் விதமாகப் பேசிப் பழக வேண்டும் என்று முடிவு செய்தான்.

அவன் தங்கு தடையில்லாமல் எண்ணி விட்டான். அவனது எண்ண உலகிலே ஞானசம்பந்தர் இடம் பெறாமல் ஒதுங்கி விட்டதை முதலில் அவன் உணரவே இல்லை. அந்தத் தவறை உணர வெகுநேரம் பிடிக்கவில்லை.

அன்று இருட்டுவதற்குள் ஞானசம்பந்தம் திரும்பி விட்டார். அவரைக் கண்டதும், அன்று அவரை எதிர்பாராத ரகுராமன் திடுக்கிட்டான். திகைத்துப் போனான். வருத்தம் கூட ஏற்பட்டது அவனுக்கு. 'இந்த மனுஷன் கொஞ்ச நாள்

தொலைந்து போயிருக்கப்படாதா? இவர் இங்கே இப்ப எதுக்காக வந்து சேரணும்?' என்று முனங்கியது அவன் உள்ளம்.

ஞானசம்பந்தம் வழக்கம் போல் தான் காட்சியளித்தார். அவர் திடீரென்று எங்கே போனார், நினைத்த போது வருகிறாரே என்ற விஷயம் இன்னும் விடுபடாத மர்மம் தான் என்பது ரகுராமன் நினைவுக்கு வந்தது.

ரகுராமன் பார்வையில் தென்பட்டதுமே அவர் உற்சாகமாகக் கத்தினார்: 'என்ன மிஸ்டர் ராஜாராமன்—இல்லை யில்லை. பிரதர் ரகுநாதன்!'

அவன் சிரித்தான். 'இரண்டும் சரியாயில்லை!' என்றான்.

'ஹ ஹ, இந்த மறதி என்னை விட்டுப் போகாது போலிருக்குதே. பரவால்லே. இங்கே வாருமையா. முக்கியமான, சுவையான விஷயங்கள் எல்லாமிருக்குது' என்று கனைத்தார் பெரியவர்.

ரகுராமனும் போனான். அவர் வீட்டுப் பட்டாசாலையில் நாற்காலியில் வேறொரு மனிதரும் இருந்தார். அந்த ஊர்ப் பிரமுகர்களில் ஒருவர் அவர்.

'உட்காருமையா, மிஸ்டர் ராமன்!' என்றார் ஞானசம்பந்தர். அவனும் 'நீங்க என்ன திடீர்னு விக்கிரமாதித்த வேலை பண்ணுகிறீங்க? காடாறு மாசம் நாடாறு மாசம் என்கிற மாதிரி!' என்று கேட்டபடி அமர்ந்தான்.

அவர் சிரித்து மழுப்பினாரே தவிரச் சரியான பதில் சொல்லவில்லை. ஊர்ப் பேச்சு, வீண் வம்பளப்பு என்று வளர்ந்த சம்பாஷணை சுவையான கட்டம் ஒன்றைத் தொட்டது.

ஞானசம்பந்தம் சொன்னார்; 'நம்ம திறமை உங்களுக்கெல்லாம் தெரியாதே. ஒரு ஆளைப் பார்த்த மாத்திரத்திலேயே அந்த ஆசாமி எப்படிப்பட்டவன், அவன் குணம் என்ன, அவன் என்ன நினைக்கிறான் என்பதை எல்லாம் சொல்லிப் போடுவேன்.'

அப்படியா!' என்றார் பிரமுகர். 'அட, இதுவரை நீங்க சொல்லலியே!' என்று அதிசயித்தான் ரகு.

'உண்மையிலேயே இவருக்கு அந்தத் திறமையிருந்தால் நம்ம பாடு ஆபத்து தான்' என்றது அவன் மனம். 'அப்படி ஒரு சக்தியிருந்தால் இதற்குள்ளே இவரு என் உண்மைத் தன்மையை அறிந்திருப்பாரே! சகுந்தலையைப் பற்றியும் தெரிந்து வைத்திருப்பார். சும்மா வெத்து வேட்டு!' என்றும் சிரித்தது.

மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் — சொல்லத் துணியா விட்டாலும் என்ன நினைப்பார்கள்—என்ற கவலை கொஞ்சம் கூட இல்லாமல் இஷ்டம் போல் உளறிக் கொட்டுகிற கிழவர்களைப் போலத் தான் ஞானசம்பந்தரும் பேசினர். தனது அசட்டுத்தன உளறல்களுக்கு 'மனசில் பட்ட உண்மையை உள்ளது உள்ளபடி சொல்லி விடுவது" என்று விளக்கம் வேறு செய்தார் இவர்.

அங்கிருந்த பிரமுகரைப் பற்றி தாராளமாகவே அபிப் பிராயம் அறிவித்தார் ஞானசம்பந்தர். 'இவர் ஆடம்பர மாக வாழ வேணும், வாழ்க்கையென்ருல் அகப்படுகிற இன் பங்களை எல்லாம் அனுபவித்துப் பார்த்து விட வேண்டியது தான் என்ற எண்ணம் உடையவர். அதனுலே பூலோக பிருந்தாவன லீலைகளிலே ஈடுபாடு அதிகம் இருக்க வேண்டும் என்னய்யா நான் சொல்றது? ஏதாவது தவறு இருந்தால் சொல்லிப் போடும்' என்று அவுட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்து வைத்தார்.

பிரமுகர் முகத்தைக் கவனித்தான் ரகு. அவருக்கு உணர்ச்சிக் குழப்பம் ஏற்பட்டது நன்ருகத் தெரிந்தது. கோபமும் வெட்கத்தின் சாயலும் மேலோங்கி நிற்பதாகத் தோன்றியது. அவர் ஆத்திரம் கொண்டு எரிந்து விழவில்லை காரணம், பேசுகிறவர் பெரிய மனிதர், பணப் பவிஷூம் அதிக வயதும் உள்ளவர் என்பதாகத் தானிருக்க முடியும்.

ஞானசம்பந்தர் அவரைக் கவனியாமல் ரகுராமனின் குண ஆராய்ச்சியில் ஈடுபட்டார். 'என்ன மிஸ்டர் ரகு ராமன். உம்ம முகத்தைப் பார்த்தாலே நல்லாத் தெரியுது. நீர் வீண் சண்டை வளர்ப்பவர்!'

அப்பாவி ரகுராமன் வியப்புடன் கேட்டான் 'என்னைச் சண்டைக்காரன் என்ரு சொல்றீங்க?' என்று.

'அட, நான் சொல்லலே ஐயா! உம்ம முகம் காட்டிக் கொடுக்குது. தெரியலே? சண்டை வளர்க்கத் துடிப்பவன்.

ஆனல் மகா சாது மாதிரி வேஷம் போட்டு வாழ்வது; உமக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. இல்லையா ? நீர் கல்யாணம் செய்து கொள்வீரா என்பது சந்தேகமான விஷயம் தான். ஆனல் நான் ஒன்று சொல்வேன். நீர் கல்யாணம் செய்யாமலே காதல் வாழ்வு வாழலாம். மன சுக்குப் பிடித்த மங்கையோடு தான். அது தவறே, சமூக விரோதமாகுமே என்றெல்லாம் நீர் நினைக்கலாம், நான் என்ன சொல்கிறேனென்ருல், இன்றைய சமுதாய நிலையிலே உம்மைப் போன்ற நல்ல வாலிபர்கள் யார் மனைவியை யாவது இழுத்துக் கொண்டு ஓடிப் போனல் கூட அது பாப மல்ல. நம்ம சமூக நிலைமையும், சம்பிரதாயங்களும். மகா மோசம், தரித்திரம். படு கேவலம். புரியுதா ?!

ரகுராமன் சிரித்தான். எண்ணைப் பரப்பிலே படர்ந்த விஷத்தைக் காட்டும் விஷமச் சிரிப்பு அது. 'நீங்கள் சொன் ல் சரி தான். அதற்கு மேலே அப்பீல் ஏது !' என்று உற்சாகமாகக் கூவினன் அவன்.

'இவர் இவ்வளவு தாராளமாகச் சொல்லி விட்டார். உண்மையில் நான் பக்கத்து வீட்டில் இருந்து கொண்டு இவர் வீட்டுச் சகுந்தலையை கவனித்து மகிழ்கிறேன் என்று தெரிந்தாலே ஆபத்து தான். அவளை அடித்துக் கொன்று விடுவார். என்னைக் கூட வெட்டிப் பொங்கலிட வேணும் என்ற உணர்ச்சி தான்ஏற்படும் இவருக்கு!' என்று எண்ணி னன் அவன்.

அதற்குப் பிறகு பேச்சு வெகு நேரம் நீடிக்கவில்லை.

## — 20 —

ரகுராமன் ஞானசம்பந்தரோடு பேசி விட்டு வந்த மறு நாள் சம்பவங்கள் தீவிரமாக நடந்தேறின. எல்லாம் எதிர் பாராதவை தான். சகுந்தலையோ ஞானசம்பந்தரோ ஒன்றிரு விஷயங்களைத் திட்ட மிட்டிருக்கலாம். பரஸ்பரம் தெரியாத வகையில் தான். ஆனல் அனைத்தையும் எவரும் பூரணமாக உணர்ந்திருக்க முடியாது- அவர்கள் திட்டமிட்டு செய்த காரியங்களின் விளைவுகளும் விபரீதமாக முடியும் என்பதையும் அவர்கள் முன்னதாக அறிந்திருப்பது சாத்தியமே யல்ல.

ரகுராமனைப் பொறுத்த வரையில் அன்று நடந்த நிகழ்ச்சிகள் எதிர்பாராதவையே.

விடிந்ததும் அடுத்த வீட்டில் ஏதோ பரபரப்பு ஏற்பட்டிருந்ததை உணர முடிந்தது அவனால். பொழுது போகாமல் தவித்த ரகு பின்புறக் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்துப் பக்கம் போனான். அங்கே பேச்சு சப்தம் கேட்டது. உலகுவும் சகுந்தலையும் தான் பேசினார்கள்.

உலகு கெஞ்சினாள்; 'அக்கா அக்கா, நான் இங்கேயே இருக்கிறேனே. என்னை ஊருக்கு அனுப்பாதே யக்கா!'

'நீ ஊருக்கு போயிட்டு வா, உலகு. உன் அம்மாவை யெல்லாம் பார்க்க வேண்டாமா? இப்ப போ. கொஞ்ச நாள் கழித்து நானே உன்னை கூப்பிட்டு அனுப்புகிறேன், என்றாள் சகுந்தலை.

'அக்கா அங்கே போகணும்னாலே எனக்கு மனக் கஷ்டமா யிருக்கு. இங்கேயே வேலை எல்லாம் செய்து கொண்டு கிடக்கிறேன். உனக்கு நான் தொந்தரவு கொடுத்தால் சொல்லு' பரிதாபகரமாக ஒலித்தது அவள் பேச்சு.

ஆனால் சகுந்தலை கண்டிப்பாகப் பேசினாள். உலகுவைத் தன் வீட்டை விட்டு அனுப்பியே விடுவது என்ற தீர்மானத்தோடு பேசினாள். 'அம்மா வீட்டுக்குப் போகணும்னு சொன்னால், அழுகிற பொண்ணு உன்னைத் தாண்டி பார்க்கிறேன். உன்னை ஒரேயடியாகத் தொலைஞ்சு போகவா சொல்லுது! இங்கேயே ரொம்ப நாளா இருக்கியே; அங்கேயும் போக வேண்டாமா என்று சொன்னால் எங்கோ வெட்டக் கொண்டு போறதுக்குப் புடிச்சுத் தள்ளினால் அஞ்சி அலறது மாதிரிப் புலம்புறியே!' என்று எரிந்து விழுந்தாள் சகுந்தலை.

உலகுவின் கெஞ்சுதலும், குழைவும் ரகுராமனின் இதயத்தைத் தொட்டன. 'அந்தப் புள்ளெ இங்கே இருந்தால் இவளுக்கு என்னவாம்? உலகு சொன்ன மாதிரி. பொறாமை தான் வேலை செய்கிறதோ என்னவோ!' என்று நினைத்தான் அவன்.

உலகு எவ்வளவு கெஞ்சியும் பயனில்லை. சகுந்தலை தன் கணவனிடமும் முன்னதாகவே சொல்லி வைத்து விட்டாள் என்றே தெரிந்தது. உலகுவும் சகுந்தலையும் பின்னால் நின்று வாதாடிக் கொண்டிருந்த போது, உள்ளிருந்து கத்தினார் பெரியவர்:

'என்ன நேரம் போகுதா வருதா? ரயிலுக்குப் போறதா னுச் சீக்கிரம் கிளம்பணுமே என்கிறது இங்கே யாருக்குமே தெரியலே!'

சகுந்தலை 'இதோ வந்து விட்டாள்' என்று சொல்லி, 'உம், போ போ. இன்னும் நேரம் போக்கினுல் ஏச்சு தான் கிடைக்கும்!' என்று, அந்தப் பெண்ணைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக, அவசரப்படுத்தினுள்.

அவள் போக்கு ரகுராமனுக்குக் கூட வருத்தமளித்தது. கால் மணி நேரம் கழித்து அவன் ஹோட்டலுக்குப் போவ தற்காக முன் வாசல்படியில் கால் வைத்த போது தான் அடுத்த வீட்டு ஞானசம்பந்தரும், உலகுவும் ரோட்டில் இறங்கி நின்ருர்கள். ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் ஜட்காவில் ஏறுவதற்காகத்தான்.

ரகுராமன் சம்பிரதாயமாகக் கும்பிட்டு வைத்தான். 'என்ன மறுபடியும் பிரயாணம் தானு?' என்று கேட்டான், ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக.

'இல்லை யில்லை. இந்தப் பெண்ணை ஊருக்கு அனுப்பு வதற்காக டிக்கட் வாங்கிக் கொடுக்கப் போறேன். ரயிலிலே ஒரு ஆளையும் பார்க்க வேண்டியிருக்கு' என்ருர் அவர்.

ரகுவின் பார்வை உலகு பக்கம் சென்றது. பெரியவருக் குப் பின்னுல் ரகுவின் பார்வையில் நன்ருகத் தென்படும் வகையில், நின்ருள் அவள். அவனையே கவனித்தபடி தான் நின்ருள். அவன் கண்கள் அவள் பக்கம் புரண்டு, அவள் முகத்தில் பதிந்து, அவளது கறு விழிகளைக் கவ்விய போது, சோகம் குடியிருந்த அவள் வதனத்தில் சிறு மகிழ்வு புகுந் தது. அவனையே கவனித்தால், அவள் அழுது விடுவாளோ என்ற ஐயம் எழவும் ரகுராமன் தன் பார்வையை மீட்டுக் கொள்ள முயன்ருன்.

சடக்கெனப் பின் வாங்கிய பார்வையைக் கவர்ந்திழுத் தது அவள் கையசைவு. அவள் ஏதோ சொல்ல விரும்புகிருள் போலும் என அவன் கவனிக்கவும், உலகு கரம் குவித்து வணக்கம் செய்து, தலையசைத்து அபிநயத்தின் மூலமே 'போய் வாறேன்' என்று விடை பெற்றுக் கொண்டாள். அவனும் லேசாகத் தலையசைத்தான்.

ரோட்டில் இறங்கிய ரகுராமனின் விழிகள் அடுத்த வீட்டு வராந்தாவின் பக்கம் வளையமிடவும், அங்கு வாசல் அருகிலேயே நின்று கவனிக்கும் சகுந்தலையைக் கண்டன. அவள் குறும்புத்தனமாகச் சிரிப்பது போல் தோன்றியது. மிடுக்காக நின்று வெற்றிப் பார்வை பார்ப்பது போலிருந்தது.

'உம். வண்டியிலே ஏறு, ஏன் கீழேயே நிற்கிறே?' என்று அதட்டினர் பெரியவர். உலகு 'போயிட்டு வாறேன், அக்கா' என்று சொல்லி விட்டு வண்டியில் ஏறி அமர்ந்தாள். அவரும் ஏறி உட்கார்ந்ததும் வண்டி நகர்ந்தது. வேகமாக ஓடி மறைந்தது.

ரகுராமன் அசையாமல் நின்றான். வீட்டு வாசல்படியண்டையே நின்று கொண்டிருந்த சகுந்தலை, 'ஏன், அந்தச் சிங்காரச் சின்னப் பொண்ணு போய் விட்டது வருத்தமாகயிருக்குதாக்கும்?' என்று குரல் கொடுத்தாள். அவன் வியப்புற்றான். அவளாகப் பேசுவதென்றால், வியப்பும் மகிழ்வும் வாராதா என்ன!

'எனக்கு என்ன வருத்தம்?' என்று கேட்டான் அவன்.

'உங்களை விட்டுப் பிரிந்து போய், மறந்து விடணுமே என்பதனாலே உலகு வாடித் தவித்து உருகிப் போகிறாளே. உங்களுக்கு அப்படி ஒரு உணர்ச்சியும் இல்லையாக்கும்?' என்ற கேள்வியுடன் 'உகுங்' என்றொரு மணிச் சிரிப்பையும் உருட்டி விட்டாள் அந்த ஒய்யாரி.

அவள் குரலின் விஷமம் அவனைத் தூண்டியது, அவள் அழகை நன்றாகப் பார் என்று! பளிச்சிடும் பல புள்ளிகள் விரவிக் கிடக்கும் பொன் மேனிச் சிறுத்தையின் உடல் வண்ணத்தைப் பிரதிபலிக்கும் பகட்டான சேலை அணிந்திருந்தாள் அவள், கறும் வட்டப் புள்ளிகள் நிறைந்த அழுத்தமான ஆரஞ்சு வர்ணச் சேலை 'பொன் அவிர் மேனி'ச் சகுந்தலைக்கு மிக எடுப்பாக இருந்தது. பட்டும் படாமலும் கலையாக மையுண்டிருந்த கண்களின் குறுகுறுப்பும், ரோஜா முகை உதடுகளில் தவழ்ந்த சிரிப்பும் 'இந்தச் சிங்காரி சிறுத்தையாக மாறினும் மாறுவாள். மனித உருவினுள் பதுங்கிக் கிடக்கும் பண்புகளை யாரே அளவிட முடியும்!' என்ற எண்ணத்தை விதைத்தன அவன் உள்ளத்தில். எனினும் அவளது காந்த வனப்பை ரசித்து வியக்காமலிருக்க இயலவில்லை அவனால்,

'நான் ஏன் வருத்தப்படணும்! நீங்க தான் வருத்தப் படவேண்டியிருக்கும். இனிமேல் வீட்டு வேலைகள் பூரா வையும் நீங்கதானே செய்யணும்? அவரும் பிரயாணம் போய்விட்டால், இவ்வளவு பெரிய வீட்டிலே நீங்கள் துணை யில்லாமல் தன்னந்தனியாக இருக்க நேரிடுமே!'

ரகுராமனின் இந்தப் பேச்சு அவள் உள்ளத்தில் என் னென்ன எண்ணச் சுழிகளைக் கிளறினவோ! அவள் அவன் மீது மோகனப் பார்வை ஒன்றை வீசிவிட்டு, எழிலாகத் திரும்பி நடந்து மறைந்தாள்.

'இவள் என் மனசை எடைபோட முயன்றாள் போலிருக்கு! ஹஹ்!' என்று எக்களித்து விட்டு நடந் தான் ரகு.

'உலகு வீணாக இங்கே இருப்பானேன். உங்க அம் மாவும் இல்லே. நமக்கு வீண் பொறுப்பு. உலகை அவள் அம்மாவிடமே அனுப்பி விடலாமே' என்று சகுந்தலை சொன்ன போது, ஞானசம்பந்தம் கொஞ்சம்கூட ஆட்சே பிக்காமல் 'செய்தால் போச்சு!' என்று கூறியது ஆச்சர்ய மாகவே பட்டது சகுந்தலைக்கு. 'நான் கூட அப்படித்தான் நினைத்தேன். நாளைக்கே ரயிலேற்றிவிடலாம்' என்று அவர் தீவிரம் காட்டியது பெரிய அதிசயமாகத் தானிருந்தது.

ஆனால் அந்த அதிசயம், ஆச்சர்யம் எல்லாம் அவர் ரயிலிலிருந்து திரும்பி வருகிறவரைதான் நிலைத்திருந்தது. ஸ்டேஷனிலிருந்து வந்த ஜட்கா வீட்டின் முன்னால் நின் றதும் சகுந்தலை அடைத்திருந்த வாசல் கதவைத் திறந்து விட்டு வெளியே எட்டிப் பார்த்தாள். 'பகீர்' என்றிருந்தது அவளுக்கு.

வண்டியில் ஞானசம்பந்தர் மட்டும் வந்திறங்கவில்லை அவர் கூட வந்து சேர்ந்தாள் ஒரு மங்கை. அவளைப் பார்த் ததுமே சகுந்தலைக்கு ஆத்திரமும், அழுகையும், கோபமும், குமுறலும் பொங்கி வந்தன. 'இந்த அருமை ஆசைநாயகி வந்து இறங்கப் போகிறாள் என்பதனாலே தான், அவ ராகவே உலகுவை ஊருக்கு அனுப்பி விடணும் என எண்ணி யிருக்கிறார். அதுதான், நான் சொன்னதுமே அவர் சந் தோஷமாகத் தலையசைத்திருக்கிறார்' என்று நினைத்தாள் அவள்.

வந்தவள் சகுந்தலைக்குப் புதியவள் அல்ல. சில வருஷங்களுக்கு முன்பே அறிமுகமானவள் தான். சகுந்தலைக்குக் கல்யாணமான புதிதில் ஞானசம்பந்தரைப் பற்றிப் பலரும் பலவிதமாகச் சொன்னார்கள். அவரது காமக்கிழத்தி பற்றியும் ரகசியமாகச் சொன்னார்கள். சகுந்தலைக்கு என்ன எண்ணுவது, என்ன செய்வது என்றே தெரியவில்லை. அப்போதெல்லாம் எது வந்தாலும் சகித்துக் கொள்ள வேண்டியது தான்; வேறு என்ன செய்வது என்றிருந்த அவளது சகிப்புத் தன்மையை மிகுதியும் சோதிப்பதாக யிருந்தது கணவனின் போக்கு. கல்யாணமாகிச் சில மாதங்கள் வரை ஒழுங்காக வாழ்ந்ததனால், அவர் திருந்தி விட்டார்; புது மனைவி மோகம் அவரை மாற்றிவிட்டது என்று பலரும் நம்பினர். அது தவறான தீர்மானம் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகவே, ஞானசம்பந்த வேதாளம் மறுபடியும் முருங்க மரம் ஏறியது!

அடிக்கடி அவர் வெளியூர்ப் பயணம், அவசர காரியம், சொந்த ஜோலி என்று போய்வர ஆரம்பித்ததன் மர்மம் மனைவி சகுந்தலைக்கு மெது மெதுவாகத் தான் புரிந்தது. அந்த ரகசியம் பலர் காதுகளிலும் விழுந்து, பலப்பலர் வாய் வழியாக வித வித உருவெடுத்து வளர்ந்த பிறகு தான் அவள் காதை எட்டியது. முதல் மனைவி இறந்த பிறகு, உலகத்தையே வெறுத்தவர் போல் கிளம்பிய ஞானசம்பந்தர் ஒரு நாடகக்காரி மீது மையல் கொண்டார். அவரது மோகமும் பணமும் செல்வாக்கும் அவள் நாடகத் தொழிலைத் தியாகம் செய்து விட்டு அவரை ஏற்றுக்கொள்ளும்படி செய்தன. திடீரென்று இருவருக்கும் பிணக்கு ஏற்பட்டது. காரணம், அவளுக்கு சுதந்திர உணர்ச்சி அதிகமிருந்தது தானோ, அல்லது அவருக்குச் சந்தேக மனப் பண்பு நிறைய இருந்தது தானோ என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. இடைக்காலத்தில் இருவரும் பிரிந்து விட்டனர்.

அப்போதுதான் ஞானசம்பந்தருக்கு மறுபடியும் கல்யாண ஆசை எழுந்தது. சகுந்தலை மனைவியானாள். ஒரு வருஷம் நல்ல முறையில் வாழ்ந்தவருக்கு மீண்டும், பழைய காதலி செல்வநாயகியின் சந்திப்பு கிட்டியது. உறவு வளர்ந்தது. புது மனைவியிடம் மோகம் குறைந்து ஒருவித வெறுப்பு வளர்ந்து வந்த பருவம். யுவதியான

சகுந்தலைக்கு தன் மீது உண்மையான அன்பு இல்லை, கடமையே என்றுதான் தன்னுடன் வாழ்கிறாள் என்ற சந்தேகம் ஏனோ அவருக்கு உண்டாயிற்று. தன்னை ஒரு பெண் அன்புடன் விரும்ப முடியும் என்று நிரூபிக்கவும், தனது அழகில் அகந்தை கொண்டு அவரை அலட்சியம் செய்வது போலிருந்த சகுந்தலைக்கு ஒரு பாடம் கற்பிக்கவும் அவர் செல்வநாயகியைத் தன் வீட்டோடு கொண்டு வந்து வைத்துக் கொண்டார். அவள் அதிகாரம் செய்யத் தொடங்கியது சகுந்தலைக்குப் பிடிக்கவில்லை.

அவள் அதே வீட்டில் இருப்பதானால் தான் ஆற்றிலே குளத்திலே விழுந்தோ, கயிற்றைக் கட்டிக்கொண்டு தொங்கியோ, செத்துப் போவதாக நாடகமாடினாள் சகுந்தலை. ஞானசம்பந்தர் பயந்து பணிந்து விட்டார். தனக்குச் சொந்தமான சிற்றூரில் சதா அடைத்தே கிடந்த பங்களாவில் தனது ஆசைநாயகியை வசிக்கும்படி செய்தார். அதிலிருந்து அவர் திடீர் திடீரென்று 'வெளியூர்ப் பிரயாணம்' போவது சகஜமாகி விட்டது.

முன்பு குடியிருந்த ஊரிலிருந்து கிளம்பி ரகுராமனின் அடுத்த வீட்டுக்காரராக அவர் வாழ வந்ததற்குரிய முக்கிய காரணம் சகுந்தலைக்குத் தெரியாது. 'சௌகர்யமான ஊர்; நம்ம நிலங்கள் இருக்கிற இடத்துக்குப் பக்கம்' என்று தான் சொல்லி யிருந்தாரே தவிர, உண்மையை அவர் வெளியிட்டு விடவில்லை. எல்லாம் காலம் வருகிற போது தானாகத் தெரிந்துவிட்டுப் போகிறது என்ற எண்ணம் அவருக்கு!

இப்போது ஞானசம்பந்தர் செல்வநாயகியுடன் வந்திறங்கிய போதுதான், அவர் திட்டமிட்டுத் தான் வேலை செய்திருக்கிறார் என்பது நன்றாகப் புரிந்து விட்டது.

## — 21 —

செல்வநாயகியைக் கண்டதும் அகமும் முகமும் மலர்ச்சியுறாத சகுந்தலை 'வா!' என்று கூடக் கேட்க விரும்பவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போய் விட்டாள். ஞானசம்பந்தர் அதைப் பெரிது படுத்தவில்லை. ஆனால் அவரது ஆசைநாயகிக்கு அவமானமாகத் தான் பட்டது.

'என்ன ராங்கி பாரேன்! வந்தவளை வான்னு கேட்க முடியாம அவ வாயிலே யென்ன கொழுக்கட்டையையா திணிச்சிருக்கு? அப்படிக் கேட்டுட்டா அம்மா கட்டரசி வாயிலே கிடக்கிற முத்து உதிர்ந்திருமாக்கும்?' என்று முனங்கினாள்.

வந்ததும் வராததுமாகவே பிணக்குகள் எதற்கு என்று எண்ணிய பெரியவர் 'அவ கிடக்கிறா. அவளுக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான்' என்று பூசி மெழுகினார். எனினும் அவள் உள்ளப் புகைச்சலை அவித்து விட இயலவில்லை. ஆனால் உள் அறையில் மறைந்து நின்ற சகுந்தலையின் மனக் குமுறலைக் கொதிப்பாக மாற்றும் கைங்கர்யத்தைச் செய்தது அது.

சகுந்தலை உள் விட்டுச் 'சண்டைக்குக் கொடி கட்டுவது' என்று உறுதியாகத் தீர்மானித்திருந்தாள் என்பது அவள் போக்கிலிருந்து நன்றாகப் புரிந்தது.

விட்டினுள் போன சகுந்தலை அப்புறம் எட்டிப்பார்க்கவே யில்லை. கணவனது தேவைகளைக் கவனித்துப் பணிவிடை புரியக்கூட வரவில்லை. அடுப்பங்கரை வாசல்படியில் தலை வைத்து படுத்து விட்டாள். அவள் உள்ளத்தில் துயரம் சுமையாகக் கவிந்தது.

ஜட்காவை அனுப்பி விட்டு, சாமான்களை ஒரு மூலையில் வைத்து விட்டு உள்ளே வந்த ஞானசம்பந்தம் பட்டாசாலையில் சுவரோரமாக உட்கார்ந்திருந்த செல்வநாயகியைக் கவனித்தார். 'என்ன இப்படி உட்கார்ந்து விட்டே? ரயிலில் வந்த அலுப்பா? குளிச்சு முழுகிப் பல்லு விளக்கினால் தானே.......' என்று ஆரம்பித்தார்.

அவளோ சுவாரஸ்யமில்லாத வகையில், 'ப்சூ'! என்று ஒலி பரப்பினாள். அவர் 'ஏய், காப்பி போட்டாச்சா?' என்று கேட்டபடி உள்ளே போனார். அங்கு தரையில் கிடந்த மனைவியைக் கண்டதும் எரிச்சல் தான் ஏற்பட்டது.

'உன்னை ஏன் இப்படிக் கிடத்தியிருக்கு?' என்று சொல்லுதிர்த்தார் அவர். சிடுசிடுப்பு தொனித்தது அதிலே.

'எருவைப் பரப்பி ஒரேயடியாக் கிடத்துறதுக்கு இன்னும் வேளையும் பொழுதும் வரலியே, அதனாலே

தான்' என்றாள் சகுந்தலை. கம்மிய குரல் அவள் தொண்டையை விட்டு வெளியே வர அஞ்சியது போல் ஒலித்தது.

'விடிஞ்சும் விடியாததுமாகவே ஆரம்பிச்சிட்டியா உன் வேலையை? சரி சரி, எழுந்திருச்சு வேலையைப் பாரு. காப்பி போட்டிருந்தா வடிகட்டிக் கொண்டா. தோசை சுடு. அதுக்குள்ளே நான் குளித்து விடுவேன்' என்று வழக்கம் போல் பேசினார் அவர்.

படுத்துக் கிடந்த சகுந்தலை 'விருட்'டென்று எழுந்து உட்கார்ந்தாள். சும்மா பங்கொண்டையாக எடுத்துச் சொருகியிருந்த அவளது கருங்கூந்தல் அவிழ்ந்து புரண்டது. நீர் தேங்கி நின்றதால் கலங்கித் தோன்றின கண்கள். கரகரப்புத் தட்டியது அவள் குரலில். மனோ வேதனையுடன் அவள் பேசியது, வெறி பிடித்தவள் புலம்பிய மாதிரித் தான் தோன்றியது.

'நான் சொல்லிப் போட்டேன். இந்த வீட்டிலே நான் தெருவோடு போற நாய்களுக்கெல்லாம் பொங்கி வடிச்சுப் போடுற வேலைக்காரியாக இருக்க முடியாது. வீடு பெருக்கி கூட்டி சமையல் வேலை செய்து—ஆமா, அதெல்லாம் பார்க்க தனியா ஆளு ஏற்பாடு செய்திருங்க. இனிமே என்னாலே முடியாது.'

திடீரென்று அவள் அப்படிப் பேசியதும் ஒரு கணம் அசந்து போனார் அவர். பிறகு 'உனக்கு இப்ப என்ன கொள்ளை வந்துட்டது?' என்று உறுமினார்.

'எனக்கு ஒரு கொள்ளையும் வரலே. இந்த வீட்டுக்குத் தான் சனி வந்திருக்கு' என்று சொல்லி வேகமாக எழுந்து அடுப்படிக்குள் சரண் புகுந்தாள் அவள். ஞானசம்பந்தரின் பின்னாலேயே வந்து பதுங்கி நின்ற செல்வநாயகி கத்தினாள்: 'கேட்டியளா! என்னைத் தான் அவ அப்படிச் சொல்லுதா. நான் சனியாம். இந்தச் சீதேவியக்கா சொல்லி விட்டா. நான் சனியனாம்!'

நீட்டி முழக்கத் தொடங்கிய அவள் கூச்சலை அமுக்கும் படியாகக் கூச்சலிட்டார் அவர். 'நீ யேன் இப்படிக் கத்துதே? அவ சொன்னால் சொல்லி விட்டுப் போறா!'

அவரைப் பேச விடவில்லை இன்பக்கிழத்தி. 'நீங்க எப்பவுமே இப்படித் தான். அது தான் நான் இங்கே வரவே

மாட்டேன்னு சொன்னேன். நீங்க தானே, உனக்குத் தனி வீடு பார்த்திருக்கிறேன்; நீ வெளியூரிலே யிருந்தால் அடிக்கடி வந்து போகத் தோதுப் படலே; செலவும் சிரமமும் தான் ஜாஸ்தியாகுது இன்னு சொன்னீக. இப்ப ஏன் இந்த வீட்டுக்குக் கூட்டி வந்தீங்க? நேரே அந்த வீட்டிலேயே கொண்டு விடும்படி வண்டிக்காரன் கிட்டேச் சொல்லியிருக்க லாமே. எனக்கு மானம், மரியாதை கிடையாதா? முகம் கொடுத்துப் பேச விரும்பாத மூதேவிக இருக்கிற இடத் திலே எனக்கு என்ன வேலை?'

கல் மழை பிடித்து விளாசுவது போல் சட பட வென்று பொரிந்து தள்ளினாள் அவள். அவரோ பொறுமை இழக்க விரும்பாதவராய் 'இந்தா! இந்தா பாரு! ஏ செல்லம்! ஏய்!' என்று கொஞ்சுதலாகவும் கெஞ்சலாகவும் அவள் கவனத் தைத் திருப்ப முயன்றார். பலிக்கவில்லை.

சும்மா யிருப்பாளா சீற்றம் கொண்ட சகுந்தலை? 'சீ சின்னச் சவமே! யாரைப் பார்த்து மூதேவிங்கிறே? யாருக்கு மரியாதை தெரியலே இங்கே? நாயைக் குளிப் பாட்டி நடுவீட்டிலே கொண்டு வந்து வச்சாலும், அது சாதிப் புத்தியைத் தானே காட்டும்னு சுலவொடை சொல்லுவோ. அது சரியாத் தானிருக்கு. இங்கே வந்து நின்னுகிட்டு ஏன் காள் காளுன்னு கத்துறே?' என்று கூப்பாடு போட்டபடி வெளியே வந்தாள், கண்ணகி அவதாரம் போல.

ஞானசம்பந்தரின் ஆத்திரம் அடக்க முடியாதது ஆயிற்று. 'யாருக்கு மரியாதை தெரியலே? யாருடீ குலைக் கிறு?' என்று கூவி, சகுந்தலையின் தலைமயிரைப் பற்றிக் கொண்டு அவள் மண்டையைச் சுவரில் 'நங்கு நங்கென்று' மோதினார்.

'ஐயோ என்னைக் கொல்லுதானே! ஏ படுபாவி, நீ விளங்குவியா! அந்தச் சிறுக்கி மேலே உனக்கு மோகமின்னு என்னை ஏன் கொலை பண்ணுறே! ஐயோ அம்மா!' என்று கூப்பாடு போட்டாள் சகுந்தலை. எட்டு வீட்டுக்குக் கேட்கும் படி கதறி, தெருவைப் பூராக் கூடும்படி செய்ய வேணும் என்ற நோக்கத்தோடு கத்துவது போல் அலறினாள் அவள். அவளுக்கு அப்போது வெறி தான் அதிகமிருந்தது. புருஷன் மீது வெறுப்பும் ஆங்காரமும், மற்றவள் பேரில் ஆத்திரமும் பொறாமையும் ஏற்பட்டிருந்தன. உணர்ச்சிக் கொதிப்பு அவள் அறிவை மழுங்கடித்து விட்டது.

தனியாகக் கோட்டை மாதிரியிருந்த வீட்டின் அடுக்களைப் பிராந்தியத்திலே இந்த நாடகம் நடைபெற்றதால், சகுந்தலையின் ஓலம் மேலெழுந்து தெரு நெடுக எட்டவில்லை. ஆனால் அடுத்த வீட்டிலிருந்த ரகுராமனுக்குச் செவிட்டில் அறைந்தது போல் நன்றாகப் பட்டது. ஒவ்வொரு பேச்சும் தெளிவாகக் கேட்டது.

ஹோட்டலிலிருந்து திரும்பி வந்த ரகு சிறு கிரக்கத்தினால் ஈஸிச்சேரில் தலை சாய்த்து ஓய்ந்து கிடந்தான். கனவுலக நிழல்களின் கோரக் குதியாட்டமோ என ஐயுறும் வண்ணம் குழம்பின அடுத்த வீட்டு நிகழ்ச்சி எழுப்பிய ஒலிகள், சத்தம் பலக்கவும் நன்கு விழிப்புற்றுக் கவனித்தான். முதலில் தலை கால் புரியவில்லை. மெது மெதுவாக ஏதோ குடும்பக் கலகம்; மூன்றாவது பேர்வழி ஒருத்தி தலையிட்டிருக்கிறாள் என்று புரிந்தது. அந்த வீட்டிலே மனிதர்கள் மிருகங்களாக மாறிக் கொஞ்ச நேரமாகி விட்டது என்பதும் விளங்கியது.

'சே என்ன ஜென்மங்கடா இதுக!' என்று நினைத்தது மனம். 'மென்மலர் போன்ற அழகி சகுந்தலை தானா இப்படி பேய்த்தனம் பயில்கிறாள்' என்ற சந்தேகமும் எழுந்தது அவன் உள்ளத்தில். காலையில் சிங்காரச் சேலை யணிந்து சிரித்து நின்ற அவளைப் பார்த்ததுமே, அவள் சீறிடும் சிறுத்தையாக மாறுவதும் சாத்தியமே என்று மனக் குகை மூலையிலே முட்டிய ஒலி இப்போது எதிரொலித்தது. அப்போது காரணமற்று எழுந்த அந்த எண்ண அலை ஒருவேளை அபாய முன்னறிவிப்பு தானோ என்னவோ என்று கனைத்தது மனக் குறளி.

'இந்த வீட்டிலே இனிமே நான் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. இந்த முப்பிடாரி இருக்கிற திசைப் பக்கம் நான் திரும்பிப் பார்க்க மாட்டேன். நீங்க என்னைத் தேடி வர வேண்டாம். இந்த அடுப்பங்கரை நாச்சியா ஆணையாச் சொல்லுதேன்' என்று கூறியது புதுக் குரலாக ஒலித்தது ரகுவுக்கு.

செல்வநாயகி தான் பேசினாள். வேகமாக வெளியேறினாள் அவள். 'செல்லம். இந்தா, எங்கே போறே?' என்று கூவியபடி பின்தொடர்ந்தார் பெரியவர்.

'போ, கொடுக்குப் பிடிச்சிக்கிட்டுப் போ. நீயும் ஒரு மனுஷன்னு இருக்கியே, வெள்ளை வேட்டிக்கும் வெறும்

பேச்சிற்கும் குறை எதுவும் வைக்காமல்!' என்று முணு முணுத்தாள் சகுந்தலை.

ரகுராமன் அவசரம் அவசரமாக முன்கட்டிற்கு வந்து ஜன்னலின் ஓரத்தில் பதுங்கி நின்று வெளியே பார்த்தான். வேக நடை நடந்து போனவள் தான் சண்டைக்குக் காரணமும், பெரியவரின் அன்புக்குப் பாத்திரமுமான அபிமான ஸ்திரீயாக இருக்க வேண்டும் என்று யூகிக்கத் தவறவில்லை அவன். அவரும் அவளைத் துரத்திக் கொண்டே போனார்.

'போற போக்கைப் பார்த்தால், இப்படியே இரண்டு பேரும் ரயிலடிக்கே போய்ச் சேர்ந்து விடுவார்கள் போல் தோணுது' என்று நினைத்தான் ரகு. 'பிடிவாதமாக அவள் தன் ஊருக்கே போவதானால், இந்த ஐயாவும் ரயில் ஏறி விடுவார் போலிருக்கு!' என்று கெக்கலித்தது அவன் மனம்.

சகுந்தலை என்ன செய்வாள்? மனம் உந்தி விட்ட கேள்வி இது. 'மூலையில் கிடந்து அழுது குமைவாள்; வேறென்ன செய்ய முடியும் அவளாலே!' எக்காளமாக மனக்குறளி கூறிக் கொண்ட பதில் இது. அவனுக்குச் சிரிப்பு வந்தது.

## — 22 —

அவன் எண்ணியது சரி தான். சகுந்தலை தரையிலே கிடந்து கண்ணீர் வடித்தாள். தனது வாழ்க்கையை எண்ணி, தன் கணவனின் பண்பை நினைத்து, தனக்கு அவர் செய்த துரோகத்தையும் கொடுமைகளையும் எண்ணி அழுதாள். போக்கிடம் அற்று அந்த வீட்டிலேயே கிடந்து தான் குமைய வேண்டியிருக்கிற நிலையை எண்ணிப் புழுங்கினாள். வெறுப்பினால், வேதனையால், துக்கத்தால். ஆங்காரத்தினால் குமுறிக் குமைந்தாள். தன் மனதைத் தானே புண்ணாக்கிக் கொண்டு புகைந்து கண்ணீர் வடித்தாள்.

'தனது ஆசை நாயகியை அழைத்துக் கொண்டு அருகே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் அவர் இந்த ஊருக்கு வந்திருக்கிறார்; அடுத்த ஊர்க்காரி அடுத்த தெருக்காரியாக மாறுவாள். பின் அடுத்த வீட்டுக்காரியாக வரலாம். அப்புறம் இந்த வீட்டிலேயே புகுந்து விடுவாள், நான் வேலைக்காரி மாதிரி கிடக்க வேண்டியது தான்!' என்று நினைத்தாள் அவள்.

'இப்போது எதிர்த்தது தான் சரி. சரியான சமயத்தில் காரியம் செய்யாமலிருந்தால், அப்புறம் எல்லோரும் குதிரையேற்றம் ஆரம்பித்து விடுவார்கள், ஓட ஓட விரட்டுவார்கள்' என எண்ணினாள்.

கண்ணீர் வரண்டு, மனம் கல்லாகும் வரை அழுது குமைந்தாள் அவள். கணவன் என்கிற மனிதன் மீது, அவர் உருவத்தினிடம், அவரது குணங்கள் செயல்கள் மீதெல்லாம் அவளுக்கு வெறுப்பும், கசப்பும், குரோதமும் பொங்கி எழுந்தன. கட்டாயத்திற்காக, சம்பிரதாய தர்மங்களுக்காக, சமுதாயக் கட்டுப்பாடுகளுக்காக, குல வழக்கத்திற்காக, கணவன் என்ற பெயரில் தன் வாழ்வுடன் சுமையாய், வேதனையாய், வியாதியாய், கொடுமையாய், தொல்லையாகப் பிணைக்கப்பட்ட நபரிடம் அவள் காட்டி வந்த மரியாதை, இரக்கம், போலி அன்பு முதலியன வெல்லாம் தேய்ந்து தேய்ந்து தேய்ந்தே போயின.

தன்னுடைய வாழ்வோடு வாழ்வாகச் சேர்க்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு உரிய பாதுகாப்பை அளிக்க மனமில்லாதவன், அவளுடைய உணர்ச்சிகளை கௌரவிக்கும் பண்பில்லாதவன், அவளை ஒரு பெண்ணாய். மனுஷியாய், துணைவியாய், தோழியாய் மதித்து அவளுக்கு வாழ்வளிக்க இயலாதவன், பெண்ணின்—அவள் மனைவி என்ற ஸ்தானத்தில் கட்டுண்டு கிடப்பவளேயாயினும்—இதயத்தை வெற்றி கொள்ள முடியாது. அவள் அவனை அவமதித்து பழி வாங்கும் தோரணையிலே செயல் புரிவது மனித இயல்பேயாகும். இந்த உண்மைக்கு ஓர் உதாரணமாக மாறினாள் சகுந்தலை.

குமுறிக் குமைந்த பெண் தன்னையே அழித்துக் கொள்ள விரும்பினாள் முதலில். விஷம், கயிறு, கிணறு, நதி முதலிய சாதனங்கள் அவளுக்குப் பயங்கரமானவை யாகவும் பகிரங்கமானவை யாகவும் பட்டன. மரணம் தானாகத் தேர்ந்தெடுக்கப் படுவதானாலும், தற்செயலான விபத்து மாதிரி தோன்றும்படி ஏற்படுவது நல்லது என்று அவள் நினைத்தாள். அதற்கு அந்த வீட்டில் ஒரு வழி இருந்தது.

மாடி முற்றத்தின் ஒரு ஓரம் சிதைந்து அந்தரத்தில் நின்றது. அதன் மேல் சிறு ஹால் போல் நின்ற ஓட்டுப் பகுதி சிறிது சிறிதாக உதிர்ந்து விழுந்து உருக்குலைந்து கொண்டிருந்தது. தூண் பெயரளவில் நெடுந் தூணாகக் காட்சியளித்தது. கை வைத்தால் சீட்டு அட்டைகளாலான கட்டிடம்

போல் எல்லாமே பொல பொலவென விழுந்து விடும். தலை மீது விழுவதுடன், பாதாளத்திற்கு இழுத்துச் செல்வது போல் தரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும். அதைத் துணை கொள்ள எண்ணினுள் சகுந்தலை. விசித்திர மனோபாவம் தான்.

வெகு நேரம் வரை ஞானசம்பந்தர் திரும்பவில்லை. மத்தியானம் ஒரு மணி இருக்கும். எங்கும் அமைதி. இயற்கையே உறக்கத்தில் ஆழ்ந்து கிடப்பது போன்ற அசைவின்மை.

சகுந்தலை மொட்டை மாடிக்குப் போனுள். தட தட வென்று, இடிந்த பகுதி நோக்கி நடந்தாள்.

அவளது அதிர்ஷ்டமோ அல்லது துரதிர்ஷ்டமோ! அவ் வேளையில் அடுத்த வீட்டு ரகுராமன் மாடி ஜன்னலருகே நின்ருன். ஓசை கனத்து ஒலிப்பதைக் கேட்டு, கவனித்து நின்ருன். சகுந்தலை வேகமாக, பித்துப் பிடித்தவள் போல், ஆபத்தை விலைக்கு வாங்கச் செல்லும் வெறியளாய் முன்னேறுவதைக் கண்டான். அவள் நோக்கம் என்னவாகத் தானிருக்கும் என்று கணிக்க ஒரு கணம் நிதானித்தான்.

அவள் நடந்தாள். சற்றே தயங்கினுள். பின் துணிந்து முன்னல் அடியெடுத்து வைத்தாள்.

புரிந்தது. ரகுராமனுக்கு உண்மை பளிச்செனப் புலனுயிற்று. மெதுவாகக் கதவைத் திறந்து வராந்தாவில் வந்து நின்ருன்.

அவள் திடு திடுவென ஓடித் தூணைப் பற்றித் திமி திமியென்று குதித்திருந்தால், அவளை ரகுராமனுல் காப்பாற்றியிருக்க முடியாது. சாகத் துணிந்தவள் அவள். ஆயினும் உயிராசை யாரையும் லேசிலே சாக விட்டு விடுவதில்லையே!

அவள் தயங்கி நின்று பின் மெதுவாக முன்னேறியதும், 'அங்கே போகாதீங்க' என்று கத்தினுன் ரகுராமன். அவள் திரும்பிப் பார்த்தாள். வெறி கொண்டவளாக முன்னல் ஓடினுள்.

ரகுவின் உள்ளத்தில் சிறு தயக்கம் தானிருந்தது. 'ஆபத்துக்குப் பாபமில்லை' என்ற துணிவு அதை அமுக்கி விட்டது. தான் சொல்லியும் கேளாமல் அவள் பிடிவாதமாக

அந்த இடத்திற்குப் போகிருளே என்ற துடிப்பும் அவனுக்கு வேகம் கொடுத்தது, அவன் போலி மரியாதைகளுக்குச் சீட்டு கொடுத்து விட்டு 'சகுந்தலா! அங்கே போகாதே. திரும்பி வா' என்று கூவியபடி முன் சென்றுன்.

இப்படி அவன் நடந்து கொள்வான் என்று எதிர்பார்த்திராத சகுந்தலே திடுக்கிட்டாள். நின்று திரும்பிப் பார்த்தாள். என்ன நினைத்தாளோ, என்னவோ. வேகமாக நடந்து தூணைப் பற்றினுள்.

ரகுராமன் பாய்ந்து சென்று அவள் கையைப் பற்றினுன் தூணைப் பிடித்து உலுக்கிய வளைக்கரங்களைப் பலமாகப் பற்றி இழுத்தான்.

அவள் முரண்டினுள். அவளைக் காப்பாற்றியே தீர்வது என்று முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்தான் ரகு. வெறி பிடித்தவளாய் அவள் அவன் கையைக் கடித்தாள். அவன் வேதனையைப் பொருட்படுத்தாமல், அவளை இழுத்தான்.

கிடுகிடு ஓசை கேட்டது. சிர்குலேந்து நின்ற கட்டிடப் பகுதியின் ஓடுகள் சரிந்து விழுந்தன. பயந்து விட்டாள் சகுந்தலே. வலு விழந்தது போல் நின்ற அவளை எளிதில் இழுத்து வர முடிந்தது அவனுல்.

கட்டிடத்தின் கூரைப் பகுதி பொல பொலவென விழவும், அதன் அழுத்தத்தைத் தாங்க மாட்டாத தளமும் தாழ்ந்து தரையோடு தரையாக இருந்து விட்டது. திடீரெனப் பூகம்பம் ஏற்பட்டது போலிருந்தது. இதர இடங்களிலும் நில நடுக்கம் நிகழ்ந்தது.

சகுந்தலேயின் உடல் நடுங்கியதை ரகுராமன் உணர முடிந்தது. பயத்தினுல் அவள் அவனேடு ஒண்டவும் அவன் அவளை அபாய எல்லேக்கு அப்பால் அழைத்து வந்து நிறுத்தினுன்.

'என்ன காரியம் செய்யத் துணிந்தே! இவ்வளவும் உன் தலேயில் விழுந்து, நீயும் தரையோடு தரையாகப் போயிருந்தால்!' என்று முனங்கினுன் அவன். அந்த எண்ணத்தினுல் அவன் உடல் சிலிர்த்தது. அவளோ மிரண்ட பார்வையுடன் நின்றுள்.

சூழ்நிலை நிகழ்ச்சிகளால் தம்மை மறந்து நின்ற இருவரையும் திடுக்கிட வைத்தது அருகில் வெடித்த ஆவேசக் குரல். ஞானசம்பந்தரின் கூப்பாடு அது.

'பேஷ்! எத்தனை காலமாக இந்த நாடகம்! பத்தினி வேஷம் போட்டயேடி தட்டுவாணிச் சிறுக்கி!' என்று கூச்சலிட்டுப் பாய்ந்தார் அவர்.

அவர் அப்பொழுது அங்கு வருவார் என யாரும் நினைக்கவில்லை. காமக்கிழத்தி செல்வநாயகியின் பின்னால் ஓடிய அவரது முயற்சியும் கெஞ்சுதல்களும் பலனளிக்க வில்லை. அவள் திரும்பவும் அத்த வீட்டில் காலடி எடுத்து வைக்க மறுத்துவிட்டாள். எவ்வளவோ தாஜாப் படுத்தியும், அவள் மனதைமாற்ற இயலாது போகவே, ஹோட்டலில் டிபன் வாங்கிக் கொடுத்து அவளை ரயிலேற்றி விட்டு வெறி வேகத்தோடு வீடு திரும்பினார் அவர். 'அந்த ராங்கிக்காரி இருக்கிற வரை அந்த ஊரையே மிதிக்கப் போவதில்லை' என்று ஆசைநாயகி இறுதியாகவும் உறுதியாகவும் கூறியது அவர் மூளையைக் குழப்பியது. வந்தவளை அவமானப்படுத்தி அடங்காப்பிடாரித்தனம் பண்ணிய மூதேவியை என்ன செய்தாலும் ஆத்திரம் தணியாது போல் தோன்றியது அவருக்கு. அவள் சிணுங்கலோ சிறு முனங்கலோ காட்டினாலும் கூட அவளை உதைத்துப் புடைத்துத் துவைத்து—செத்தாலும் சரியென்று—பைஸல் பண்ணி விட வேண்டியது தான் என்ற வெறியோடு திம்பினார் அவர்.

வெளி வாசல் கதவு தாளிடப் படாமலே கிடந்தது. தள்ளிக்கொண்டு உட்புகுந்தவரை வரவேற்றது வெறிச் சோடிய விடு தான். ரத்தப் பசியோடு திரியும் காட்டேறி மாதிரி அவர் அறை அறையாகப் பார்த்து விட்டு மாடிக்கு வந்தபோது தான் அந்தக் காட்சி கண்ணில் பட்டது. இடிந்து விழும் கட்டிடப் பகுதியை விட, ரகுராமனும் சகுந்தலையும் சேர்ந்து நின்ற கோலம் தான் அவர் கண்களை உறுத்தியது. அவன் அவளைப் பிடித்திருந்தான்; அவளோ விலகாமல் அவன் உடலோடு ஒட்டி நின்றாள். சந்தேகப் பிராணியின் வெறிகொண்ட உள்ளத் தீயிலே படிந்த பெட்ரோலாயிற்று அந்தக் காட்சி.

கத்திக்கொண்டு அவளைத்தாக்க ஓடி வந்தார். அவள் பயந்து விலகி நின்றாள். தான் செய்து விட்ட தவறின்,

தன்மை அப்பொழுது தான் அவள் உணர்வில் பதிந்தது. ஆனால் நிலைமை மிஞ்சி விட்டதே. இனி விளைவுகளைத் தவிர்ப்பது எப்படி?

மிருகம் போல் பாய்ந்த பெரியவரைத் தடுத்து நிறுத்தக் குறுக்கிட்டான் ரகு. அவளை அடிக்கக் கூடாது. அவளை ஏன் அடித்துக் கொல்கிறீர்கள்? ‘அவள் என்ன தவறு செய்தாள்?’ என்று அமைதியாகக் கேட்டான், அவர் கைகளைப் பற்றியபடியே.

உணர்ச்சிக் கொந்தளிப்பிலே, பேச்சற்றுத் திணறினார் அவர். ‘முசுமுசு’ என்று மேல் மூச்சு வாங்கியது அவருக்கு. மூர்க்கமாகப் பாய்வதற்கு தயாராகும் காளை மாடு மாதிரித் தோன்றினார் அவர்.

‘என்ன செய்தாளாவா? வேறு என்னடா செய்யணும்?’ என்று கூச்சலிட்டார். அப்படிப் பேசுவதே சிரமமாகத் தானிருந்தது அவருக்கு. அவர் மிருகமாக மாறி நிற்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட ரகு அமைதியாகவே சொன்னான்:

‘நீங்கள் ஆத்திரத்தில் யோசிக்காமலே பேசுகிறீர்கள். என்ன நடந்தது என்று தெரியாமலே கோபமாக......

‘நீ ஒண்ணும் போதிக்கவேண்டாம். நீ போதித்துப் புரிந்து கொள்ள வேண்டிய அளவுக்கு இங்கு யாரும் புத்தி கெட்டுக் கிடக்கவில்லை. இங்கே என்ன நடக்குது என்கிறது தான் கண்முன்னாலேயே தெரியுதே. நான் அடிக்கடி ஊரில் இல்லாமல் போனது உங்க ரெண்டு பேருக்கும் சௌகரியமாக இருந்திருக்கு’ என்றார் ஞானசம்பந்தர்.

‘ஐயோ, அநியாயமா ஏனிப்படிப் பேசறீங்க?’ என்று அலறினாள் சகுந்தலை.

‘நிறுத்துடீ உன் சாகசத்தை! ரொம்ப அநியாயத்தைக் கண்டுவிட்டே உன்னை என்ன செய்யணும் தெரியுமா? எனக்கு வாற வரத்துக்கு உன்னைப் பேயறை அறைஞ்சு கொல்லணும் போலிருக்கு. முன்பு செய்வார்களாமே, மொட்டை யடித்துக் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கழுதை மேலே ஏற்றி வைத்துத் தெருத் தெருவாக விரட்டியடிப்பாங்

களாமே— அது மாதிரிச் செய்து உனக்குப் புத்தி கற்பிக்கணும். பெரிய நாடகம் ஆடித்தீர்த்துவிட்டாளே பாதகத்தி' என்று புலம்பினுர் அவர்.

'நீங்க நினைக்கிறபடி ஒண்ணுமே யில்லே, என்று தன் கட்சியை எடுத்துரைக்க முன்வந்தாள் சகுந்தலே.

'உங்களிடம் தான் கோளாறுகள் இருக்கு. உங்கள் தவறுகளும் சந்தேகங்களும் தான் மற்றவர்களேயும் பாபிகளாகவும் பழிகாரர்களாகவும் நினைக்கத் தூண்டுகிறது' காமாலேக்கண்தனம் தான்' என்று தொடங்கிஞன் ரகுராமன்.

'ஏய் நீ பேசாதே!' என்று குடிவெறியன் போல் கத்திஞர் கோப வெறியோடிருந்த பெரியவர்.

'நீர் கத்தும்; குதியும்; கூப்பாடு போடும். கவலேயில்லே நான் சொல்ல வேண்டியதைச் சொல்லியே தீர்ப்பேன். நீர் முதல்ரக அயோக்கியர் என்பது என் அபிப்பிராயம். பெரிய மனிதன் போல் பாவலாப் பண்ணுகிற பேர்வழி நீர். அறிவும் அனுபவமும் மிகுந்தவர் மாதிரிப் பம்மாத்துப் பண்ணிப் பெயர் பெற ஆசைப்படுகிற அல்பன் தான். உமது எழுத்துக்களேப் படித்துப் பார்த்தேனே, அன்றே அது புரிந்தது. ஏன், அதுக்கு முன்னுடியே—பின்புறம் தோட்டத்தில் வேலி கட்ட வேணும் என்று பேசினீரே, அந்த முதல் சந்திப்பின் போதே—புரிந்தது. அந்தக் கருத்து ஒவ்வொரு சந்திப்பின் போதும் வளர்ந்து வந்தது. இன்று அது மிக உறுதிப்பட்டு விட்டது. உமது மனேவியை மிருகத்தனமாக அடித்துக் கொல்கிறீரே, உமது மனேவி மீது அநியாயமாகச் சந்தேகம் கொள்கிறீரே, நீர் ரொம்ப ரொக்கமாக—நேர்மை தவருத முறையில்—வாழ முயன்றீரா? கிடையாது. இவ்வளவு இளமையான, அழகான, மனேவி இருந்தும் கூட நீர் குரங்கு மாதிரி—சாக்கடைப் பன்றி மாதிரி—உள்ள ஒரு பொம்பளேயின் பின் ஓடித் திரிகிறீரே. ஆசை நாயகியாம். அவளோடு தனி வாழ்க்கையாம்! வெட்கமில்லே? செயலில் ஒரு பாபமும் புரிந்தறியாத இந்த அபலேயை விபசாரி, தேவடியாள் என்றெல்லாம் பழித்து தண்டனே வேறு கொடுக்க முன் வந்து விட்டீரே. நியாயம் என்ருல், நேர்மையான தீர்ப்பு என்ருல், உம்மை யல்லவா கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதை ஊர்வலம் அனுப்ப வேண்டும்!'

ரகுராமன் உணர்ச்சி வேகத்தோடு, உண்மையைச் சொல்ல வேண்டும் என்ற துடிப்போடு, பேசினன். அவன் அவ்வளவு பேசுவான் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஞானசம்பந்தம் திகைத்து நின்றார். அவனது பேச்சின் உண்மையும் வேகமும் அவரைத் திணற வைத்தன. சகுந்தலை முதலில் திடுக்கிட்டாள். பின் திகைப்புற்றாள். பிறகு வியப்போடு ஆதரவும் அன்பும் கொண்டு நின்றாள்.

வெறி தணியப் பெறாத ஞானசம்பந்தர் ரகுராமனை அறைந்து கொல்லத் துணிவு பெறவில்லை, தனது ஆங்கா ரத்தை அந்த அபலை மீது காட்டத் துணிந்தார். அவள் ரகுவின் முகத்தில் பார்வை பதித்து வியப்பால் விரிந்த கண்களோடு, உணர்வுத் துடிப்பால் சற்றே பிரிந்த உதடு களோடு நின்றதைக் கவனித்த கணவன் அவள் தலை முடி யைப் பற்றி உலுக்கி 'தேவடியா என்கிறது சரியாக இருக் குதே. அவன் பேசுகிறதைக் கேட்டு மகிழ்ந்து போய் நிற்கிறதைப் பாரு!' என்று கூறியபடி கன்னத்திற்கு ஒன் ருக ஓங்கி அறை கொடுத்தார். 'யேயம்மா' என்று அலறி அப்படியே கீழே உட்கார்ந்து விட்டாள் சகுந்தலை.

பொருத்திலே பலமாக அடிபட்டு விட்டதனல் அவள் தலை சுற்றியது. மயக்கம் வருவது போலிருந்தது. 'அம்மா!' என்று முனங்கியபடி தரையில் சாய்ந்தாள். 'சாகு சவமே! செத்துத் தொலை' என்று பலமாகக் காலால் ஒரு மிதி மிதித்து விட்டுச் சொன்னர்: 'இனி நீ இந்த வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வைத்தியோ, அவ்வளவு தான். ஜெயி லுக்குப் போனலும் சரி தான்னு சொல்லி, உன்னை ஒரே வெட்டாக வெட்டித் தீர்த்துப் போடுவேன். ஆமா. நீ இந்தக் காலிப்பயல் கூடப் போவியோ, அல்லது மாடத் தெருவிலே வீடு தேடிக்கிட்டு வியாபாரம் பண்ணுவியோ எனக்குக் கவலை கிடையாது. இனி நீ என் மூஞ்சியிலே முழிக்கப் படாது. அவ்வளவுதான்!'

கண்டிப்பாகப் பேசிவிட்டு நகர்ந்தார் அவர். ரகுராமனை ஒரு முறைப்பு முறைத்து விட்டுத்தான் நகர்ந்தார்!

சகுந்தலை தன் வேதனையைச் சகித்துக் கொண்டு எழுந்து கணவனின் காலடியிலே விழுந்து கெஞ்சினள். 'நான் என்ன செய்திருந்தாலும் என்னை மன்னிச்சிடுங்க. நான் பாபம் செய்யவே யில்லையே' என்று அரற்றினள்.

அவர் மனம் இரங்கவில்லை. வேகமாகக் காலை உதறி விட்டு அறைக்குள் காலடி எடுத்து வைத்தார். அவள் 'ஐயோ, என்னை இப்படி உதறினால் என் கதி?' என்று கூவியபடி மறுபடியும் அவர் காலைப்பிடிக்க அடித்து விழுந் தாள். அவரோ 'எக்கேடும் கெட்டுப் போ!' என்று சொல்லி, உள்ளிருந்து கதவைப் பலமாக அடித்துச் சாத்தினார்.

கதவின் முனை அவள் தலையில் வேகமாகத் தாக்கியது. 'அம்மா!' என்று கையால் அழுத்தியபடி ஒதுங்கித் தரை யில் விழுந்தாள் அவள். கணவன் என்கிற அந்த மிருகம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

ரகுராமனின் நெஞ்சு துடித்தது. துணையற்ற அந்தப் பெண் படுகிற பாடு அவன் இதயத்தை வாட்டியது. அவளிடம் அவனுக்கு ஏற்பட்ட அன்பும் அனுதாபமும் பெருகின. அவளுக்கு ஆறுதல் கூற வேண்டும் என்று எண்ணினான் ஒரு கணம். ஆனால் அவ்வேளைக்கு அவள் அழுது கிடப்பதே நல்லது, இவ்வளவு உணர்ச்சிக் கொதிப் புகள், கொடூரச் செயல்களினால் முறுக்கேறி யிருக்கக் கூடிய அவள் உள்ளம் தெளிவும் ஓரளவு அமைதியும் பெற அவள் அழுது கண்ணீர் வடிப்பதே நலம் என்று நினைத்து மௌன மாகத் தன் அறை சேர்ந்தான்.

அவன் கையில் வலி எடுப்பதாக உணரவும், கவனித் தான். இடிந்த பகுதிக்கு ஓடிய சகுந்தலையைப் பிடித்து இழுத்த போது அவள் கடித்த இடத்தில் பல் பதிந்த தடத் தில் லேசாக ரத்தம் கசிந்திருந்தது. அவன் உடனேயே அதற்கு டிஞ்சர் தடவி மருந்து வைத்துக் கட்டினான். அவ ளைத் தனியாக விட்டுச் சென்றால் அவள் மீண்டும் தற்கொலை முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு விடலாம் என்ற அச்ச மிருந்தது அவனுக்கு. அதனால் மாடி அறையிலேயே இருந் தான். அடிக்கடி வெளியே வந்து எட்டிப் பார்த்துப் பொழுது போக்கினான்.

அவர் தன்னையும் அவளையும் பற்றி மோசமாகத்தான் நினைக்க நேரிடும் என்ற எண்ணம் எழுந்தது மனதில். மனமே பதிலும் சொல்லிக் கொண்டது: 'இவன் மனிதனே யல்ல. வெறி மிருகம்! அவன் என்ன நினைத்தால் தான் நமக்கென்ன!' அந்த நினைப்பினால் சிரிப்பின் சிறு ரேகை உதயமாயிற்று அவன் முகத்தில்.

அடுத்த வீட்டில் அறைக்கதவுகள் டபார்—படார் என்று அடைபட்டன. பாத்திரங்கள் உருண்டன. எதை எதையோ அங்கு மிங்குமாக இழுத்துப்போட்டு, கதவுகளைச் சாத்தித் தாளிடுவதாகத் தோன்றியது. காதில் வந்து விழுந்த ஒலிகளைக்கொண்டு அப்படித் தான் தீர்மானிக்க வேண்டியிருந்தது.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அமைதி நிலவியது: 'அலுத்துப்போய் படுத்து விட்டார் போலிருக்கிறது' என்று நினைத்தான் ரகு.

ரகுராமன் பயனற்ற சிந்தனைகளிலும் பழைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்ப்பதிலும் பொழுதைக் கழித்தான். திடீரென்று அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. கீழே இறங்கிப் போய் பார்த்தான். அடுத்த வீடு வெளிப்புறம் பூட்டிக் கிடந்தது. பெரிய பூட்டைப் போட்டுப் பூட்டி விட்டு ஞான சம்பந்தர் போய்விட்டார்.

'மனைவியை விட ஆசைநாயகி தானே ஒசத்தி அவருக்கு. கோபித்துக் கொண்டு போய்விட்ட அவளைச் சமாதானப் படுத்த அவளுடைய ஊருக்கே போயிருப்பார்' என்று நினைத்தான். அவர் சொன்னது போலவே சகுந்தலையைக் கை விட்டு விட்டு ஓடியிருப்பார் என்ற சந்தேகம் அவன் மனதைக் கஷ்டப்படுத்தியது. 'சகுந்தலை பரிதாபத்திற்குரியவள் தான்; பாபம், வாழ்க்கை சரியாக அமையவில்லை அவளுக்கு. கல்யாணமாகிக் கணவன், சொத்து, வீடு வாசல் என்றெல்லாம் இருந்து என்ன செய்ய! சுகமில்லை அவளுக்கு. கொடுமை, கொடுமை! எத்தனையோ பெண்கள் இத்தகைய கொடுமைப் பலி பீடத்திலே மௌனமாக ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் இன்று. அவர்களுக்கு விமோசனமே கிடையாது போலும்!' என்று கதறியது அவன் உள்ளம். கொடுமை தாங்க முடியாதவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்ற எண்ணம் தலை தூக்கியது.

உடனே சகுந்தலையைப் பார்க்க ஓடினான் அவசரமாக. அவள் மூலையிலே ஒடுங்கி அழுது கொண்டு தான் கிடந்தாள். அவள் அப்படியே கிடக்கட்டும் என்று விட்டு விட்டு, ரகுராமன் தனது அறைக்குச் சென்று படிக்க முயன்றான். மனம் படிப்பில் சென்றால் தானே!

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. சகுந்தலை அழுது அழுது மனம் புழுங்கினுள். பின் மோனத் துயரில் ஆழ்ந்து கிடந்தாள். அவள் மனம் சிறிச் சினந்தது.

'இனி அந்த மனிதனுடன் வாழ முடியாது. அது நிச்சயமாகி விட்டது. அந்த மிருகம் வாழ விடாது. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே என்னைக் கொன்றுவிடும்' என்று உறுதியாகப் பட்டது அவளுக்கு. தாலி கட்டி, கொஞ்ச காலம் கூட வசித்த தோஷத்திற்காக ஏதாவது ஜீவனும்சம் கொடுக்க ஒப்புக்கொள்வார்; அவர் தரமுடியாது என்று சொன்னுலும், சட்டத்தின் துணையினுல் அதைப் பெற்று விடலாம் என்று நினைத்தாள்.

ஆனுல் அது அவசியம்தானு? தான் தவறு செய்யாத போது தன் கௌரவத்தை, வாழ்வைக் குலைத்து அவமதித்த மிருகத்தின் தயவினுல் வாழ வேண்டுமா? அப்படி வாழ்வதை விடச் செத்துப் போகலாமே என்று எண்ணினுள் அவள்.

அவளது மனம் குரல் கொடுத்தது: 'நான் தவறு செய்யவில்லை, ஆனுலும் செய்ததாகப் பெயர் ஏற்பட்டு விட்டது. அது அழியப் போவதில்லை. இனி அந்தக் காரியத்தைச் செய்தால் அது எப்படித் தவருகும்?'

விரக்தியுற்றிருந்த மனம் இந்த எண்ணத்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது. ரகுராமன் மீது அவளுக்கு முன்பு எழுந்த அன்பு, ஆசை முதலிய உணர்ச்சிகளை அவள் வலுக்கட்டாயமாக அமுக்கி வந்தாள். இப்போது கட்டுப்பாடு எதுவுமில்லாததனுல் அவை தாராளமாக வளர்ந்தன.

ரகு இரண்டு மூன்று தடவைகள் வந்து எட்டிப் பார்த்ததை அவள் அறிந்திருந்தாள். 'சகுந்தலா! சகுந்தலா!' என்று மெதுவாகக் கூப்பிட்டதை உணர்ந்தும் அவள் பதிலளிக்கவில்லை. 'சகுந்தலா, சாப்பிட வில்லையா? காப்பி வாங்கி வரட்டுமா?' என்று கேட்டதும் அவளுக்குத் தெரியும். ஆனுல் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை.

ரகுராமன் அவளைத் தனியாக விட்டு விட்டு ஹோட்டலுக்குப் போவதற்குக் கூட விரும்பவில்லை. அவள் தூக்

கிட்டுக் கொண்டு தொங்கி விடுவாளோ என்ற பயம். அதனால் அவனே டிபனும் காப்பியும் தயார் செய்து சாப்பிட்டான்.

நேரம் ஓடியது. மாலை மயங்கியது. இருள் கவியும் வேளை.

'இனியும் இவள் இப்படியே கிடப்பது நல்லதல்ல' என்று நினைத்தான் ரகு. அவள் அருகில் போய் நின்று 'சகுந்தலா, சகுந்தலா' என்று அன்பாக அழைத்தான்.

அவளுக்கு இனித்தது அந்த அழைப்பு. வறண்டிருந்த உள்ளத்தில் குளுமை பாய்ந்து நிறைந்தது போலிருந்தது. எனினும் அவள் தலை நிமிர்ந்து பார்த்தாளில்லை.

'சகுந்தலா, எவ்வளவு நேரம் இப்படியே கிடப்பாய்? சாப்பிடாமல், காப்பி கூடக் குடிக்காமல்? உம். எழுந்திரு. முகத்தைக் கழுவி விட்டு, காப்பி குடி. இதோ கொண்டு வந்திருக்கிறேன்' என்றான்.

அவன் அன்பு அவள் இதயத்தின் அடித்தலத்தைத் தொட்டு அவளுக்கு இன்பப் புல்லரிப்பு தந்தது. அவள் 'எனக்கு வேண்டாமே!' என்றாள்.

'வாழ்க்கை என்றால் எல்லாம் தான். பலவற்றையும் அனுபவித்துத் தான் தீரணும். வருவதை யெல்லாம் சகித்துச் சமாளிக்க வேண்டியது தான்; எதிர்த்துத் தாங்கிக் கொள்ளவும் வெண்டும்; சோகச் சுமை தாங்காமல் கண்ணீர் வடிக்கவும் நேரிடும்! அதற்காக சதா அழுது கொண்டிருக்க முடியுமா?' என்று குழைவாகப் பேசினான்.

அவள் முரண்டு பிடிக்கும் குழந்தை மாதிரித் தரையிலேயே கிடந்தாள்; நெளிந்து படுத்தாள். பதில் சொல்லவில்லை.

'பெரியவர் போய்விட்டார். போயே போய்விட்டார். வீட்டுக் கதவை இழுத்துச் சாத்தி பெரிய பூட்டாகப் போட்டுவிட்டுத் தான் போயிருக்கிறார். இனிமேல் அவர் என்றைக்கு வரப்போகிறாரோ! அதுவரை நீ இப்படியேவா

கிடக்கப் போகிறாய்? பட்டினி கிடந்து சாகப்போகிறாயா?' என்றான் ரகு.

அதற்கும் அவள் பதில் சொல்லவில்லை.

ரகுராமனுக்கு எரிச்சலாக இருந்தது; அனுதாபமும் மிஞ்சியது. 'இந்தா பாரு சகுந்தலா, இன்னும் இது மாதிரியே கிடந்தால் நானே உன்னைப் பிடித்துத் தூக்கி உட்கார வைப்பேன். ஆமாம். எவ்வளவு நேரம்தான் உனக்காகப் பிராணனை விடுவது!' என்றான்.

அவன் சொல்லியபடியே செய்வான் என்று அவன் குரலே அறிவித்ததோ என்னவோ. அவள் எழுந்து உட்கார்ந்தாள். கூந்தல் அவிழ்ந்து புரள, அழுது அழுது வீங்கிய முகத்தை முழங்கால் மீது படிய வைத்து முட்டைக் கட்டிக்கொண்டு இருந்தாள். 'நான் எக்கேடும் கெடுகிறேன். அவரைப் போல நீங்களும் கதவைச் சாத்திவிட்டுப் போவது தானே! ஏன் தொல்லை கொடுக்கிறீர்கள்?' என்றாள் மிக மெலிந்த குரலில்.

அவன் கொடுத்த தொல்லை அவள் மனதுக்குப் பிடித்திருந்தது. எனினும் சொல்லுக்காகச் சும்மா சொல்லி வைத்தாள் அப்படி!

'நான் இன்னும் மனிதத் தன்மை இழந்து விடவில்லையே சகுந்தலா!' என்று பரிவுடன் பேசினான் ரகு.

அவள் அவனைப் பார்த்தாள். அவன் முகத்தை, கண்களை நோக்கினாள். அவள் பார்வை அவன் கைக் கட்டிலே தேங்கி நின்றது ஒரு கணம். 'அது என்ன கட்டு?' என்றாள்.

அவன் சிரித்தான். 'உன் பல் பலத்தைக் காட்டினாயே அதன் விளைவு' என்றான்.

அவள் இதழ்களிலும் சிறு சிரிப்பு தவழ்ந்தது. வேதனை உள்ளத்தின் உணர்ச்சி ரேகை அது.

'உம். என்னுலே உங்களுக்கும் கெட்ட பெயர். மனக் கஷ்டம். போதாதற்கு இந்த நாய்க்கடி. நீங்கள் ஏன் இன்னும் என்னை அன்போடு உபசரிக்கிறீர்கள்?'

அவள் அனல் மூச்சுயிர்த்தாள். ரகுராமன் பேசாமல் நின்ருன். அவர்களிடையே மௌனம் நீடித்தது.

நேரம் ஊர்ந்தது. 'உம், எழுந்திரு. காப்பி ஆறிப் போகும்' என்று, அவள் கையைப் பற்றித் தூக்க முயன்ருன் ரகு. அவள் பதறி எழுந்தாள். பிறகு சிரித்தாள்.

முகம் கழுவிக் காப்பி சாப்பிட்ட பிறகு அவள் கேட்டாள்: 'இனி நான் என்ன செய்வது?' அவளது எதிர்காலத்தைப் பற்றிய கேள்வி தான் இது.

'அது உன் மனேபலத்தைப் பொறுத்தது' என்ருன் அவன்.

'அப்படியென்ருல்?'

'வாழ்க்கை பல மேடு பள்ளங்கள் நிறைந்தது. மேட்டில் ஏறி நிற்பவர்கள் அங்கேயே நிற்பதில்லை. பள்ளத்தில் தள்ளுண்டவர்கள் அந்த இடத்திலேயே கிடப்பதில்லை. மேட்டில் இருப்பவர்கள் இறங்க வேண்டியதும், கீழிருப்பவர்கள் மேல் நோக்கி முன்னேறுவதும் சந்தர்ப்பங்களுக்கேற்ப நிகழும் காரியங்கள் தான்.'

'என்ன, பிரசங்கம் பண்ண ஆரம்பித்து விட்டீர்களே!' என்று கூறி லேசாகச் சிரித்தாள் அவள். அவனும் நகைத்தான்.

'பிரசங்கம் இல்லை, சகுந்தலா, வாழ்க்கையைப் பற்றிய உண்மை. வாழ்க்கை ஒரு நெடுங்கதை. அது ஒரு சில அத்தியாயங்களுடனே, ஒன்றிரண்டு பாகங்களிலோ, முடிந்து விடுவதில்லை!'

'அது எப்பவும் முடியட்டும். என் வாழ்க்கையைப் பற்றி...'

'அவசரப்படாதே, சகு!' என்றான் அவன். தன்னை அறியாமலே உணர்ச்சிப் பெருக்கில் உரிமையோடு உதிர்ந்து விட்டசொல் அது. அவள் உள்ளம் நெகிழ்ந்தது. உடல் புளகித முற்றது. கண்கள் மகிழ்வொளியால் மலர்ந்தன. இதழ்கள் சிரிப்புச் சிந்தின.

அவள் முகமாற்றம் அவனுக்குத் தைரியமளித்தது. 'ஆகவே, வாழ்க்கையிலே இயல்புக்கு ஒத்து வராத, வசதி செய்யாத, சம்பவங்கள் நிகழ்ந்து விடுமானால் அத்துடன் வாழ்க்கையே முடிந்து விட்டது போல் குமைந்து குவிவது கூடத் தற்கொலைக்குச் சமம்தான். அந்த இடத்திலே கோடு கிழித்து விட்டு, புதிய பாகத்தைத் தொடங்க வேண்டும். உன் வாழ்க்கை ஏட்டிலும் புதுக்கணக்கு தொடங்கி விடலாம் — உனக்கு மனத் தெம்பு இருக்குமானால்!'

அவளுக்குப் புரியாமல் இல்லை. எனினும் 'என்ன சொல்லுகிறீர்கள்? புரியும்படியாகத் தான் சொல்லுங்களேன்!' என்றாள்.

அவன் அவள் முகத்தைக் கவனித்தான். சிரிப்பு வந்தது, 'புரிகிறது சகு புரிகிறது. உனக்கும் புரிந்து விட்டது. உன் போக்கு எனக்கும் புரிகிறது' என்று சொல்லிச் சிரித்தான்.

'நான் என்ன சொல்கிறேன் என்றால், சகு, நீ இனிமேல் எனது அடுத்த வீட்டுக்காரியாக இருக்க வேண்டியதில்லை. அந்த வீட்டில் உனக்கு இடமில்லை என்றாகி விட்டது. அடைத்த வீடு அடைத்தே கிடக்கட்டும்: எனது வீட்டின் கதவுகள் உனக்காக எப்பொழுதும் திறந்தே கிடக்கின்றன. புரிகிறதா?'

அவள் உள்ளப் பரப்பிலே இவ் வார்த்தைகள் அதிர்ச்சி எழுப்பும் கல் போல விழவில்லை. மகிழ்ச்சி அலைகளை எழுப்பும் தென்றலாகத் தான் வருடின. அவள் தலை குனிந்து நின்றாள். யோசிக்க வேண்டிய விஷயம் தானே!

'இது தவறாகுமே, பாபமே என்றெல்லாம் எண்ணுகிறாயா? காலம் மாறி விட்டது, சகு, சம்பிரதாயங்களும்

சட்டமும் மாறித்தான் வருகின்றன. விவாகரத்து செய்து கொள்ளும் உரிமை இருக்கிறது, சகுந்தலா. நாமிருவரும் புதுமணம் புரிந்து கொள்ளலாம்' என்றான் ரகு.

'அதற்கில்லை. ஆனல் இந்த வீட்டில்.....,.''

'நாம் இருக்க வேண்டியதில்லை, உனது பழைய வாழ்க்கையை நினைவூட்டும் இந்த ஊரில் கூட வசிக்க வேண்டாம். உனக்கு இஷ்டமான இடம் தேடிப் போய் அங்கேயே வாழ முடியும்' என்று உறுதியாகச் சொல்லி, நம்பிக்கையோடு அவள் முகத்தைப் பார்த்தான் ரகுராமன்.

சகுந்தலை ஏமாற்றம் அளிக்கவில்லை. அவள் முகமே புது அழகு பெற்று விட்டது போல் தோன்றியது. அவளது பழச்சுளை உதடுகளில் திகழ்ந்த புன்னகையிலே புதுச் சுவையும் புதிய சோபையும் நிறைந்திருப்பதைக் கண்டான் அவன்.

இரவு வந்திருந்தது. ஆனல் வானிலே இயற்கையின் புன்சிரிப்பு போல் இனிமையாய் எழிலாய் மிளிர்ந்தது புது நிலவு.

சகுந்தலையின் பார்வை இளம் பிறையைக் கண்டது. அவள் கண்களைப் பின்பற்றிய ரகுவின் விழிகளும் அதையே கண்டன. மீண்ட இரு ஜோடிக் கண்களும் பரஸ்பரம் கலந்து மகிழ்ந்தன.

'நம் வாழ்விலும் புது நிலவுப் புன்னகை பூத்து விட்டது' என்று அவர்கள் பேசவில்லை. ஆயினும் இதுவே அவர்களின் இதய ஒலியாக இருந்திருக்க வேண்டும்!